www.onlineuthayan.com

பக்கங்கள்: 54

# உதயன்

சுடர் 27
கதிர் 78

வள்ளுவர் ஆண்டு 2043 தை 28 ஞாயிற்றுக்கிழமை (12/02/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


### பிறப்புச் சான்றிதழால் முகாமில் பரபரப்பு

இலங்கைத் தமிழர்களுக்குப் பிறப்புச் சான்றிதழ் வழங்க சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் சிறப்பு முகாம் நடத்தப்பட்டபோது தமிழ்நாடு மக்கள் உரிமை இயக்கத்தினர் நேற்று முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதன்போது இலங்கையில் போரின்போது அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர் என ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர்.

### தபால் மூல வாக்குகள் எண்ணப்படும்

புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல் மார்ச் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதன்போது கடந்த வருடம் அளிக்கப்பட்ட தபால் மூல வாக்குகள் எண்ணப்பட்டு சேர்க்கப்படவுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரட்நாயக்க தெரிவித்துள்ளார். தபால் மூல வாக்குகள் 2009ஆம் ஆண்டின் வாக்காளர் பதிவுப் பட்டியலின் படியே நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### மாபியா கும்பலின் மத்திய நிலையமாக இலங்கை

மாபியா கும்பலின் போலி நாணய கடத்தலுக்கான புதிய போக்குவரத்து மத்திய நிலையமாக இலங்கை மாறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தேசிய புலனாய்வு பிரிவு நடத்திய விசாரணையில் இந்த அதிர்ச்சித் தகவல் தெரியவந்துள்ளது. போலி நாணயங்கள் பாகிஸ்தானில் அச்சிடப்பட்டு தமிழ்நாடு மற்றும் கேரளாவிற்கு கடல் அல்லது விமானத்தின் மூலம் இலங்கையினூடாக கொண்டு செல்லப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

### 5 உணவகங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு

சுகாதார முறையற்ற விதமாக உணவு தயாரித்ததற்காக பொது சுகாதார பரிசோதகர்களால் கண்டறியப்பட்ட ஐந்து உணவகங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்படவுள்ளது. திருநெல்வேலியிலுள்ள மூன்று உணவகங்கள் மற்றும் கொக்குவிலில் உள்ள இரண்டு உணவகங்களின் உரிமையாளர்களே வழக்கை எதிர்நோக்கியுள்ளனர். நல்லூர் மற்றும் கொக்குவில் பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இந்தத் திடீர் பரிசோதனைகளை நடத்தினர். கடை உரிமையாளர்கள் ஐவரும் எதிர்வரும் 21ஆம் திகதி யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

# பிரபல தமிழ் வர்த்தகர் கொழும்பில் கடத்தல்

## வெள்ளவத்தையில் நேற்றுப் பட்டப்பகல் சம்பவம் மீண்டும் வெள்ளை வான் பீதி; மக்கள் அச்சத்தில்

கொழும்பு, பெப்ரவரி 12

கொழும்பின் பிரபல தமிழ் வர்த்தகர் ஒருவர் நேற்றுப் பிற்பகலில் வெள்ளை வானில் வந்த ஆயுததாரிகளால் கடத்தப்பட்டார். வெள்ளவத்தையில் உள்ள அவரது வீட்டின் முன்பாகப் பட்டப்பகலில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தால் கொழும்பில் பரபரப்பு ஏற்பட்டது. 7 பேர் கொண்ட கும்பல் ஒன்றே இந்தக் கடத்தலில் ஈடுபட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

மின் உபகரண வர்த்தகரான இராமசாமி பிரபாகரன் (வயது 37) என்பவரே கடத்திச் செல்லப்பட்டுள்ளார். வெள்ளவத்தை பெனிக்குயிக் வீதியில் அமைந்துள்ள அவரது வீட்டின் முன்பாக நின்றிருந்தபோது அவர் கடத்தப்பட்டார் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

பதுளையைச் சேர்ந்தவரான பிரபாகரன் கொழும்பை மையமாகக் கொண்டு வணிகம் செய்து வந்தார். அவரது கையடக்கத் தொலைபேசிக்கு

»19

### பிச்சைக்காரர்கள் கணக்கெடுப்பு

கொழும்பு, பெப்.12

நாட்டிலுள்ள பிச்சைக்காரர்கள் தொடர்பில் கணக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு சமூக சேவைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

நகரப் பகுதிகளிலேயே அதிகளவான பிச்சைக்காரர்கள் வாழ்ந்துவருகின்றனர் எனவும் அவர்களில் எத்தனை பேர் உண்மையான பிச்சைக்காரர்கள் என்பதை அடையாளம் காண்பதற்கே இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது என்றும் அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.எஸ்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கணக்கெடுப்பின் பின்னர் அவர்களைச் சமூகமயப்படுத்தும் விரிவான திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக அமைச்சு தெரிவிக்கிறது. மேலும் பிச்சைக்காரர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் அவர்க

»19

## பொலிஸ் அதிகாரம் கொடுத்தால் மாலைதீவின் கதிதான் ஏற்படும்

### எச்சரிக்கிறார் கோமின் தயாசிறி



கொழும்பு,பெப் 12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோருவது போன்று பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தால், மாலைதீவில் ஏற்பட்ட நிலைதான் இலங்கையிலும் ஏற்படும் என்று எச் சரித்துள்ளார் இலங்கையின் மூத்த சட்டவாளரும், சிங்களத் தேசியவாதியுமான கோமின் தயாசிறி.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டால், தேவையற்ற குழப்பங்கள் உருவாகும். இலங்கை அரசு உன்னிப்பாக கவனிக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அல்லது வேறு தரப்புகளுடன் பொலிஸ்

»19

## எரிபொருள் விலைகள் 'கிடு கிடு' உயர்வு ம.எண்ணெய் 35 ரூபாவால் அதிகரிப்பு

கொழும்பு, பெப் 12

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகப் பெற்றோலியத்துறை அமைச்சு அறிவித் துள்ளது.



பெற்றோல் விலை லீற்றருக்கு 12 ரூபாவினாலும், டீசல் விலை லீற்றருக்கு 31 ரூபாவினாலும், மண்ணெண்ணெய் விலை லீற்றருக்கு 35 ரூபாவினாலும் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி ஒரு லீற்றர் 90 ஒக்டேன் பெற்றோல் 149 ரூபாவாகவும், 95 ஒக்டேன் பெற்றோல் 167 ரூபாவாகவும் ஒரு லீற்றர் டீசல் 115 ரூபாவாகவும் மண்ணெண்ணெய் லீற்றர் 106 ரூபாவாகவும் விற்கப்படும்.

விலைத்திருத்தத்தின் ஊடாக பொதுப் போக்குவரத்துத் துறைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று அரசு வெளியிட்டுள்ள

»19

## பாகிஸ்தான் தலைவர்களுடன் ஜனாதிபதி மஹிந்த பேச்சு

இஸ்லாமாபாத், பெப் 12

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு பாகிஸ்தான் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாகிஸ்தான் ஜனாதிபதி ஆஷிப் அல் சர்தாரி மற்றும் பிரதமர் யூசுப் ரசா கிலானி ஆகியோருடன் இரு தரப்பு பேச்சு நடத்தினார்.

இதன் போது இரு நாடுகளுக்கிடையிலான ஊடக ஒத்துழைப்பு தொடர்பாகவும் மற்றும் தொழில் பயிற்சி தொடர்பாகவும் இரண்டு ஒப்பந்தங்கள் நேற்றுக் கைச்சாத்திடப்பட்டுள்ளன. அத்துடன் பாதுகாப்பு மேம்பாடு தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

இஸ்லாமாபாத்தில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகை

»19

### தமிழகத்துடன் நெருக்கம் இலங்கைக்கு அவசியம்

கொழும்பு,பெப் 12

இந்திய அரசுடன் குரோதம் ஏற்படாத வகையில் இலங்கை அரசு தனது வெளியுறவுக் கொள்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணைந்து தங்களது செயற்பாடுகளுக்கு தமிழ்நாட்டை ஒரு தளமாகப்

»19

## நாணய நிதியத்திடம் கையேந்துகிறது அரசு

கொழும்பு,பெப் 12

சர்வதேச நாணய நிதியம் அங்கீகரித்த 2.6 பில்லியன் டொலர் கடனின் கடைசிக் கொடுப்பனவான 800 மில்லியன் ரூபாவை இலங்கை பெற்றுக்கொள்ளாது என இலங்கை மத்திய வங்கி முன்னர் தெரிவித்திருந்தபோதிலும் இந்தத் தொகையைப் பெற்றுக் கொள்வதற்கு விருப்பம் தெரிவிப்ப

»19

## இலங்கை அரசைக் கவிழ்க்க வல்லரசுகள் மறைமுக சூழ்ச்சி

### அதனை ஒருபோதும் அனுமதியோம் என்கிறார் பிரதமர்

கொழும்பு, பெப்.12

நாடுகளுக்கு இடையில் முரண்பாடுகளை தோற்றுவிப்பதும், கலவரங்கள் மூலம் பிரிவினை வாதத்தை ஏற்படுத்துவதுமே அபிவிருத்தியடைந்த வல்லரசு நாடுகளின் நோக்கம். இத்தகையதொரு நிலையையே இலங்கை யிலும் ஏற்படுத்தி அரசைக் கவிழ்ப்பதற்குச் சில நாடுகள் மறைமுகமாகச் சூழ்ச்சி செய்துவருகின்றன. இதனை ஒரு போதும் நாம் அனுமதிக்க மாட்டோம். அனைத்தையும் வெற்றிகரமாக எதிர்கொள்ளும் ஆற்றல் - பலம் எம்மிடம் உள்ளது எனப் பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சகல பாகங்களிலும் தமிழ் மக்கள் வசிக்கின்றார்கள். ஆனால் வடக்கு- கிழக்கில் வசிக்கின்ற குறிப்பிட்ட சிலரே தனிநாடு கோருகின்றார்களெனவும் அவர் கூறியுள்ளார்.

மருதானை சாஹிராக்

»19


CMB / SHARAJAH -12,500/=
CMB/ROME -39,200/=
CMB/PARIS -36,800/=
CMB/CHENNAI/CMB -13,300/=
CALL 0777727617
AIR MARK Travels & Tours IATA

RAK CERAMICS UAF
150 நாடுகளில் கோடிக்கணக்கான மக்களின் நம்பிக்கையை வென்ற தரமான தெரிவு RAK CERAMICS WALL TILES, FLOOR (தரைக் கற்கள்), குளியலறை சாதனங்கள் நீர்க்குழாய்கள் (TILES) அனைத்தையும் தன்னிகரற்ற தரத்தில் பெற்றுக்கொள்ள...
NIRO GRANITE
தரம் வேண்டுமா.. சிறந்த தெரிவு வேண்டுமா...
சுவிஸ் தொழில்நுட்பத்தில் மலேசியாவில் தாயரிக்கப்பட்ட NIRO டைல் வகைகளை யாழ்.நகரில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள்..
# 212, Palaly Road, Jaffna. 021 222 0033 / 021 222 0044
#05, Stanley Road, Jaffna. 021 222 4777/021 222 4888 #05A, Kodikamam Road, Nelliyadi. 021 226 2000 /021 226 3111
Ranjanas CERAMIC metro engineering (pvt)ltd.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நாம் தமிழர்' ஆர்ப்பாட்டம் திருப்பி அனுப்பப்பட்டார் தொண்டா

கோயம்புத்தூர், பெப் 12

இந்தியாவுக்குச் சென்ற அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான், நாம் தமிழர் கட்சியினர் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தையடுத்து இலங்கைக்குத் திரும்பி அனுப்பப்பட்டுள்ளார். இவ்வாறு ஆர்பாட்டம் காரணமாக இந்தியாவுக்குச் சென்ற இலங்கை அமைச்சர்கள் திருப்பி அனுப்பப்படும் இரண்டாவது சம்பவம் இதுவாகும்.

இந்தியாவுக்குச் சென்ற அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கோயம்புத்தூரில் 'ஹோட்டல்' ஒன்றில் தங்கியிருந்த சமயம் அதனை அறிந்து கொண்ட நாம் தமிழர் கட்சி அமைப்பினர் அதனை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தின் போது 'ஹோட்டல்' கேற்றைத் தாண்டி உள்ளே சென்று அமைச்சருக்கு அச்சுறுத்தும் வகையில் நாம் தமிழர் கட்சியினர் செயற்பட்டனர். இருப்பினும் அமைச்சருக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அவரது பாதுகாவலர்களால் பாதுகாக்கப்பட்டு இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

> ‘இவ்வாறு ஆர்பாட்டம் காரணமாக இந்தியாவுக்குச் சென்ற இலங்கை அமைச்சர்கள் திருப்பி அனுப்பப்படும் இரண்டாவது சம்பவம் இதுவாகும்.’

இதேவேளை கோவையிலுள்ள பந்தயத்திடலில் தங்கியிருந்த அமைச்சர், நேற்று முன்தினம் நள்ளிரவில் மதுபோதையில் விடுதி வரவேற்பாளர் பகுதிக்குச் சென்று அங்கிருந்த பெண் பணியாளர்களிடம் தரக்குறைவாகப் பேசியுள்ளார்.

விடுதிப் பணியாளர்கள் அவரை சமாதானப்படுத்தி அறைக்கு அனுப்ப முயன்றனர். அதற்கு அவர், என்னை ஒன்றும் செய்ய முடியாது, நான் இந்திய அரசின் விருந்தினர் என்று கூறி அறைக்குத் திரும்ப மறுத்துள்ளார். அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் குழப்பம் நீடிக்கவே, அதுபற்றி பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

பொலிஸார் வருகை தந்து அமைச்சரை சமாதானப்படுத்த முயன்றபோதும் தொடர்ந்தும் அவர்களுடன் வாக்குவாதம் செய்ய, பொலிஸார் அமைச்சரை தூக்கிச் சென்று அவரது அறையில் தள்ளி பூட்டியுள்ளனர். (5)

# இராணுவத்தினரை வெளியேற்ற டக்ளஸுக்கு ஒரு மாதம் போதுமாம்



யாழ்ப்பாணம், பெப். 12

வடக்கு மாகாணத்தில் இருந்து இன்னும் ஒரு மாதத்தில் இராணுவத்தினர் அகற்றப்பட்டு விடுவார்கள் என்று இந்திய ஊடகவியலாளர்களிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் சென்னையில் இருந்து சில ஊடகவியலாளர்கள் யாழ்ப்பாணம் அழைத்துவரப்பட்டிருந்தனர். அவர்களிடமே, வடக்கில் எஞ்சியுள்ள படையினரை அகற்ற தனக்கு ஒரு மாத காலஅவகாசம் தேவைப்படுவதாக கூறியுள்ளார். இந்தத் தகவலை பி.ரி.ஐ வெளியிட்டுள்ளது.

வடக்கில் பெரும்பாலான பகுதிகளில் இருந்து இராணுவத்தைக் குறைக்கும் நடவடிக்கையில் நாம் வெற்றி கண்டிருக்கிறோம். பத்தில் இரண்டு பகுதிகள் மட்டுமே இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளன.

இந்தப் பகுதிகளில் இருந்தும் இராணுவம் விரைவில் அகற்றப்படும் என்றும் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார். அதேவேளை, இராணுவ கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில் இராணுவத்தினரின் எண்ணிக்கையைக் குறைப்பது குறித்து நான் தனியாக எந்த முடிவும் எடுக்க முடியாது.

இலங்கையின் எந்தப் பகுதியிலும் கடுமையான பாதுகாப்பு நடைமுறையில் இல்லை. ஆனாலும் இராணுவ முகாம்கள் உள்ளன. இராணுவத்தைக் குறைப்பது தொடர்பாக பரிசீலித்து வருகிறோம். விரைவில் குறைக்கப்படும். அதற்கு கொஞ்சம் கால அவகாசம் வேண்டும்.

இராணுவத்தினரால் இங்கு ஏதாவது இடையூறு நேர்ந்திருந்தால், நீங்கள் என்னைக் கேளுங்கள். நான் கண்களை மூடிக்கொண்டு இருக்கமாட்டேன் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (5)

## அறக்கட்டளை நிதியம்

வவுனியா, பெப்.12

வவுனியாவில் திருமறை அறக்கட்டளை நிதியத்துக்கு நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா வேப்பங் குளத்தில் இந்து அன்பகத் திருமறை அறக்கட்டளை நிதியம் அமைக்கப் பட்டுள்ளது. அன்பகத் தலைவர் செல்வி கு. ஜெயராணி தலைமையில் இதன் நிர்வாகிகளுக்கான தெரிவு இடம்பெற்றது.

தலைவராகக் க.கிருபாகரனும், செயலாளராகச் சி.சுப்பிரமணியமும், பொருளாளராகத் திருமதி ச.நிர்மலாவும் தெரிவு செய்யப்பட்டனர். க.கணேசராஜ், எஸ்.விசயரத்தினம் மா.கதிர்காமராஜன் ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப் பட்டனர். (க)

## கட்டடங்களின் புனரமைப்புக்கு 50 மில்லியன் ரூபா

கிளிநொச்சி, பெப்.12

கிளிநொச்சி புதுமுறிப்பில் அழிவடைந்த சைவச் சிறுவர் கட்டடத் தொகுதியைப் புனரமைக்க 50 மில்லியன் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு கிளிநொச்சி முன்னாள் அரச அதிபரும் மகாதேவா சைவச்சிறார் இல்லத் தலைவருமான தி.இராசநாயகம் தெரிவித்தார். மகாதேவா சைவச்சிறார் இல்லத்தில் தற்போது 314 சிறுவர்கள் தமது கல்வி, கலாசாரம் மற்றும் பிற நிகழ்வுகளில் தனித்துவமாகச் செயற்படுகின்றனர்.

இவர்களின் வாழ்வாதாரத்தையும்- கல்வியையும் மீளக் கட்டியெழுப்புவதற்கு புதுமுறிப்பில் உள்ள அலுவலகங்களுக்கு இந்த இல்லம் கொண்டு செல்லப்பட வேண்டும்.

எனவே புதுமுறிப்பில் உள்ள 14 வகையான அழிவடைந்த கட்டடதொகுதிகளையும் மீளப் புனரமைக்க மேலும் 50 மில்லியன் ரூபா தேவையாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (க)

## நூல் வெளியீடு

வவுனியா, பெப்.12

'நிலவுப் பொழுதின் நினைவலைகள்' கவிதைத் தொகுதி நூல் வெளியீடு வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த சுகந்தினி இந்தக் கவிதைத் தொகுதியை எழுதியுள்ளார்.

இதன் வெளியீடு கடந்த 30 ஆம் திகதி பிற்பகல் 3மணியளவில் வவுனியா கோயிற்குளம் இந்துக் கல்லூரியின் சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நூலுக்கான நயப்புரையைத் தமிழ்மாமணி, தமிழருவி த.சிவகுமாரன், ஆசிரிய ஆலோசகர் இலக்கிய எழில் திருமதி த.நிறைமதி ஆகியோர் வழங்கினர். (க)

## சமூக பராமரிப்பு நிலையம்

வவுனியா, பெப்.12

வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்தில் சமூக பராமரிப்பு நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சமூக சேவை அலுவலர் த.தர்மேந்திரா தலைமையில் இந்த நிகழ்வு அண்மையில் இடம்பெற்றுள்ளது. (க)

# வெலிக்கடை மறியலில் இருந்த நபரை விடுவிக்க ரூ 3 லட்சம் பெற்று மோசடி

## அவரின் மனைவி தாக்கல் செய்த வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், பெப்.12

விளக்க மறியல்சாலையில் இருந்த ஒருவரை விடுதலை செய்வதற்கென அவரது மனைவியிடம் இருந்து 3 லட்சத்து 16 ஆயிரம் ரூபாவைப் பெற்று மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டு சம்பந்தமான வழக்கு தொடர் விசாரணைக்காக அடுத்த மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விளக்கமறியல்சாலையில் இருந்தவரின் மனைவி இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். 2009ஆம் ஆண்டு மே மாத காலப் பகுதியில் முல்லைத்தீவில் வைத்து சந்தேகத்தின் பேரில் பிரஸ்தாபநபர் கைது செய்யப்பட்டார். அவர் கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையுடன் இணைந்திருக்கும் விளக்கமறியல் சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அவரை விடுவிப்பதற்காகவே அவரது நண்பர், சந்தேக நபரின் மனைவியிடம் இருந்து 3 லட்சத்து 16 ஆயிரம் ரூபாவைப் பெற்று மோசடி செய்தார் என்று சாட்சியத்தில் குறித்த பெண் தெரிவித்தார். இவர் சார்பாக சட்டத்தரணி மு.றெமீடியஸ் ஆஜராகியிருந்தார்.

பணத்தை எதிரணியின் வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டதாகவும், இரண்டு தடவை விளக்கமறியல் சாலைக்குச் சென்று தனது கணவரைச் தாம் சந்தித்துள்ளார் என்றும், கொடுத்த பணத்தை வைத்து, எதிராளி தனது மகன் ஒருவரை வெளிநாட்டுக்கு அனுப்பியுள்ளார் என்றும் அந்தப் பெண் தமது சாட்சியத்தில் தெரிவித்தார்.

எதிரி சார்பில் முற்பட்ட சட்டத்தரணி ஜோனி மதுரநாயகம், ''எதிரியானவர் விளக்க மறியலில் உள்ள நபரைச் சந்தித்து சில பொருள்களை வாங்கிக் கொடுத்துள்ளார். தவிர இங்கு சந்திக்கச் செல்வதற்கு சில அதிகாரிகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. அவர்களுக்குப் பணம் வழங்கியே இதனைச் செய்ய முடிந்தது தவிர எதிராளி தனது சொந்தப் பணத்திலேயே தனது மகனை வெளிநாட்டுக்கு அனுப்பியுள்ளார். எனவே விளக்கமறியலில் இருந்த நபரை விடுவிக்கும் முயற்சியினால் ஒன்றரை லட்சம் ரூபா பணம் செலவிடப்பட்டுள்ளது'' என்று வாதிட்டார்.

இந்த நிலையில் இந்த வழக்கு தொடர் விசாரணைக்காக அடுத்த மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஒ-4)



இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு பாகிஸ்தான் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாகிஸ்தான் ஜனாதிபதி ஆஷிப் அல் சர்தாரியைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

# காணிகள் அரச திணைக்களங்களுக்கு பொன்நகரில் 18 குடும்பங்கள் நிர்க்கதி

கிளிநொச்சி, பெப்.12

கிளிநொச்சி, பொன் நகர் வடக்குப் பகுதியில் 1977ஆம் ஆண்டில் இருந்து வசித்துவரும் குடும்பங்களை அவர்களது காணிகளில் இருந்து வெளி யேற்றி அந்தக் காணிகளை அரச திணைக்களங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

குறித்த பகுதியில் 200 இற்கு மேற்பட்ட குடும்பங் கள் வசித்து வருகின்றன. இதில் 18 குடும்பங்கள் வாழும் 15 ஏக்கர் காணியை அரச திணைக்களங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கரைச்சி பிரதேச சபையில் பதிவு செய்யப்பட்ட 4 ஏக்கர் பொது மயானக் காணியும் இதற்குள் உள்ளடங்குகிறது.

இதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக நில அளவைத் திணைக்களம் குறிப்பிட்ட காணியை அளவீடு செய்துள்ளது.

பொன்நகர் வடக்கு பகுதியில் 1977 இல் இருந்து [illegible] இந்தக் குடும்பங்கள் வசித்து வந்ததோடு மீள் குடியேற்ற காலத்தில் சட்ட பூர்வமாக இவர்கள் அதே இடத்தில் அரச அதிகாரிகள் மூலமாக குடியமர்த்தப் பட்டனர்.

> இப்போது அதிகாரிகள் தம்மை வேறு இடத்துக்குச் செல்லுமாறு பணிப்பது நிர்க்கதி நிலைக்குத் தள்ளியுள்ளதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மக்கள் தாம் வாழ்ந்த காலப் பகுதியில் தமது காணிகளில் பயன்தரு மரங்களையும் கட்டடங்களையும் அமைத்துள்ளனர். இதனால் இப்போது அதிகாரிகள் தம்மை வேறு இடத்துக்குச் செல்லுமாறு பணிப்பது நிர்க்கதி நிலைக்குத் தள்ளியுள்ளதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

மீள் குடியேற்றம் நடைபெற்ற போதாவது மேற்படி திட்டத்தை அறிவித்திருந்தால் அதற்கேற்ற வகையில் நாங்கள் வேறு ஏதா வது உபாயங்களை நாடி இருக்க முடியும். இப்போது வங்கிகளில் கடன் பெற்று கிணறுகளையும், மலசல கூடங்களையும் அமைத்துள்ளதோடு பயன்தரு மரங் களையும் நட்டுள்ளோம். அதி காரிகளின் இந்த திடீர் செயற்பாடு எமக்கு ஆபத்தாக உள்ளது என அந்தக் கிராமத்தவர்கள் குறிப்பிடுகின்றனர்.

கிளிநொச்சிப் பிரதேசத்தில் நகரின் முக்கிய பகுதிகளை இராணுவத்தினர் தமது நிர்வாகத் தேவைகளுக்காக பயன்படுத்தி வருகின்றனர். அத்துடன் கிளிநொச்சி நகருக்கான சரியான நகரத் திட்டமிடல் வரையறுக்கப்படாத நிலையில் மக்கள் பூர்வீகமாக வாழும் குடியிருப்புக்களை அவர்களுக்கு பகிர்ந்து அளிப்பதற்குப் பதிலாக அரசுடமையாக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருவதாக விசனம் வெளியிடப்பட்டுள்ளது. (10-6)

## கடத்தப்பட்ட மாணவி வரணியில் மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 12

தென்மராட்சி கெற்பேலிப்பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்ட பாடசாலை மாணவி நேற்றைய தினம் வரணி நாவற்காட்டுப் பகுதியில் வைத்து மீட்கப்பட்டுள்ளார் என்று கொடிகாமம் பொலிஸார் நேற்றிரவு தெரிவித்தனர்.

பாடசாலையை விட்டு வீடு திரும்பிய வேளை மாணவியை கடத்திய சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் கூறினர். (ஒ-15-9)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஓரளவிலேனும் போக்கறுக்க உதவுமா என்பது சந்தேகமே!

★ வடக்கு, கிழக்கில் இராணுவ மேலாண்மை விலக்கப்பட்டு, முழுமையான சிவில் நிர்வாகம் பலப்படுத்தப்பட வேண்டும். அந்தப் பிரதேசங்களை இராணுவ மயமாக்குதலை உடன் நிறுத்துக.

★ இராணுவத்தின் துணை ஆயுதக் குழுக்களிடம் இருந்து ஆயுதங்கள் உடன் களையப்பட வேண்டும்.

★ ஆள் கடத்தல்கள், காணாமற் போகச் செய்யப்படுதல் என்பவற்றைத் தடுக்கப் புதிதாகச் சட்டம் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

★ நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகளில் ஏற்றுக்கொள்ளத் தக்கவற்றை உடன் நடைமுறைப்படுத்துக.

★ ஊடகவியலாளர் மீதான தாக்குதல்கள் குறித்துப் புலனாய்வு செய்வதற்கு நாடாளுமன்றக் குழுவை நியமிக்க வேண்டும்.

★ அரசின் செயற்பாடுகள் குறித்த அனைத்துலக சமூகத்தின் அழுத்தங்களைத் தடுப்பதில் காட்டும் அக்கறையின் அளவுக்கு, உள்நாட்டு அரசியல் தரப்புகள், பொது அமைப்புகளின் கருத்துக்களைக் காதில் போட்டுக் கொள்ளாது, அவற்றைப் புறம் ஒதுக்கும் போக்குடனும் அகங்காரப் போக்குடனும் அரசு செயற்பட்டு வருகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பத்தொன்பதாவது கூட்டத் தொடர் இம்மாதம் 29 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாக உள்ள சூழ்நிலையில், நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுமுன்தினம் விடுத்த மிக நீண்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட முக்கிய அம்சங்களில் மேற்கண்டவையும் சில.

மேற்குலக நாடுகளின் முக்கிய ராஜதந்திரிகள் நாள் மாறி நாள், ஆள்மாறி ஆள் கொழும்புக்கு மட்டுமன்றி, வடக்குக்கும் வந்து திரும்பும் வேளை பார்த்து, நாமும் இந்த நாட்டிலேயே இருக்கிறோம்; அரசியலில் ஈடுபட்டுள்ளோம் என்ற தோரணையில் மிக நீண்ட நெடும் அறிக்கை ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சி விடுத்தது.

இந்த நாட்டில் நாங்களும் அரசியல் செய்கிறோம், வெறும் பார்வையாளர்களாக இருக்கவில்லை; அவ்வாறு இருக்கவும் மாட்டோம் என்று ஒரு புறத்தில் அரசாங்கத்துக்கும் மறுபுறத்தில் வெளிநாடுகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி இந்த அறிக்கை மூலம் இயம்புகிறது, சொல்லிக் காட்டுகிறது எனலாம்.

எவ்வாறெனினும், சர்வதேச அழுத்தங்களால், காய்ச்சல், தலையிடி கண்டு, தமிழ்த் தரப்புகள் தெரிவிக்கும் கருத்துக்களை உள்வாங்குவதற்கு மறுப்பான் நிலை காட்டி வந்த அரசுக்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் அறிக்கை ஓர் அதிர்ச்சி வைத்தியம் என்று கொள்வது தவறன்று.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவால் வெளியிடப்பட்ட அறிக்கையில், பின்வரும் அம்சங்கள் கவனத்தை ஈர்க்கின்றன என்பதனைக் கருத்தில் கொள்ளலாம்:

◆ நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் இன்றியமையாத விடயங்களில் திட்டவட்டமானதும், உண்மையானதுமான ஆய்வின் முடிவுகள் எவையும் இல்லை.

◆ 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கைச்சாத்தான போர் நிறுத்த உடன்படிக்கை கருத்துருவில் தவறானது என்ற ஆணைக்குழுவின் முடிவை ஏற்கமுடியாது.

◆ போரின் போதான மரணங்களின் எண்ணிக்கையும் காயமடைந்த, உதவி நாடி நின்ற மக்களின் எண்ணிக்கையும் இன்னமும் சரியாகக் கண்டறியப்படவில்லை. இது குறித்து ஆணைக்குழு போதியளவில் விசாரித்தறியத் தவறிவிட்டது.

◆ மிக அவசரமான பிரச்சினைகளில் ஒன்றான இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தல், மற்றும் காணிச் சொத்துரிமை சார்ந்த பிரச்சினைகள் குறித்து ஆணைக்குழு முனைப்பாக கருத்தைச் செலுத்தவில்லை.

◆ பெரும் எண்ணிக்கையான பொது மக்களின் இடப்பெயர்வு மற்றும் பெருமளவிலான குடி மக்களின் மரணம், சொத்தழிவு, காணாமற்போனவர்கள் விவகாரம் என்பன பெரும் தேசியப் பேரதிர்ச்சிகளாகும். இவை நீண்ட காலத்துக்கு தமிழ் மக்களின் மனங்களில் நினைவில் இருக்கும்.

ஐ.நா. நிபுணர்கள் குழுவின் அறிக்கையை நல்லிணக்க ஆணைக்குழு கணக்கில் எடுக்கவில்லை என்றும் ஐ.தே.கவின் நீண்ட அறிக்கை விவரிக்கிறது.

சனல் 4 காணொளி குறித்த தகவல்கள் உண்மையானவையா, பொய்யானவையா என்பதை நிலை நாட்ட அரசு சுயேச்சையான புலனாய்வை ஆரம்பிக்க வேண்டும் என்று நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளமை வரவேற்கத்தக்கது என்று சிலாகிக்கும் ஐ.தே.கட்சி, தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பிலான விடயங்கள் குறித்து விசாரணை செய்யுமாறும் கோருகிறது.

மொத்தத்தில், ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் இலங்கை அரசு தரப்பில் முன்வைக்கப்படகூடிய நியாயப்படுத்தும் வாதங்களை, அறிக்கைகளை சொற்ப அளவிலேனும் போக்கறுக்க (Nullify), பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் அறிக்கை - நிலைப்பாடு - உதவுமா என்பது சந்தேகமே. அறிக்கை விட்ட ஐ.தே.கட்சியும் உள்ளூர அதனையே விரும்பும் எனவும் எதிர்பார்க்கலாம். தென்னிலங்கை மக்களிடையே கட்சிக்கு உள்ள தற்போதைய செல்வாக்கு மேலும் தேய்ந்து போகாமல் பார்த்துக்கொள்ளும் புது வடிவத்திலான உத்தி இது என்பதும் பொருத்தமே!

# கிளிநொச்சி முதல் புங்குடுதீவு வரை 23 பெரிய குடிதண்ணீர்த் தாங்கிகள்

### இரணைமடுத் திட்டத்துக்காக அமைக்கப்படும்

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ்-கிளிநொச்சி இரணைமடுக் குடிதண்ணீர்த் திட்டத்தின் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்படுகின்றன. கிளிநொச்சியில் இருந்து புங்குடுதீவு வரை 23 மிகப்பெரிய தண்ணீர்த் தாங்கிகளும் இரண்டு நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இவ்வாறு யாழ்-கிளிநொச்சி இரணை மடுக் குடிதண்ணீர்த் திட்டப் பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் குடிதண்ணீர்த் திட்டத்துக்கான ஆரம்பகட்ட வேலைகள்பூர்த்தி அடைந்துள்ளன. 23 மிகப்பெரிய தண்ணீர்த் தாங்கிகளை அமைப்பதற்கான காணிகள் தெரிவு செய்யப் பட்டுள்ளன.

கல்லுண்டாயில் நீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றும் பளையில் ஒரு சுத்திகரிப்பு நிலையமும் அமைக்கப்படவுள்ளன என்றார்.

இந்தப் பணிகளைப் பார்வையிட உலகவங்கிக் குழுவினர் விரைவில் இங்கு வருகை தரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த)

## 40 வருடங்களுக்கு மேலாக கவனிக்கப்படாத கெற்பேலி வீதி

தென்மராட்சி,பெப்.12

சுமார் 40 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் மணல் வீதியாகக் காணப்படும் கெற்பேலி பாடசாலை தொடக்கம் கடற்கரை வரையிலான வீதியினைப் புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி கடற்றொழிலாளர் சங்கத்தினர் உரிய அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.

சுமார் இரண்டு கிலோ மீற்றர் நீளமுடைய வீதியைக் கடலேரியில் தொழில் புரிபவர்கள் மட்டும்ல்ல வீதியைத் தாண்டிய பகுதியில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் பயன்படுத்தி வருகின்றனர். இந்த வீதியை கனரக வாகனங்களும் பயன்படுத்துவதால் பல இடங்களில் குழிகள் தோன்றியுள்ளன. இதனால் வாகனங்கள் செல்ல முடியாத நிலையில் மக்கள் நடந்து செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு உரிய அதிகாரிகளுக்கு காலத்துக்கு காலம் அறிவிக்கப்பட்ட போதிலும் எவரும் இந்த வீதியைப் புனரமைக்க முன்வரவில்லை.

இந்தப் பிரதேச மக்களினதும், கடற்றொழிலாளர்களினதும் நலன் கருதி இந்த வீதியைப் புனரமைத்து வழங்குமாறு கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## கச்சதீவு செல்லும் பக்தர்கள் பழவகைகள் எடுத்துவரத் தடை

யாழ்ப்பாணம்,பெப்.12

கச்சதீவு உற்சவத்திற்குச் செல்லும் இலங்கை யாத்திரிகர்கள் அங்கிருந்து திரும்பும்போது இந்தியப் பழ வகைகளைத் தம்முடன் எடுத்து வருவது தடைசெய்யப்பட்டுள்ளது.

தொற்றுநோய்த் தடுப்பு நடவடிக்கையாகவே இது நடை முறைப் படுத்தப்படவுள்ளது.

அண்மையில் யாழ். செயலகத்தில் நடைபெற்ற கச்சதீவு உற்சவம் பற்றிய ஆலோசனைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. உற்சவம் எதிர்வரும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருச்சொரூப சுற்றுப் பிரகாரத்துடன் முடிவடையும். உற்சவம் முடிவடைந்ததும் அனைத்து யாத்திரிகர்களும் தத்தமது நாடுகளுக்குத் திரும்பி விட வேண்டும். (த-7)

## வவுனியா – அநுராதபுரம் இடையிலான மேலதிக ரயில் சேவை இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,பெப்.12

வவுனியாவுக்கும் அநுராதபுரத்திற்கும் இடையே நடைபெற்று வந்த மேலதிக ரயில் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

அநுராதபுரத்தில் நடைபெற்று வரும் தேசத்தின் மகுடம் கண்காட்சியை பார்வையிடச் செல்லும் மக்களின் போக்குவரத்து வசதிக்காக இந்த ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

இந்த ரயிலில் மிகக் குறைவான பயணிகளே பயணம் செய்ததால் இந்த சேவையைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்டதாக ரயில்வே திணைக்கள அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

தந்திரிமலை ஒயாமடுவவில் நடைபெறும் இந்தத் தேசத்தின் மகுடம் கண்காட்சி இன்று ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவடைகிறது. (த-17)

## பிரதேச மலர் வெளியீடு

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் பிரதேச மலர் ஒன்றை விரைவில் வெளியிடவுள்ளது.

இந்த மலர் வெளியீடு தொடர்பான முன்னேற்பாட்டுக் கூட்டம் ஒன்று இன்று ஞாயிற்றுக் கிழமை உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன் தலைமையில் உதவி அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெ றும்.

இந்த ஏற்பாட்டுக் கூட்டத்தில் பிரதேசத்திற்கு உட்பட்ட ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-17)

## வழக்கு ஒத்திவைப்பு

பதின்ம வயதுச் சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய 64 வயது முதியவரைத் தொடர்ந்து எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார். வழக்கின் குற்றவாளியான முதியவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாக யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து இந்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ம-9)

# நிகழ்வுகள் இன்று

### செயலமர்வு

வலிகாமம் வலயப் பாடசாலைகளில் தரம் 6 முதல் 11 வரை சைவ சமய பாடம் கற்பிக்கும் உடுவில், தெல்லிப்பழை கோட்ட ஆசிரியர்களுக்கான செயலமர்வு காலை 8 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (த-14)

### கலைநிகழ்வு

வட அல்வாய் இளங்கோ மழலைகள் கல்லூரிப் பூங்கா சிறார்களின் கலை நிகழ்வுகளும், பிரியாவிடை நிகழ்வும் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன. கல்விப் பூங்காத் தலைவி திருமதி.சரோஜினி உதயகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அல்வாய் தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபர் பொ.நவநீதமணி கலந்துகொள்வார். (த-8)

### நூல் அறிமுகம்

நெடுந்தீவு முகிலனின் 'பயணிகள் கவனத்திற்கு' கவிதை நூல் அறிமுக விழா முற்பகல் 10 மணிக்கு யாழ். பஸ் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

### திறப்புவிழா

அல்லாரை ஐங்கரன் சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று இடம் பெறவுள்ளது. நிலையத் தலைவர் க.தம்பு தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய உதவி உள்ளுராட்சி ஆணையாளர் செ. பிரணவநாதன் கலந்துகொள்வார். (த-9)

### பாலஸ்தாபனம்

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் உள் வீதியில் அமையப் பெற்றுள்ள விக்கிரகங்களுக்கான பாலஸ்தாபனம் காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. (த-8)

### நற்செய்தி விழா

பிலதெல்பியா மிஷனறி சபையின் நற்செய்தி பெருவிழா முற்பகல் 10 மணிக்கு கண்டி வீதி, அரியாலையில் அமைந்துள்ள சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-14)

### மருத்துவ முகாம்

வலி.தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் மானிப்பாய் பரிஸ் லியோ கழகமும் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி ஆண்கள் விடுதியில் நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 12.00 மணி வரை நடைபெறுகின்ற இந்த மருத்துவ முகாமில் கண் பரிசோதனை செய்து மூக்குக் கண்ணாடி வழங்கப்படவுள்ளதுடன் நீரிழிவு, குருதிய முக்கம் போன்ற நோய்களுக்கான விசேட சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. (த-130)

### கூட்டம்

யாழ்ப்பாணம் நூலக விழிப்புணர்வு நிறுவனத்தின் நிர்வாக சபைக் கூட்டம் நிறுவகத் தலைவர் திருமதி ஸ்ரீ. அருளாந்தம் தலைமையில் மு.ப. 10 மணிக்கு நடைபெறும். யாழ். பொது நூலகத்தில் நடைபெறும் கூட்டத்தில் புதிய ஆண்டிற்கான செயற்றிட்டங்கள் தொடர்பில் ஆலோசிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (த-130)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கண்ணீர்க் காணிக்கை

Dialog யாழ். சேவை நிலையத்தின் முகாமையாளர் தி. சிவகுகன் அவர்களின் அன்பு அண்ணன்

**அமரர் வைத்திய கலாநிதி தி. சிவசுதன்**

(வைத்திய அத்தியட்சகர், மாவட்ட ஆயுள் வேத வைத்தியசாலை, வவுனியா)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Dialog யாழ். சேவை நிலைய ஊழியர்கள்,
யாழ்ப்பாணம்.

## விற்பனையாளர் தேவை

கொழும்பில் உள்ள எமது ELECTRONICS பொருள்கள் விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள அனுபவமில்லாத விற்பனையாளர்கள் மற்றும் அலுவலக உதவியாள் தேவை. திறமைக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும். தங்குமிடம், உணவு வழங்கப்படும். எமது யாழ். கிளைக்கு நேரில் சுயவிவரக்கோவையுடன் 14.02.2012 அன்று நேரில் வரவும்

தொடர்பு : SATS - TECH ENGINEER'S
No, 300, K.K.S. Road, Jaffna.
T.P. 021 2228812 / 0777710785



## கண்ணீர் அஞ்சலி

Dialog நிறுவனத்தின் யாழ்.கிளையின் முகாமையாளர் தி. சிவகுகன் அவர்களின் அன்பு அண்ணன்

**அமரர் டாக்டர் தியாகராஜா சிவசுதன்** அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முகாமையாளரும், அலுவலர்களும்
Dialog நிறுவன சாவகச்சேரி கிளை

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம்: | | மறைவு: |
|---|---|---|
| 11 ★ 04 ★ 1995 |  | 12 ★ 02 ★ 2009 |

**அமரர் தாரணி மயில்வாகனம்**

*வாழ்க்கை எனும் பாதையிலே*
*நீ காட்டிய பாசமெல்லாம்*
*எமைவிட்டுப் பிரிந்து மூன்றாண்டானதோ:*
*உயிரோடும் உணர்வோடும் கலந்துவிட்ட*
*உங்கள் நினைவலைகள் என்றென்றும்*
*எம்முடன் நிலைத்திருக்கும்*

16, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

கலைஞானசிங்கம்,
தியாகேஸ்வரி.

## வணிக மாணவருக்கு நாளை செயலமர்வு

வடமாகாணக் கல்வித்திணைக்களமும் 'சீமா' நிறுவனமும் இணைந்து நடத்தும் வணிகக் கல்வி மாணவர்களுக்கான செயலமர்வு நாளை திங்கட்கிழமை யாழ். வேம்படி மகளிர் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் ஜெகத் பண்டார கலந்து கொண்டு இந்தச் செயலமர்வை நடத்தவுள்ளார்.

இந்த வருடம் உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வணிகக் கல்வி மாணவர்களுக்காக இலவசமாக இந்தச் செயலமர்வு நடத்தப்படுவதாக வடமாகாண கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் கு.செல்வன் தெரிவித்தார்.

காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரையும் இடம்பெறும் இந்தச் செயலமர்வின் போது மாணவர்களுக்கு விளக்கக் குறிப்புக் கையேடுகளும் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வடமாகாணத்தில் சேவையிலுள்ள வணிகக் கல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வு இடம்பெறவுள்ளது. (ஒ-03)

## கட்டுப்பாட்டை இழந்த "ஹயஸ்"

தென்மராட்சி, பெப்.12

ஏ-9 வீதியில் புதிதாகப் போடப்பட்ட காப்பற் வீதியில் கட்டுப்பாட்டை இழந்த ஹயஸ் வான் வீதியின் மறுபக்கத்தில் படையினரால் அண்மையில் அமைக்கப்பட்ட புற்தரை காவல் வேலியைச் சேதமாக்கியதுடன் அங்கிருந்த தொலைத்தொடர்புக் கம்பத்தையும் சேதமாக்கியுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை 6மணிக்கு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்றது.

விபத்தில் வாகனத்தின் முற்பகுதி பலத்த சேதமடைந்த போதிலும் அதில் பயணித்தவர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-9-14)

## BUS விற்பனைக்கு

57 ஆசனங்களை கொண்ட இல NP-NA XXXX TATA star bus விற்பனைக்கு உண்டு (பாதை அனுமதிப்பத்திரம் உண்டு.)

தொடர்புகளுக்கு:-
0779591323, 0776160248, 0770204779

## வேலையாள்கள் தேவை

மிக்சர், இனிப்பு வகை தயாரிப்பதில் அனுபவமுள்ளோர் அல்லது வேலை பழகி தொடர்ந்து வேலை செய்ய ஆண், பெண் இருபாலாரும் தேவை.
சம்பளம் நேரில் பேசலாம்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி :-
பாரதி இன்டஸ்ரீஸ்,
இல 19, சம்பியன் லேன், கொக்குவில்.

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் D.M.T. Multi National Companyஇற்கு முகாமைத்து பயிற்சிக்காக பின்வருவோர் தேவை.
Supervisor, Asst. Manager, Manager
(12 பேர் மட்டும்)
6 மாத பயிற்சியும் இதன் போது 15,000/- தொடக்கம் 25,000/- வரை பெறமுடியும்.
O/L, A/L தகைமையுடையோர் விண்ணப்பிக்கலாம்.
தங்குமிட வசதி இலவசம்.

மேலதிக விவரங்களுக்கு : 0776219536.

## நாராயணா கட்டடப்பொருள் வர்த்தகர்
## NARAYANA HARDWARES TRADER

**கணக்கு எழுதுநர் (ACCOUNTS CLERK)**

எமது நிறுவனத்தில் மேற்படி பதவியில் பணியாற்றுவதற்கு க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்த ஆண்/ பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வயது - 20 - 35 இடைப்பட்டவர்கள்

கணினி அறிவும், ஆங்கில அறிவும் விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.

இப்பதவியில் இணைந்துகொள்ள விரும்புபவர்கள் தமது விண்ணப்பத்தினை 15.02.2012இற்கு முன்னதாக கீழ்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.

*முகாமையாளர்*
**நாராயணா கட்டடப்பொருள் வர்த்தகர்,**
92C, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 2225390

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நன்னித்தம்பி சின்னத்தங்கம்



ஆதிமயிலிட்டி கிராமக் கோட்டடியைப் பிறப்பிடமாகவும் Canada TORONTO- ON ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நன்னித்தம்பி சின்னத்தங்கம் 09.02.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான வேலுப்பிள்ளை-இளையதம்பி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தவன் -விசாலாட்சி தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நன்னித்தம்பியின் அன்பு மனைவியும் சிவனேஸ்வரி, செல்வராணி, தேவதாஸ், விநாயகமூர்த்தி (Canada), கிருபாகரன் (Canada), கிருபாலினி (Canada), காலஞ்சென்றவர்களான கிருஷ்ணமூர்த்தி, விக்கினேஸ்வர மூர்த்தி, சிவமூர்த்தி ஆகியோரின் அன்புத் தாயும் சண்முகநாதன், சர்வேஸ்வரன், நாகேஸ்வரி, சத்தியவதி, குமுதினி (Canada), தேவராஜா (Canada), கங்காதேவி (Canada) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்றவர்களான பொன்னபலம், செல்லத்துரை, தம்பிராசா மற்றும் பொன்னம்மா, யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் சிவதர்சினி, நிறஞ்சன், குமுதினி, திருக்குமரன், கஜேன், சர்மிலி, பிரிந்தா, நயீபன், திவ்வியா, புருசோத்மன், தனுசா, கோகுலன், கஜந்தினி, கஜாகரன், டிலானி, தனுஜா, யோகான், சாரங்கா, சாரங்கன், வாகீசன், அபிரன் ஆகியோரன் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 11.02.2012 சனிக்கிழமை அஞ்சலிக்காக TORONTO-ON இல் உள்ளCHAPEL RIDGE இல் வைக்கப்பட்டு (12.02.2012) ஞாயிற்றுக் கிழமை இறுதிக்கிரியை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

பெரிய மதவடி,
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி சகுந்தலா J.R. ஜெயராஜா (சாந்தா)



சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சகுந்தலா J.R. ஜெயராஜா (சாந்தா) 09.02.2012) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் J.R. ஜெயராஜாவின் மனைவியும், சிறாந்தி பாலச்சந்திரனின் (ஆசிரியை நவில்ட் பாடசாலை, கைதடி) அன்புத் தாயும், சுப்பிரமணியம் பாலச்சந்திரனின் (போதகர் - AOG NCEASL / ADT உத்தியோகத் தர்) பாசமிகு மாமியும், சாம் அபிஷா யின் அன்புப் பேர்த்தியும், ரவீந்திரகுமார், ரமணி (இந்திரா), இளங்கோ, பாரதி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் நாளை (13.02.2012) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக சுண்டுக்குளி பரியோவான் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

20, பாரதி ஒழுங்கை,
கச்சேரி கிழக்கு,
யாழ்ப்பாணம்

தகவல்:
சிறாந்தி - மகள்
பாலச்சந்திரன்
(பாலு - மருமகன்)


**உள்நாடு வெளிநாடுகளுக்கான தபால்கள், பொதிகள் சேவையினை விஸ்தரிக்கும் முகமாக DHL யாழ்.குடாநாட்டுகளில் நம்பமுடியாத கட்டணங்கள் இப்பொழுது வழங்கப்படுகின்றது...**

உள்நாட்டுக்கான தபால்கள், பொதிகள் சேவையினை 24 மணிநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

DHL வடமாகாணத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட முகவர்

5 கிலோவிற்கு மேல் அனுப்பும் பொதிகளுக்கு
அதிரடி விசேட சலுகை...!
கனடா - 1 kg - 500/= சுவிஸ் - 1 kg - 400/=



**திருமுருகன் கொம் நெற்**
இல. 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05,திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.
இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 2 தொ.பே.:021 222 7835


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 மில்லியன் ரூபா செலவில் வேலணையில் கடைத் தொகுதி

## பிரதேச சபை அமைக்கிறது

யாழ்ப்பாணம். பெப்.12

நெல்சிப் திட்டத்தின் கீழ் வேலணை வங்களாவடிச் சந்தியில் நவீன இரு மாடிக் கடைத் தொகுதி அமைக்கப்படவுள்ளது .

இத்திட்டத்தை முன்னகர்த்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி பெறப்படவுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா தெரிவித்தார். உலக வங்கியின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு நெல்சிப் திட்டத்தின் ஊடாக 50 மில்லியன் ரூபா செலவில் நவீன இருமாடிக் கடைத்தொகுதி ஒன்று அமைக்கப்படவுள்ளது. இந்தக் கடைத்தொகுதி அமைக்கப்படவுள்ள இடம், வீதியில் இருந்து கட்டடத்துக்கு உள்ள தூரம் உட்பட விவரங்கள் மாவட்டபொறியியலாளர்களுக்கு பிரதேச சபையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வேலணைப் பிரதேச சபைக்கான வருமானம் ஈட்டலை அதிகரிக்கும் நோக்குடன் இந்தக் கடைத்தொகுதி அமைக்கப்படவுள்ளது .

எதிர்கால அபிவிருத்தியையும் நகரமயமாக்கலையும் கருத்தில் கொண்டு இந்த கடைத் தொகுதியின் அகலத்தை 4 மீற்றர்களால் கூட்டுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதியைப் பெறுமாறு எத்திரி எஸ். ஸ்றெயிலிதரன் ஆலோசனை வழங்கியுள்ளார் .

இதேவேளை - மேற்படி கடைத்தொகுதியை அமைக்கும் பணியைத் துரிதமாக முன்னெடுப்பதற்கு உதவுமாறு வேலணைப் பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# மணியந் தோட்டத்துக்கு மின் அமைச்சர் ஆரம்பித்து வைத்தார்

கொழும்புத்துறை.பெப்.12

மணியந் தோட்டத்திற்கான மின்சார விநியோகத்தினை கடந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

மணியந்தோட்டம் 4ஆம் குறுக்கு சந்திப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மின் மாற்றிக்கான ஆளியை அழுத்தி ஆரம்பித்து வைத்தார்.

மணியந் தோட்டம் பிரதான வீதி, மற்றும் முதலாம் குறுக்கு வீதி வரையுள்ள உள்ளக வீதிகளுக்கு மின்கம்பங்கள் நிறுத்தப்பட்டு மின் வயர்கள் பொருத்தப்பட்டுள்ளன.

சம்பிரதாய பூர்வமாக மின்விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்ட போதிலும் இது வரை வீதிகளிலோ, பொது இடங்களிலோ, வீடுகளிலோ இரவில் மின்சார வெளிச்சத்தை காண முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை வீதிகளிலும், சந்திகளிலும் , மின் விளக்குகளைப் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மின்சார சபை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (த-135)

# திக்கமுனை மைதானத்தை பாதுகாப்பதற்கு நடவடிக்கை

வடமராட்சி, பெப்.12

பருத்தித்துறை நகரில் விளையாட்டு மைதானமாக இருந்து வரும் திக்கமுனை மைதானத்தின் வடக்கு எல்லையில் மதில் கட்டப்பட்டு மைதானத்தைப் பாதுகாக்க நடவடிக்கைகளை பருத்தித்துறை நகரசபை எடுக்கவுள்ளது.

இதற்கென சபையின் சொந்த நிதியிலிருந்து 25 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது தவிர, நகர எல்லைக்குள் இருக்கும் கோரியடி இந்து மயானம், கத்தோலிக்க சேமக்காலை ஆகியவற்றைப் பாதுகாக்கவும், மயானம், சேமக்காலை என்பவற்றுக்கு எல்லைச் சுவர்கள் கட்டப்பட்டு நுழைவாயில்களுக்குக் கேற்றும் போடப்படவுள்ளது. இவற்றிற்கென சபை நிதியிலிருந்து பருத்தித்துறை நகர சபை 25 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதற்கென சபையின் சொந்த நிதியிலிருந்து 25 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றுக்கான வேலைகளை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கைகளை சபை மேற்கொண்டு வருவதாக பருத்தித்துறை நகரசபைத் தலைவர் சட்டத்தரணி சபா. ரவிந்திரன் தெரிவித்தார். (த-8)



உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய மாணவ சாதனையாளர் கௌரவிப்பு விழாவில் க.பொ.த.உயர்தர கணித பிரிவில் 3-ஏ சித்திபெற்று தேசிய மட்டத்தில் சாதனை படைத்த உடுப்பிட்டி அ.மி.கல்லூரி மாணவன் க.கமலவாசனுக்கு ஓய்வு பெற்ற மக்கள் வங்கி முகாமையாளர் செ.சோமசுந்தரம் வெற்றிக்கிண்ணம் வழங்குகிறார். (த-8)

# 100 நாள்கள் கடந்தும் தீர்வு கிட்டவில்லை

தென்மராட்சி,பெப்.12

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை எக்ஸ்றே இயந்திரம் பழுதடைந்து 100 நாள்களுக்கு மேலாகியும் இதுவரை திருத்தப்படாதது குறித்து நோயாளர்கள் கவலை தெரிவித்தனர்.

இந்த வைத்தியசாலைக்கு வெவ்வேறு பிரதேசங்களிலிருந்து பல்வேறு விதத்தில் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் வருகின்றனர். இங்கு எக்ஸ்றே இயந்திரம் பழுதடைந்துள்ளதால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அவர்கள் கொண்டு செல்லப்படுகின்றனர்.

இதனால் தூர இடங்களிலிருந்து வரும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

தூர இடங்களிலிருந்து வரும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

நோயாளர்களின் நலன்களில் அக்கறையுள்ள வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தினர், இந்த விடயத்தில் கவனமெடுத்து சாவகச்சேரி வைத்தியசாலையில் பழுதடைந்துள்ள எக்ஸறே இயந்திரத்தை விரைவில் திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு தூர இடங்களிலிருந்து வரும் நோயாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்க ஏற்பாடுகள் செய்யுமாறு நோயாளர்கள் கேட்டுள்ளனர். (ம-9)

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம், பெப்.12

கோப்பாய், இருபாலை பிரதேசங்களில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த பத்து நாள்களாக நடைபெற்று வரும் இந்தத் தடுப்பூசி ஏற்றும் பணியில் இதுவரைக்கும் ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளதாகச் சுகாதாரப் பிரிவு அதிகாரி ஒருவர் கூறினார்.

நாளை திங்கட்கிழமையும் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமையும் கோப்பாய் வடக்கு பகுதியில் உள்ள வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசிகள் ஏற்றப்படவுள்ளன

இந்தப் பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் த்மது வளர்ப்பு நாய்களுக்குக் கட்டாயம் ஊசி மருந்து ஏற்றிக் கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (த-17)

# வாங்கிய சில தினங்களில் இறக்கும் கோழிக்குஞ்சுகள்

## நோய்த் தொற்றுடன் விற்பனை

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ். குடாநாட்டில் பல இடங்களில் கால்நடையாகச் செல்லும் வியாபாரிகளால் விற்பனை செய்யப்படும் கோழிக் குஞ்சுகள் ஒரு சில நாள்களிலேயே இறந்து வருவதாக அதனைக் கொள்வனவு செய்து பாதிக்கப்பட்ட மக்கள் கூறுகின்றனர். இந்தக் கோழிக் குஞ்சுகள் நோய்த்தாக்கத்துக்குள்ளான நிலையிலேயே விற்கப்படுவதாக மக்கள் கூறுகின்றனர்.

தென்பகுதியில் இருந்து வருகை தரும் இந்தக் கோழிக்குஞ்சு வியாபாரிகள் கால்நடையாகவும் சிறிய வாகனங்களிலும் குடாநாட்டின் கிராமப் புறங்களுக்குச் செல்கின்றனர். அங்கு அவர்கள் தடுப்பூசி ஏற்றப்பட்ட தரமான கோழிக் குஞ்சுகள் எனத் தெரிவித்து அவற்றை மலிவான விலையில் விற்பனை செய்கின்றனர். இதனை நம்பி அவற்றைக் கொள்வனவு செய்த பலருக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அந்தக் கோழிக் குஞ்சுகள் இரண்டொரு தினங்களிலேயே இறந்துவிடுகின்றன. வாங்கிய சில தினங்களில் அவற்றுக்குத் தூக்க நோய் ஏற்பட்டு அவை இறந்துள்ளன. இந்தக் கோழிக்குஞ்சுகளால் தாம் முன்னர் வளர்த்து வந்த ஏனைய கோழிகளுக்கும் தூக்க நோய் பரவியுள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே இந்த வியாபாரிகள் தொடர்பில் சுகாதாரப் பகுதியினர் கவனம் செலுத்த வேண்டும் எனப் பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய கடும் வரட்சி வெப்பம் போன்றவற்றாலும் தடுப்பூசி ஏற்றப்படாதமையினாலுமே இந்தக் குஞ்சுகள் இறந்திருக் கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இந்த வியாபாரிகளால் பேட்டுக் குஞ்சுகள் என்று கூறி விற்பனை செய்யப்பட்ட கோழிக்குஞ்சுகள் வளர்ந்ததும் சேவலாகக் காட்சியளிப்பதாகவும் மக்கள் கூறுகின்றனர். வியாபாரிகள் இந்தக் கோழிக் குஞ்சுகளுக்குச் சாயம்பூசி விற்பனை செய்வதாகவும் அவர்கள் கூறுகின்றனர். (த-17)

# வர்த்தகர்கள் 16 பேர் சாவகச்சேரியில் சிக்கினர்

தென்மராட்சி, பெப்.12

பாவனையாளர் சட்ட விதிகளை மீறிய தென்மராட்சிப் பிரதேச வர்த்தகர்கள் 16 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 51 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபையின் மாவட்ட அதிகாரி ந.சிவசீலன் தலைமையிலான அதிகாரிகள் தென்மராட்சி பிரதேசத்தின் சாவகச்சேரி, கொடிகாமம், வரணி ஆகிய பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது கடந்த நவம்பர் மாதம் நடத்திய திடீர் பரிசோதனையில் அகப்பட்ட வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

16 வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்குகளை விசாரித்த நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா திகதி காலாவதியான பொருள்கள் விற்பனைக்கு வைத்திருந்த ஐந்து வர்த்தகர்களுக்கு தலா 4 ஆயிரத்து 500 ரூபா வீதமும்; குறித்த விலையை விட கூடுதல் விலைக்கு பொருள்களை விற்பனை செய்த எட்டு வர்த்தகர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதமும், வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத மூன்று வர்த்தகர்களுக்கு தலா ஆயிரத்து 500 ரூபா வீதமும் அபராதம் விதித்தார். (த-9)

# பருத்தித்துறை நீதிமன்றத்தில் உரிய வசதிகளை ஏற்படுத்துக

பருத்தித்துறை, பெப்.12

பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தில் மாவட்ட நீதிபதி, மாவட்ட நீதிவான் ஆகியோர்களுக்கான வாகனத் தரிப்பிடம், சட்டத் தரணிகளை வழக்காளிகள் சந்திக்கும் அறை, சிற்றுண்டிச் சாலை, பொதுமக்களுக்கான சைக்கிள், மோட்டார் சைக்கிள் தரிப்பிடங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தித் தருமாறு பருத்தித்துறை சட்டத் தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சந்திக்கும் அறை, சிற்றுண்டிச் சாலை, வாகனத் தரிபிடம் ஆகியவற்றை ஏற்படுத்தித்தருக

இக் கோரிக்கை பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஊடாக நீதி அமைச்சுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த நீதிமன்ற வளாகம் யுத்த கால சேதத்திற்குப் பின்னர் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு, நீதிமன்றம் செயல்பட்டுவரும் இவ் வேளையில் மேற் குறித்த வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டும் என மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

# முருங்கைக்காய் விலை உயர்வு

கொழும்புத்துறை,பெப்.12

யாழ். குடாநாட்டின் மரக்கறிச் சந்தைகளில் முருங்கைக் காயின் விலை மிகவும் உயர்வாகக் காணப்படுகிறது.

ஒரு கிலோ முருங்கைக் காய் 500 ரூபா முதல் 600 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. ஏனைய மரக்கறிகளின் விலைகள் குறைவடைந்துள்ள போதிலும் முருங்கைக்காயின் விற்பனை விலை உயர்ந்து செல்கிறது.

முருங்கைச் செய்கையில் மக்கள் ஆர்வம் காட்டாமையும், காலநிலை மாற்றங்களும் முருங்கைக்காய் உற்பத்தி குறைவடைந்தமைக்குக் காரணமென விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ம-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## மயில்வாகனம் நவரட்ணராசா

அல்வாயைப் பிறப்பிடமாகவும், முரசுமோட்டையை வதிவிடமாக வும் கொண்ட மயில்வாகனம் நவரட்ண ராசா 10.02.2012 சென்னை பம்மலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில் வாகனம் மற்றும் சிவபாக்கியம் தம் பதியரின் மகனும் கிருஷ்ண வேணியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், திலீபன், பைரவி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2012) ஞாயிற் றுக்கிழமை சென்னை பம்மலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

முரசுமோட்டை முருகானந்தா கல்லூரிக்கு அருகிலுள்ள அவரது இல்லத்திலும் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. நந்தகுமார்
(சகோதரன்)

## திருமதி சின்னத்துரை வள்ளிப்பிள்ளை

கரவெட்டி மத்தொனியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை வள்ளிப்பிள்ளை நேற்று (11.02.2012) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - சிவகாமி தம்பதிய ரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தசாமியின் அன்புச் சகோதரி யும், விஜயகுமார் (சிரேஷ்ட விரிவுரையாளர், பொருளியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்), நந்தகுமார் (ஜேர்மனி), சிவாஜினி (முகா மைத்துவ உதவியாளர், வலி. கிழக்கு பிரதேச சபை) அகியோரின் பாசமிகு தாயும், உதயகுமாரி, மதியழகன் ஆகியோரின் அன்பு மாமி யும், லக்ஷிகா, சதுர்த்திகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2012) ஞாயிற் றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூத வுடல் தகனக்கிரியைக்காக சேனப்பு இந்து மயா னத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

மத்தொனி,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.


## பணிநிலை வேண்டுகை (பெண்)

கணினியில் தட்டெழுத்து தெரிந்த/ பழகவிரும்பும் பெண்கள் வேலைக்கு அமர்த்தப்படவுள்ளனர். பாடசாலை உப கரணங்கள் விற்பனை செய்வதற்கும் விற் பனையாளர்கள் (பெண்கள்) தேவை. நேரில் சமுகந்தரவும். இன்று மாலை 3.00 - 6.00 நாளை காலை 8.30 - 12.00

தொடர்பு: அபிஷேக் மல்ரி ஸ்பொட் & நெற்கபே
இராமநாதன் கல்லூரி முன்பாக, மருதனார்மடம்.
0718565540, 0779005856.

## காணி விற்பனைக்குண்டு

வடமராட்சி வல்லிபுரம் கோவிலுக்கு அண்மையில் 100 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 0779589718

## வேலைக்கு ஆள்கள் தேவை

வேலை புரிவதற்கு பெண் பிள்ளைகள் தேவை

12.02.2012 - 13.02.2012 ஆகிய தினங்களில் நேரில் வரவும்

ARRUL GLOBAL EXPRESS
T.P : 0212226113

01, பிறவுண் வீதி
நாவலர் வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.

## சாரதி தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல நிறு வனமொன்றுக்கு AD தர சாரதி அனு மதிப்பத்திரமுள்ள சாரதி உடன் தேவை.

தொடர்பு : 077 2359560
(14375)(6-7-8)

## வாகனம் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Shell Model A/C 50 - XXXX தொடர் இலக்கமுடைய Alloy wheel விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 1176689

## வீடு விற்பனைக்குண்டு

பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு வேம்பன் வீதியில் (ஒஸ்காலேன் - 50M தூரம்) கிணற்றுடன் வீடு சகல வசதிகளுடன் 2 பரப்பு விற்பனைக்குண்டு.

தொடர்பு : 078 3016666
077 7295982
(14377)(6-8)

## விற்பனைக்கு

அழகுசாதனப் பொருள்கள், எவசில்வர், பிளாஸ்ரிக் பொருள் கள், பாடசாலை உபகரணங்கள், பான்சி கடைக்குரிய கண்ணாடி அலுமாரிகள், வேப்பமரப்பலகையினாலான விறாக் கைகள் உடன் விற்பனைக்கு உண்டு. மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விஷேட கழிவுகள் வழங்கப்படும். விவரங்களுக்கு:-

TP :- 0212223227,
0774744172

கௌரி அழகு மாடம்,
317, கே.கே.எஸ். வீதி
(வண். சிவன் கோயில் முன்பாக ) யாழ்ப்பாணம்.

## யூகேயில் (UK) படித்துக்கொண்டு வேலை செய்யலாம்

PRIFYSGOL glyndŵr UNIVERSITY

www.glyndwr.ac.uk

**Truly Exceptional**

Creative Industries, Media and Performance | Natural and Built Environment
Management and Business | Early Childhood Studies | Electrical Engineering
Computing | Education | Health Sciences
Aeronautical and Mechanical Engineering | Humanities | Theology
Materials and Analytical Science | Society and Community
Sport and Exercise Sciences

Undergraduate Fees Starting From £4,000
Postgraduate Fees Starting from £9,000
Top Up Degree After BTEC HND

- ரியூசன் செலவுடன் இலவச இருப்பிட வசதியும்
- Fresher MBA £9,450 இருப்பிட வசதி உள்ளடங்கலாக
- IELTS கட்டாயம் இல்லை

பல்கலைக்கழகம் பற்றி/ விசா விவரம் பற்றி இலவச ஆலோசனைகள்

ICS Integrated Corporate Solutions Pvt Ltd.

107 B -1/1, Galle Road, Colombo-06.
(Opposite to Colombo plaza NOLIMIT.)
E-Mail: info@icslanka.com
www.icslanka.com

434 3322 077 3013060

Prima
Chicken
For Goodness' Sake





# பிறிமா சிக்கன்.



வியாபார நிலையங்கள், ஹோட்டல்கள் மற்றும் நிகழ்வுகளுக்கு இலங்கையின் முதல்தர பிறிமா சிக்கனை யாழ்.மாவட்ட ஏகவிநியோகத்தரான எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

14ம் திகதி புதிதாக திறக்கப்படவுள்ள எமது விற்பனை நிலையத்தில் 14 தொடக்கம் 17ம் திகதி வரை 5Kg க்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு விலைக்கழிவும் பரிசுப் பொருள்களும்

### விற்பனைப் பிரதிநிதி தேவை

இலங்கையின் முதல்தர சிக்கனான பிறிமா சிக்கனுக்கு யாழ். மாவட்டத்துக்கான விற்பனைப் பிரதிநிதி தேவை.

தகமைகள்:
- க.பொ.த. உயர்தரம்
- ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழி அறிவு மேலதிக தகமைகள்
- சிறந்த சந்தைப்படுத்தலுக்கான திறமையும் அனுபவமும்.

நேர்முகம் : 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் நடைபெறும்.

தொடர்புகளுக்கு: தேவா 0771566661 மனோஜன் 0777755482

## அண்ணா அன் கோ (தனியார்) நிறுவனம்

192, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

0214923254/0771566661
aac.jaffna@gmail.com | www.zealouslk.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 56

## நீரிழிவு: உங்கள் குருதியில் வெல்ல மட்டம் குறையும் போது...

நீரிழிவு நோயாளிகளில் பல காரணங்களினால் அவர்களின் குருதியில் வெல்ல மட்டம் அல்லது குளுக்கோஸின் அளவு குறைவு ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு. நீங்கள் உள்ளெடுக்கும் உணவின் அளவு குறையும் போது, அல்லது தாமதித்து உண்ணுதல், உள்ளெடுக்கும் உணவில் மாப்பொருள் மிகவும் குறைந்த அளவில் இருத்தல், அளவுக்கு மீறிய தேகப் பயிற்சி, வெறும் வயிற்றில் மதுபானம் எடுத்தல், நீங்கள் உள்ளெடுக்கும் மருந்தின் அளவு, வகை மற்றும் தேவைக்கு அதிகமாக இன்சுலின் மருந்தை எடுத்தல், உங்கள் உடல்நிலை, மற்றும் வாழ்க்கைமுறை, மன அழுத்தங்கள், உடலில் கிருமி தொற்றுக்கள், கர்ப்பிணிப் பெண்கள் போன்ற பல காரணங்களினால் குருதியில் வெல்ல மட்டம் குறைவு ஏற்படுகின்றது. இதன்போது உங்கள் உடலில் கடும்பசி, வியர்வை, படபடப்பு, தள்ளாட்டம், சோர்வு, தலைச்சுற்று, நடுக்கம், மயக்கம், எரிச்சல் அடைதல், பொறுமை அற்றுப் போதல், பயம், பீதி,திடீர் என தலை எடைகுறைந்தது போன்ற நிலை, தூக்க மயக்கம், கோபம், சோகம், பார்வை மங்கு தல், வாந்தி எடுத்தல், உதடு நாக்கு மரத்துபோதல், செய்யும் காரியங்களில் ஒரு தொடர்பும் சம்பந்தமும் இல்லாமல் போதல், விளக்கமுடியாத நடத்தைகள், பயத்தை உண்டுபண்ணும் கற்பனைகள், தலைவலி, குழப்பம், தனித் தன்மை மாறுதல், நரம்புத்தளர்ச்சி போன்ற பல்வேறு அறிகுறிகள் காணப்படும். எனினும் எல்லா அறிகுறிகளும் ஒருவருக்கு ஒரே சமயத்தில் வராது.

இவற்றை நாம் அலட்சியப்படுத்தினால், நீண்டநேரம் குருதியில் குளுக்கோஸின் அளவு குறைவு ஏற்படின் மூளைக்குச் செல்லும் குருதியில் குளுக்கோஸின் அளவு குறைவு ஏற்பட்டு நீங்கள் நினைவு இழக்கவேண்டிய நிலை ஏற்படலாம், வலிப்பு, அதிர்ச்சி ஏற்படலாம். எனவே இவ்வாறான சந்தர்ப்பத்தில் வைத்திய ஆலோசனை, சிகிச்சை பெறுதல் அவசியம்.எனவே இவ்வாறான ஆபத்தான நிலைமையில் இருந்து மீள்வதற்கு சில ஆலோசனைகள்,

✸ வெகுவேகமாக நீங்கள் சாப்பிட்ட உடனேயே உங்கள் ஜீரண பாதையில் இருந்து குருதியில் கலக்க அல்லது வெல்ல மட்டத்தை அதிகரிக்கக் கூடியதான, குளுக்கோஸ், பழரசங்கள், இனிப்பு கலந்த பானங்கள் மிதமான அளவில் பருகுதல்.

✸ ஆபத்துகால கூக்குரல் இடுதல், உங்கள் குருதியில் வெல்ல மட்டம் குறைந்த நிலையில் நீங்கள் குழப்பம் அடைந்த நிலைக்கு மாறிவிடுவீர்கள். எனவே உங்களைச் சுற்றி உள்ளவர்கள் உங்களுக்கு குளுக்கோஸ் அல்லது இனிப்பு பானம் மிதமான அளவில் பருகக்கொடுப்பதற்கு உதவுதல்.

✸ உங்களைப் பற்றிய மருத்துவ குறிப்புகளை கொடுக்கக் கூடிய தகவல் அட்டையை நீங்கள் எப்போதும் உங்களுடன் வைத்திருத்தல்.

✸ நினைவு தப்பிவிட்டால் அல்லது மயக்கம் ஏற்பட்டு விட்டால் நீங்கள் எதையும் குடிக்கவோ அல்லது சாப்பிடவோ முடியாதநிலை ஏற்படும். அந்த நிலையில் நீங்கள் வைத்திய உதவியை நாடவேண்டும்.

✸ அறிகுறிகள் என்பது உங்களுக்கு தெரியக் கூடியவை. அடையாளங்கள் பிறருக்குத் தெரியக்கூடியவை. எனவே அறிகுறிகள் தென்படும்போதே சிகிச்சை வைத்திய ஆலோசனை பெறுதல் வேண்டும்.

✸ உங்களிடம் குருதி வெல்ல மட்டத்தை பரிசோதனை செய்யும் வசதி இருப்பின் இப்படியான குணம், குறிகள் தென்படும்போது பரிசோதித்துப் பார்த்து சிகிச்சை மருத்துவ ஆலோசனை பெறு தல்.

✸ மது அருந்துவதை குறைத்தல்

✸ தனியாக இருக்கும்போது தேகப் பயிற்சி கடுமையாகச் செய்வதைத் தவிர்த்தல்.

✸ நீங்கள் எடுக்கும் இன்சுலின் அளவு, மருந்துகள், உணவுக் கட்டுப்பாடுகள் போன்றவற்றை உங்களுடைய வைத்தி யரிடம், உங்களுடைய நிறை மற்றும் குருதி பரிசோதனை முடிவுகள், குணம் குறிகள் மற்றும் ஆய்வுகள் மூலம் நீங்கள் தொடர்ந்தும் அதே அளவு எடுப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்

✸ குறைந்த அளவு குளுக்கோஸ் எப்போதும் உங்களுடன் வைத்திருங்கள், நீங்கள் பாவிக்கும் இன்சுலின், மருந்து, மாத்திரைகளின் பெயர்களை அறிந்து வைத்திருங்கள்,

ச.சுதாகரன்
தாதிய உத்தியோகத்தர்
யாழ்.போதனா வைத்தியசாலை.

✸ சிலருக்கு இரவிலும் நித்திரையிலும் குருதியில் குளுக்கோஸின் அளவு குறைவு ஏற்படும்போது படுக்கையும் படுக்கை விரிப்புகளும் வியர்வையால் நனைந்திருக்கும் நிலை, தலையிடி விடியற்காலையில் ஏற்படுதல், நித்திரையின்றிப் படுத்தல் போன்ற குணம் குறிகள் காணப்படின் வைத்திய ஆலோசனை பெறுதல் வேண்டும்.

✸ விடியற்காலையில் ஏற்படும் வெல்ல மட்டக் குறைப்பை தவிர்ப்பதற்கு இரவு 10 மணியளவில் சிறிய அளவில் சிற்றுண்டி எடுத்தல். உதாரணம் தேநீர், பிஸ்கட் மற்றும் இரவு எடுக்கும் இன்சுலின் அளவை வைத்திய ஆலோசனையின் நிமித்தம் குறைத்தல்.

## உடற்பயிற்சி மூலம் உடல் வலுவை உயர்த்துவோம்

இன்றைய வாழ்க்கை முறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. குறிப்பாகச் சொல்லப் போனால் பல மணிநேரம் கணினிகளுக்கு முன்னால் இருந்து வேலை செய்வது இயந்திரங்களுடன் பல மணி நேரம் ஓர் இடத்தில் இருந்து வேலை செய்வது, வாழ்க்கை செலவினத்தை ஈடு செய்வதற்காக வேலை நேரத்திற்கு பின்னரும் பலமணி நேரம் வேலை செய்வது, சில சமயங்களில் அதிகாலை வேலைக்குச் சென்று நள்ளிரவு வரை வேலை செய்வது போன்ற செயற்பாடுகளால் மன அழுத்தம் அதிகரிக்கின்றது.

இவ்வாறான செயற்பாடுகளால் உடற்பயிற்சி செய்வதற்கு போதிய நேரம் கிடைக்காமல் போகிறது. நாளாந்தம் உடற்பயிற்சி உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு எல்லோருக்கும் அவசியமானது. உடல் உழைப்பற்ற வாழ்க்கை முறையைப் பின்பற்றுவர்களில் அநேகமானவர்கள் தங்களது இளம் பராயத்தைக் கடப்பதற்கு முன்பாகவே அதிக உடல் பருமனால் ஏற்படும் பல வகையான பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகிறது.

உடல் தசைகளின் சக்தியைப் பேணுவதற்கு உடற்பயிற்சி மிகவும் அவசியமாகும். முகம், கை, கால்கள், வயிறு ஆகிய பகுதிகளில் அதிகமான கொழுப்புப் படிதல் ஒருவரை அவரது உண்மையான வயதை விட அதிகமான வயதுடையவராகக் காட்டும்.

எனவே நீங்கள் ஒவ்வொரு நாளும் உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டும். நீங்கள் சராசரியாக ஒவ்வொரு நாளும் 30 நிமிடம் உடற்பயிற்சியில் ஈடுபடுவீர்களானால் அது உங்களை மாரடைப்பு, பாரிசவாதம், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் குறிப்பிட்ட சில வகையான புற்றுநோய்களில் இருந்தும் பாதுகாக்கும்.

### உடற் பயிற்சியின்மையினால் ஏற்படும் பிரச்சினைகள்

உடற்பயிற்சி இன்மையினால் உடல் எடை அதிகரிக்கும்.

உடற்பயிற்சியின்மை, அதிகளவான கொழுப்புணவுகள் உடலின் அனுசேபத் தொழிற் பாடுகளை குழப்பும். இதனால் உடலில் குருதிக்குளுக்கோஸ் மட்டமும், கொலஸ்திரோல் மட்டமும் அதிகரிக்கும். இது அதிக உடல் பருமனுக்கு வழிவகுக்கும். அதிக உடல் பருமன் ஒரு நோயாக அமைவதுடன் அது வேறு பல நோய்கள் ஏற்படவும் வழிவகுக்கும்.

### அதிக எடை இதய நோய்களை ஏற்படுத்தும்

அதிக உடற்பருமனானது இதயத்திலும் குருதிக் குழாய்களிலும் நோய்களை ஏற்படுத்தும். அத்துடன் இது உயர்ந்த அழுத்தத்துடன் தொடர்புடையது. அதிக உடல் எடையு டையவர்கள் பெருங்குடல் மற்றும் நேர் குடல் புற்று நோய்களுக்கு ஆளாகின்றார்கள்.

### உடல் பருமன் உங்கள் ஆயுளைக் குறைக்கும்

அதிக உடலெடை உடையவர்கள் ஆய்வுகளின் படி குறைந்த வயதில் இறக்கின்றார்கள். குருதிக் குழாய்களிலுல் ஏற்படும் நோய்கள், நீரழிவு, சிறுநீரக நோய்கள், மூட்டுகளில் ஏற்படும். வருத்தங்கள், சிறுநீர்ப்பை நோய்கள், அத்துடன் களைப்பு, தலைவலி என்பன கூட உடல் பருமனானவர்களில் அதிகம் ஏற்படுகிறது. இதனால் நோயாளியாக மாறும் தன்மையும் சிறப்பும் அதிகமாக ஏற்படுகின்றது.

### அதிக எடையானது வாழ்வின் தராதரத்தையும் மற்றும் ஒருவரின் தனி ஆளுமையையும் பாதிக்கும்

அதிக உடல் எடையானது [illegible] தலை பலவீனமாக்குகின்றது. அதிக உடல் எடை உடையவர்கள் பொதுவாக மன அழுத்தத்தினால் பாதிக்கப்படுகின்றார்கள். உயர்ந்த அழுத்தம், மூச்சடைப்பினால் தற்காலிகமாக மூச்சுநிற்றல், சமூகப் பிரச்சினைகள், மன அழுத்தம் மற்றும் தன்னம்பிக்கையின்மை என்பனவும் உடல் பருத்தவர்களில் அதிகமாகும்.

### நாளாந்த உடற்பயிற்சி மிகவும் அவசியம்

உடற்பயிற்சியானது உடலில் காணப்படும் கலோரிகளை செலவழிக்கும் ஒரு செயன்முறையாகும். நீங்கள் விளையாட்டுகள், சுத்தமாக்கும் செயற்பாடுகள். படிக்கட்டில் ஏறுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும் போது சாதாரணமாக உடற்பயிற்சி செய்கிறீர்கள்.

உடற்பயிற்சி உங்கள் உடலில் நல்ல குருதிச்சுற்றோட்டத்தை உறுதிப்படுத்துகின்றது. மேலும் உங்கள் இதயத்திற்கு நன்மையளிக்கும் நல்ல கொலஸ்ரோல் ஆன HDL கொலஸ்ரோலை உடலுக்குத் தேவையான அளவிற்கு உயர்த்துவதற்கும் உதவுகின்றது.

உடற்பயிற்சியானது உங்கள் உடல் எடை அதிகமாகாமல் தடுக்கின்றது. அத்துடன் அதிக உடல் எடையுடன் தொடர்புடைய பல சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படாமல் தடுக்கிறது.

### உடற்பயிற்சிகள்

அவரவர்கள் தங்களுக்கு ஏற்றமாதிரியான உடற்பயிற்சிகளை ஒரு நாளைக்கு அரை மணித்தியாலமாவது செய்தல் வேண்டும்.

### நடத்தல்

இது எல்லா வயதினருக்கும் உகந்த உடற்பயிற்சியாகும். ஆனால் சரியான விளைவுகளைப் பெறுவதற்கு நீங்கள் உங்கள் கைகளை முன்னும், பின்னும் அசைத்து வேகமாக நடக்க வேண்டும். முதியோர்கள் சராசரியான வேகத்தில் நடந்தாலே போதுமானது. ஆனால் படியிலேறுதல் போன்ற செயற்பாடுகள் இதயத்தின் [illegible] சுட்டும். இதன் போது [illegible] தேவை. மேலும் வயதானவர்கள் அதிக களைப்படையக் கூடிய வகையில் நடக்கக்கூடாது.

மெதுவாக ஓடுதல் [Joging]

பொதுவாக எல்லா வயதினருக்கும் ஏற்ற நல்ல உடற்பயிற்சியாகும்.

கயிறடித்தல் [SKIPPING]

சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் பொருத்தமான உடற்பயிற்சியாகும்.

சைக்கிள் ஓடுதல் [Cycling]

எல்லாவயதினருக்கும் ஏற்ற உடற்பயிற்சி

### நீந்துதல்

நீங்கள் இதை பாதுகாப்பாகச் செய்யமுடியுமாயின் உடலின் எல்லாப் பாகங்களுக்கும் நன்றாக அப்பியாசம் தரும் பயிற்சியாகும்.

மேற்குறிப்பிட்ட பயிற்சிகளை விட வேறு பொருத்தமான உடற்பயிற்சிகளும் உள்ளன. உடல் நிலைக்கு ஏற்பவும் கிடைக்கும் நேரத்திற்கு பொருத்தமானதாகவும் பயிற்சிகள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

### உடற் பயிற்சியினால் ஏற்படும் நன்மைகள்

★ஆரோக்கியமான இதயம்
★தெளிவான சுவாசப்ப்ப
★உறுதியான என்புகள்
★மன அழுத்தத்தில் இருந்து விடுபடுதல்

நீங்கள் உடற்பயிற்சி செய்வதன் மூலம் இளம் சந்ததியினரையும் உடற்பயிற்சியில் ஈடுபடச் செய்வதன் மூலமும் ஆரோக்கியமான சமூதாயத்தை உருவாக்க முடியும். விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் பல நவீன கண்டு பிடிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டாலும் அவை மனிதனின் வாழ்வை இலகுவாக்கினாலும் உடலுக்கு தேவையான பயிற்சிகளை குறைத்து விடுகிறது. எனவே உடல் ஆரோக்கியம் பேண உடற்பயிற்சி அவசியமானது.

ஆரம்பத்தில் நாளந்தம் சில நிமிடங்கள் செய்யுங்கள். பின்பு படிப்படியாக நேரத்தை அதிகரித்து 30 நிமிடங்கள் வரை செய்யுங்கள். ஆரோக்கியமான வாழ்வு உங்களை தேடிவரும். ஆனந்தமாக வாழ்வீர்கள்.

கோ. நந்தகுமார்
விரிவுரையாளர்
தாதியர் பயிற்சிக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## குப்புசாமி ஞானசேகரம்

**(ஓய்வுபெற்ற உதவிக் காணி ஆணையாளர்)**

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் சந்திரவளவு, துன்னாலை தெற்கை வசிப்பிடமாகவும்கொண்ட குப்புசாமி ஞானசேகரம் (10.02.2012) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குப்புசாமி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லையா - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், பாக்கியலட்சுமியின் பாசமிகு கணவரும், ஞானகி (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் கிராம அபிவிருத்தி திணைக்களம், பிரதேச செயலகம் தெல்லிப்பழை), ஞானரூபி (முன்னாள் எழுதுவினைஞர் பிரதேசசபை கரவெட்டி), ஞானோதயன் (மக்கள் வங்கி முகாமையாளர் பளை), ஞானதயாளன் (ஆசிரியர்- கிளி/பூநகரி நல்லூர் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான நேசரத்தினம், இராஜேஸ்வரி மற்றும் கதிர்காமசேகரர் (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சங்கர் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் கணக்காய்வு திணைக்களம் யாழ்ப்பாணம்), சிவசங்கர் (பொறியியலாளர் லண்டன்), துவாரகா, கவிதா (ஆசிரியை-யா/இந்துக் கல்லூரி) ஆகியோரின் மாமனும், கபிஷன், லதுஷன், மோஷயன், கேஷயன், ரக்ஷனா, ரக்ஷயன், பவித்திரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் பிட்டி தரவு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சந்திரவளவு,**
**துன்னாலை தெற்கு,**
**கரவெட்டி.**

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்**

(சி/8916) (6-7-45)

## உள்ளக வீதி அமைக்கக் கோரிக்கை

வடமராட்சி,பெப்.12

பருத்தித்துறை நீதிமன்றத் தொகுதியைக் கொண்ட வளாகத்துக்குள் உள்ளக வீதியை அமைத்துத் தருமாறு பருத்தித்துறை நகர சபையிடம் பருத்தித்துறை நீதிமன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த நீதி மன்றக் கட்டடத் தொகுதி கடந்த 1940ஆம் ஆண்டு கட்டப்பட்ட போது நீதிபதி, சட்டத்தரணிகள் பயன்படுத்தும் வாகனங்கள் வந்து செல்வதற்காக உள்ளக வீதி அமைக்கப்பட்டிருந்தது.

அவ்வீதி மெல்ல மெல்லச் சேதமடைந்து யுத்த காலத்தில் முற்றாகச் சேத மடைந்து உள்ளக வீதி ஒன்று இல்லாத நிலை போலக் காட்சி அளிக்கின்றது.

நீதிமன்றக் கோரிக்கை தொடர்பாக பருத்தித்துறை நகரசபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டு முடிவு செய்யப்படும் என நகர சபைத் தலைவர் சபா.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

(ம-8)

**THARISH ENTERPRISES**



கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் கட்டிட நிர்மான துறையில் தேர்ச்சி பெற்றவர்களால் உங்கள் கனவு இல்லங்களை உங்கள் விருப்பத்திற்கேற்ப குறுகிய காலத்தில் நிர்மாணித்துக் கொடுக்கப்படும்.

*"We build your dream house with our professional staff"*

**Contact : 0773 464 772 / 0776 687 320**
**A9, Road, Meesalai North, Meesalai**

# அந்தியேட்டி அழைப்பு



17.01.2012 செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு

## அமரர் ஆழ்வார் மயில்வாகனம்

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 16.02.2012ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6 மணியளவில் கொழும்பு முகத்துவாரம் கிரியை மண்டபத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மு.ப 11 மணியளவில் 18/ G / 5, Charlimont Road, Colombo-06 இல் உள்ள அமரரின் இல்லத்தில் சபிண்டீகரண கிரியை ஆத்மசாந்திப் பிரார்த்தனை ஆகியன நிகழவுள்ளன. இந் நிகழ்வுகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்குமாறு மிகவும் பணிவன்புடன் வேண்டுகின்றோம். ஆத்மசாந்திப் பிரார்த்தனையைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

18/G /5, Charlimont Road, Colombo-06.
077-1968690, 077- 5492677 - குடும்பத்தினர்

# புதுக்கடைத் திறப்பு விழா

நிகழும் மங்களகரமான கர வருடம் தைத்திங்கள் 29ஆம் நாள் இன்று (12.02.2012) ஞாயிற்றுக்கிழமை அத்த நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய காலை 9.34-11.04 வரையுள்ள சுபவேளையில்

## தனு எலக்ரிக்கல் அன் ஹாட்வெயர்

என்னும் ஸ்தாபனத்தை புதிதாக திறப்பதற்கு இறையருள் கைகூடியுள்ளது. இந்நிகழ்வில் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் கலந்துகொண்டு ஸ்தாபனத்தை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



**141, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**உரிமையாளர்,**
**M.I.றமீன்**

(குறிப்பு: தற்போது இயங்கும் இடத்துக்கு அருகில்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

தச்சுவேலை தெரிந்தவர்கள், கூலியாள்கள், பண்ணை வேலையாள்கள் தேவை. கூடியளவான சம்பளமும், மேலதிக நேர கொடுப்பனவுகளும் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு:

மல்ரி பாம் சென்ரர்
லிப்றா மரத்தளபாட நிலையம், 61, இராமநாதன் வீதி, கலட்டி.
077 3001763, 021 2219292
(14368)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
**தியாகராஜா சிவசுதன்**
(வைத்திய அத்தியட்சகர் - மாவட்ட சித்த ஆயுள் வேத வைத்தியசாலை - சிவபுரம், வவுனியா)

அன்னாரின் பிரிவினால் துயரும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன்அவரதுஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டு கின்றோம்.

நிறுவன ஊழியர்கள்,
சுத்தம் சுத்திகரிப்பு பராமரிப்பு நிறுவனம்,
மாவட்ட சித்த ஆயுள்வேத வைத்தியசாலை,
சிவபுரம் - வவுனியா.
(C8915)(6-7-8)


## இனி இல்லை நெஞ்சுவலி!!!




இருதய நோயினால் அவதிப்படுபவர்கள் சுகம் பெறமுடியும். விரும்பும் பலனை ஆயுர்வேத மருந்தினால் அடைய முடியும். அது இருதயத்திற்கான இரத்தவோட்டத்தை சீர்படுத்தும். நெஞ்சுவலியை நீக்கும். சிக்கலான சிகிச்சை இன்றி நலமடைவீர்கள்.

எமது சிகிச்சைகள்
*இருதய நோய்
*புற்றுநோய் தணிப்பு
*ஈரல் பிரச்சினைகள்
*மூட்டுவலி, இடுப்புவலி
*புறோட்ஸ்டிரேட் பிரச்சினை
*ஒற்றைத்தலைவலி
*மன அழுத்தம்
*இருமல், சளி
*படுக்கைப் புண்
*நீரிழிவுப்புண்
*விஷ வைரஸ் பாதிப்பு

இருதய அடைப்புக்கள் அறிகுறி
- இருதய இறுக்கம்
- இருதயம் எரியும் உணர்வு
- குறைவான சுவாசம்
- நெஞ்சுவலி

கடுமையான தலைவலியினால் அவதியா...?
அறிகுறிகள்: உணர்வில் மாற்றம், எரிச்சல், அசதி, மனத்தை ஒரு நிலைப்படுத்த முடியாமை, அடிக்கடி கொட்டாவி விடுதல், உணவில் அவா மெதுவாக உருவாகி கடுமையாகும் வலி, ஒலி, ஒளி எரிச்சலூட்டும், வாந்தி உணர்வு... இவைகள் உண்டா? உடனடியாக ஓர் ஆயுர்வேத மருத்துவரை சந்தியுங்கள்...



Sponsored by
FAIR PHARMA (PVT) LTD
(Kerala Ayurvedic Medicine)
Level 5 / East Tower / 1C,
World Trade Centre, Colombo 01.
0094 11 551 78 97, 555 18 79,
555 84 42 Fax: 551 77 56
Website: www.ayurveda.lk
fairpharmasrilanka@yahoo.com
Free Consultation
Daily @ World Trade Centre - Colombo 01.
Monthly Clinics - at all districts
Hotline: 0777 708 310 / 0777 555 600 / 0777 708 330
APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001 : 2008 QMS CERTIFIED COMPANY


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்



தோற்றம்
25.01.1959

மறைவு
14.01.2012

**கனகசபை கவீந்திரராசா** (ஐயர்)
(வலி. கிழக்கு பிரதேசசபை பணியாளர்)

என்றும் எம்மை அன்பாலும் பண்பாலும் அரவணைத்து இனிய வாழ்வு தந்த தெய்வமே எங்கள் உயர்விற்கு உறுதுணையாக அமைந்த உங்கள் சிரித்த முகம் காண்பதற்கு ஏங்கித் தவிக்கின்றோம். என்றும் இதயக்கோயிலில் இருத்திப் பூசிப்போம் அப்பா.

கடந்த 14.01.2012 அன்று சனிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தந்தை கனகசபை கவீந்திர ராசாவின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (13.02.2012) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்நிகழ்வில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

காரைக்கால் வீதி,
இணுவில்.
(14361) (6,7,10)
குடும்பத்தினர்.






## வீடு விற்பனைக்கு

ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் 3 பரம்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. (காணி பிரித்தும்) கொடுக்கப்படும்.
தொடர்பு: 0776146434

## சாரதி தேவை

வீட்டு வான் சாரதி தேவை. வயது 40 அல்லது 40 ற்கு மேற்பட்டோர் விரும்பத்தக்கது.
தொடர்பு : S.K. ஏஜென்சி
இல. 128/B, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 2226884 (14305)(6-7-8)

## காணி விற்பனைக்கு

சங்கானை கிழக்கு, சங்கானையில் 3 1/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : 072 7750023
077 7750023
(14177)(6-7-8)

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.
(13823)(4-6-7)

## அருள் முருகன் திருமண சேவை

Doctors, Engineers அரச உத்தியோகத்தர்கள், வங்கி உத்தியோகத்தர்கள், வெளிநாடு மணமகன் உட்பட எத்தகைய மணமக்கள் தேவைக்கும் நேரில் தொடர்புகொள்ளலாம். 03, யாழ். வீதி, சிறாம்பியடிலேன் (ஸ்ரான்லி வீதியில் ஆரியகுள சந்திக்கு அருகில் உள்ள லேன்) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## வேலைக்கு ஆள் தேவை
GLASS CUTTER

கண்ணாடி வெட்டத் தெரிந்த (GLASS CUTTER) அனுபவம்உள்ள ஆள்தேவை.
தொடர்புகளுக்கு : 077 7686021
இல. 11/06, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 2221133
077 3114415 (14243)(6-7-8)




## சந்நிதி முருகன் அன் ரவல்ஸ்

திருமண மற்றும் சுற்றுலாவிற்கான பஸ் சேவை
குளிரூட்டப்பட்ட திருமணக் கார்

Phone
021 222 8076
077 711 0199
077 201 8275



241, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(வீரமாகாளி அம்மன் கோவில் அருகாமை)


## கண்ணீர் அஞ்சலி



**Dr. தியாகராஜா சிவசுதன்**
(வைத்திய அத்தியட்சகர், வவுனியா மாவட்ட ஆயுர் வேத வைத்தியசாலை)

ஒன்றாகப் படித்தோம் பட்டங்கள் பெற்றோம், பல்வேறு பிரதேசங்களில் பதவிகள் வகித்தோம் பாதியிலே விட்டு விட்டு பரலோகம் சென்றது ஏனோ
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

58, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில்.

உன் பிரிவால் துயரும்
B.S.M.S பட்டமாணிகள்

## திசைகாட்டியில் பதவி வெற்றிடம்

நிர்வாக இயக்குநரின் தனிப்பட்ட செயலாளர்
(ஒப்பந்த அடிப்படை)
இருபாலாரும், 25-45 வயதெல்லை

தகைமை:
A/L சித்தியுடன், கட்டாயமாக வியாபார முன்னெடுப்புக்கள், சந்தப்படுத்தல் நுட்பங்களில் தீர்க்கமான அறிவும், அனுபவமும் எதிர்பார்க்கப்படும். ஆங்கில அறிவு, சிங்கள உரையாடும் திறன் இருத்தல் மிக அவசியம். (NGO வேலை அனுபவம் தகைமையாகக் கருதப்படமாட்டாது).



ஆளுமைமிக்கவராக இருந்தல் அவசியம்,
நேரில் வரவும்: 12.02.2012 பிற்பகல் 4 மணி
அல்லது 13.02.2012 பிற்பகல் 2 மணி
வேதனம்: கவர்ச்சிகரமானது

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்
முன் மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக நலச் செயற்றிட்ட தொழில் வாய்ப்புகள்

எமது நிறுவனத்தின் மாவட்ட செயற்திட்டங்களில் காணப்படும் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01.செயற்றிட்ட உத்தியோகத்தர்கள்
02.தொண்டர்சேவை ஊக்குவிப்பு உத்தியோகத்தர்கள்
03.செயற்றிட்ட கணக்காளர்கள்
04.செயற்றிட்ட உள்ளகக் கணக்காய்வாளர்கள்
05.செயற்றிட்ட மதிப்பீட்டாளர்கள்
06.செயற்றிட்ட முகாமையாளர்
07.செயற்றிட்ட உதவியாளர்கள்

விண்ணப்பதாரிகள் குறைந்தபட்சம் க.பொ.த. (உ.தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதோடு சமூக நல செயற்திட்ட தகைமை ஒன்றையும் பெற்றிருத்தல் அவசியம். பூரண தகவலைத் தரக் கூடியதாக வகையில் தயார் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் 19.02.2012ஆம் திகதிக்கு முன்னதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுவதோடு தாம் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் கடிதவுறையின் மேற்புறத்தில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

Country Representative,
Lloyed Parkway Foundation,
No.174, 9th Lane,
Maskeliya

## மணமகள் தேவை

யாழ் கௌரவ குடும்பம், கனடா வதியுரிமையுடைய 49 வயது நிரம்பிய 5'11" உயரமும் இளமைத் தோற்றம் உடைய ரேவதி 2ஆம் பாதம் செவ்வாய் தோஷமற்ற B.SC (MATHS) and B.SC (Electrical Engineering) பட்டம் கனடாவில் பெற்று வேலை செய்யு தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ள நற்குணமுள்ள மணமகனுக்கு படித்த குடும்பப்பாங்கான அழகிய பெண்ணை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு : 077 5671922
Email : Postbox 41 @ hotmail.com

## காணி விற்பனைக்கு

மந்திகைச் சந்தியிலிருந்து கொடிகாம வீதியில் 3பரப்பு 31/32 குளியும், கிணறும், ரொயிலற்றும், பழைய வீடும், தென்னை, தேசி மரங்களும் கொண்ட காணியும், இருபாலை கிழக்கிலும் 4½ பரப்புக் காணி யும், விற்பனைக்குண்டு
(தரகர் தேவையில்லை)
E.mail: Jenosan.Santh@Gmail.com
தொடர்பு: 077 630 0826
- 077 892 8128

## வயல் காணிவிற்பனைக்கு

கிளிநொச்சி, கரடிப்போக்கு சந்தியில் இருந்து 3.5 Km தூரத்தில் 5ஆம் வாய்க்காலில் அமைந்துள்ள இருபோகம் நெற்பயிர் செய்யக் கூடிய நீர்ப்பாசன வசதிகள் கொண்ட 21 ஏக்கர் வயல் காணி விற்பனைக்குண்டு.

அதிக விலை கோரலுக்கு மட்டும்.
தொடர்பு : 077 2881855
021 2285317
(தரகர் தேவையில்லை) (14121)(6-7-8)

## காணிவிற்பனைக்கு

கைதடி, நாவற்குழியில் ஏ - 9 பாதைக் கும் ரயில் நிலையத்துக்கும் சமீபமாக 4 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 021 3211220
021 7900909

## SARUKAYA CONSTRUCTION

(Engineers and Contractors)
Cheddiyar Valavu, Chunnakam, Jaffna.
Tel : 077 3880590 / 021 2240730, Email : sarukaya@sltnet.lk

கட்டட நிர்மாண நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பம் கோரப்படுகிறது.
1. தொழில் நுட்ப உத்தியோகத்தர்
2. படவரைஞர், AUTO CAD அவசியம்
3. சாரதி (AD வகுப்பு சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும்)
தங்கள் சுயவிவரக் கோவையுடன் ஒரு கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
சாருகாயா நிர்மாணம்
84/1, மாணிக்கதியாகராஜா வீதி, செட்டியார் வளவு சுன்னாகம்.
T.P/Fax No : 021 2220234
(14237)(6-7-8)

## மூன்றுதொடர் கடைகள்வாடகைக்கு

அச்சுவேலி பஸ் தரிப்பிடத்துக்கு முன்னால் 49 அடி நீளமும், 12 அடி அகலமும் மற்றும் சகல அடிப்படை வசதிகளையும் கொண்ட புதிதாக திறந்து வைக்கப்படவுள்ள மூன்று தொடர்கடைகள் முழுமையாகவோ, தனித்தனியாகவோ வாடகைக்கு விடப்படும். விவரங்கள் நேரில் பேசித் தீர்க்கப்படும். கடை ஒன்றுக்கு முற்பணம் 3 லட்சம். மாதவாடகை 10,000/=

தொடர்பு- செல்லத்துரை தவமணி,
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.
077 615 8066, 021 490 8566, 077 468 1475

## திசைகாட்டி யாழ்.கிளிநொச்சி கிளைகளில் ஆளணி வெற்றிடங்கள்

பகுதி நேர விசா ஆலோசகர்கள்

- வயதெல்லை: 21-65 வரை (இருபாலாரும்)
- நற்சாட்சிப்பத்திரம் மிகவும் அவசியம்
- வேதனம்: கணிசமான உதவுதொகை
- கடும் முயற்சியாளர்கள் இலவசமாக ஆஸ்திரேலியா செல்லும்வாய்ப்பு

நேர்முகத் தேர்வு (13.02.2012) பிற்பகல் 2மணிக்கு தலைமைக் காரியாலயத்தில் இடம்பெறும்.

அரசாங்க, தனியார்துறை, முன்னாள், இன்னாள் உத்தியோகத்தர்களும் பங்குகொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்
முன் மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
தலைமைக் காரியாலயம்,
37, சிவகுருநாதர் ஒழுங்கை.
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9016

கிளைகள்
115ஏ, இரத்தினபுரம் வீதி,
கிளிநநொச்சி.
021 491 4527
மெல்போர்ண்,
அவுஸ்திரேலியா.
0061412479209

## Metro Travels

விசேட விமானக் கட்டணங்கள்

| | |
|---|---|
| Colombo-Chennai-Colombo | 13500 |
| Colombo-Tiruchirapally-Colombo | 14500 |
| Colombo-Doha | 22000 |
| Colombo-London | 36000 |
| Colombo-Toronto | 80000 |
| Colombo-Singapore-Colombo | 31000 |
| Colombo-kualalumpur | 34000 |
| Colombo-Frankfurt | 40000 |
| Colombo-Milan | 38500 |
| Colombo-Rome | 40500 |
| Colombo-Paris | 38000 |
| Colombo-Zurich | 36000 |



All Taxes included, credit card Accepted with a surcharge & Travel insurance,
Above Fares Are Subject to seat Availability
Terms & Conditions Apply

மேலதிக தொடர்புகளுக்கு
METRO TRAVELS & TOURS PVT LTD
(Branch office) No-62/33, Stanley Link Road, Jaffna.
Tel:-215673555,0212224647,0212220404,0215673666.
Office Hourse: Weekdays from 8.30 am to 5.00 pm
Saturday from 9.00 am to 1.30 pm
New Branch office: No-34, New Bus Stand Complex, Vavuniya.
Tel:0242226800 / 0242226801.

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

நிகழும் மங்களகரமான கர வருடம் தை மாதம் 29ஆம் நாள் இன்று (12.02.2012) ஞாயிற்றுக்கிழமை பகல் 12.03 மணிமுதல் 1.52 மணிவரையுள்ள சித்திரை நட்சத்திரமும், அமிர்தசித்தயோகமும், இடப லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்,

திரு.திருமதி குருநாதசிவம் தம்பதிகளின்
புதல்வன் திருநிறை செல்வன்
**ரமேஸ்குமார்**
அவர்களுக்கும்



திரு.திருமதி சிவராசா தம்பதிகளின்
புதல்வி திருநிறை செல்வி
**சர்மிளா**
அவர்களுக்கும்

பாணாவிடை சிவன், நாச்சிமார் அருளும் பெரியோர்களின் நல்லாசியும் துணை நிற்க திருமாங்கல்யதாரணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து, அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய விருந்துபசாரத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமண வைபவம் நடைபெறும் இடம்: சரஸ்வதி திருமண மண்டபம்
(ராஜா கீறீம் ஹவுஸ் அருகில்) இல.37, சேர் பொன்.இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

திரு.திருமதி குருநாதசிவம் (J.P)
(சிவா நறுமணப்பூங்கா)
யாழ்ப்பாணம். Tel: 0773505985

(இருவீட்டார் அழைப்பு)

திரு.திருமதி சிவராசா
வட்டுக்கோட்டை.

## வரையறுக்கப்பட்ட கூட்டுறவு காப்புறுதி கம்பனி

CO OP INSURANCE

கூட்டுறவு காப்புறுதி நிறுவனத்தில் பதவி வெற்றிடம்

| பதவி | தேவைப்படும் பிரதேசம் | அனுபவம் | கல்வி நிலை | வயது |
|---|---|---|---|---|
| முகாமையாளர் | யாழ்ப்பாணம், கிளிநொச்சி. | 3/2 வருட காப்புறுதி அனுபவம் | க.பொ.த உ/தரம் அல்லது பட்டதாரி | 25-40 |
| விற்பனை நிறைவேற்று அதிகாரி | யாழ்ப்பாணம், நெல்லியடி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார். | காப்புறுதி அனுபவம், விற்பனை அனுபவம். | க.பொ.த சா/தரம் அல்லது க.பொ.த உ/தரம் | 25-45 |
| நிதி திட்டமிட லாளர் | யாழ்ப்பாணம், நெல்லியடி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார். | இருப்பின் நன்று | க.பொ.த சா/தரம் கணிதம் உட்பட 6 பாடம் சித்தி | 18-50 |
| எழுதுவினைஞர் | கிளிநொச்சி, நெல்லியடி. | இருப்பின் நன்று | க.பொ.த சா/தரம் கணிதம்,ஆங்கிலம், திறமைசித்தியுடன் க.பொ.த உ/தரம் 3 பாடம் கணினி யாவும் இருத்தல் கட்டாயமானது | 20-30 |
| விற்பனை முகாமையாளர் | யாழ்ப்பாணம், நெல்லியடி மன்னார், வவுனியா. | காப்புறுதித் துறையில் 2 வருட அனுபவம் | க.பொ.த உ/தரம் | 25-40 |

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:
பிராந்திய முகாமையாளர்
கூட்டுறவு காப்புறுதி கம்பனி,
2ஆம் குறுக்குத்தெரு, 1ஆம் மாடி, வவுனியா.

மேலதிக விவரங்களுக்கு தொ.பே.இல:0716840786
விண்ணப்பமுடிவு திகதி: 19.02.2012
குறிப்பு:கவர்ச்சிகரமான வருமானபெர்தி வழங்கப்படும்.

பிராந்திய முகாமையாளர்,
வடமாகாணம்.

## 31 ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு
16 ★ 04 ★ 1984



உதிர்வு
13 ★ 01 ★ 2012

## சிவபாதம் சிவரஞ்சன்

கடந்த (13.01.2012) அன்று சிவபதமடைந்த சிவபாதம் சிவரஞ்சன் அவர்களின் 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (12.02.2012) ஞாயிற்றுக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி நாவற்குழி,
கைதடி.
வே. மகேந்திரன்
(13900) (45-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி உடனடி விற்பனைக்கு

கட்டுடை, மானிப்பாய் (எழுமுன்னி) மெயின் வீதியில், 4 பரப்புக் காணி (தூய உறுதியுடன்) கிணற்றுப் பங்குடன் உடனடி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0728-383751 (C19001)

## காணி விற்பனைக்கு

கரந்தன், நீர்வேலி - உரும்பிராய் ஞானவைரவர் கோயில் வீதியில், கோகிலன் கடைக்கும் சிவபூதவராயர் கோயிலுக்கும் இடையில் வீட்டுடன் கூடிய எட்டரைப் பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு: 0777295970 (14405)

## வீடு வாடகைக்கு

10 அறைகள் கொண்ட மாடி வீடு நகர மத்தியில் இருந்து 1 KM இற்குள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வாடகைக்கு உண்டு
T.P: 0777 813646 (14370)

## வாடகைக்கு

திருமணக்கார், வான் சேவை மற்றும் மாத வார அடிப்படையில் கார் வாடகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்பு: 0752399619

## சேவை

சகல நாடுகளுக்குமான Air Ticketing மற்றும் Visa ஆலோசனை, Room Reservation, உள்ளூர் சுற்றுலா என்பன
தொடர்பு: 0752399619

## தேவை

Pharmacy வேலைதெரிந்த பெண்ணொருவர் உடுவில் இடத்தில் வேலைக்கு தேவை.
தொடர்பு: 0752399619

## கோழிக்கூடு விற்பனை

கோழிக்கூடுகள் விற்பனைக் குண்டு
தொடர்பு: 0773001763

## வீடு, காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை துணவி பிரதான வீதியில் நாகதம்பிரான் கோயிலுக்கு நேராக 21 பரப்பு வயற்காணியும் வட்டுக்கோட்டையில் வீடும் விற்பனைக்குண்டு.
2729855/0777217132 (C19004)

## காணி விற்பனைக்கு

நல்லூர் யாழ்ப்பாணம் கற்பக விநாயகர் வீதியில் 1 ½ பரப்புக் காணியும் கிணறும் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0779485848
யாழ் தொடர்பு: 0212222340 (C19003)

## பிரத்தியேக வகுப்பு

தரம் 4, 5 இற்கான புலமைப்பரிசில் வகுப்புக்கள், தரம் 6 - 11 வரையான கணித வகுப்புக்கள் தரம் மிக்க ஆசிரியரால் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 075 8347821

## தவறிவிட்டது

பழைய வீதி, கோப்பாய் தெற்கு என்னும் முகவரியைச் சேர்ந்த இந்திராணி ஜெகநாதன் என்பவரது தே.அ.அ. (518612964V) 06.02.2012 அன்று திருநெல்வேலிக்கும் இருபாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு: 021 223 0458, 0770851814

## விற்பனைக்கு

2 ½ மாதம் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் சகல ஊசிகளும் ஏற்றப்பட்ட ஆண்குட்டி விற்பனைக்குண்டு.
தொடர்பு : இல.57, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்திக்கும் பூநாறி மரத்திற்கும் இடையில், T.P .075 0489784

## விற்பனைக்கு

கலர் மீன்கள், மீன்தொட்டிகள், குருவிகள், புதியவகைக் கூடுகள், நாய்க்குட்டிகள், புதியஇனங்களில் பூக்கன்றுகள் மற்றும் பல இன கோழிக்குஞ்சுகள் அனைத்தும் ஒரே இடத்தில் விற்பனைக்கு உண்டு.
யாழ் அக்குவாரியம்
941, K.K.S றோட், யாழ்ப்பாணம்

## வீடு வாடகைக்கு

நல்லூர் சட்டநாதர் வீதியில் உள்ள வீடு, நிறுவனம், சிறிய குடும்பங்களுக்கு வழங்கப்படும்.
தொடர்பு: 075 0491761

## கோழிக் குஞ்சு விநியோகம்

தரமான No- 1 புறொயிலர் கோழிக் குஞ்சுகள் (Pussalla Farm) (24.02.2012) வெள்ளிக்கிழமையன்று விநியோகம் செய்யப்படும். பெற்றுக் கொள்ள விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்ளவும்.
'சிற்றி பாம் ரேடேர்ஸ்'' ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு.
T.P.No. 021 222 1158 (14248) (2-6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும், அந்தியேட்டிக்கிரியையும்



ஜனனம் 15-04-1927 — சிவபதம் 13-01-2012

மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் கந்தையா பொன்னையா (வர்த்தகர்)**

எங்கள் துயரில் நேரில் வந்தும், தொலைபேசி மூலமும், கண்ணீர் அஞ்சலி மூலமும் எமக்கு ஆறுதல் கூறிய அனைத்துள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (12.02.2012) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

99, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (14371) (6,7,10) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### Dr.தியாகராசா சிவசுதன் (B.S.M.S JAFFNA)

**(வவுனியா மாவட்ட சிவபுரம் ஆயுள்வேத வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர்)**



மந்துவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது சிவபுரம், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட Dr.தியாகராசா சிவசுதன் கடந்த வியாழக்கிழமை (09.02.2012) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசா மற்றும் இராஜேஸ்வரி தம்பதியரின் பாசமிகு சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் செல்லம்மா தம்பதியரின் மருமகனும் Dr.சுமதியின் (வவுனியா மாவட்ட சிவபுரம் ஆயுள்வேத வைத்தியசாலை) பாசமிகு கணவரும் வேணுகா, தேனுகா (தரம் 8, 7 வவுனியா/ இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவிகள்) கோபிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவமங்கை (யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்), சிவாஜினி, சிவமூர்த்தி (முகாமையாளர், கொடிகாமம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்), சிவகுகன் (முகாமையாளர், Dialog Telecome, Pvt. Ltd, Jaffna), சிவானந்தன் (பொறியியலாளர்), சிவமதி (ஆசிரியை, யா/ புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை), சிவசக்தி (கொழும்பு), சிவச்செல்வன் (கொழும்பு),சிவதீபம் (முகாமைத் துவ உதவியாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், யாழ்ப்பாணம்), சிவராஜா (மாணவன், உயர்தொழில்நுட்ப நிறுவனம்,ATI, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவராசா, குகன் (குகன் மில், கல்வயல்), விஜிதா (ஆசிரியை, யா/ மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை), கஜாசனா, ரவீனா, நந்தகுமார் (ஆசிரியர், யா/ மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம்), தபேந்திரன் (மோகன் ஜிவல்லறி, கொழும்பு), யதுசன் (முகாமைத்துவ உதவியாளர் வடமாகாணக் கல்வித் திணைக்களம், மருதனார்மடம்), தேவகி விக்னேஸ்வரன் (கனடா), றாகினி சிறீதரன்(பிரான்ஸ்), றஜனி மாரிகுமார் (ஜேர்மனி), தயாளினி ஸ்ரீரூபன் (கோப்பாய்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் அகிம்ஷா, அஸ்வின், அபிஷரன், அபிநேகா, கிருஸ்திகா, தனுஷ், தர்சிகா, றஜீக்கா, கிருஷாந், சந்தியா, திவ்வியா, சோபிகா, பிரியதர்சினி, சதீஸ்குமார், தர்ஜன், கம்ஜன், சத்ஜன், பத்மஸ்ரீ, கோகுலஸ்ரீ, மதுஜன் ஆகியோரின் பெரியப்பாவும் மீரா, றேணுகா, சகிதா, சாருஜா, தாரணி, திருவேள், திருவிழி, சேந்தன், கார்த்திகன், சதுஷன், கனுஷன், கார்மீசன் ஆகியோரின் பெரிய மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மீசாலை வடக்கு, கொடிகாமத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இலுவன் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அறிவொளி வீதி,
மீசாலை வடக்கு, கொடிகாமம். (14362) (2-6-7)

தகவல்
குடும்பத்தினர்.

## வீடு, வளவு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி, ஆனைப் பந்தியில் 2 ¾ பரப்புடன் கூடிய தரமான வீடு, வளவு விற்பனைக்குண்டு. மேற்படி வீடு வளவு முழுவதுமாக விற்பதற்கும் அல்லது பகுதியாக தனி வளவு 1 ¼ பரப்பு மட்டும் விற்பதற்கும் முடியும்.
தொடர்பு:011-2715130, 021-7200467, 077-9775017. (C19002)

## தவறிவிட்டது

24/2, பாரதி வீதி, கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணத்தை முகவரியாகக் கொண்ட பரராஜசிங்கம் லஜன் ஆகிய எனது தே.அ.அ. (862113497V) மற்றும் முக்கிய ஆவணங்கள் பஸ்தியான் சந்திக்கும் பாரதி வீதிக்கும் இடையில் ஒரு வாரத்துக்கு முன் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.
தொடர்புகளுக்கு: 0750498192

## வீடு காணி விற்பனைக்குண்டு

பெரிய கடையிலிருந்து 3½ மைல் தூரத்தில் வண்ணார் பண்ணையில் 3½ பரப்பு காணியுடன் கூடிய விசாலமான வீடு விற்பனைக்குண்டு. ஆசீசுக்கோ, பெரிய விற்பனை நிலையத்திற்கோ, வைத்தியசாலைக்கோ மிக வசதியானது.

மேலும் கனகரெத்தினம் மகா வித்தியாலயத்திற்கு அண்மித்ததாக உள்ள 3½ பரப்பு காணியும் விற்பனைக் உண்டு. தரகர் தேவையில்லை பார்வையிடும் நேரம் பிற்பகல் 4மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொ.பே. 077 2269878 (14364) (45-6-7)

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்



**மயில்வாகனம் தாரணி**

மலர்வு 11.09.1995 — உதிர்வு 12.02.2009

ஆண்டுகள் மறைந்தாலும்
அன்பான உன்முகம்
மீண்டும் மீண்டும் வந்து எம்மை
மிகவும் வருத்துதம்மா
என்றும் உன் நினைவில்

கைதடி வடக்கு, உதயசூரியன். — ந.கரன் குடும்பத்தினர்

## வீடு விற்பனைக்குண்டு

கலைமணி வீதி, கட்டப்பிராயில் 3¼ பரப்புக் காணியில் அமைந்த வீடும் 3 படுக்கை அறையுடன் இரண்டு வரவேற்பறை மற்றும் இதர வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு
தொடர்பு: 077 7743065, 077 7940303, 077 2912401 (14363 (45-6-7)

கனடா, நியூஸ்லாண்ட், அவுஸ்திரேலியா, லண்டன், பிரான்ஸ், கொலண்ட், இத்தாலி நாடுகளுக்கான Student, Visit விசா ஒழுங்குகள்

டுபாய், மலேசியா நாடுகளுக்கான *Visit* விசா

யப்பான் ***work permit visa***

**Euro Profile**
16B, E.S. Fernando Mawatha, Colombo - 06
நாதன் - 0779874333 நிஷ்ரினா 0778885903

## விற்பனைக்குண்டு

பலகை சீவும் இயந்திரம் (16'' வெற்)



வளைவு வெட்டும் இயந்திரம்



வேலைப்பாடு இயந்திரம்



ஆகியன விற்பனைக்குண்டு
தொடர்பு: 077 4014751 (14358) (45-6-7)

## வீடு வாடகைக்கு

கச்சேரி அருகில் 55 சோமசுந்தரம் வீதியில் சகலவசதிகளுடன் கூடிய 7அறை கொண்ட மாடிவீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு உகந்தது.
தொடர்பு:-
0212226438,0776393742

## ஸப்தஸ்வரம் இசை ஒலிப்பதிவு கலையகம்

புதிய பக்திப்பாடல்கள், மெல்லிசைப் பாடல்கள், இலங்கை இந்திய பாடகர்களின் குரல் நயத்தில் இசையமைத்து ஒலிப்பதிவு செய்து தரப்படும்.
தொடர்பு: 0776980573, ஸ்ரீகுகன் (இசையமைப்பாளர்)
விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு. (கல்வியங்காடு)

*மங்களகரமான திறப்பு விழா*

**மகுடம் புத்தக நிலையம்**

பாடசாலை புத்தகங்கள், அப்பியாசக்கொப்பிகள்
வாழ்த்து மடல்கள், பாடசாலை உபகரணங்கள்
பரீட்சை வினாத்தாள் புத்தகங்கள்,
அலுவலக உபகரணங்கள்



**MAGUDAM TECHNO SYSTEM**



TYPE SETTING, PRINTING, PHOTOCOPY, RELOAD CARDS, SOFTWARE CDS.



784, 786, கே.கே.எஸ். வீதி, இணுவில். — 784, 786, K.K.S. ROAD, INUVIL.

12.02.2012 காலை 7.30 மணிக்கு அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்
நிறுவனத்தார்: 021 2241 965

## சாரதி தேவை

யாழ் - கொழும்பு சிறியரக பார ஊர்தி (Lorry)செலுத்துவதற்கான தகுதியுடைய சாரதி தேவை.
தொடர்புகளுக்கு : T.P. 077 7110717

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில்
20 - 09 - 1985

அரக்கர் பிடியில்
12 - 02 - 2009



அமரர்
**மகேந்திரன் நவநீதன்** (நீதன்)
(நயினாதீவு)

நீதனே....
காற்றோடு வந்த உந்தன் மரணச் செய்தியை
இன்னும் கூட நம்ப மறுக்கிறது எங்கள் மனம்
நிஜமற்ற இவ்வுலகில் நீ நடந்த தேசமெல்லாம்
நினைவிழக்க முடியாமல் உந்தன் சுவடுகளை
தேடுவதும் உனக்குத் தெரிய வில்லையா?

வாழும் வயதினிலே வரலாறாகிப் போனாயே
சாவு என்ற சதிகாரர்கள் விதித்த வலையினிலே எங்கள்
சந்தோஷம் அத்தனையும் சமாதி ஆனது நீதனோ....
ஊரே உன் இழப்பால் உணர்விழந்து தவிக்குதையா
சாவு வந்து சடுதியிலே உனை அழைத்த மாயமென்ன?

சோகமே உருவான அப்பாவும் சோபையை இழந்திட்ட அம்மாவும்
அன்புத் தம்பியின் அலறல்களும் ஆசைத் தங்கையின் சிதறல்களும்
உறவுகளின் கண்ணீர் கதறல்களும்
உந்தன் கண்களுக்குத் தெரியவில்லையா?
தீராத பாச அலை நீ பேசிய அன்பு மொழிகளோடு
மீட்டுகின்றோம் மீண்டும் நீ வருவாயென....

என்றும் நீங்கா நினைவுடன்:
**குடும்பத்தினர்.**
4 ஆம் வட்டாரம், நயினாதீவு.

(அ/8901) (2,6,7)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
25 - 12 - 1948



மறைவு
13 - 01 - 2012

அமரர்
**சுப்பிரமணியம் சந்திரசேகரம்**
(வர்த்தகர், பெரியகடை)

கடந்த (13.01.2012) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு எமது துன்பத்தில் பங்கு கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் மனம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (12.02.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

G.P.S. வீதி, கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

**- குடும்பத்தினர்.**

(14346)(2-7--9)

---

SEWALANKA

(Registration No GL 41)

SEWALANKA Foundation is a Sri Lankan NGO, operating in 21 districts in Sri Lanka. We are looking for competent candidates to join SEWALANKA Team to serve in the following capacity.

**Post of Accountants**

**Work Stations : Killinochchi and Vavunia**

We are looking for committed, creative and energetic individuals to join us as an Accountant.

**Essential qualifications & Requirements:**

- A degree from a recognised University in the relevant field with full/ part qualification in accountancy ( ICASL/CIMA/ACCA/HNDA)
- At least 2 years professional experience in the capacity of Accountant in the NGO/ Public/ Private sector with sound knowledge in accounting procedure preferably, with Accounting Package.
- Ability and proven proficiency in English and either Sinhala or Tamil languages
- Excellent communication skills and a positive attitude towards teamwork
- Excellent organizing skills and high level of coordination skills
- Proven ability to take initiative
- Ability to attend to multiple tasks and perform at times under pressure
- Responsible, adaptable and flexible.
- Good planning and prioritizing skills
- Excellent Computer skills.
- Ability to establish and maintain office system and procedures.
- Age should be 30 – 45 years

The applicants should show willingness to travel within the country as and when required. SEWALANKA offers competitive salaries and benefits and is committed to gender and employment equity.

Please send your resumes to the following address within 7 working days and please indicate the position applied for in the left hand corner of the envelop or in the subject column of the email.

Director HR and Administration
SEWALANKA Foundation
P.O. Box . No 03, 2nd Floor
No 432 A, Colombo Road
Borelesgamuwa
Fax: +94 (11) 2545166
Email: wathsala@sewalanka.org

---

திறப்பு விழா அழைப்பு

Kajarams Tele Com
Pillaiyar Kovilady, Sithankerny

இன்று (12-02-2012) ஞாயிற்றுக்கிழமை கோலாகலமாக கஜறாம்ஸ் ரெலிகொம் திறந்து வைக்கப்படுகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்

எமது நிறுவனத்தில்

- போட்டோ பிரதிகள்,
- பக்ஸ், பிறிண்டிங் (கலர்),
- நெற்கபே, உள்ளூர், வெளிநாட்டு தொலைபேசி சேவை,
- லெமேநெட்டிங்கள் மற்றும்
- பஸ் புக்கிங்





Vayuputhrass, St.Nicalas, Safe, City Express

(சித்தன்கேணி ↔ யாழ்ப்பாணம் ↔ கொழும்பு)



போன்ற வற்றுக்கு புக்கிங் செய்து கொடுக்கப்படும். மேலும் போட்டோ கொப்பி இயந்திரம், கணினி, கணினி உபகரணங்கள், பாடசாலை உபகரணங்கள் விற்பனை மற்றும் திருத்தல், பராமரித்தல் என்பன சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.



கஜறாம்ஸ்
பிள்ளையார் கோயிலடி,
சித்தன்கேணி.
Tele.No:021 2250 155
Mob.No: 077 2981836.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்தன வங்கியின் சேவைகள்

தற்போது சில அரச, தனியார் வங்கிகளில் அவ் வவற்றின் வங்கிச் சேவைகளினைச் சர்வதேச தரத்திற்கேற்ப சில தரவுகளினை மையப்படுத்தி அத்தகைமையுடையோரை முதன்மை வாடிக்கையாளர் என வகைப்படுத்தி அப்படியான வாடிக்கையாளர்களுக்கு அதி சிறந்த வங்கிச் சேவைகளையும் தனிப்பட்ட கவனிப்புக்களையும் வழங்குவதன் மூலம் அவர்களை வாழ்நாள் வாடிக்கையாளர்களாக தத்தமது வங்கி களுடன் தக்க வைக்கும் நோக்கினைக் கொண்டுள்ளதனை நீங்கள் அறிவீர்கள்.

அந்த வகையில் DFCC வர்த்தன வங்கி தமது வாடிக்கையாளர்களுக்கு ஏற்ற வகையில் அவர்களை அதி கௌரவப்படுத்தி அவர்களின் நிதி சம்பந்தமான ஆலோசனைகளை, தனிப்பட்ட ரீதியில் அணுகி உச்ச ரகசியப் பாதுகாப்புடன் செயல்பட பல ஆய்வுகளின் மத்தியில், தேர்ந்தெடுத்த பெயர்தான் '' வர்தனபிரபு'' எனும் முன்னுரிமைச் சேவையாகும்.

இச் சொற்பதம் இலங்கையில் வாழும் சகல இன மக்களாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய இனிய கருத்துக்களைப் பிரதிபலிக்கின்ற அல்லது விளங்கிக் கொள்ளக் கூடிய தன்மையுடைய ஒன்றாகும்.

அது மட்டுமல்ல எமது நாட்டு மக்களுக்கு ஏற்ற வகையில் பொருத்தமான தரவுகளின் அடிப்படையில் இலகுவாக இனம் காணப்பட்டு வங்கியில் சகல மட்டத்திலும் உள்ள வாடிக்கையாளர்களும் ஏன்! நாமும் 'வர்தன பிரபு'' என்ற தகைமையைப் பெற முடியாதா? என்று விரும்பி முயற்சிக்கக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட திட்டமே '' வர்தன பிரபு'' எனும் எம் வங்கியின் முன்னுரிமைச் சேவைகள் ஆகும். இது முற்றிலும்

**வாடிக்கையாளருடன் அந்நியோன்னியமாக பழகி அவர்களைக் கவரும் வர்த்தன வங்கி.**

விசேடமான ஒரு பிரத்தியேக வங்கிச் சேவையாகும்.

'' வர்தன பிரபு'' என்ற வங்கிச் சேவை முதல் முதலாக யாழ் மண்ணில், சென்ற ஆண்டு ஒக்ரோபர் மாதம் 7ம் திகதி(2011) வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு ஏனைய மாகாணங்களிலும் படிப்படியாக அறிமுகம் செய்யப்படுவதை, நாம் காண்கின்றோம்.

''வர்தன பிரபு'' சேவை பெறத் தகுதியானவர்களின் பிரத்தியேக இடம், குளிர் சாதனம், தொலைக்காட்சிப் பெட்டி ஆகியன பொருத்தப்பட்டு பொழுதுபோக்கு சஞ்சிகைகளுடன் சர்வதேச தரத்தில் உள்ள இருக்கைகளும் செங்கம்பளம் விரிப்பும் காணப்படுவதால் நிச்சயமாக இச் சூழல் ஆனது வாடிக்கையாளர்கள் மனந்திறந்து பேசுவதற்கும், அவரவர் சுய கௌரவத்தையும், இரகசிய பாதுகாப்பையும், திருப்தியையும்நம்பிக்கையும் ஊட்டும் ஒரு செயலாக அமைகின்றது.

எனவே யுத்தத்திற்குப் பின் சமாதான சூழலைக் கருத்தில் கொண்டு இவ் வங்கி தனது வலையமைப்பினை ஆங்காங்கே மக்களின் தேவையின் பொருட்டு விசேடமாக வட பிராந்தியத்தில் விஸ்தரித்துக்கொண்டு செல்வதனால் இச் சிறந்த திட்டத்திற்குள், தங்களையும் உட்புகுத்தி உயர் வடையும் வாய்ப்பினைச் சகல வாடிக்கையாளப் பெருமக்களும் தக்கபடி பயன்படுத்திக் கொள்ள வாய்ப்புண்டு.

# தனியார்துறை அபிவிருத்தியும் வடக்கு மாகாணத்தில் முக்கியம்

## த பினான்ஸ் திறப்பு விழாவில் அரச அதிபர்



அரச துறையின் அபிவிருத்தியுடன் தனியார் துறையின் அபிவிருத்தியும் முக்கியமானது. இதன் மூலம் 30 வருடகாலம் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும். மேலும் யாழ். மாவட்டத்தை இன்னும் 5 வருடங்களில் அபிவிருத்தியடைச் செய்ய முடியும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். யாழ்.நகரில்த பினான்ஸ் கம்பனியின் கிளையைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தற்போதுள்ள சாதகமான சமாதான சூழ்நிலையைப் பயன்படுத்தி மக்கள் தம்மை முன்னேற்றிக் கொள்ள வேண்டும். அரச துறையின் அபிவிருத்தியுடன் மட்டும் நின்றுவிடாது தனியார் துறையினரும் முதலீடுகளை மேற்கொண்டு அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யவேண்டும்.

கடந்தவாரம் சர்வதேச இராஜதந்திரிகள் 60 பேர் வரையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தனர். அவர்கள் யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்தி எப்போது நிறைவடையும் என்று கேள்வியெழுப்பினர்.

அபிவிருத்தி என்பது முடிவடைவது இல்லை. இப்போதுள்ள அபிவிருத்திப் பணிகள் முடிவடைந்த பின்னர் மீண்டும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த வருடத்துடன் மின்சார விநியோகம் மற்றும் மின் வேலைகள் யாவும் பூர்த்தியாகும்.

இரண்டு வருடங்களில் வீதி அபிவிருத்திப் பணிகள் பூர்த்தியாகும். மூன்று வருடங்களில் ரயில்வே அபிவிருத்திப் பணிகள் நிறைவடையும். ஐந்து வருடங்களில் குடிதண்ணீர்ப் பிரச்சினை பூர்த்தியாகும்-என்றார்.

கிளையைத் திறந்து வைத்து உரையாற்றிய மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால்,

யுத்தத்தின் பின்னர் யாழ்.மாவட்டம் வளர்ச்சியடைந்து வருகின்றது. இந்தப் பகுதி மக்கள் அரச துறையை மட்டும் நம்பியிருக்கக்கூடாது. தனியார் துறையினூடாகவும் முன்னேற்றம் காண வேண்டும்-என்றார். (த-5)

## தேசிய சேமிப்பு வங்கியின் புதிய பரிசுத் திட்டம்

தேசிய சேமிப்பு வங்கியினர் சிறுவர்களுக்கான 'ஹப்பன் புஞ்சி' கணக்கினை ஆரம்பிப்போருக்கான பரிசுத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

ஒரு வயது தொடக்கம் 7 வயது வரையான சிறார்களுக்கு 'ஹப்பன் புஞ்சி' கணக்கினை ஆரம்பிக்கும் போது 500 ரூபாவுக்கு உட்பட்ட தொகை வைப்பிலிட்டால் அதே அளவு தொகையினை வங்கி இந்தக் கணக்கில் வைப்பிலிடும்.

500 ரூபாவுக்கு மேல் வைப்பிலிடும் சிறார்களுக்கு வைப்பிலிடும் தொகைக்கேற்ப பரிசுப் பொதிகள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

# ஹற்றன் நேஷனல் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு சலுகைகள்

ஹற்றல் நஷனல் வங்கியில் சேமிப்புக் கணக்குகளைப் பேணும் வாடிக்கையாளர்களுக்குப் பல்வேறு பரிசுதியத் திட்டங்களை இந்த வருடம் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

'பத்தும் விமன' வெற்றி தரும் கணக்கில் 10 ஆயிரம் ரூபாவை குறைந்த பட்ச சேமிப்பாக வைத்துள்ள வாடிக்கையாளர்களுக்கென வாராந்த சிவி கேம் ஷோ மூலம் பணப் பரிசில்களையும், வருட இறுதியில் கிளை மட்டத்திலான சீட்டிழுப்பில் பெறுமதி வாய்ந்த பீங்கான் வகைகளையும் வழங்கவுள்ளனர்.

இந்த வெற்றி தரும் கணக்கின் மூலம் அறுவடை சீட்டிழுப்பு, சிவி சிரிய சீட்டிழுப்பு, வருட இறுதிக் கிளை மட்டத்திலான சீட்டிழுப்பு, வருட இறுதி கார் சீட்டிழுப்பு, வருட இறுதி மாபெரும் சீட்டிழுப்பு போன்ற பரிசுத் திட்டங்களை வழங்கவுள்ளதுடன் 10 ஆயிரம் ரூபாவுக்கு மேல் கணக்கு வைத்துள்ளவர்களுக்கு மென் மேலும் இணைப்பரிசாகவும் வழங்கவுள்ளனர்.

அறுவடை சீட்டிழுப்பில் உழவு இயந்திரம் பரிசாக வழங்கப்படுவதுடன், கணக்கு மீதி 20ஆயிரத்திற்கு மேல் இருந்தால் 5 லட்சம் ரூபா பெறுமதியான உழவு இயந்திரப்பெட்டி (டிரெயிலர்) மற்றும் விவசாய உபகரணங்கள் வழங்கப்படும்.

சிவி சிரிய சீட்டிழுப்பில் டிமோ பட்டா வாகனம் பரிசாக வழங்கப்படுவதுடன் வங்கி மீதி 20 ஆயிரம் வரை அதிகரித்தால் டிமோ பட்டாவுடன் மேலதிகப் பரிசுகளாக ஒரு வருடத்திற்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையான எரிபொருள் இலவசக் காப்புறுதியை வெல்லும் வாய்ப்புக் கிடைக்கும்.

வருட இறுதிக் கார் சீட்டிழுப்பில் ஹயுண்டாய் டுக்ஷோன் ஜீப் வண்டி பரிசாக வழங்கப்படுவதுடன் கணக்கு மீதி 50 ஆயிரம் ரூபாவாக அதிகரித்தால் ஜீப் வண்டியுடன் ஒரு வருடத்துக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையிலான எரிபொருள் வழங்கப்படும்.

வருட இறுதிக் கிளை மட்டத்திலான சீட்டிழுப்பில் 2 ஆயிரத்து 500 இற்கும் அதிகமான பீங்கான் வகைகள் வழங்கப்படும்.

வருட இறுதி மாபெரும் சீட்டிழுப்பில் 10 மில்லியன் ரூபா பெறுமதியான ஆடம்பர வீடு பரிசாக வழங்கப்படுவதுடன் கணக்கு மீதி 50 ஆயிரம் ரூபா வரை அதிகரித்தால் இல்லத்திற்கு 5 லட்சம் ரூபா பெறுமதியான வீட்டு உபகரணங்களும் வழங்கப்படும்.

ஒரு லட்சம் ரூபாவைக் குறைந்த பட்ச கணக்கு மீதியாக வைத்துள்ள வாடிக்கையாளர்களுக்கான வருட இறுதி பிரிமியம் சீட்டிழுப்பில் மோர்சிடஸ் பென்ஸ் கார் பரிசாக வழங்கப்படுவதுடன் கணக்கு மீதி 2 லட்சம் வரை அதிகரித்தால் காருடன் மேலதிக பரிசாக உலக சுற்றுப் பயணத்திற்கான வாய்ப் புக் கிடைக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்ரோபர் மாதத்தில் அறுவடை சீட்டிழுப்பும், சிவி சிரிய சீட்டிழுப்பும் இடம்பெறும் (த-9)

# சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நேற்று ஐ.ஐ.எஸ் நிறுவனப் பரிசளிப்பு விழா




யாழ்ப்பாணம்,பெப்.12

ஐ.ஐ.எஸ் நிறுவனத்தின் 16ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் நேற்று யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரியின் ஜுபிலி மண்டபத்தில் இடம்பெற்றது.

2011ஆம் ஆண்டில் கல்வி கற்று வெளியேறிய 582 மாணவர்கள் கணினி விஞ்ஞானம், குடிசார் பொறியியல், வர்த்தக முகாமைத்துவம் துறைகளில் சான்றிதழ்களும் டிப்ளோமா பட்டங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

ஐ.ஐ.எஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி குலரட்ணம் விக்னேஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், இந்தியா மற்றும் மாலைதீவுக்கான அபிவிருத்தி முகாமையாளர் ஆரியா பிபிலி, பியர்ஸன் எட்டெக்ஸ் சர்வதேச நிறுவனத்தின் பிரதித் தலைவர் திருமதி பி.பிறேமிலா பௌஸ்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அந்த நிகழ்வில் பிரதம நிறைவேற்று அதிகாரி விக்னேஸ் தனதுரையில்,

எமது பிரதேசம் பல புனரமைப்புக்களைக் கண்டுள்ளது. அவற்றின் அனுகூலங்களை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஒரு நாட்டின் மனித வளமானது வீணடிக்கப்படவோ, அலட்சியப்படுத்தப்படவோ கூடாது. பெருந்தொகைகளில் மாணவர்கள் படித்துப் பட்டம் பெற்றால் மட்டும் போதாது. அவர்கள் தமது வாழ்நாளில் நாட்டின் அபிவிருத்திக்காகவும் உழைக்க வேண்டும். எமது இளம் தலைமுறையினர் வேலை, உழைப்பு இவற்றை வாழ்வில் ஒழுக்கங்களாகக் கொள்ள வேண்டும். எல்லா வற்றையும் அரசே செய்து [illegible] சுயமாகச் செயற்பட வேண்டும் என்றார். (த-13-16)




கடந்த வருடம் இடம்பெற்ற க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் அகில இலங்கை ரீதியாக முதலாம் இடத்தைப்பெற்ற உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலை மாணவன் கமலக்கண்ணன் கமலவாசனுக்கு மக்கள் வங்கி சார்பில் ஒரு லட்சம் பெறுமதியான காசோலையை மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் சி.பத்மநாதன், வல்வெட்டித் துறைக் கிளை முகாமையாளர் திருமதி றொசெட் தவநாயகம் ஆகியோர் வழங்கினர். (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MOBILE PHONE

**UNLOCKING DEVICES** விற்பனைக்கு உண்டு
முழுமையான செயன்முறை விளக்கத்துடன்

(MX Box , SE Tool, Dragon, Infinity, Z3X, Octopus, ATF, Spiderman... etc)

இலங்கையின் முன்னணி ஆசிரியர் ரிஸ்வியின் **MOBILE PHONE REPAIRING** வகுப்புக்கள் மற்றும் திருத்த வேலைகள்

- Warranty
- Installations
- Unlocking Instruction
- Flashing Instruction
- File Downloading
- Flash file DVD
- Online Support

**KINGTECH**
No. 231 ½, Santhos Plaza,
Main Street, Colombo 11.
Tel : 0112 334058 /
0723 402243 / 0715 656778



## பதவி வெற்றிடம்
## ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள்
## MATERIAL TECHNICIANS (10 NOS)

யாழ். குடாநாட்டில் Access Engineering Ltd கம்பனியால் மேற்கொள்ளப்படும் வீதிகள் புனரமைப்பு வேலைத்திட்டங்களுக்கு ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் (MATERIAL TECHNICIANS) 10 பேர் உடனடியாகத் தேவை.

மேற்குறிப்பிட்ட வேலையில் குறைந்தது 3 வருடம் அனுபம் மற்றும் தராதரம் உள்ளவர்கள் விண்ணப்பங்களை ஒரு கிழமைக்குள் அனுப்பி வைக்கவும். தகுந்த சம்பளமும் ஊக்குவிப்புப் பணமும் வழங்கப்படும்.

அக்ஸஸ் இஞ்ஜினியரிங் லிமிட்டெட்
"சந்திரகீர்த்தி",
4 ஆவது மைல் கல்,
கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தொ.பே. 021 224 1951
ஈமெயில்:
wijesinghe accessengsl . com

(14372) (45-6-7)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில் கல்வி சாரா உத்தியோகத்தராகக் கடமையாற்றும் செ. குலச்செல்வம் அவர்களின் மாமன் **மூர்த்தி மகேஸ்வரன்** அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி,
சாவகச்சேரி.

ஆசிரியர் சகோதரத்துவம்

(C/2938)(6-7-8)


**UK** - IELTS / TOEFL / B1 / B2
**Australia** - IELTS / TOEFL
**New Zealand** - IELTS / TOEFL
**Spain** - IELTS தேவையில்லை
**Malaysia** - IELTS / TOEFL / B1 / B2
**Cyprus** -

ஆகிய நாடுகளுக்கு, March, April க்கான மாணவ அனுமதிகள் இப்போது வழங்கப்படுகின்றன.

"நாட்டின் பெயரை மட்டும் சொல்லுங்கள் அரசாங்க சட்ட விதிகளிற்கு அமைவாக எவ்வாறு அந்நாட்டிற்கு செல்ல வேண்டும் என்பதை நாம் சொல்வோம்"

Student visa / Settlement or Family visa / Dependent visa / Visit visa / Tourist visa / Business visa

மற்றும்

Refused visas - சகலவிதமான மறுக்கப்பட்ட வீசாக்களும் இயலுமானவரை செய்து தரப்படும். அனுபவமுள்ள ஆலோசகர்கள் மற்றும் சட்டத்தரணிகளால் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் வழங்கப்படும்.

மாணவர்கள் இயலுமானவரை பெற்றோருடன் வாருங்கள்

IELTS / B1 / B2 (Student visa வில் செல்ல இருப்பவர்களுக்கு). A1 (UK க்கு Family visa வில் செல்ல இருப்பவர்களுக்கு) மற்றும் ஏனைய ஆங்கில வகுப்புக்கள் பிரபல ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன.

முற்றிலும் சேவை நோக்கமே..!

Tel : 011 2361591 Mob : 077 8526178, 077 104 2558
Email : world.v.wide2011@gmail.com
Web: www.wweduco.com Skype:world.wide2011

Worldwide Educational Consultants
No. 527, Galle Road, Wellawatte, Colombo -06



## HIACE வாகனம் தேவை

56,57,58,59, - XXXX தொடர் இலக்கமுடைய டொல்பின் ரக HIACE வாகனம் தேவை. விற்பனை செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 4517268

## தேவை

03 பேர் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றுக்கு தங்கி நின்று வீட்டு வேலை செய்ய பணிப்பெண் தேவை
தொடர்பு: 077 6277332

## விற்பனைக்குண்டு

தரமான Lap tops கள் மிக குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. விலை 34,500/=
தொடர்பு: இளங்கோ - 0779852409

## நவீனமுறை அழைப்பு

உங்கள் வீட்டிலிருந்தவாறே வெளிநாட்டு உறவினர்களுடன் கதைப்பதற்கு நிமிடத்துக்கு 2/= மட்டுமே.
தொடர்பு: இளங்கோ - 0779852409

## காணி விற்பனைக்குண்டு

கல்வியங்காடு, ஞானபாஸ்கரோதய சங்கம் அருகாமையில் 3 பரப்பும் 8.88 குளி விஸ்திரணமுள்ள காணி, Partition Title, No brokers.

Contact No: 2524983, 072 4117491

## விற்பனைக்குண்டு

அளவெட்டியில் அரசோலைப் பிள்ளையார் கோயிலுக்கருகாமையில் (168 பஸ்) வீதியோரத்தில் 10 பரப்பு காணியும், அருகிலுள்ள வீடும் விற்பனைக்குண்டு. அத்துடன் 10 பரப்பு பனைக்காணியும் விற்பனைக்குண்டு.

0776030148/0775023448

## வேலை ஆள்கள் தேவை

கொழும்பில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றிக்கான யாழ்ப்பாணக் கிளைக்கு
★ படவடிவமைப்பாளர் - ஆண் (Graphic designer)
★ சந்தைப்படுத்தல் தொடர்பாளர் - பெண் (Marketing Coordinator)
★ சந்தைப்படுத்தல் நிர்வாகி - ஆண் (Marketing Executive)
ஆகிய பதவி வெற்றிடங்களுக்கு வேலை ஆள்கள் தேவை.
தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்ப முடிவுத் திகதி:- 20.02.2012
Email.carrierinfo173@gmail.com
T.P.072 6096100, 077 4775607



# சுடர்ஒளி வழங்கும் இன்னோர் கல்விப் பணி

உங்கள் பிள்ளை தரம் 5 புலமைப் பரிசில் மாணவரா?

★ உங்கள் ஊரில் புலமைப்பரிசில் பரீட்சைக்கான தயார்ப்படுத்தலுக்கு சரியான வழிகாட்டல் இல்லை என நீங்கள் கவலையடைகிறீர்களா?
★ உங்கள் பிள்ளை கல்வி நிலையம் சென்றும் அவரது அடைவு மட்டத்தில் உங்களுக்கு திருப்தி இல்லையா?
★ உங்கள் பிள்ளையின் உண்மையான அடைவுநிலையை, ஆற்றலை உங்கள் நேரடி மேற்பார்வையில் அறிய விரும்புகிறீர்களா?
★ உங்கள் பிள்ளைக்கு உண்மையான அரச புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் போன்று (8 பக்கத்தில்) மாதிரி வினாத்தாள்களை வாரம் ஒரு தடவை அறிமுகப்படுத்த விரும்புகிறீர்களா?

## கவலையை விடுங்கள்!

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை நாளிதழிலும் / யாழ், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு வார இதழிலும் (ஞாயிறு) அரச புலமைப்பரிசில் வினாத்தாள் போன்ற அமைப்பில் திருத்த சேவையுடன் கூடிய மாதிரி வினாத்தாள்கள் எமது சுடர் ஒளியில் மேலதிக இணைப்பாக வெளிவருகின்றன. வட மாகண மாணவர்கள் சுடர்ஒளி முகவர்களிடம் முற்பதிவுசெய்து பெற்றுக்கொள்ளலாம்.

இதில் மெய்திறன் கூடிய மாணவர்களுக்கு ஏற்றவாறு மிகத் தரமான வினாத்தாள் வெளிவருவதுடன், பிரபல சிங்கள ஆசிரியர்களின் மொழி பெயர்ப்பு வினாத்தாள்களும் வெளிவருகின்றன. முகவர்களிடம் முற்பதிவு செய்பவர்களுக்கு மட்டும் மேலதிக இணைப்பாக இது விநியோகிக்கப்படவிருப்பதால் முகவர்களிடம் முற்பணம் செலுத்தி முகவருடாக எமது விநியோகப்பிரிவுக்கு அறிவித்தால் மட்டுமே இவ் வினாத்தாளை நீங்கள் பெறமுடியும்.

**பெற்றோர்களே! பிரதிகளுக்கு அருகில் உள்ள பத்திரிகை முகவரை நாடவும்.**

முகவர்களே : இவ் வினாத்தாள்சேவை தொடர்பாக ஒத்துழைப்பு வழங்கி எமது விநியோகப்பிரிவுக்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

விநியோகப்பிரிவு
கொழும்பு - 011 5737593 / 071 6850006. யாழ் - 021 5677222.


## மரண அறிவித்தல்

### Dr. சின்னத்தம்பி விவேகானந்தன்

(ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி)



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. சின்னத்தம்பி விவேகானந்தன் 10.02.2012 அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் Dr. மீன லோசனியின் (ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான உரும்பிராயைச் சேர்ந்த உமாபதிச் சின்னத்தம்பி சுந்தரம் தம்பதியரின் புதல்வனும், இடைக்காட்டைச் சேர்ந்த காலஞ் சென்ற பண்டிதர் சின்னத்துரை-பாக்கியம் தம்பதியரின் மருமகனும், காண்டீபன் (வைத்திய கலாநிதி), யதீபன் (பொறியியலாளர்), சஞ்சீபன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தகப்பனும், ரஞ்சனா, சிவாஜினி (பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மாமனும், கேஷன், தனோசன், அஞ்சலி, வருணன் ஆகியோரின் அன்புப்பேரனாரும், காலஞ்சென்றவர்களான திரவியம், சர்வானந்தன், பரமானந்தன் மற்றும் இராசானந்தன், கிருஷ்ணானந்தன் ஆகியோ ரின் அன்புச் சகோதரரும், விரசிங்கம், பத்மா சனி, சத்தியேஸ்வரி, தங்கலக்ஷ்மி, வடிவாம் பிகை, பத்மலோசனி, சரோஜினிதேவி, சிவ லோசனி ஆகியோரினது மைத்துனரும், மகே சன், நாகேந்திரன், புவனேந்திரன் ஆகியோரின் சகலனும், அமரர் தேவராஜா-மனோன்மணி, சிவசுப்பிரமணியம்-சிவலோஜனி தம்பதிய ரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 14.02.2012 செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணி முதல் மாலை 6 மணிவரை இல.591, காலி வீதி, கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப் பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெற்று 15.02.2012 புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு தகனக் கிரியைக்காக கல்கிசை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.55,5/1,
சன்பிளவர் கோட்,
37ஆவது ஒழுங்கை,
வெள்ளவத்தை.

தகவல்:
Dr.காண்டீபன் (மகன்)
Dr.மீனலோசனி விவேகானந்தன் (மனைவி)

(C\9014)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தருவது வித்தியா**

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** எதிர்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி, உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. பயணங்கள் திருப்திகரமாக அமையும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.



**இடபம்:** முக்கிய பிரமுகர் களை சந்திப் பீர்கள். தாய் வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். நம்பிக்கைக்குரியவர்கள் சிலர் கைக்கொடுத்து உதவுவார்கள். வியாபாரத்தில் புதிய பங்குதாரரைச் சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். நன்மை கிட்டும் நாள்.



**மிதுனம்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு உயரும். உறவினர்கள் மதிப்பார்கள். வியா பாரத்தில் அதிக லாபம் உண்டு. உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு அதிகர்க்கும். முயற்சியால் முன்னேறும் நாள்



**கடகம்:** விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். திடீர் திருப்பம் ஏற்படும் நாள்.



**சிங்கம்:** மறதியால் பிரச்சினைகள் வந்து நீங்கும். குடும்பத்தில் சலசலப்புகள் வந்து போகும். அதிகம் பேச வேண்டாம். உத்தி யோகத்தில் சக ஊழியர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். மாலைப் பொழுதிலிருந்து தடைகள் உடைபடும் நாள்.



**கன்னி:** அநாவசியச் செலவுகளை குறைக்கப் பாருங்கள். குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். சகோதர வகையில் அலைச்சல் உண்டு உத்தி யோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். போராடி வெல்லும் நாள்.



**துலாம்:** வேற்றுமதத்தவர் உதவுவார். வீடு, மனை வாங்குவது குறித்து ஆலோசனை செய்வீர்கள். எதிர்பாராத ஒருவரைச் சந்திப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் கடமையுணர்வுடன் செயற்படுவார்கள். உத்யோகத்தில் மதிப்பு அதிகரிக்கும். சிறப்பான நாள்.



**விருச்சிகம்:** தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை செலுத்து வார்கள். வியாபாரத்தில் புதிய இடத்துக்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள். இனிமையான நாள்.



**தனுசு:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். முடிவடையாத வேலைகள் முடியும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.ஒவ்வாத உணவுகளைச் சாப்பிட்டு வயிறு உபாதைகளுக்கு ஆள்படலாம். வீண் பிடிவாதங்களைத் தவிர்க்க வேண்டும்.



**மகரம்:** உணர்ச்சிவசப்படாமல் அறிவுப் பூர்வமாகமுடிவு எடுக்கப்பாருங்கள். உற வினர்கள், வியாபாரத்தில் ஒப்பந்தங்கள் தள்ளிப்போகும். உத்தியோகத்தில் அதிகாரி களுடன் அளவாகப் பழகுங்கள். மாலைப் பொழுதிலிருந்து எதிர்ப்புகள் அடங்கும்நாள்.



**கும்பம்:** குடும்பத்தில் ஆரோக்கியமான விவாதம் வந்துப் போகும். மனைவிவழி உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். எச்சரிக்கை தேவைப்படும் நாள்.



**மீனம்:** எதிர்பாராத பணவரவு உண்டு. உங்களிடம் பழகும் நண்பர்கள், உறவினர் களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். நீண்டநாள்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வ்ருவார். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**நாளை**

மாசி 01 திங்கட்கிழமை 13.02.2012
திதி: ஷஷ்டி மா. 05.06 வரை
நட்சத்திரம்: சித்திரை கா. 07.58 வரை
சுபநேரம்: 12.34 - 02.04 வரை,
ராகு காலம்: 08.04- 09.34 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | 3 | | 6 | | | | 8 |
| | 8 | | 9 | | | | 1 | 4 |
| 9 | | | 1 | 8 | 7 | | 3 | |
| 8 | | | 3 | | | | | |
| | 1 | | 7 | | 8 | | 2 | |
| | | | | | 2 | | | 7 |
| | 2 | | 6 | 5 | 3 | | | 9 |
| 7 | 9 | | | | 1 | | 6 | |
| 3 | | | | 7 | | 2 | 8 | |

சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 2 | 9 | 4 | 3 | 5 | 7 | 1 | 8 |
| 3 | 7 | 8 | 9 | 2 | 1 | 5 | 4 | 6 |
| 5 | 4 | 1 | 7 | 6 | 8 | 2 | 3 | 9 |
| 1 | 6 | 2 | 3 | 8 | 7 | 9 | 5 | 4 |
| 4 | 3 | 5 | 1 | 9 | 6 | 8 | 7 | 2 |
| 9 | 8 | 7 | 5 | 4 | 2 | 3 | 6 | 1 |
| 7 | 5 | 6 | 2 | 1 | 9 | 4 | 8 | 3 |
| 8 | 9 | 3 | 6 | 5 | 4 | 1 | 2 | 7 |
| 2 | 1 | 4 | 8 | 7 | 3 | 6 | 9 | 5 |

# மெய்வன்மைப் போட்டிகள்

வடமராட்சி,பெப்.12

கரவெட்டி,வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திருமதி பால ராணி ஸ்ரீதரன் தலைமையில் நடைபெறும்.

இந்தப் போட்டிக்கு வடம ராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் பிரதம விருந்தின ராகக் கலந்துகொள்வார். (வ-8)

* * *

வடமராட்சி,பெப்.12

புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலை வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் க.நித்தியானந் தன் தலைமையில் நடை பெற வுள்ளது.

இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகு நாதன் கலந்து கொள்வார். (வ-8)

* * *

வடமராட்சி,பெப்.11

மானிப்பாய் சத்தியசாயி பாட சாலையின் வருடாந்த விளை யாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலையின் அதிபர் திருமதி பி.பத்மநாதன் தலைமை யில் நடைபெறவுள்ளது. (வ-14)

* * *

வடமராட்சி,பெப்.12

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள் ளது.

இந்தப் போட்டிக்கு பிரதம விருந் தினராக வடமராட்சி கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.செல்லக்குமரன் கலந்துகொள்வார். (வ-8)

* * *

வடமராட்சி,பெப்.12

தும்பளை சிவப்பிரகாச மகாவித்தி யாலய வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் கே.கே.யோக நாதன் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி கிழக் குப் பிரதேச முன்னாள் உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுத பிள்ளை கலந்து கொள்வார்.(வ-8)

* * *

யாழ்ப்பாணம், பெப்.12

வட்டு கார்த்திகேய வித்தியா லயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சுப்பர் ஸ்ரார் விளையாட் டுக்கழக மைதானத்தில் நடைபெற வுள்ளது.

வித்தியாலய அதிபர் ந.சிவ சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.கணேசலிங்கம் கலந்துகொள்வார். (ம-14)

* * *

யாழ்ப்பாணம், பெப்.12

கொம்மந்துறை கம்பர்மலை வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலையின் அதிபர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராக கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எல்.நற்குணலிங்கம் கலந்துகொள் வார். (ம-253)

* * *

நவாலி, பெப்.12

நவாலி சென்.பீற்றேர்ஸ் றோ.க. த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு அதிபர் ஏ.ஜெக தீஸ்வரன் தலைமையில் சென்.பீற்றேஸ் தேவாலய முன்றிலில் நடை பெறும்.

இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.சிவானந்தராசா கலந்துகொள் வார். (100)

* * *

காரைநகர், பெப்.12

காரைநகர் வலந்தலை வடக்கு அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள் ளது.

வித்தியாலய அதிபர் செல்வி வி.விசுவநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ப.ஸ்ரீவிக்னேஸ்வரன் கலந்துகொள் வார். (250)

* * *

கரவெட்டி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திருமதி பாலராணி ஸ்ரீதரன் தலைமையில் நடைபெறும்.

இந்தப் போட்டிக்கு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார பிரதம விருந்தின ராகக் கலந்துகொள்வார். (வ-8)



வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு நடத்திய ஆண் களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்ற முதல் மூன்று வீரர்களான க.விதுசன், க.புவீந்திரன், ஜே.கொலஸ்ரின் ஆகியோர் அதிபருடன் காணப்படுகின்றனர். (த-86)

# கரப்பந்தாட்டம்



யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ்.பிரதேச செயலக பிரி வுக்கு உட்பட்ட பதிவு செய் யப்பட்ட விளையாட்டுக் கழகங் களுக்கு இடையிலான ஆண் களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை ஈச்சமோட்டை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற வுள்ளது என விளையாட்டுத்துறை அலுவலர் நித்திலநாயகம் தெரி வித்துள்ளார். (23)

# பூப்பந்தாட்டம் இன்று

யாழ்ப்பாணம்,பெப்.12

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 15,19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது என போட்டி ஏற்பாட்டாளர் தெரிவித்தார். (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றிபெறும் தகுதி எம்மிடம் இல்லை

இலங்கை அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஒரு நாள் ஆட்டத்தில் இலங்கை அணி 5 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இந்தத் தோல்வி குறித்து கருத்துத் தெரிவித்த இலங்கை அணியின் தலைவர் மஹேல, பந்து வீச்சில் முயற்சி செய்த நாங்கள், துடுப்பாட்டத்தில் இணைப்பாட்டம் அமைத்து விளையாடத் தவறிவிட்டோம். ஆஸ்திரேலிய வீரர்கள் அதிக நெருக்கடி கொடுத்தனர். மத்தியூஸ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இடையில் சில இலக்குகளை வீணாக இழந்ததே தோல்விக்கு காரணம். மொத்தத்தில் இந்த ஆட்டத்தில் வெற்றி பெறும் தகுதி எங்களுக்கு இல்லை, என்றார். (5)



## சச்சின் இல்லாமல் சாத்தியமா?

ஆஸ்திரேலிய மண்ணில் இந்திய அணியின் வெற்றியில் சச்சின் பங்கு அதிகம். இவருக்கு, முத்தரப்பு தொடரின் அடுத்த ஆட்டத்தில் ஓய்வு கொடுத்தால், வெற்றி வசப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் நடக்கும் முத்தரப்பு தொடரில், ரோகித் சர்மாவுக்கு வாய்ப்புக் கொடுப்பதில், இந்திய அணித்தலைவர் டோனி உறுதியாக உள்ளார். இவருக்காக முன்னணி வீரர்கள் சுழற்சி முறையில் தேர்வு செய்யப்பட உள்ளனர். இதன்படி முதலிரண்டு ஆட்டங்களில் சேவாக், கம்பீருக்கு ஓய்வு அளிக்கப்பட்டது. அடுத்து, ஆஸ்திரேலியாவுக்கு எதிராக இன்று நடக்க உள்ள ஆட்டத்தில் சச்சினுக்கு ஓய்வு அளிக்கப்படும் என்று நம்பப்படுகின்றது.

புள்ளிவிவரப்படி பார்த்தால், கடந்த 22 ஆண்டுகளில் இந்திய அணி, ஆஸ்திரேலிய மண்ணில் 5 ஒரு நாள் ஆட்டங்களில் தான் வென்றுள்ளது. இதில் சச்சின் பங்கு தான் அதிகம்.

முதல் வெற்றி:

1991-92ல் பேர்த் ஆட்டத்தில் இந்திய அணி, 107 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவை வென்றது. இதில் சச்சின் தான் இரண்டாவது அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையைப் பதிவு செய்தார். (36 ஓட்டங்கள், 65 பந்துகள்). அடுத்து 12 ஆண்டுகளாக 11 ஆட்டங்களில் தொடர் தோல்வி. 2003-04 இல் 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வென்றது. இந்த ஆட்டத்தில் சச்சின் 86 ஓட்டங்கள் எடுத்தார்.

பின்னர் இடம்பெற்ற மூன்று வெற்றிகளும் கடந்த 2007-08 தொடரில் கிடைத்தது. மெல்போர்னில் நடந்த லீக் ஆட்டத்தில் 159 ஓட்டங்களை துரத்திய இந்திய அணிக்கு, 54 பந்துகளில் 44 ஓட்டங்கள் எடுத்து வெற்றிக்கு கைகொடுத்தார் சச்சின். பின்னர் நடந்த முதல் இறுதியில் ஆஸ்திரேலியாவின் 240 ஓட்டங்கள் என்ற இலக்கை அடைய, சச்சின் சதம் அடித்து (117 ஓட்டங்கள்) உதவினார். தொடர்ந்து இரண்டாவது இறுதியில், 91 ஓட்டங்கள் எடுத்து அசத்தி னார்.

சேவாக் மோசம்:

சேவாக்கை எடுத்துக் கொண்டால், மூன்று தொடர்களில், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 10 ஆட்டங்களில், 180 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார். கம்பீர் பரவாயில்லை ரகத்தில் உள்ளார். இவர் கடந்த தொடரில் சிட்னியில் அடித்த சதம் (113) உட்பட, 7 ஆட்டத்தில் 230 ஓட்டங்கள் எடுத்துள்ளார். விராத் ஹோக்லி, ரோகித் சர்மா, ரெய்னா, மனோஜ் திவாரி ஆகியோர், ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக 10 ஆட்டங்களில் கூட பங்கேற்றதில்லை. கடந்த 2008 தொடரின் முதல் இறுதியில் ரோகித் சர்மா, அரைச் சதம் அடித்தது தான் அதிகம். இதன் பின்னர் ஆஸிக்கு எதிரான 7 ஆட்டங்களில் மொத்தமே 37 ஓட்டங்கள் தான் எடுத்தார். எனவே, சுழற்சி முறை வீரர்கள் தேர்வு பற்றி டோனி நன்கு சிந்தித்து முடிவு எடுக்க வேண்டும்.

எது முக்கியம்

எதிர்வரும் 2015 இல் ஆஸ்திரேலியா, நியூசிலாந்தில் உலகக் கிண்ணத் தொடர் நடக்கவுள்ளது. இதனை மனதில் கொண்டு, இப்போதே இளம் வீரர்களுக்கு வாய்ப்பு கொடுத்தால், இங்குள்ள ஆடுகளத்தை பற்றி நன்கு அறிந்து கொள்வர். சுழற்சி முறையில் மூத்த வீரர்களுக்கு ஓய்வு கொடுக்கும் போது, சச்சினுக்கு சலுகை காட்ட தேவையில்லை. இவர் 100 ஆவது சதம் அடிக்க வேண்டும் என்பதைவிட அணியின் நலன் தான் மிகவும் முக்கியம். (5)





## யுவராஜின் டுவிட்டர் படம் சோகத்தில் இரசிகர்கள்

புற்றுநோய்ப் பாதிப்பில் இருந்து விரைவாக மீள, 'ஹீமோதெரபி' சிகிச்சை மேற்கொண்டு வருகிறார் யுவராஜ் சிங். இதன் பக்கவிளைவு காரணமாக தலைமுடியை இழந்து, உடல் மெலிந்து காணப்படும் தனது அண்மைய படத்தை வெளியிட்டுள்ளார். இதனை பார்த்த ரசிகர்கள் மனம் கலங்கிப் போயுள்ளனர்.

இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் யுவராஜ். இவரது நுரையீரலுக்கு இடையில் 'கோல்ப்' பந்து அளவுக்கு சிறிய புற்று நோய்க் கட்டி இருப்பது கண்டறியப்பட்டது. இதற்காக அமெரிக்காவில் உள்ள பாஸ்டன் புற்று நோய் ஆய்வு மையத்தில் 'ஹீமோதெரபி' சிகிச்சை பெற்று வருகிறார். இந்த சிகிச்சையில், பக்க விளைவுகள் அதிகம். இதன் காரணமாக தலைமுடி இழப்பு, உடல் மெலிவது வழக்கம். யுவராஜும் தலைமுடியை முழுமையாக இழந்து, ஆளே மாறிப் போயிருக்கிறார். தனது 'டுவிட்டர்' இணையதளத்தில் புகைப்படத்தை வெளியிட்டுள்ள யுவராஜ் விடுத்துள்ள செய்தி:

> "இறுதியில் எனது தலைமுடி போய் விட்டது. ஆனாலும் வலிமையாக இருக்கிறேன். தேசமே எனக்காக பிரார்த்திக்கும் நிலையில், மிகவும் துணிச்சலாக போராடி, வலுவான வீரராக மீண்டு வருவேன். இந்திய கிரிக்கெட் அணியின் உடை, தொப்பி அணிந்து நாட்டுக்காக மீண்டும் விளையாட ஒவ்வொரு நாளும் ஆசைப்படுகிறேன்."

இறுதியில் எனது தலைமுடி போய் விட்டது. ஆனாலும் வலிமையாக இருக்கிறேன். தேசமே எனக்காக பிரார்த்திக்கும் நிலையில், மிகவும் துணிச்சலாக போராடி, வலுவான வீரராக மீண்டு வருவேன். இந்திய கிரிக்கெட் அணியின் உடை, தொப்பி அணிந்து நாட்டுக்காக மீண்டும் விளையாட ஒவ்வொரு நாளும் ஆசைப்படுகிறேன்.

வைத்தியசாலையில் உள்ள உடற்பயிற்சி கூடத்துக்குச் சென்று, 20 நிமிடங்களுக்கு சைக்கிள் பயிற்சி செய்தேன். இது உடலுக்கு நன்றாக இருந்தது. புற்று நோய்க்கு எதிராக போராடி வெற்றி பெறுவோம்' என்பதை வலியுறுத்தி, எனக்காக அமுல் நிறுவனம் பிரத்தியேகமாக வெளியிட்ட விளம்பரம் மிகவும் சிறப்பாக இருந்தது - என்றார். (5)

## கவிழ்ந்தார் காலிறுதியில் சானியா

பட்டாயா ஓபன் ரெனிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் சானியா மிர்சா தோல்வியடைந்தார்.

தாய்லாந்தில் பட்டாயா ஓபன் ரெனிஸ் தொடர் நடக்கின்றது. இதன் ஒற்றையர் பிரிவு காலிறுதியில், தரவரிசையில் 111 ஆவது இடத்திலுள்ள சானியா, சீன தைபே வீராங்கனை சு-வெய்யை சந்தித்தார்.

இதன் முதல் செட்டில் சானியா மிர்சா, 5-7 என்ற கணக்கில் போராடி தோற்றார். தொடர்ந்து நடந்த இரண்டாவது செட்டில் சானியா மிர்சா எழுச்சி பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இதையும் 3-6 என்று, இழந்தார்.

ஒரு மணி நேரம், 20 நிமிடங்கள் நடந்த போட்டியின் முடிவில், இந்தியாவின் சானியா மிர்சா 5-7, 3-6 என்ற நேர் செட்கணக்கில் தோல்வியடைந்தார். (5)



## இங்கும் சூதாட்டம்...!

'பி.பி.எல் ரி-20' ஆட்டங்கள் பங்களாதேஷில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.இதில் மொத்தம் 6 அணிகள் பங்கேற்கின்றன.

கெய்ல், பொலாட், கிப்ஸ், ஜெயசூர்யா, முரளிதரன், அப்துல் ரசாக், கம்ரன் அக்மல் உட்பட பிரபல வீரர்கள் பல்வேறு அணிகளில் இடம்பிடித்துள்ளனர்.

இந்த நிலையில் தாகா கிளாடியேட்டர்ஸ் அணி வீரர் மோர்ட்டசா பரபரப்பு புகார் ஒன்றை கூறியுள்ளார். சக கிரிக்கட் வீரர் ஒருவர் 'பி.பி.எல் ரி-20' ஆட்டத்தில் சூதாட்டத்தில் ஈடுபட தன்னை அணுகியதாக தெரிவித்துள்ளார்.

அணி நிர்வாகத்தினருக்கு இந்தத் தகவல் தெரிவிப்பதற்கு முன்னர் மோர்ட்டசா பத்திரிகைகளிடம் தெரிவித்துள்ளார். பின்னர் முறைப்படி அணி நிர்வாகத்தினரிடம் கூறப்பட்டுள்ளது.

அவர்கள் இந்த விவகாரத்தை போட்டி நிர்வாக குழுவிடம் கொண்டு சென்றுள்ளனர். இதன் தொடர்ச்சியாக சூதாட்ட புகார் தொடர்பாக ஐ.சி.சியின் ஊழல் தடுப்பு குழுவினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுத்துறை அமைச்சர் பதவியை ஏற்கத் தயார்

## அர்ஜுன ரணதுங்க கூறுகிறார்

கொழும்பு, பெப்.12

விளையாட்டுத்துறை அமைச்சுப் பதவியை பொறுபேற்றுக் கொள்ளத் தயார் என்று ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். நாட்டின் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இந்த அறிவிப்பினை விடுப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

விளையாட்டுத்துறையினை அபிவிருத்தி செய்து சர்வதேச தரத்துக்கு முன்னேற்றுவதற்காக விளையாட்டுத்துறை அமைச்சுப் பதவியை ஏற்றுக் கொள்வதற்கு தயாராகவே இருக்கின்றேன். எவ்வாறெனினும், கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா விடுதலை செய்யப்பட்டதன் பின்னரே அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளப்போவதாகத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் சிங்கள தமிழ் புத்தாண்டுக்கு முன்னதாக சரத் பொன்சேகாவை அரசாங்கம் விடுதலை செய்யும் என்று தான் நம்புவதாகவும் அர்ஜுன குறிப்பிட்டுள்ளார். விளையாட்டுத் துறை அமைச்சரின் பொறுப்புக்களை தாம் நன்கு அறிந்து கொண்டுள்ளதாகவும், விளையாட்டுத்துறை அமைச்சுப் பதவியை பொறுப்பேற்குமாறு ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷ, தன்னிடம் கடந்த காலங்களில் கோரியதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ -5)

# 9 வீதிகள் புனரமைப்புக்கு 85 லட்சம் ரூபா ஒதுக்கீடு

வடமராட்சி.பெப்.12

பருத்தித்துறை நகர சபை எல்லைக்குள் உள்ள மேலும்

9 வீதிகள் சபை நிதியிலிருந்து திருத்தி அமைக்கப்படவுள்ளன. இதற்கென 8 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பருத்தித்துறை நகர சபைத் தலைவர் சட்டத்தரணி பா.ரவீந்திரன் தெரிவித்தார்.

நகர மத்திய பஸ் நிலைய ஒரு வழிப் பாதை நெல்லண்டை கிழக்கு ஒழுங்கை, தம்புருவளை பிள்ளையார் கோயில் வீதி, ஆரிய கலட்டி ஒழுங்கை, பண்டாரி அம்மன் கோயில் முன் வீதி, பின் வீதி, ஐயனார் கலட்டி ஒழுங்கை, துறைமுகம் தொடக்கம் 4ஆம் குறுக்குத் தெரு வரையான கடற்கரை வீதி, 3ஆம்,4ஆம் குறுக்குத் தெருக்களை இணைக்கும் வீதி ஆகிய 9 வீதிகளுமே திருத்தியமைக்கப்படவுள்ள வீதிகளாகும்.

ஏற்கனவே சபை எல்லைகளுக்குள் உள்ள வீதிகளில் 9 வீதிகள் காப்பெற் வீதியாகவும் மூன்று வீதிகள் சிமெந்திலான நில வீதியாக வும் கெயர்செயல் திட்ட நிறுவனத்தால் மாற் றப் படுகின்றன.

(த-8)

# அதிவேக நெடுஞ்சாலையில் இடையூறு 4 இளைஞர் கைதாகி மறியலில்

கொழும்பு, பெப் 12

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கற்களை உருட்டி போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்க முயன்றதாக குற்றஞ் சாட்டப்பட்ட இளைஞர்கள் நால்வரையும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு எல்பிட்டிய நீதவான் சேகர சமரதிவாகர உத்தரவிட்டுள்ளார்.

எல்பிட்டிய பகுதியைச் சேர்ந்த நான்கு இளைஞர்களும் இந்த நெடுஞ்சாலையில் எலிக்கெஹெனவை அண்மித்துள்ள குருந்து கஹத்தெம்ப வீதியில் கற்களை உருட்டி போக்குவரத்துக்களை தடுப்பதற்கு முயற்சித்துள்ளனர்.

எலிப்பிட்டிய பொலிஸ் சிறப்பு பிரிவின் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் மேற்படி நால்வரையும் கைது செய்துள்ளதுடன் அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர். (ஒ-5)

# பொலிகண்டியில் சங்கிலி அறுப்பு: சந்தேக நபர்கள் சிக்கினர்

## நகைக்கடை உரிமையாளரும் விசாரணையில்

யாழ்ப்பாணம், பெப்.12

வடமராட்சி, பொலிகண்டியில் கடந்த புதன்கிழமை அதிகாலை வீடொன்றுக்குள் புகுந்து வயோதிபத் தம்பதியரை வாளால் வெட்டி விட்டு தங்கச் சங்கிலியை அபகரித்துக்கொண்டு தலைமறைவாகி இருந்தவர்களில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அறுத்துச் செல்லப்பட்ட தங்கச் சங்கிலியை விற்பனை செய்ய முயன்றபோதே கொள்ளையர்கள் மாட்டிக் கொண்டனர். குறித்த நகையை விற்பனைசெய்ய முயன்ற பெண்ணும் குறித்த நகைக்கடை உரிமை யாளரும் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட போதே கொள்ளையர் பற்றிய தகவல் பொலிஸாருக்குக் கிடைத் தது.

தொடர்ந்து விசாரணை நடத்தியதில் சுன்னாகம் பகுதியில் பதுங்கியிருந்த மேலும் இருவரை வல்வெட்டித்துறைப் பொலிஸார் நேற்றையதினம் கைது செய்தனர். இருவரும் சுன்னாகத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது 3 வாள்கள், கத்திகள், ஜெனரேட்டர்கள், தங்கச் சங்கிலிகள், 45 லட்சம் ரூபா பணம், நகைகள், கைத் தொலைபேசிகள் மற்றும் விளையாட்டு துப்பாக்கிகள் என்பன மீட்கப்பட்டுள்ளன என்றும் வல்வெட்டித்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய கொழும்பைச் சேர்ந்த பிரதான சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளார் என்றும் அவரை தாம் வலை வீசித் தேடி வருவதாகவும் பொலிஸார் கூறி னர்.

கடந்த சில மாதங்களில் வல்வெட்டித்துறை வீரபத்திர கோயிலடிப் பகுதியில் இடம்பெற்ற கொள்ளை பொலிகண்டி பகுதியில் நடந்த கொள்ளை, நெற்குழி வைரவர் கோயிலடிப் பகுதிக் கொள்ளை மற்றும் சில கொள்ளைகளுடன் இவர்களுக்கு தொடர்பு இருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கும் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (ஒ-15)

# கொட்டடி வாசிக்கு ரூ.25 ஆயிரம் தண்டம்

போயா தினத்தில் அனுமதிப்பத்திரமின்றி இறைச்சிக்காகப் பசுமாட்டை வெட்டிக் கொன்ற குற்றத்துக்காக கொட்டடியைச் சேர்ந்தவருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ். நீதிமன்றில் நீதிவான் மா. கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டது. அனுமதிப் பத்திரமின்றி பசுவைக் கொலை செய்யதமை, 50 கிலோகிராம் இறைச்சியைத் தன்வசம் வைத்திருந்தமை மற்றும் பிறிதொரு இடத்துக்கு எடுத்துச்சென்றமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்கள் சந்தேக நபர் மீது சுமத்தப்பட்டன.

சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதனையடுத்து அவருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார் நீதிவான். (ஒ-4)

# கால்கள் முறிந்த ரம்புக்வெலவுக்கு நான்காவது தடவையும் சத்திரசிகிச்சை

இலங்கையின் தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு முன்தினம் நான்காவது தடவையாகவும் கால்களில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்னும் சத்திர சிகிச்சைகள் மேற் கொள்ளப்படவுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தாக ரம்புக் வெலவின் ஊடகச் செயலர் குறிப்பிட்டுள்ளார்.

ஆஸ்ரேலியாவின் மெல்பேர்ன் நகரில், தெற்கு யாராவில் உள்ள கோமோ விடுதியின் மூன்றாவது மாடியில் இருந்த தவறி விழுந்த கெஹலிய ரம்புக்வெல, மெல்போர்னில் உள்ள அல்பேர்ட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்ட அவருக்கு புதன்கிழமை இரண்டு தடவைகளும், வியாழக்கிழமை மூன்றாவது தடவையும் சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிலையில் நேற்று முன்தினம் நான்காவது தடவை யாகவும் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஹெகலிய ரம்புக்வெலவின் கால்கள் முறிந்து போயுள்ளதால் அவ ருக்கு மேலும் பல சிறிய சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட வாய்ப் புகள் இருப்பதாக அவரது ஊடகச்செயலர் சரத் த ம் ப வி ன் ன தெரிவித்துள்ளார்.

அதேவேளை ரம்புக்வெலவுக்கு தலையிலும் காயம் ஏற்பட்டுள்ளதாக வெளியான தகவல்களை அவர் மறுத்துள்ளார். ரம்புக்வெல நிலத்தில் விழவில்லை என்றும் மலர் படுக்கையின் மீது விழுந்ததால் அதிகளவில் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ஒ-5)




# சிவதொண்டர் மாநாடு

அகில இலங்கை இந்து மாமன்றமும், மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியமும் இணைந்து நடத்தும் சிவதொண்டர் மாநாடு எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்குதிருக்கேதீஸ்வர ஆலய முன்றில் நடை பெற வுள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் வி.கைலாசபிள்ளை தலை மையில் நடைபெறும் இந்த மாநாட்டின் வரவேற்புரையை மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத்தலைவர் வைத்திய கலாநிதி [illegible] நாதன் நிகழ்த்துவார்.

(ம-14)

# ஆசனப்பட்டி இல்லை; ரூ 1000 அபராதம்

யாழ்ப்பாணம்.பெப்.12

அல்லைப் பிட்டியில் ஆசனப்பட்டி அணியாது வாகனம் செலுத்திச் சென்றவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் ஆயிரம் ரூபா அபராதம் வித்துள்ளது.

யாழ். நகர்ப்பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு சென்ற குற்றத்துக்காக ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் வழக்குப் பதிவு செய்து நீதிவான் ஆர்.எஸ்.எம். மகேந்திரராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். சந்தேகநபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அபராதம் விதிக்கப்பட்டது. (ஒ-4)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19 - 12 - 1980



மறைவு
12 - 02 - 2011

### உதயநாதன் உமாகரன்

ஆண்டொன்று ஓடினாலும்
அழுத குரல் ஓயவில்லை!
மாண்டதென்று யார் சொன்னார்!
மனதில் என்றும் நீ நிறைந்தாய்
தேறுதல் சொல்லத் தெய்வமே வந்தாலும்
தேறிடுமோ எமதுள்ளம் தெரியாதோ இது உமக்கு
ஆறுதலாய் சொர்க்கத்தில் அமைதி காண என்றும்
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்

என்றென்றும் உம் நினைவில்
அம்மா, அப்பா, மனைவி, மகன்,
சகோதரர்கள், உறவினர்கள்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









நாவற்குழி கோயிலாக்கண்டியைச் சேர்ந்த அமரர்களான க.கந்தையா திருமதி க.கனகம்மா நினைவு நதியத்தால் வருடாந்தம் நடத்தப்பட்டுவரும் நிகழ்வில் இந்த வருட பரிசளிப்பு நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன. நாவற்குழி மகாவித்தியாலய மண்டபத்தில் பாடசாலை அதிபர் திருமதி வ.மேகலிங்கம் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக கணக்கியற்துறைத் தலைவர் தி.வேல்நம்பி, சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கம், நாவற்குழி தெற்கு அ.த.க.பாடசாலை அதிபர் சி.சோமசுந்தரம், மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலய அதிபர் ஜெ.ஜெயகாந்தன் ஆகியோர் நிதியக் காப்பாளர் க.மயில்வாகனம் மற்றும் விழாத் தலைவரால் அழைத்துவரப்படுகின்றனர். மங்கல விளக்கை நிதிய உறுப்பினர் க.அருளானந்தம் திருமதி தவமணி அருளானந்தம் ஆகியோர் ஏற்றுகின்றார். செல்வி ந.ஸ்ரீசிஷ்ணுகா வரவேற்பு நடனம் இடம்பெறுகிறது. (ம)



அனுராதபுரத்தில் தேசத்தின் மகுடம் கண்காட்சியில் யாழ். கலாச்சாரப் பேரவையின் ஏற்பாட்டிலான கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. கடந்த 08 ஆம் திகதி நடைபெற்ற இந்த நிகழ்வில் நல்லூர், தெல்லிப்பழை, உடுவில் பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட கலைஞர்கள் பங்கு பற்றினர். நாட்டி யஞ்சலி, தில்லானா, 'வண்டியும் தொந்தியும்' என்னும் நாட கம் ஆகியன இடம்பெற்றன. இவை கண்காட்சியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



ஊர்காவற்றுறை கரம்பொன் சிறிய புஸ்பமகளிர் வித்தியாலயத்தின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. (ம-127)



மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலய கால்கோள்விழா அண்மையில் இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மக்கள் வங்கியின் மானிப் பாய் கிளை முகாமையாளர் திருமதி வை.சுரேஸ்குமார் மங்கள விளக்கேற்றுகிறார். பாடசாலை அதிபர் திருமதி வை.சிவகுமாரும் அருகில் உள்ளார்.



வல்லிபுரம் குருக்கட்டு சித்தி விநாயகர் ஆலயத்துக்கு அ[illegible]மின் பிறப்பாக்கி ஒன்று ஆலயப் பரிபாலன சபையிடம் வழங்கப்பட்டுள்ளது. (ம-14)



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகப் பெருவிழாவை முன்னிட்டு புவனேஸ்வரி கரையரங்கில் கொழும்பு அபியை ஹேந்திரா கலை யகத்தின் ஆசிரியை செல்வி திவ்யா குழுவினரின் பரதநாட்டிய நிகழ்வு இடம் பெற்றது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எப்போதும் சீனாவின் ஆதரவு உண்டு

## சீன கம்யூனிஸ்ட் கட்சி உறுதி

கொழும்பு, பெப் 12

இலங்கை மீது எத்தகைய சர்வதேச அழுத்தம் ஏற்படினும் அதனைச் சமாளிப்பதற்கு பூரண ஆதரவினை சீனா எப்பொழுதும் இலங்கைக்கு வழங்கும். இவ்வாறு சீன கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளரினால் பிரதமர் டி.எம்.ஜயரட்னவுக்கு உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் ஷெங்ஷி பிராந்தியத்தின் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்ட குழுவின் செயலாளர் யு ஆன் சுங்கின், இலங்கை பிரதமர் டி.எம் ஜயரட்னவை நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரையாடிய போது தமது ஆதரவை உறுதிப்படுத்தியுள்ளார். யு ஆனுடன், 14 பேர் கொண்ட தூதுக் குழுவினரும் இலங்கை பிரதமரை சந்தித்து கலந்துரையாடி இருந்தனர்.

சர்வதேச ரீதியாக ஏற்படும் எந்தவொரு சவால்களுக்கு மத்தியிலும் இலங்கைக்கு பூரண ஆதரவளிக்கப்படும் என அவர்கள் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளனர். இலங்கையுடன் கைகோர்த்து செயற்படுவதே சீனாவின் பிரதான நோக்கம்.

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பலவற்றும் சீனா தொடர்ச்சியான பங்களிப்பை வழங்கி வருகின்றமையும் இதன்போது நினைவு கூரப்பட்டது. அதனை மேலும் விரிவு படுத்திக்கொள்வது சீனாவின் நோக்கம் என்று யுஆன் உள்ளிட்ட சீன தூதுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அழுத்தம் பிரயோகிப்பதற்கு மேற்குலக நாடுகள் முயன்று கொண்டிருக்கும் நிலையில் சீனாவினால் மேற்படி உறுதி இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# பாகிஸ்தான் தலைவர்களுடன் ஜனாதிபதி மஹிந்த பேச்சு

1 யில் நேற்றைய தினம் நடைபெற்ற சந்திப்பின் போதே மேற்படி இரண்டு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் வர்த்தக உறவுகளை விஸ்தரிப்புத் தொடர்பில் இரு நாட்டுத் தலைவர்களும் அதிகம் கவனம் செலுத்தியுள்ளனர். இதில் இலங்கை மற்றும் பாகிஸ்தானுக்கிடையிலான வர்த்தக கொடுக்கல் வாங்கல்களை 3 வருடங்களில் 2 பில்லியன் டொலர்களாக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கு இடையிலான அந்நிய செலாவணியை நேரடியாக பரிமாற்றிக் கொள்வதற்கும், நேரடியான கப்பல் சேவையை ஈடுபடுத்துவதற்கும் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியினால் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அதுபோன்று இரண்டு நாடுகளுக்கிடையில் பொருள்கள் பரிமாற்ற முறைமை மற்றும் தேயிலைக்கான அதிக ஏற்றுமதி வாய்ப்புக்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன. கைத்தொழில் துறையில் பாகிஸ்தானின் தொழில்நுட்பத்தைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

விசேடமாக இலங்கையில் வீதி அபிவிருத்திக்கு பாகிஸ்தானின் புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தும் திட்டமொன்றுக்கு இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று இலங்கையுடன் பாதுகாப்பு ஒத்துழைப்புகளைச் சக்திமிக்கதாக்கித் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி சர்தாரி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் உறுதியளித்துள்ளார்.

கலந்துரையாடல்களின் பின்னர் இடம்பெற்ற விசேட விருந்துபசாரத்தில் இரண்டு நாட்டு ஜனாதிபதிகளும் கலந்து கொண்டுள்ளனர். இரண்டு நாடுகளினதும் கலாசாரங்களை வெளிப்படுத்தும் நிகழ்வுகள் இடம்பெற்றதாகவும் இஸ்லாமபாத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-5)

# லைசென்ஸ் இன்றி மதுபோதையில் வாகனம் ஓடியவருக்கு அபராதம்

## 5,500 ரூபா செலுத்துமாறு உத்தரவு

தென்மராட்சி, பெப்.12

மதுபோதையில் சாரதிய அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 5 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து இரு குற்றங்களுக்குமாக 5 ஆயிரம் 500 ரூபா அபராதம் விதித்தார்.

இதேவேளை- அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்த மீசாலை வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (ஒ-9)

# எரிபொருள் விலைகள் 'கிடு கிடு' உயர்வு

## ம.எண்ணெய் 35 ரூபாவால் அதிகரிப்பு

1 அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் போக்குவரத்து சபை, தனியார் போக்குவரத்து பஸ் சேவை, கடற்றொழிலாளர்கள், பாடசாலை போக்குவரத்து சேவை மற்றும் முச்சக்கர வண்டி உள்ளிட்ட போக்குவரத்து சேவைகளுக்கு எரிபொருள் நிவாரணமொன்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை எதிர்பாராத விதமாக அதிகரித்தமையே இந்த விலை திருத்தத்திற்கான காரணமென அரசு தெரிவிக்கின்றது.

இதேவேளை-

யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ். பிராந்தியத்துக்கும் புதிய விலைப் பட்டியல் படிவம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி யாழ்.குடாநாட்டில் இதுவரை 137.50 சதமாக விற்பனையான பெற்றோல் மேலதிகமாகப் 12 ரூபாவாலும் 84.60 சதமாக விற்பனையான ஓட்டோ டீசல் மேலதிகமாக 31 ரூபாவாலும், 71.60 சதமாக விற்பனையான மண்ணெண்ணெய் 35 ரூபாவாலும் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் பிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

### நேரகாலத்துடன் மூடப்பட்ட எரிபொருள் நிலையங்கள்

இதனிடையே, எரிபொருள்களுக்கான விலை அதிகரிக்கப்படும் என்ற செய்தி பரவியதை அடுத்து யாழ்ப்பாணத்தில் வழமையாக 10 மணிக்கு மூடப்படும் எரிபொருள் நிலையங்கள் மாலை 6 மணிக்கே மூடப்பட்ட விட்டன. இதனால் வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்ப முடியாத நிலை ஏற்பட்டது. (ஒ-5-17-323)

# தமிழகத்துடன் நெருக்கம் இலங்கைக்கு அவசியம்

## பேராசிரியர் றொகான் குணரட்ண

1 பாவிப்பதை தடுக்கும் வகையில், தமிழ் நாட்டுடன், இலங்கை நெருக்கமாகப் பணியாற்ற வேண்டும் என்று பேராசிரியர் றொகான் குணரட்ன தெரிவித்துள்ளார்.

சிங்கள தேசத்தின் நலன்களை முன்னிறுத்தி கருத்துக்களை முன்வைத்து வரும் பேராசிரியர் றொகான் குணரட்ன, அடுத்த தசாப்தத்தில் இலங்கைக்கான சவால்கள் என்ற கருப்பொருளில் சில அறிவுரைகளை முன்வைத்துள்ளார். அதிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :

தமிழீழ விடுதலைப் புலிகள் மீளவும் ஒருங்கிணைவதற்கு மேற்குலகம் ஒரு சொர்க்கபுரியாக அவர்களுக்கு உள்ளது. இவர்கள் மேற்கத்தைய அரசியல்வாதிகளுக்கு நிதியுதவி செய்கின்றனர். அத்துடன் மனித உரிமைத் தொண்டு நிறுவனங்கள் இலங்கைக்கு எதிராகப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றது.

இவையே இலங்கை அரசு மீது கனடா, அமெரிக்கா மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகள் அழுத்தம் ஏற்படுத்துவதற்கு காரணமாகின்றது. எனவே இலங்கை மேற்கு நாடுகளுடன் தனது உறவுகளை மீட்டெடுக்க வேண்டும்.

அத்துடன் தமிழ் நாட்டைப் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணைவதற்கு முயற்சிப்பதால் தமிழ் நாட்டுடன் - இந்திய அரசுடன் - நெருக்கமாகப் பணியாற்றும் வகையில் இலங்கை தனது வெளியுறவுக் கொள்கையை மாற்றியமைக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். (த-5)

# தியாகராஜ சுவாமிகள் ஆராதனை வாரம்

தென்மராட்சி.பெப்.12

தென்மராட்சியில் உள்ள வலய பாடசாலைகளில் இசைப்பெரியார் ஸ்ரீ.தியாகராஜ சுவாமிகள் ஆரா தனை வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளன.

நாளை திங்கட்கிழமை முதல் எதிர் வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை அனைத்துப் பாடசாலைகளிலும் இதனை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இந்த வாரத்தில் பாடசாலைகளில் இசை பயிலும் மாணவர்கள் மூலம் இசை விழுமியங்களைப் பேணுமாறும் நிகழ்வைக் காலை ஆராதனையூடாகவோ அல்லது மாணவர் மன்றங்கள் ஊடாகவோ பொருத்தமான தினத்தில் நடத்துமாறும் வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார். (ம-9)

# பொலிஸ் அதிகாரம் கொடுத்தால் மாலைதீவின் கதிதான் ஏற்படும்

1 அதிகாரங்களைப் பகிர்வது பற்றிப் பேச்சுக்களை நடத்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு எந்த உரிமையும் கிடையாது.

இலங்கை அரசு முட்டாளத்தனமாக நடந்து கொண் டால், புனர்வாழ்வு பெற்ற புலிகள் வடக்கு, கிழக்கு மாகாண பொலிஸ்துறையில் இடம்பெற்று விடுவர் என்றும் கோமின் தயாசிறி மேலும் எச்சரித்துள்ளார். (த-5)

# பிச்சைக்காரர்கள் கணக்கெடுப்பு

1 ளுக்கு வாழ்வாதார தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கவும் வீடற்றவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கவும் சமூக சேவைகள் அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது. (ஒ-323)

# இலங்கை அரசைக் கவிழ்க்க வல்லரசுகள் மறைமுக சூழ்ச்சி

1 கல்லூரியில் நேற்று மாலை இடம்பெற்ற முஸ்லிம் மீடியா போரத்தின் மீலாத் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவர் இவ்வாறுகுறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

'எந்த மதத்தைப் பின்பற்றினாலும் அதனை முறையாகப் பின்பற்ற வேண்டும். அத்துடன், ஏனையமதத்தையும் அதனைச் சார்ந்தவர்களையும் மதிக்க வேண்டும். அதன்போதே குரோதங்களற்ற ஐக்கியமானஒரு சமூகத்தை கட்டியெழுப்ப முடியும்.

எந்த மதத்தவர்களையும் அவர்களது கலை, கலாசார விழு மியங்களையும் மதிக்கும் உயர்வான குணம் கொண்டவரே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, மதங்களினூடாக நாம் ஐக்கியப்படுகிறோம். மாறாகப் பிளவுபடவில்லை.இன்று உலகளாவிய ரீதியில் பார்க்கின்றபோது பெரும் அழிவுகள், குழப்பங்கள் ஏற்படுகின்றன.உதாரணமாக மாலைதீவு போன்ற நாடுகளில் இடம்பெறுகின்ற பிரச்சினைகளைக் குறிப்பிடலாம்.

ஆனால், இலங்கையில் புரையோடிப்போயிருந்த போரானது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு தற்போது அமைதியானதொரு சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான நாடுகளில் வல்லரசு நாடுகள் கலவரங்களை ஏற்படுத்தி அங்கே பிரிவினை வாதங்ளை ஏற்படுத்துகின்றன.

இவ்வாறான ஒரு நிலைமையை இலங்கையிலும் தோற்றுவிக்க சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுவதை நாம் காண்கின்றோம்.

அதற்கு இடம்கொடுக்காது எமது தனித்துவத்தை தக்கவைத்துக் கொண்டு நாம் ஐக்கியமாக வாழ்வதற்கான சூழ்நிலையை தோற்றுவிப்பதே எமது நோக்கம்- என்றார் அவர். (த)

# நாணய நிதியத்திடம் கையேந்துகிறது அரசு

1 தற்கான கடிதமொன்றை அடுத்த மாதம் அனுப்புவதற்கு எதிர்பார்த்துள்ளதாக அரசு நேற்றுமுன்தினம் தெரிவித்தது.

சர்வதேச நாணய ஒத்துழைப்புக்கு பொறுப்பான சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம இதைத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் மேலதிக ஒத்துழைப்பின்றி பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்திக்கொள்ள முடியும் என அரசு நம்பிக்கை கொண்டிருப்பதாக மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாரட் கப்ரால் கடந்த மாதம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் சர்வதேச நாணய நிதியத்துடன் ஆரோக்கியமான உறவைப் பேணுவதற்கு அரசு நம்பிக்கை கொண்டிருப்பதாக கலாநிதி அமுனுகம தெரிவித்தார்.

முழுமையான கடனைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையிலிருந்து அரசு முற்றாக விலகவில்லை. எஞ்சிய தொகையை நாம் பெறுவதென்றால் அடுத்த மாதம் நாம் தனியான கடிதமொன்றில் கையெழுத்திட வேண்டியிருக்கும் என அவர் கூறினார். வெளிநாட்டு நாணயக் கையிருப்பு அடிப்படையில் இதுதொடர்பாக அரசு தீர்மானம் மேற்கொள்ளும் என அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கான 2.6 பில்லியன் டொலர் கடனை சர்வதேச நாணய நிதியத்தின் 24.06.2009 ஆம் திகதி அங்கீகரித்தது. இவற்றில் 1.8 பில்லியன் டொலரை 7 கட்டங்களில் இலங்கை ஏற்கனவே பெற்றுக்கொண்டுள்ளது. (த-5)

# பிரபல தமிழ் வர்த்தகர் கொழும்பில் கடத்தல்

1 அழைப்பு எடுத்தால் யாரும் பதிலளிக்காமல் இருப்பதாக அவரது நண்பர்கள் உதயனுக்குத் தெரிவித்தனர்.

பிரபாகரன் ஏற்கனவே படையினரால் கைது செய்யப்பட்டு 28 மாதங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த பின்னர் குற்றச்சாட்டுக்கள் எதுவுமின்றி விடுவிக்கப்பட்டிருந்தார்.

தன்னைத் தேவையற்றுத் தடுத்து வைத்திருந்தமைக்காக 10 கோடி ரூபா இழப்பீடு கேட்டு உயர் நீதிமன்றத்தில் அவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு இன்னும் நிலுவையில் உள்ளது. இந்த நிலையிலேயே அவர் கடத்தப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இராணுவத்தின் முன்னாள் தளபதி சரத் பொன்சேகா ஆகியோரைக் கொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சியில் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். எனினும் விசாரணையின் பின்னர் அவர் மீது குற்றச்சாட்டுக்கள் எவையும் சுமத்தப்படவில்லை.

இந்தச் சதி முயற்சியில் ஈடுபட்டிருந்தார் எனக் கூறப்பட்டுக் கைது செய்யப்பட்டவரும் பிரபாகரனின் நண்பருமான இராணுவ அதிகாரி ஒருவர் இன்னமும் தடுப்புக் காவலில் உள்ளார்.

பிரபாகரனின் கடத்தலுக்கான காரணம் என்ன என்பது உடனடியாகத் தெரியவரவில்லை என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

போரின் பின்னர் ஓய்வுக்கு வரும் என நினைத்த வெள்ளை வான் கடத்தல்கள் இன்றும் தொடர்வது அச்சத்தைத் தருவதாக உள்ளது என்று வெள்ளவத்தை வாசி ஒருவர் தெரிவித்தார். (உ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

Adobe Photoshop

கிறபிக் டிசைனர்
(அனுபவம் உள்ளவர்கள்)
பெண்கள் மட்டும்

021 225 0390

லக்சுமி டிஜிற்றல் கலர் லாப் சங்கானை.

## வீடு வாடகைக்கு

கே.கே.எஸ். றோட், தட்டாதெரு சந்தியில் இருந்து இல. 21, சீனியர் ஒழுங்கையில் வீடு வாடகைக்கு உண்டு. வாகனத்தரிப்பிடம் உண்டு. **தொடர்பு : 0777 319598**

உங்கள் விளம்பரங்களை உதயனில் பிரசுரிக்க
தொ.பே.: 0215671111
தொலை நகர் 021 222 9731

## பணியாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் இரும்பு விற்பனை வியாபார நிலையத்திற்கு கீழ்க்காணும் பணிக்கு முன் அனுபவமுள்ள பணியாளர்கள் தேவை.

01. காசாளர்

02. சாரதி (கனரக வாகனம்)

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு 17.02.2012 இற்கு முன்னர் தங்கள் சுயவிவரக் கோவையை கீழக்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**விளம்பர இல. 4220**
**மே/பா உதயன் பணிமனை**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

## வின்றிச்
## 10 வரப்பிரசாதங்களுடன் ஐஸ்கிறீம் இயந்திரம்

**50,000/- மேல் மாத வருமானம்**



- சோயா வெனிலா சொக்லட் சுவைகள்
- இலவச பயிற்சி
- விற்பனையின் பின் சேவை

ஒரு வருட உத்தரவாதம்

விலை ரூ 99,000/- இல் இருந்து — புத்தம் புதியது

**WINRICH INTERNATIONAL (PVT) LTD.**
(Member of Pluss int.)
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03, Sri Lanka.
தமிழில் தகவல்பெற (யோகேஸ்)
Hot Line: 077 391 8870, 077 106 6902

## STUDY IN UK

AFTER GCE O/L
GCE A/L
what next?

February/March Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

உங்கள் London செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்

- ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனைபடைத்துக் கொண்டிருப்பதால்
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன
- 4 வருட visa உத்தரவாதம்
- ஒரு மாதத்தில் பயணம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி(per week)
- GCE(O/L) தகமை போதுமானது
- இலவச IELTS வகுப்புகள்

**HOTLINE : 021 7538395 / 021 2227230 011 7 555511/14**

EXPONET Overseas Consultants
379 - ½, Galle Road, Colombo 06.
197,Arasady Road, Jaffna.
E-mail:nimal@expogroup.lk
Web:www.expogroup.lk


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 02 | | 13 |
| 12 | | 01 |
| 1934 | | 2012 |



### அமரர் பூமணி செல்வரெட்ணம்

எமது குடும்பத்தலைவி பூமணி செல்வரெட்ணம் கடந்த 13.01.2012 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு எமது துன்பத்தில் பங்குகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் மனம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (12.02.2012) ஞாயிற்றுக்கிழமை மு.பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்
நாகேஸ்வரன் (ஜேர்மனி)
நகுலேஸ்வரன் (நகுலன்) பிள்ளைகள்

97, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### கந்தையா தபேந்திரன்

(ஓய்வுபெற்ற நிதி உதவியாளர் பிரதேச செயலகம், கரவெட்டி)



அல்வாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சாய் இல்லம் தச்சன்தோப்பு பிள்ளையார் கோவிலடியில் கரவெட்டி மத்தியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா தபேந்திரன் நேற்று (11.02.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான கந்தையா - சரஸ்வதி தம்பதி யரின் அன்பு மகனும், உமாதேவி யின் அன்புக் கணவரும், தனுஷா (மின் பொறியியலாளர், இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்), விஜிதா (பல்கலைக்கழகம், மொறட்டுவ), ரஜிதா (பல்கலைக்கழகம், பேராதனை ஆகியோரின் பாசமிகு தந்தையும் அரவிந்தநாத்தின் (பொறியியலாளர்) மாமனும் தபேந்திராதேவி - கெங்காதரனின் சகோதரனும், சேனாதிராசா - இராசம்மா தம்பதியரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.02.2012) திங்கட் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்களுக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சாய் இல்லம்",
கரவெட்டி மத்தி.

தகவல்:
குடும்பத்தினர்


## வீடு வாடகைக்குத் தேவை

கிளிநொச்சி நகரில் இருந்து 1Km சுற்றாடலில் அரச உத்தியோகத்தர் குடும்பம் குடியிருப்பதற்கு வீடு வாடகைக்குத் தேவை.

**தொடர்பு:-0776991078**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மணல்தறை ஒழுங்கையில் நிலப்பரப்பு 3 குழி 6.67 அளவுள்ள காணிவிற்பனைக்கு உண்டு. முழுமையாகவோ/பகுதியாகவோ பிரித்து கொடுக்கப்படம் (தரகர் தேவையில்லை)

**தொடர்பு:-0779237957**

## வீடும் காணியும் விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு,பொற்பதி வீதியில் வீடும், 3பரப்புக் காணியும்விற்பனைக்குண்டு.

**தொடர்பு:-0776258116**

## வயல் காணி விற்பனைக்கு

சாவகச்சேரியில் 45 பரப்பு வயல் காணி (கல்நாட்டி வயல்) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
0777 520 133, 0776 159 224

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி முத்துமாரி அம்மன் கோவில் வீதியில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
[illegible]

## கள மேற்பார்வையாளர்களுக்கும் கனரக வாகன சாரதிக்குமான பதவி வெற்றிடங்கள்

**கள மேற்பார்வையாளர்கள் (Site Supervisors)**

Ed. Qu. A/L 3 Passes
வயதெல்லை - 25 - 40
அனுபவம் - கட்டட நிர்மாணம், வீதி நிர்மாணம்
சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

**கனரக வாகன சாரதி**

அனுமதிப்பத்திரம் - A.D
வயது - 25 - 45
சம்பளம் - பேசித் தீர்க்கப்படும்.
நேர்முகப்பரீட்சை - 20.02.2012 at 10.00 am

**Mege Construction Suppliers (Pvt) Ltd.**
174, Ananthapuram West, Kilinochchi
தொடர்பு : 0712285699, 0775082728

## SHOPCOMPLEX — கடைத்தொகுதி

சாவகச்சேரி நகரமத்தி கண்டி வீதி, இலங்கை வங்கிக்கு அருகில் 12 அறைகளைக் கீழ்த்தளத்தில் கொண்ட மூன்று மாடிக் கட்டடம் அமையவுள்ளது. இதில் கீழ்த் தளத்தில் முடிவுற்ற 7 அறைகள் மட்டும் வாடகைக்கோ விற்பனைக்கோ வழங்கலாம்.

**தொடர்பு: பி. சின்னத்துரை**
நியூ வி.எம்.கே. ஜுவல்லர்ஸ்
நவீன சந்தை, கண்டி வீதி, சாவகச்சேரி
தொ.பே. 021 2270038

## மலேசியா வேலை வாய்ப்பு

யாழ் மக்களுக்காக
Green Which Business Academy
நிறுவனத்தினரும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அங்கிகாரம் பெற்ற நிறுவனத்தினரும் இணைந்து நடாத்தும் நேர்முகத்தேர்வு.

காலம் :- 13.02.2012 - 14.02.2012
நேரம் :- காலை 09 மணிமுதல் 4.30 மணி வரை

**இடம் :- இல. 235 பலாலி வீதி, கோண்டாவில் சந்தி யாழ்ப்பாணம்.**

### தகமைகள்

- 18வயது முதல் 35வயதுக்கு உட்பட்டவர்கள்
- எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாக இருத்தல் அவசியம்
- கலந்து கொள்ளும் இளைஞர்கள் தங்கள் ஆவணங்களுடன் சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**தொடர்புகளுக்கு :- 077 3483438, 021 567 2727**

இச் சந்தர்ப்பத்தை நழுவவிடாது பயன் பெற்றுக் கொள்ளுங்கள்.

அனுமதிக்கு முந்துங்கள்
அனுமதிகள் முற்றிலும் இலவசம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



நியாயம் கிடைக்குமா? 06



ஆறாத வடுக்கள் 17



ஹக்கீமின் அடுத்த ஸ்டண்ட் 02



முதல்வன் யார்? 23



புளியைக் கரைத்த ஸ்ரீபன் ராப் 21


# சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம் 01

உதயன் 12 பெப்ரவரி 2012 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு


# தலையுதிர் காலம்

■ ஊரான்யன்

“ஆத்திரக்காரனுக்கு புத்திமத்திமம் இந்த சொலவடையை இதுவரைக்கும் நம்பியிராதவர்கள்கூட முஹமட் நஷீட்டின் நிலையைப் பார்த்து நம்பத் தொடங்கிவிட்டார்கள். சின்னதொரு முன்கோபக் கட்டளை அவரது ஆட்சிக் கட்டிலேயே உலுப்பி, அவரைக் கீழே உதறித் தள்ளியிருக்கிறது.



முன்னரெல்லாம் பாடசாலைகளில் பொதுஅறிவுப் போட்டிகள் அடிக்கடி நடப்பது வழக்கம். “அந்த நாட்டின் ஜனாதிபதி யார்?”

“இந்த நாட்டின் பிரதமர் யார்?” என்பனவே அதிகளவு கேட்கப்படும் விடயங்கள். இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் என்பன போன்ற ஏராளமான நாடுகளில் ஆட்சியாளர்களின் பெயர்கள் அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கும். எனவே இந்த நாடுகளின் ஆட்சியாளர்களின் பெயர்களைக் கேட்டால் ஒன்றுக்கு இரண்டு மூன்று தரம் யோசித்துவிட்டே மாணவர்கள் பதில் எழுதுவார்கள். ஆனாலும் எகிப்து, ஈராக், லிபியா போன்ற நாடுகளின் ஆட்சியாளர்கள் யார்? என்று கேட்டால் கண்ணை மூடிக்கொண்டு பதில் சொல்லிவிடுவார்கள். ஏனெனில் இரண்டு மூன்று தசாப்தங்களாக தம்முடைய ஆட்சியாளர்களை மாற்றுவதற்கு அந்த நாடுகள் மறந்து போய்விட்டன. இத்தகைய நாடுகளில் மாலைதீவும் ஒன்று. அப்துல் கையூம் ஏறக்குறைய மூன்று தசாப்தங்களாக மாலைதீவில் தன் அதிகாரத்தை கைவிடாமல் இறுக்கிப் பிடித்திருந்தார். சாகும் வரைக்கும் அவர்தான் மாலைதீவின் ஜனாதிபதி என்று எல்லோரும் நினைக்கும் அளவுக்கு அவரது அதிகாரம் இருந்தது.

## 2008

மாலைதீவின் தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்தன. யாராலும் அசைக்கப்பட முடியாதவர் என்ற மாயைகளால் சூழப்பட்டிருந்த அப்துல் கையூம் மண் கௌவிக் கொண்டிருந்ததை அந்த முடிவுகள் அதிர்ச்சியோடு சொல்லிக்கொண்டிருந்தன. அப்துல் கையூமுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்து, ஆட்சிக் கட்டிலை கைப்பற்றியவர் அப்போது 41 வயதே நிரம்பிய முஹமட் நஷீட். நஷீட்டுக்கும் இலங்கைக்கும் இடையே நெருங்கிய தொடர்புகள் நிறைய உண்டு. நான்கு வருடங்கள் கொழும்பு ஓவர்சீஸ் சர்வதேசப் பாடசாலையில் நஷீட் கல்வி பயின்றார். அங்கு க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சிறப்பான அடைவைப்பெற்ற நஷீட் லண்டனுக்குப் பறந்தார். லிவர்பூல் கல்லூரியில் கற்றுத் தேர்ந்தபின் மாலைதீவுக்கு திரும்பினார். அங்கு ஜனநாயகக் கட்சியில் இணைந்துகொண்டு தீவிர அரசியலில் இறங்கினார். நஷீட்டின் ஒரே இலட்சியம் அப்துல் கையூமின் ஆட்சிக்கு ஒரு பலமான முற்றுப்புள்ளியை வைத்து, மாலைதீவை அபிவிருத்தி செய்வதுதான். தன்னுடைய கனவை 2008 இல் நனவாக்கினார்.

வழமையான அரசியல் வாதிகளைவிடவும் நஷீட் வித்தியாசமானவர் என்பதை அவரது முதலாவது அமைச்சரவைக் கூட்டமே நிரூபித்தது. “இன்னும் 50 வருடங்களுக்குள் கடலுக்குள் மூழ்கப்போகும் மாலைதீவைக் காப்பாற்றுங்கள்” என்பதைக் குறியீடாகச் சொல்வதற்காக, தண்ணீருக்கடியில் நஷீட் அரசின் அமைச்சரவைக் கூட்டம் நடந்தேறியது. உலகின் கருணைக் கண்கள் மாலைதீவின் பக்கம் திரும்பின. அபிவிருத் திக்கான நிதி அள்ளிக் கொடுக்கப்பட்டது.

சூடாகிக் கொண்டிருக்கும் பூமிப் பந்தில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாக கடல் நீர் மட்டம் அதிகரிப்பதாலேயே மாலைதீவு 50 வருடங்களுக்குள் கடலுக்கு இரையாகி விடும் என்று ஆரூடம் கூறப்பட்டது. விதியை மதியால் வெல்ல நஷீட் முடிவெடுத்தார். தன்னுடைய சிம்மாசனத்தைப் பாதுகாப்பதிலேயே முன்னைய அதிபரான அப்துல் கையூம் தன் பதவிக் காலம் முழுவதையும் செலவிட்டிருந்தார். ஆனால் நஷீட் மாலைதீவின் எதிர்காலத்துக்காக தொடர்ந்தும் போராடியபடியே இருந்தார். மாலைதீவு மக்களின் வாழ்க்கை முறையை இயற்கையோடு இணைந்ததாக மாற்றினார். அனல் மின்னுக்குப் பதிலாக மாலைதீவு முழுவதும் சூரிய மின்சாரத்தில் பளிச்சிட்டது. பச்சைத் தாவரங்களின் போர்வையால் மாலைதீவு மூடப்பட்டது. கரையோரம் முழுதும் அலைகளே கண்டு பின்வாங்கக் கூடிய வகையில் தடுப்பு அரண்கள் அமைக்கப்பட்டன. அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்த மாலைதீவின் ஆயுட்காலம் நஷீட்டின் சிகிச்சையால் இன்னும் சில தசாப்தங்களுக்கு நீடிப்புப் பெற்றது.

அத்தோடு நஷீட் இதுவரை காலமும் இறுகப் பூட்டியிருந்த கருத்துச் சுதந்திரக் கதவை சடாரென திறந்துவிட்டார். “உலகின் வல்லரசுகள் என்று மார்தட்டிக்கொள்கின்ற நாடுகளே உலக வெப்ப அதிகரிப்புக்கு காரணம். எனவே அவற்றின் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் வெப்பத்தின் அளவைக் கட்டுப்படுத்தவேண்டும்” என்று நஷீட் உரத்துக் கோஷமிட்டார். அவரின் கோஷத்தில் நியாயம் இருந்ததால் பல அமைப்புகள் நஷீட்டின் கோரிக்கையை வழிமொழிந்தன. வேறுவழியின்றி மனதுக்குள் நஷீட்டைத் திட்டிக் கொண்டு, வெளியில் புன்னகையை ஒட்டிக்கொண்டு உலக வெப்பமயமாதலை தடுக்கும் முயற்சிக்கு தாங்களும் உதவுவதாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஒத்துக் கொண்டன. ஆனாலும் தமது தொழிற் சாலைகளுக்கு மண் அள்ளிப்போட்ட நஷீட்டைப் பழி வாங்க அவை சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் காத்திருந்தன. மாலைதீவில் மக்களுக்கு எதையும் சொல்ல, எதையும் வெளிப்படுத்த வாய்ப்பு வழங்கப்பட்டது. இதுவே நஷீட்டின் ஆட்சிக்கு ஆபத்தாகிவிட்டது.

## 2012

உலக வெப்பமயமாதலுக்கு எதிராகவும், மாலைதீவு மக்களின் நலனுக்காகவும் இரட்டைக் குதிரையில் சவாரிசெய்த நஷீட் ஒரு கண நேர ஆத்திரத்தால் குப்புற வீழ்ந்தார். நஷீட்டின் நிர்வாகத்தை தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் சகட்டுமேனிக்கு விமர்சித்த ஜமாலின் வார்த்தைகள் நஷீட்டுக்கு கடுப்பேற்றின. “பிடியுங்கள் அவனை” என்று அரச பாணியில் ஆணையிட்டார். ஆனால்,“செல்லாது! செல்லாது! நஷீட்டின் கோபக்கார உத்தரவு செல்லாது” என்று நாட்டாமை பட விஜயகுமார் பாணியில் மறுத்தான் அடித்தது மாலைதீவு நீதிமன்றம்.

இப்போது கோபம் நஷீட்டின் கண்ணை மறைத்தது. ஊழல் சாயம் பூசி நீதிபதியைப் பிடித்து சிறையில் அடைத்தார் நஷீட்.

» 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோத்தா, எஸ்.பி, மைத்திரிபாலவை உள்ளே போடுங்கள்

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க, அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆகியோரை அழைத்து விசாரணை நடத்தும்படி பொலிஸ் மா அதிபரிடம் நேரில் சீறியிருக்கிறார் ஜே.வி.பியின் கிளர்ச்சி அணி நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் குமார.

தமது கிளர்ச்சி அணியின் மீது தேவையற்ற விதத்தில் அரசு பொய்குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருவதாகத் தெரிவித்து அண்மையில் பொலிஸ் மா அதிபரிடம் அவர் எழுத்து மூல முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தார். அது தொடர்பாக வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்ய வருமாறு பொலிஸ் மா அதிபர் அவரை அழைத்திருந்தார்.

அங்கு சென்ற அஜித் குமார, தமது கிளர்ச்சிக் குழுவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்புகள் இருப்பதாகவும் தமது குழு மீண்டும் ஆயுதப் போராட்டம் ஒன்றை ஆரம்பிக்கப் போவதாகவும் அரசு பொய்யான பரப்புரை செய்து வருகிறது என்று வாக்குமூலம் அளித்தார். அதுமட்டுமல்லாமல் இந்த மாதிரிப் பொய்யான பரப்புரைகளை மேற்கொண்டு வரும் கோத்தபாய மற்றும் அமைச்சர்களை பிடித்து உள்ளே போடுங்கள் என்றும் சீறிவிட்டு வந்திருக்கிறார்.

## என்னே ஒரு ஜனநாயகம்!



அண்மையில் ஊடக அமைப்புக்கள் இணைந்து 'கறுப்பு ஜனவரி' போராட்டத்தைக் கொழும்பில் முன்னெடுத்தன. இந்தப் போராட்டத்தின் ஒரு பகுதியாக கோட்டை ரயில் நிலையத்தில் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும் திட்டமிடப்பட்டது. ஏற்கனவே ஜெனிவாவில் மனித உரிமைக் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகி கடும் அழுத்தங்களைச் சந்தித்து வரும் அரசு இந்தப் போராட்ட ஏற்பாட்டைக் கண்டு பயந்துவிட்டது. உடனடியாக அது தனது பொலிஸ் ஏவலாளிகளை உசுப்பிவிட்டது. அவர்களும் நீதிமன்றத்துக்கு ஓடிப்போய், ''கோட்டை ரயில் நிலையம் முன்பாக பத்திரிகையாளர்கள் போராட்டம் நடத்தினால் அது அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும்'' என்று தெரிவித்து ஆர்ப்பாட்டத்துக்குத் தடை உத்தரவு வாங்கிவிட்டனர்.

அரசு என்ன செய்தாலும் அடிபணியமாட்டோம் என்று நின்ற பத்திரிகையாளர்கள், திட்டமிட்ட தினத்திலேயே போராட்டத்தையும் ஆர்ப்பாட்டத்தையும் நடத்தினர். கோட்டைக்குப் பதிலாக லிப்டன் சுற்றுவட்டத்துக்குத் திடீரெனத் தமது இடத்தை அவர்கள் மாற்றிக் கொண்டனர். ஆனால், அதேசமயத்தில் அரசுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டம் ஒன்றை சுதந்திரக் கட்சி கோட்டை ரயில் நிலையம் முன்பாக நடத்தியது. சு.கட்சி ஆர்ப்பாட்டம் நடத்தினால் அது அமைதிக்குப் பங்கம் இல்லையா? என்று கேட்டு ''என்னே ஒரு ஜனநாயகம்'' எனக் கேட்டுச் சிரிக்கிறார்கள் இங்குள்ள வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள். இலங்கையின் மனித உரிமைகள் பற்றி உலகமே சிரிப்பாய் சிரிக்கையில் இதுவா பெரிய விடயம் என்று கேட்கிறார்கள் தமிழ்ப் பத்திரிகையாளர்கள்.

## புருஷன் – பொண்டாட்டி சண்டைக்கு ஓய்வில்லை

ஐ.தே.கட்சிக்குள் ரணில் தரப்புக்கும் சஜித் தரப்புக்கும் இடையிலான சண்டைகளை இப்போதெல்லாம் புருஷன் – பொண்டாட்டி சச்சரவு என்று வர்ணிக்க ஆரம்பித்து விட்டார்கள் கட்சித் தொண்டர்கள். இந்த இரு தரப்புகளுக்கும் இடையிலான கடைசிச் சண்டைக்குக் காரணம் மாகாணத்திலுள்ள கிளைகளில் யாருக்கு ஆதரவு என்பதை இரு தரப்புகளும் நிரூபிக்க முயன்றமைதானாம்.

மாத்தளை, கேகாலை, கண்டி, புத்தளம் மாவட்டங்களில் கட்சி



யின் மாகாண நிர்வாகங்களைத் தமக்கு வேண்டியவர்களைப் போட்டுக் கைப்பற்ற சஜித் தரப்பு முயன்றது. இதைப் பார்த்துப் பதைபதைத்துப்போன ரணில் தரப்பு இவற்றில் மூன்று மாவட்டங்களுக்குத் தமது ஆட்களைப் போட்டுவிடும் குழிபறிப்புகளில் இறங்கியது.

அத்தோடு நின்றுவிட்டிருந்தால் பரவாயில்லை, மாகாண மட்டங்களில் சஜித் தரப்பு ஆதரவு பெற்றிருந்த நிர்வாகங்கள் எவையும் செல்லுபடியற்றவை என்றும் ரணில் அதிரடியாக அறிவித்து விட்டார். எங்கள் ஆதரவு நிர்வாகங்களைக் கலைக்க இவருக்கு என்ன அதிகாரம் உள்ளது என்று சஜித் தரப்பும் வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு கிளம்பியுள்ளது.

இந்தப் புருஷன் – பொண்டாட்டி சண்டை எப்போது ஓய்ந்து கட்சி எப்போது நிமிர்வது என்று அங்கலாய்க்கிறார்கள் அடிமட்டத் தொண்டர்கள்.

## ஐயோ பாவம்! அமைச்சர் மேர்வின்



பாவம் அமைச்சர் மேர்வின். ஏத்தி விட்டு ஏத்தி விட்டு சுடத்துப் பார்த்த கதையாக முடிந்து விட்டது அவரது நிலை. அவரது அதிரடிப் பேச்சுக்களும் கருத்துக்களும் அதகளப்படுத்தல்களும் பத்திரிகைகளை ஆக்கிரமிக்காத நாள்களே இல்லை என்று சொல்லலாம். அப்படி இருந்த அமைச்சர் இப்போது, வாயே திறக்காத படிக்கு ஆளாகி விட்டார்.

''சாப்பிடுவதற்கும் கொட்டாவி விடுவதற்கும் மட்டுமே இப்போதெல்லாம் நான் வாயைத் திறக்கிறேன்'' என்று தனக்கு நெருக்கமானவர்களிடம் சொல்லி இருக்கிறார் அமைச்சர் மேர்வின். தன்னை விட இள வயதில் பலசாலியான களனி நகர சபைத் தலைவர் கிடைத்ததும் ராஜபக்ஷ சகோதரர்கள் தன்னைக் கழற்றி விட்டுவிடுவார்களோ என்று அச்சம் அவருக்கு உள்ளூர வந்துவிட்டதுதான் அதற்குக் காரணமாம்.

## அமைச்சரின் புலம்பல்

ஒரு கண்ணுக்கு வெண்ணெயும் மறு கண்ணுக்குத் தண்ணீருமாக நடந்து கொள்கிறார்கள் ராஜபக்ஷ சகோதரர்கள் என்று கண்ணீர் வடித்திருக்கிறார் அமைச்சர் ரோகித அபேகுணவர்த்தன.

அவரது உறவினரான லோஷன்சில்வா போதையில் காரைச் செலுத்தி சிலரைக் காயப்படுத்தி இருந்தார். அவர்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்துவிட்டார். கார் இலக்கத்தை வைத்து லோஷனைப் பொலிஸார் நெருங்கி விட்டார்கள். ஆனால் அவர் மீது எந்த நடவடிக்கையையும் எடுக்கக்கூடாது என்று அமைச்சர் ரோகித பொலிஸாரை உறுக்கி இருந்தார்.

தமக்கேன் வம்பு என்று பொலிஸாரும் பின் வாங்கிவிட, சம்பவத்தைக் கேள்விப்பட்ட பாதுகாப்புச் செயலர் கோத்தபாய, பொலிஸாரைக் கூப்பிட்டு 'செம டோஸ்' விட்டுள்ளார். ''யார் எவராக இருந்தாலும் நடவடிக்கை எடுத்தே ஆகவேண்டும்'' என்று அவர் காட்டமாகச் சொல்லிவிட்டாராம்.

''அவங்க வீட்டுப் பிள்ளையாய் இருந்தா இப்படிச் சொல்லுவாங்களா?'' என்று தனக்கு நெருக்கமானவர்களிடம் புலம்பித் திரிகிறாராம் அமைச்சர்.

## காப்பாற்றப்போன இடத்தில் அமைச்சர் செய்த வேலை

அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல ஆஸ்திரேலியாவுக்குப் போயிருந்தார். அங்கு அவருடைய மகள் ஒருத்தி இருக்கிறார். ஹோட்டலில் 3ஆவது மாடியில்தான் அவருக்கு அறை ஒதுக்கப்பட்டிருந்தது. அறைக்குள் புகைக்க முடியாது என்பது உள்ளே போன பின்னர்தான் அமைச்சருக்குத் தெரியவந்தது. இது என்ன சோதனை என்று நினைத்த அமைச்சர் ஆவலை அடக்க முடியாமல் சிகரெட் பிடிக்க அறையின் முன்பகுதி 'பல்கனிக்குப்' போனார். புகையை ஊதித் தள்ளிவிட்டு திரும்பிப் பார்த்த அமைச்சர் அதிர்ந்து போனார். ஏனெனில் அவர் அறைக்குள் நுழைய முடியாது அந்தக் கதவு தானாகவே பூட்டிக் கொண்டது. கீழே யாரையாவது உதவிக்குக் கூப்பிடலாம் என்று 'பல்கனியில்' இருந்து எட்டிப் பார்த்தபோது கால் இடறி அப்படியே கீழே இருந்த பூங்கன்றுகளுக்குள் விழுந்து விட்டார். இரண்டு கால்களிலும் எலும்பு முறிவுகள். இத்தனைக்கும் அமைச்சர் அங்கு போனது போர்க் குற்றச்சாட்டுகளில் இருந்து இலங்கையைக் காப்பாற்ற. இப்போது அவரைக் காப்பாற்ற அவரது மனைவியை ஜனாதிபதி உடனடியாக அனுப்பி வைத்துள்ளார்.

## துமிந்தவின் வாலைப் பிடிக்க வலைவீச்சு

கொல்லப்பட்ட பாரத லகஷ்மனும் காயம்பட்டு நினைவின்றிக் கிடக்கும் துமிந்த சில்வாவும் அரசியல் களத்திலிருந்தும் நிழல் உலகில் இருந்தும் அப்புறப்படுத்தப்பட்டதால் ஆட்சி பீடங்களுக்கு பெருமளவில் வருவாய் இழப்பு ஏற்பட்டு விட்டது என்கின்றன நெருக்கமான வட்டாரங்கள். இதையடுத்து வெளிநாட்டில் உள்ள துமிந்தவின் தமையனான ரெனோ சில்வாவை தமது பக்கம் இழுத்து அரசியல் களத்தில் குதிக்க வைப்பிக்க இப்போது முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், அரசு தனது செல்வாக்கை இழந்து வருகிறது என்று கருதும் ரெனோ சில்வாவோ, இந்த நேரத்தில் ஐ.தே. கட்சி பக்கம் இருந்து பாய விரும்பவில்லை.

ஆனால் துமிந்த சில்வா தேடி வைத்திருக்கும் கோடிக்கணக்கான சொத்துக்களை இழந்துவிட விரும்பாத அரச தலைவர்களோ, ரெனோவை எப்படியும் துமிந்தவின் அரசியல் வாரிசாக்கி தம்பக்கம் இழுத்துக்கொள்ளத் தலையாய் அடித்துக்கொள்கிறார்களாம். பணம் பாதாளம் வரை பாயும் என்பது இதைத்தானோ என்று கேட்கின்றன அரசியல் வட்டாரங்கள்.

## ஹக்கீமின் அடுத்த ஸ்டன்ட்



அமைச்சர் ஹக்கீம் கொள்கைவாதிதான். ஆனால் அவர் ஓரே கொள்கையில் நிற்பதற்கு ஏனைய முஸ்லிம் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் வாதிகளும் அவரை விடுவதில்லை. முஸ்லிம் காங்கிரஸின் தலைமைக் கதிரையின் கால்களை அவர்கள் தொடர்ந்து ஆட்டிக் கொண்டே இருப்பதால், தலைமையைத் தக்க வைக்கவும் கட்சியைப் பாதுகாக்கவும் கொள்கையை விட்டு அவ்வப்போது 'ஸ்டன்ட்' காட்ட வேண்டியவராக இருக்கிறார் அவர்.

அரசிலிருந்து விலகி, கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக அவர் போட்டியிடப் போகிறார் என்பதுதான் அவரது புதிய 'ஸ்டன்ட்' பற்றி தகவல். தனது இந்த முயற்சிக்கு ஜனாதிபதி மஹிந்த முழு ஆதரவையும் தரவேண்டும் என்றும் அவர் கேட்டிருக்கிறாராம். ஆனால் அரச தரப்பிடம் இருந்து உருப்படியான பதில் இல்லையாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடையாளம் தெரியாதவர்கள் அல்லது இனந்தெரியாதவர்களின் அட்டகாசம் இவ்வளவு நாளும் வெள்ளைவானுடன் ஈழ நிலத்தில்தான் நடந்து கொண்டிருந்தது என்றால், இப்போது இணைய வெளியையும் இத்தகைய நபர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். கணினியில் தகவல்களைத் திருடி அவற்றை இணையப் பொது வெளியில் பகிரங்கப்படுத்துவோர் இப்போது இந்த "அடையாளம் தெரியாதவர்கள்" என்ற பொதுப் பெயருடன் இணை வெளியில் இணைந்துள்ளனர். இந்தக் குழுவில் எவர் வேண்டுமானாலும் இணைந்து கொள்ளலாம். அவரது அடையாளங்களை வெளிப்படுத்த வேண்டியதில்லை. 2010ஆம் ஆண்டில் இருந்து இந்தக் குழு இணைய வெளியில் நடமாடுகிறது. அண்மையில் அவர்கள் அமெரிக்க மத்திய உளவுத்துறையின் (எவ்.பி.ஐ) உள்ளக விசாரணை தொடர்பான வீடியோ உரையாடலை வெளியிட்டனர். இப்போது சிரிய ஜனாதிபதிக்கும் அவரது ஆலோசகருக்கும் இடையிலான மின்னஞ்சல்களை வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பொதுமக்களைக்கொன்று கிளர்ச்சியை ஒடுக்கி அதனை வெளி உலகுக்குத் தெரியாமல் எப்படி மறைப்பது என்று அந்த மின்அஞ்சல்கள் சிரிய ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறுகின்றன. இந்த அதிரடியால் ஆடிப்போயிருக்கிறது எல்லா நாட்டு ஆட்சி அதிகாரங்களும்.



விளையாட்டில் பந்தயம் (பெட்) கட்டலாமா? கிரிக்கெட்டில் இது ஒரு பெரிய சர்ச்சையையே கிளப்பிக்கொண்டிருக்கையில், ஒலிம்பிக்கில் பந்தயம் கட்டுவதை உத்தியோகபூர்வமாக்கி அறிவித்திருக்கிறார்கள். 'சரிட்டி பெட் டாட் கொம்' என்ற இணையத் தளம் இதற்காகத் திறக்கப்பட்டுள்ளது. எந்தவொருவரும் தாம் விரும்பிய தடகள வீரர் மீது பந்தயம் கட்டலாம். ஆனால், பந்தயம் கட்டப்படும் பணம் முழுவதும் தொண்டுப் பணிகளுக்குச் செல்லும். எந்த தொண்டு நிறுவனத்துக்குப் பணத்தைக் கொடுப்பது என்பதை வென்ற வீரரே தெரிவு செய்வார். 2012 லண்டன் ஒலிம்பிக்கின் போது இந்த பந்தயமுறை அறிமுகமாகிறது. அமெரிக்காவின் 800 மீற்றர் தூர ஓட்ட வீரர் காடிவிஸ் ரொபின்சன் உட்படப் பலர் இந்த பந்தயத்தில் சேர்ந்துள்ளனர்.




நாளைமறுதினம் காதலர் தினம். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்குவோர் எல்லோருக்குமான தினம். யாழ்ப்பாணத்திலும் காதலர் தினத்துக்கான தேடல்கள், பரிசுப் பொருள் தயாரிப்புகள் மெல்ல மெல்ல நடக்கின்றன. ஆனால், காதல் மன்னர்கள், மன்னிகள் பட்டியலில் தமிழர்களுக்கு இடமேயில்லை என்பதுதான் சோகம். காதல் விளையாட்டில் கைதேர்ந்தவர்களின் உலக நிலைப் பட்டியலின் பக்கமே ஒதுங்க முடியாதவர்களாக இருக்கிறார்கள் தமிழர்கள். அந்தப் பட்டியலில் முதலிடம் ஸ்பானியர்களுக்கு. இரண்டாவது இடம் தென்னமெரிக்காவைச் சேர்ந்த ஆர்ஜென்ரீனர்களுக்கு. மூன்றாவது இடம் இத்தாலியர்களுக்கு. பிரெஞ்சுநபர்கள், பிரேஸில் நாட்டவர்கள், லெபனானியர்கள் ஆகியோர் முறையே அடுத்தடுத்த இடங்களில் இருக்கின்றனர். அமெரிக்கர்களுக்கு இந்தப் பட்டியலில் 7ஆம் இடம் தான் கிடைத்துள்ளது. சுவீடிஷ், ஐரிஸ் மற்றும் வியட்நாமியர்கள் கடைசி மூன்று இடங்களையும் பகிர்ந்து கொண்டிருக்கின்றனர்.



இந்தக் குட்டிக் கார்கள் மின் சக்தியில் இயங்குகின்றன. செலவு குறைவு, எரிபொருள் தேவையும் இல்லை என்பதால் எதிர்காலத்தில் இவற்றுக்கு மவுசு அதிகம் என்கிறார்கள் அதிகாரிகள். அது மட்டுமல்லாமல் இந்தக் கார்களை மடித்தும் வைத்துக் கொள்ளலாம். இதனால் நிறுத்தும் இடத்துக்குச் சிரமப்படவேண்டியதில்லை என்பதும் இதன் வளர்ச்சிக்குக் காரணம் என்கிறார்கள் உற்பத்தியாளர்கள்.



ஜேர்மன் நாஸிகளின் கொலைகாரப் பாவியாகத் திகழ்ந்த மேஜர் அன்ரன் பர்கரின் அறுவைச் சிகிச்சை உபகரணப் பெட்டி நேற்று ஏலம் விடப்பட இருந்தது. ஆனால் ஒரு நாள் முன்னதாக அதனை ஏலப் பட்டியலில் இருந்து தூக்கி விட்டார்கள். மின் அஞ்சல்கள் மூலமும் தொலைபேசி மூலமும் கிடைத்த கடுமையான மிரட்டல்களை அடுத்து ஏல நிறுவனம் அந்த மருத்துவப் பெட்டியை ஏலத்தில் இருந்து அப்புறப்படுத்தி விட்டது. யூதர்களை வகை தொகையின்றிக் கொன்ற தடுப்பு முகாமில் 1943 ஜூலை முதல் 1944 பெப்ரவரி வரை இந்த மேஜர் பணியாற்றியிருந்தார். அந்த முகாமில் 140,000 [illegible] 33,000 பேர் கொல்லப்பட்டனர்.



கண்ணிவெடிகள், விமானக் குண்டு வீச்சுக்களில் கால்களை இழந்தவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் புதிய கடவுளாக அவதரித்துள்ளார் இந்த கனேடிய அறிவியலாளர் ஜான் அன்றிசேக். வெறும் 50 கனேடிய டொலர் பெறுமதியில் செயற்கைக் கால்களை உருவாக்கியிருப்பதன் மூலம் அவர் இந்த அவதாரத்தை எடுத்துள்ளார். அதாவது இலங்கைப் பெறுமதியில் வெறும் 5,000 ரூபாவுக்கு இந்தச் செயற்கைக் காலைப் பொருத்திக் கொள்ளலாம். இத்தகைய தொழில்நுட்பத்துடனான ஒரு காலைப் பொருத்துவதற்கு இப்போது பல லட்சங்களைச் செலவிட வேண்டியுள்ளது. இங்கு உள்ளூரில் தயாராகும் ஜெய்ப்பூர் கால்கள்கூட இதனுடன் ஒப்பிடும்போது அதிகமான விலை கொண்டவைதான். முழங்காலுக்கு மேல் காலை இழந்தவர்களுக்கு இந்தச் செயற்கைக் கால் ஒரு வரப்பிரசாதம் என்கிறார் ஜான்.



ஜப்பானில் வயதானவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே செல்கிறது. 2060ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த சனத்தொகையில் 40 சதவீதமானோர் வயோதிபர்களாகவே இருப்பர் என்று அரசு அறிவித்துள்ளது. இதனை அடுத்து வயோதிபர்களை இலக்கு வைத்து வியாபார நிறுவனங்கள் இப்போது களமிறங்கிவிட்டன. ஜப்பானின் சேகா கூட்டுறவு நிலையம் வயோதிபர்களுக்கான விளையாட்டுக் கூடங்களை உருவாக்கியுள்ளது. சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு அம்சங்கள் போன்றே இந்த விளையாட்டு நிலையமும் அமைந்திருக்கிறது. வயதுபோனால் எல்லோரும் குழந்தைகள்தான் என்பதை இந்த நிறுவனம் நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறது.



ஸின்டி ஸ்பைஸ் தான் அமெரிக்கப் பத்திரிகைகளின் சூடான தலைப்புச் செய்தி. வளர்ந்து வரும் மொடலான ஸ்பைஸ் பள்ளிப் படிப்பை இன்னும் முடிக்காத 18 வயதுப் பருவ மங்கை. இவர் படிக்கும் பள்ளியின் ஆண்டு மலரில் இவரது கவர்ச்சிப் படத்தைப் போட மறுத்துவிட்டார்கள் என்பதுதான் அமெரிக்காவையே கோபம் கொள்ள வைத்துள்ளது. மாற்றி மாற்றி மூன்று கவர்ச்சிப் படங்கள் கொடுத்தும் எல்லாவற்றையும் நிராகரித்துவிட்டார்கள் என்று குமுறுகிறார் ஸ்பைஸின் தாயார். இது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கான தடை என்று ஊடகங்களில் முழங்குகிறார் ஸ்பைஸ். பள்ளி நிராகரித்த படங்களில் இதுவும் ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதற்காக இந்தக் கெடுபிடிகள்?

நிம்மு

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் கடந்த வாரம்தான் யாழ். நகர வீதிகளில் 'பீல் பைக்' உறுமிக் கொண்டு திரிந்தது. இராணுவத்தினர் கறுப்புத் துணியால் முகத்தை மூடிக் கட்டிய வண்ணம் 'பீல் பைக்கில்' வட்டமிட்டுக் கொண்டிருந்தனர்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வந்திருந்தார். யுத்தம் முடிவடைந்த பின்னர் இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் இது அவர் மேற்கொண்ட மூன்றாவது விஜயம்.

கடந்த 2011 ஆம் ஆண்டு தேசிய தைப் பொங்கல் விழாவினை யாழ்ப்பாணத்தில் கொண்டாடுவதற்காகவும், அதன் பின்னர் கடந்த வருடம் ஜூலை மாதம் உள்ளூராட்சி சபை தேர்தல் பிரசாரத்துக்காகவும் மஹிந்த யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார். அவரது கடந்த இரண்டு விஜயங்கள் மற்றும் தற்போதைய விஜயத்தின் போதும் யாழ்ப்பாணத்தில் இரண்டு நாள்கள் தங்கியிருக்கும் வகையிலேயே மேற்கொள்ளப்பட்டது.

இருப்பினும் கடந்த வருடங்கள் மேற்கொள்ளப்பட்ட விஜயத்திற்கும், இந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட விஜயத்திற்கும் இடையில் பாதுகாப்பு ரீதியில் பல வேறுபாடுகள் இருக்கின்றன. கடந்த காலங்களில் வரும் இருந்த பாதுகாப்பை காட்டிலும் இந்த முறை பன்மடங்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளும் போது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு சமமாக இந்த முறையும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மஹிந்த யாழ்ப்பாணம் வருவதற்கு முதல் நாளே அவர் விஜயம் செய்யவுள்ள இடங்களில் 'பீல் பைக்' குழுவினர் வட்டமடித்தபடி இருந்தனர். அதனை விட ஒரு வாரத்துக்கு முன்பே குறித்த இடங்களில் சிவில் உடையில் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினர் கடமைகளை மேற்கொண்டிருந்தனர். முழத்துக்கு முழம் பொலிஸாரும், படையினரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இவற்றை விட ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினர் இந்த முறை சோதனை கெடுபிடிகளையும் அதிகரித்திருந்தனர். பொது மக்கள் கலந்து கொண்ட நிகழ்வாயினும் சரி, அரச அதிகாரிகள் கலந்து கொண்ட நிகழ்வாயினும் சரி மிகக்கடுமையான சோதனை நடவடிக்கைகளின் பின்னரே நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

சாதாரண சாப்பாட்டுப் பொதியினையே கிளறிக் கொட்டினர். ஒருவரது சாப்பாட்டில் இன்னொருவர் கை வைத்து அழைவதை யாரும் விரும்பமாட்டார்கள். ஆனால் ஆசிரியர்கள் - மாணவர்கள் - கொண்டு சென்ற சாப்பாட்டுப் பொதிகள் உடைக்கப்பட்டு தமது விரல்களால் கிளறி சோதனை செய்யு மளவுக்கு அவர்களது பாதுகாப்புக் கெடு பிடியின் உச்சம் இருந்தது. மேலும் மஹிந்த வழமையாக விஜயம் செய்யும் போது ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினர் தமது சிவில் உடையிலேயே கடமையாற்றுவர். இவர்களுடன் சேர்த்து இந்த முறை இராணுவத்தின் விஷேட அதிரடிப் பிரிவும் கடமைகளில் ஈடுபட்டது.

மேலும் மாவட்ட செயலகத்தில் வடமாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இதற்காக மாவட்ட செயலகத்தின் அனைத்து பிரிவுகளிலும் ஆயுதம் தாங்கிய விஷேட இராணுவத்தினர் நிறுத்தப்பட்டிருந்ததுடன், கூட்டம் நடைபெற்ற மாவட்ட செயல கேட்போர் கூடத்தின் கண்ணாடிகள் யாவும் உள்ளே என்ன நடக்கின்றது என்பதை தெரியாத வகையில் கறுப்பு துணிகளால் மூடி மறைக்கப்பட்டது. இவ்வாறு பல வகையிலும் அதி உச்சக்கட்டமான பாதுகாப்பே மஹிந்தருக்கு இந்த முறை வழங்கப்பட்டது. யுத்தம் முடிவடைந்து விட்டதாக தெரிவிக்கப்படுகின்ற வேளைகளில் இவ்வாறான அதி உச்ச பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது பலருக்கும் சந்தேகங்களையே உண்டு பண்ணுகின்றது.

இவையெல்லாவற்றையும் விட மஹிந்த ராஜபக்ஷ சாவகச்சேரி வைத்தியசாலைக்கு விஜயம் செய்யும் போது, அங்கு பிரமாண்டமான மேடை போடப்பட்டு கூட்டம் நடைபெற்றது. வைத்தியசாலையினுள்ளேயே அந்த மேடை அமைக்கப்பட்டிருந்தது. அத்துடன் மஹிந்தவை மேள தாளங்கள் முழங்கவே வைத்தியசாலைக்குள் அழைத்து வந்தனர்.

சாதாரணமாக ஒரு பொதுமகன் வைத்தியசாலையின் முன்பாக 'ஹோர்ன்' எழுப்பினாலே விரட்டிப் பிடித்து தண்டப் பணம் அறவிடும் பொலிஸார் அன்று வைத்தியசாலை வளாகத்தினுள் இவ்வளவு பெரிய சத்தத்துடன் கூத்து நடைபெறும் போது மஹிந்தருக்கு சல்யூட் அடித்து வரவேற்றனர். வைத்தியசாலையில் பலதரப்பட்ட நோயாளர்கள் இருப்பார்கள். இவ்வாறான சத்தங்கள் அவர்களை நிச்சயம் பாதிக்கும். அப்படியிருக்கையில் இவ்வாறு பெரிய சத்தங்களுடன் மஹிந்தரை மட்டும் வரவேற்றது எப்படி ?

மேலும் மஹிந்த ராஜபக்ஷ, ஊடகங்களில் அன்றைய தினம் வெளியாகிருந்து செய்தி தொடர்பில் ஆராய்ந்திருந்தார். சாவகச்சேரி வைத்தியசாலைக்கு சென்ற நோயாளர்களுக்கு பனடோல் கொடுக்கப்படாமையை மட்டும் மஹிந்த ஆராய்ந்தார். ஏனைய விடயங்கள் தொடர்பில் வாய் திறக்கவில்லை. குறிப்பாக சாவகச்சேரி வைத்தியசாலையில் மஹிந்த திறந்து வைத்த கட்டடம் மூன்று மாதங்களுக்கு முன்பே அயர்லாந்து, பின்லாந்து நாட்டு செஞ்சிலுவை சங்கங்களினால் திறந்து வைக்கப்பட்டிருந்தது. அதற்கான நினைவுக் கல்லினை நீக்கி விட்டு மஹிந்தரின் படம் பொறிக்கப்பட்ட 'பனர்' அதன் மேல் கட்டப்பட்டிருந்தது. இதனையும் ஊடகங்கள் சுட்டிக் காட்டிய போதும் அது தொடர்பில் மஹிந்த வாயே திறக்கவில்லை.

இதனை விட குறித்த நிகழ்வுக்கு அயர்லாந்து செஞ்சிலுவை. சங்கம், இலங்கை செஞ்சிலுவை சங்கம் ஆகியவற்றை அழைத்திருந்தும் அவர்கள் குறித்த நிகழ்வுக்கு வரவில்லை. மஹிந்தரின் அடிவருடிகள் மேற்கொண்ட அநியாயத்திற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் மேற்படி நிகழ்வை அவர்கள் புறக்கணித்திருந்தனர். அதனால்தான் என்னவோ மஹிந்த இதனைப் பற்றி வாய் திறக்கவில்லை.

மஹிந்தவின் வருகைக்கு முன்பாகவே அவருக்கு ஆலவட்டம் எடுக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாவட்ட செயலகத்தில் ஒரு கலந்துரையாடலை நடத்தியிருந்தார். தனது கட்சி ஆதரவாளர்களையும், பிரதேச செயலர்களையும் அழைத்து மேற்படி கலந்துரையாடலை நடத்தியிருந்தார். இதன் போது யாழ். மாவட்டத்தில் விடுவிக்கப்படாத பிரதேசங்கள் தொடர்பான வரைபடத்தை தனக்கு உடனடியாக தருமாறு பிரதேச செயலர்களை அமைச்சர் கேட்டிருந்தார். அமைச்சரின் கோரிக்கைக்கு அமைய பிரதேச செயலர்களாலும் அவை வழங்கப்பட்டன. ஜனாதிபதியுடன் தான் கலந்துரையாடி விடுவிக்கப்படாத பிரதேசங்களை விடுவிப்பதற்கு நடடிவடிக்கை மேற்கொள்வதாகவும் தெரிவித்திருந்தார். ஆனால் ஜனாதி பதி யாழ்ப்பாணத்துக்கு வந்து மாவட்ட செயலகத்தில் வடமாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை நடத்தினார். அதில் இதனைப் பற்றி அமைச்சர் வாயே திறக்கவில்லை. ஜனாதிபதியும் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களை விடுவிப்பது தொடர்பிலும் எந்த அறிவிப்பும் வெளியிடவில்லை.

மொத்தத்தில் ஜனாதிபதியின் விஜயத்தால் யாழ். மக்களுக்கு எதுவித நன்மையுமில்லை. மாறாக ஜனாதிபதி விஜயம் செய்ததால் பாதுகாப்பு நடவடிக்கைகள் இறுக்கப்பட்டு மக்கள் துன்பங்களையே எதிர்கொண்டனர். இதற்குப் பேசாமல் மஹிந்தர் கொழும்பிலேயே இருந்திருக்கலாம். ★

# அவலத்தின் குறியீடாக...

ஜனநாயகன்

கடந்த முப்பது ஆண்டு கால இலங்கை வரலாற்றில் பெரும் பாலான பக்கங்கள் கண்ணீராலும் உதிரத்தாலுமே நிரப்பட் டுள்ளன. போரின் கோரப்பசி பல்லாயிரக்கணக்கான அபலை களையும் அநாதைகளையுமே உற்பவித்துச் சென்றுள்ளது.

அழுகை, ஏக்கம், விரக்தி, வேதனை, வலி, அச்சம் எனப் பல உளவியல் பெறுமானங்களைத் தமிழ் மக்களுக்கு வலுக்கட்டாயமாக அளித்துள்ளது.

அந்த வகையில் தீர்வு காணப்படாமல் தொடர்கதையாக நீளும் பல பிரச்சினைகளில் முன்னணியில் திகழ்கிறது காணாமல் போனோர் பிரச்சினை.

தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த காலப் பகுதியிலிருந்து அது எந்தவித பதிலுமின்றி மர்மமாக முற்றுப் பெற்ற காலப் பகுதி வரை இந்தப் பிரச்சினை பல்வேறு ரகங்க ளில், விதங்களில் விஸ்வரூபமெடுத்தது.

இது குறித்த குரல்கள் நாடாளுமன்றத்திலும் வெளிநாட்டு உள்நாட்டு ஊடகங்கள் மத்தியிலும் ஓங்கி ஒலித்திருந்தன. இது தொடர்பான முறைப்பாடுகள் மனித உரிமை அமைப்புகளின் பதிவு களில் பதியப்பட மட்டுமே பயன்படுத்தப்பட்டன. ஆளும் தரப்போ அல்லது எதிர்த்தரப்புகளோ இவர்களின் உறவினர்களின் கண்ணீரை விலைபேசி தமது அரசியல் இருப்புக்கான ஆதாரமாக பயன்படுத்தினார்களே தவிர உணர்வு ரீதியில் இதை பெரும்பாலானோர் அணுகவில்லை என்பதே உண்மையாகும்.

கடந்த காலங்களில் பல இளைஞர்கள், யுவதிகள் பல சந்தர்ப்பங்களில் காணாமல் போயினர். போர் ஆரம்பமாகி பல்வேறு இயக்கங்கள் துளிர்விட்ட காலப்பகுதியில் பல அப்பாவி இளைஞர்கள், யுவதிகள் காணாமல் போகச் செய்யப்பட்டனர். குறிப்பாகத் தொழில்தேடி தென்னிலங்கை சென்ற பல தமிழ் இளைஞர்கள் விடுதிகளில் வைத்தும் அவர்கள் சென்ற வீதிகளில் வைத்தும் அவர்களின் வேலைத்தளங்களில் வைத்தும் பயங் கரவாதிகளாகவும் புலிச் சந்தேகநபர்கள் என்றும் பட்டங்கள் வழங்கப்பட்டு கைது செய்யப்பட்டு காணாமல் போகச் செய்யப் பட்டனர்.

இவர்களில் பலர் செம்மணி போன்ற புதைகுழிக்குள்ளும் மேலும் பலர் இன்னும் முகவரியே தெரியாத சிறைகளுக் குள்ளும் தள்ளப்பட்டனர்.

இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் உள்ளடக்கப்பட்ட 18 அடிப்படை உரிமைகளில் "காரணமின்றி அல்லது ஏதேச்சையாக கைது செய்யப்படாமல் இருக்கும் உரிமை" ஒவ்வொரு குடிமகனுக்கும் இருந்த போதிலும் போர்க் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட அவசரகாலச்சட்டம், பயங்கரவாதச் சட்டம் என்பன காரணமின்றிக் கைது செய்வதற்கும் எந்த இடத்திலும் எவ்வளவு காலமும் விசாரணை இன்றி தடுத்து வைப்பதற்கான சட்டரீதியான அங்கீகாரத்தை ஆயுதப்படைகளுக்குத் தாராளமாக வழங்கியது. இந்தச் சட்டங்கள் அரசின் முக்கிய வகைப் பாடான "இறைமையை" பாதுகாத்ததா என்பதற்கு அப்பால், அப் பாவித் தமிழ் இளைஞர்களைக் காரணமின்றிக் கைது செய்யவும் விசாரணையின்றி தடுத்து வைக்கவும் வழியேற்படுத்திக் கொடுத்தது.

இலங்கையில் நிலுவையில் உள்ள மனித உரிமைச் சட்டங்களின் பிரகாரம் ஒரு சந்தேகநபர் கைது செய்யப்படுவாராக இருந்தால் அவர் கைது செய்யப்படுவதற்கான காரணம் அவர்களின் உறவினர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டு அது தொடர்பான பற்றுச் சீட்டு வழங்கப்படவேண்டும். ஆனால் பயங்கரவாத, அவசர கால சட்டவிதிகள் அவற்றுக்கு விலக்களித்திருந்தன. இதனால் காணாமல்போனோர் பட்டியலில் பல இளைஞர்கள் யுவதிகள் இணைக்கப்படுவதற்கு வழியேற்படுத்திக் கொடுத்தன.

அத்தோடு சந்தேகம் என்ற பெயரிலும் சுற்றி வளைப்புகள், தேடுதல்கள் என்ற பெயரிலும் நடத்தப்பட்டு கைது செய்யப்பட்ட சில இளைஞர்கள் இன்றும் காணாமல் போனவர்களாகவே உள்ளனர். அத்தோடு சமாதான ஒப்பந்த காலம் முடிவடைந்து யாழ்ப்பாணம் திறந்த வெளிச்சிறைச்சாலையாக மாற்றப்பட்ட காலத்தில் வெள்ளைவான் மற்றும் பல்வேறு ஆயுதக் குழுக்களின் கடத்தல்கள் அதிகமாக இடம்பெற்றன. இறுதியாகப் போர் இடம்பெற்ற வன்னிப் பிராந்தியத்தின் வட்டுவாகலில் வைத்து உறவினர்களிடம் கையளிக்கப்பட்ட பல இளைஞர்கள் என்ன ஆனார்கள் என்பது அவர்களின் உறவு களுக்கு கூட தெரியாத புதிராக உள்ளது.

குறித்த உறவுகள் கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவுக்குச் சென்ற அமெரிக்க பூகோள குற்றவியல் இராஜதந்திரியிடம் தமது உறவுகளின் புகைப்படங்களை காட்டி கண்ணீர் விட்டு கதறி அழுது தமது சோகக் கதைகளை கூறினர்.

இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் பல இடங்களில் கைது செய்யப்பட்டு அல்லது விசாரணை என்ற பெயரில் கொண்டு செல்லப்பட்ட பலரின் நிலை இன்றும் புரியாத புதிராகவே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் உறவுகள் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் வெளி நாட்டு இராஜதந்திரிகைகளின் முன் கதறி அழுத போதும் இன்று வரை அவர்களின் அழுகைக்கான தீர்வுகள் பெற்றுக் கொடுக் கப்படவில்லை. பல குடும்பங்கள் காணாமல் போனவர்கள் மீண் டும் வருவார் என்ற எதிர்பார்ப்பில் வறுமையின் பிடியில் சிக்கி வாழ்ந்து வருகின்றனர். சில பெண்கள் தமது கைக்குழந்தைகளுடன் எங்கா வது ஒரு சிறையில் தனது கணவன் தடுத்து வைக்கப்பட்டி ருப்பார் என்ற எதிர்பார்ப்பில் ஒவ்வொரு சிறைச்சாலைகளது படிகளிலும் ஏறி ஏறி களைத்து நிர்கதியாகி நிற்கின்றனர்.

"காணாமல் போனோர்" பிரச்சினை தொடர்பாக ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ள யாழ்ப்பாணம் வருபவர்கள் மீது இனந்தெரியாதோரின் தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளமை கடந்த காலப் பதிவாகும்.

யாழ்ப்பாணம் வருகை தரும் வெளிநாட்டு அமைப்புக்களின் பிரதிநிதிகள் தொடக்கம் ஐக்கிய நாடுகள் சபையின் இராஜதந்திரிகள் வரை காணாமல் போனோரின் கதை பற்றிக் கேட்கத் தவறுவதில்லை. அந்த வகையில் கடந்த வாரம் யாழ்ப்பாணம் வருகை தந்த அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தில் பூகோள குற்றவியல் நீதி விசாரணைக்கான தூதுவர் ஸ்ரீபன்ராப் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருடன் இடம்பெற்ற சந்திப்பில் காணாமல் போனோர் பிரச்சினையையே முக்கியத்துவப்படுத்தி விசாரித்திருந்தார் என்பது இதை ஆதாரப்படுத்துகின்றது.

மனித உரிமைகள் கண்காணிப்பகம் தொடக்கம் ஐ.நாவின் மனித உரிமை அமைப்புகளின் பதிவுகளிலும் காணாமல் போனோர் பிரச்சினையே அதிகமுள்ளது. இந்த நிறுவனங்களும் காணாமல் போனோர் பற்றிய புள்ளி விவரங்களைச் சரிபார்ப்பதே தமது ஒரே பணியெனக் கருதி செயற்பட்டு வருகின்றனர். இந்தப் பிரச்சினையை ஒரு முக்கிய பிரச்சினையாக காட்டி அதனை சர்வதேசத்தின் காதுகளுக்குள் தள்ள இவர்கள் எவ்வளவு தூரம் அக்கறை எடுத்தார்கள் என்பது கேள்விக்குறியே.

மொத்தத்தில் இந்தப் பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கையை அரசும் மனித உரிமை அமைப்புகளும் எடுக்காத பட்சத்தில் இலங்கை அவலத்தின் குறியீடாக துன்பத்தின் அடையாளமாக அழுகை குரல்களின் இருப்பிடமாக இருப்பதை எவராலும் மாற்றிவிடமுடியாது. ★

# தட்டிக் கழிக்கப்படும் உள்ளூர் அபிவிருத்தி

■ சங்கர்

யுத்தம் முடிவுக்கு வந்து மூன்றாண்டுகள் ஆகின்றன. சமூகமட்ட அமைப்புக்கள் ஏன் இன்னமும் வினைத்திறனான முறையில் இயங்க ஆரம்பிக்கவில்லை என்பது விடைகாணாத வினாவாகவே உள்ளது.

கிராம மக்களின் தேவைகள், பிரச்சினைகள்,எதிர்பார்ப்புக்கள், அபிப்பிராயங்கள் போன்றவற்றைச் சமூகமட்ட அமைப்புக்கள் மூலமே இலகுவாகவும் துல்லியமாகவும் வெளிப்படுத்த முடியும்.

அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுப்பதற்காக மக்களின் தேவைகள் மக்களைக் கொண்டே இனங்காணப்பட வேண்டும்.

அபிவிருத்திக்காக நிதி வழங்கும் அமைப்புக்கள் இதனை வலியுறுத்தி வருகின்றன.

இந்த நிலையில், மக்களின் பங்குபற்றலை உறுதிப்படுத்தும் சமூகமட்ட அமைப்புக்களின் செயற்பாடுகளை முன்னெடுக்கத் தடையாகவுள்ள அல்லது சவாலாகவுள்ள பிரச்சினைதான் என்ன?

சமூகமட்ட அமைப்புக்கள் சிறப்பாக இயங்குவது என்பதனை இரண்டு வழிகளில் நோக்கமுடியும்.

ஒன்று, கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்று கூறுவதைப் போல் மக்கள் தனித்து செயற்படுவதை விடுத்து கூட்டாக இணைந்து செயற்படுவதனால் கிடைக்கும் பலாபலன்களை மக்கள் உணர வேண்டும். அவ்வாறு உணர்ந்து செயற்பட மக்கள் முன்வராத நிலைமை தான் இன்று உள்ளது. அத்துடன் அவ்வாறான ஒரு கூட்டை ஏற்படுத்தச் சமூக அமைப்புகளும் முன்வருவதில்லை.

இரண்டாவது, சமூகமட்டத்தில் அமைப்புக்களை இயங்க வைப்பதற்கு அரச அதிகாரிகளின் பங்கு அவசியமானது. இந்த விடயத்தில் அரச அதிகாரிகள் சிலர் ஆர்வ



மற்று இருக்கின்றனர் என்பது மிகத் தெளிவாகப் புலப்படுகிறது.

இந்த இரண்டு அடிப்படையிலும் வடக்கில் 90 வீதமான சமூகமட்ட அமைப்புகள் உரியமுறையில் இயங்கவில்லை என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

சனசமூக நிலையங்கள் கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், விளையாட்டுக்கழகம், விவசாய சம்மேளனம் உள்ளிட்ட சமூகமட்ட அமைப்புக்கள் வினைத்திறனாக இயங்குவது அவசியமானது.

கிராமத்திலுள்ள மக்களை உள்வாங்கி அந்த மக்களால் நிர்வகிக்கப்படும் இந்த அமைப்புகள் சிறப்பாக இயங்குமாயின் கிராம மக்களது தேவைகளைத் துல்லியமாகவும் இலகுவாகவும் இனங்காண முடியும். சிறப்பாக இயங்கும் அமைப்புக்கள் உள்ள கிராமங்கள் ஓரளவாவது முன்னேறியிருப்பதையும் அவதானிக்க முடியும்.

ஆனால், வடபகுதியிலுள்ள சமூகமட்ட அமைப்புக்கள் பல, நிர்வாகத் தெரிவுக்காக மட்டும் கூடுகின்றனவே தவிர, கிராமத்தின் தேவைக்காகக் கூடுவதாகத் தெரியவில்லை.

சமூகமட்ட அமைப்புக்கள் இயங்குவதானது அரச அதிகாரிகள் தமது பணிகளை முன்னெடுப்பதற்கு இலகுவாக இருக்கும்.

இந்த அமைப்புகள் வினைத்திறனாக இயங்குவது சிலவேளைகளில் அரச அதிகாரிகளுக்குத் தலையிடி ஏற்படுத்துவதாக இருக்கும் எனக் கருதியே அரச அதிகாரிகள், இந்த அமைப்புகளை இயங்கச் செய்வதில் ஆர்வம் காட்டுவதில்லை என்ற கருத்தும் நிலவுகிறது.

குறிப்பாக கிராம அலுவலர்கள் சமூகமட்ட அமைப்புகளை சிறப்பாக இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் கிராமமட்டத்துக்குப் பொறுப்பு வாய்ந்த அரச அதிகாரிகள்.

சமூகமட்ட அமைப்புக்களை இயங்கச் செய்யவேண்டிய பொறுப்பு கிராம அலுவலருக்கு மட்டுமன்றி பிரதேச செயலகத் திட்டமிடல் அதிகாரிகள் துறைசார் அதிகாரிகளுக்கும் உள்ளது.

கிராமங்களின் அபிவிருத்திக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் சமூகமட்ட அமைப்புகளை வினைத்திறனாக இயங்கச் செய்ய வேண்டியது அவசியம்.

அவற்றை இயங்கச் செய்யும் பொறுப்பைத் தட்டிக்கழிக்காது தெளிவாகச் செய்வார்களா?

# யார் பாதுகாவலர்...?

■ சோபனா

"திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது...' என்ற சினிமாப் பாடல் தான் சற்று நினைவுக்கு வருகிறது. திருட நினைப்பவன் எந்த வழியாக இருந்தாலும் சரி, எந்த இடமாக இருந்தாலும் சரி, தனது கைவரிசையைக் காட்டத்தான் செய்வான். ஏனென்றால் திருடுவது அவனது கடமைகளில் ஒன்றாக அவனுடன் ஊறி விட்டது.திருடன் என்றவுடன் கடந்த வாரம் இடம்பெற்ற ஓர் சம்பவம் நினைவுக்கு வருகிறது.

தனியார் பேரூந்துகள் சன நெரிசலுடன் சென்றாலும், வேகமாகத்தான் செல்ல வேண்டிய இடத்துக்குச் செல்ல தனியார் பஸ்கள் தான் பொதுமக்களுக்குக் கைகொடுக்கின்றன.

ஏனென்றால் இலங்கைக் போக்குவரத்துப் பேரூந்துகளுக்கு அடிக்கடி சுகயீனம் வந்துவிடும். அது சிகிச்சைபெற்று மீள வரும்வரை செல்லவேண்டிய இடத்துக்கு எப்போது போவது? எப்போது வருவது?

இதனால் அதிகமானவர்கள் தமது பயணத் தேவைக்காகத் தஞ்சமடைந்து இருப்பது தனியார் பஸ்களிடம்தான். தனியார் பஸ்களுக்கு இதனால் அதிகூடிய இலாபம் என்றாலும், பாதிப்படைவது பொதுமக்கள் தான்.

சனநெரிசல் ஒருபுறம் இருக்க, தற்போது ஓர் சீசனாகவே திருட்டு ஆரம்பித்துள்ளது. வீடுகள், வீதிகள் என எங்கிருந்தாலும் துரத்திப் பிடித்துப் பறிப்பதைப் பறித்து விட்டு பஞ்சாகப் பறந்துபோய் விடும் திருடர்கள் கூட்டம், தனியார் பஸ்களை விட்டா வைக்கப்போகிறார்கள்?

தனியார் பஸ்கள் எந்தளவுக்கு நெரிசலாக, பொதுமக்களை அடைத்துக் கொண்டு போகும் என்பது தெரியாதா என்ன? இதுதான் சந்தர்ப்பம் எனத் தொடங்கி விட்டார்கள் அவர்களும்.

கடந்தவாரம், பஸ்ஸில் வழமையைப் போல், நின்றால் திரும்ப முடியாத அளவுக்கு நெரிசல். கிழங்கை வரிசையில் அடுக்குவதைப் போல்தான். ஆண், பெண் வேறுபாடின்றி நடத்துனர் எந்தளவுக்கு அந்த பஸ்ஸில் ஆள்களை ஏற்ற முடியுமோ அந்தளவுக்கு ஏற்றிக்கொண்டு பஸ் புறப்படத்தொடங்கியது யாழ்.பஸ் தரிப்பிடத்திலிருந்து.

இந்த நிலையில் காதைப்பிளக்கும் பாட்டுச் சத்தம்வேறு. பஸ் மூன்றாவது தரிப்பிடத்தையும் தாண்டி நகர்ந்து கொண்டிருந்தது.

திடீரென ஓர் இளம்பெண் தனது தங்கச் சங்கிலியைக் காணவில்லை என்று ஆரவாரப்பட்டார். அருகில் இருப்பவர்கள் சற்றுப் பயத்துடன் நின்றனர். அந்த இளம் பெண்ணின் குரல் நடத்துனருக்கோ, சாரதிக்கோ கேட்கவில்லை. அந்தளவுக்கு பாட்டுச் சத்தம்.

நான்காவது பஸ் தரிப்பிடமும் தாண்டும்போதுதான், நடத்துனரிடம் அருகில் இருந்தவர்கள் எடுத்து கூறினார்கள்.

அந்தப் பெண் தான் நின்ற இடம் சுற்றும் முற்றும் பரபரப்புடன் தேடினார் எங்கே சங்கிலி கிடைத்ததா?

பஸ்ஸில் நின்றவர்கள் ஏதோ மனிதாபிமானத்துடன் பஸ்ஸை "பொலிஸ் ஸ்ரேசன்" விடுங்கோ? என்று குரல் கொடுத்தார்கள். பஸ் அடுத்த 10 நிமிடங்களில் அருகில் இருந்த பொலிஸ் நிலையத்துக்குச் சென்றது பஸ்.

மோப்பநாய் மட்டும் பயன்படுத்தவில்லை. ஆண்கள் வேறு, பெண்கள் வேறு, பஸ் வேறு என பார்த்து பயணிகள் நிறுத்தப்பட்டனர். ஏதோ கண்டுபிடித்து விடுவோம் என்றதுபோல் அங்கிருந்த நான்கைந்து பொலிஸார் தேடுதல் வேட்டையில் இறங்கினர்.

கிடைக்கும் என்ற பெண்ணின் நப்பாசை விடவில்லை. கண்ணீரும் நிற்கவில்லை. இரண்டு மணித்தியாலங்கள் பஸ்சுக்குள் நின்ற பயணிகளினதும், பஸ் நடத்துனர்களினதும் உழைப்பும் வீணாகிப் போனதுதான் மிச்சம்.

எமது பொருட்களுக்கு நாமேதான் பொறுப்பாளி. எதிலும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். அவதானம்



இல்லாமையால் தான் திருடனுக்குச் சாதகமாக சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறோம்.

சனநெரிசலான பேரூந்துகளில் ஏறாமல் தவிர்க்க வேண்டும். இல்லை அதில் ஏறிவிட்டால் எமது பொருள்களை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

கடந்தவாரம் மட்டும் இந்தச் சம்பவம் இடம்பெறவில்லை. தினமும் ஒவ்வொரு வழிப் பேரூந்துகளிலும் இதுதான் நடக்கிறது. இவற்றில் ஒருசிலதான் வெளியே வருகின்றன.

பஸ்ஸில் ஏறும் போதும் சரி இறங்கும் போதும் சரி நாம் கொண்டு சென்றவை யாவும் இருக்கின்றதா என்பதை அவதானிக்க வேண்டும். முடிந்தவரை நாம் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். வியர்வை சிந்தி உழைத்துத் தேடிய பொருளை ஒரு நொடியில் திருடனுக்கு இனாமாகக் கொடுக்கும்போது மனம் எவ்வாறு வேதனை அடையும். வெறும் ஏமாற்றம் தான் மிஞ்சும். பஸ்களில் இடம்பெறும் திருட்டுக்களை நடத்து னரோ சாரதியோ எவ்வாறு தடுக்க முடியும். இதைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள் திருடனுக்கு பஸ்ஸிசில் சன நெரிசல் ஓர் சாதகமாக இருக்கும். அத்துடன் எம் நடத்தையும் அவனுக்கு குறித்த நபரைப் பின் தொடர்ந்தால் இவரை இலகுவாக ஏமாற்ற முடியும் என்ற சிந்தனை ஏற்படும். இதனால் அவனும் பஸ்ஸில் ஏறுகின்றான்.

சந்தர்ப்பமோ, வறுமையோ அவரைத் திருடனாக மாற்றினாலும் அவரைத் திருட வைப்பதற்கு நாமும் ஓர் காரணமாக உள்ளோம். கொஞ்சம் சிந்திப்போம். நடத்துனரோ, சாரதியோ விழிப்படைகிறார்களோ இல்லையோ நீங்கள் விழிப்பாய் இருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயம் கிடைக்குமா?

## ஏங்கும் விவசாயிகள்

■ வீ.கே.எம்



''ராமு, என் ராசவன்னா குடிச்சுடு வாய், எங்கே நான் கண்ணை மூடிக் கொள்கிறேன். குடிச்சிடு பார்க்கலாம்.''
''நாளைக்குப் பாற்கஞ்சி...''

''சும்மா போம்மா. நாளைக்கு நாளைக்கென்று எத்தனை நாளா ஏச்சுப்பட்டாய். என்னதான் சொல்லேன். கூழ் குடிக்க மாட்டேம்மா.''

''இன்னும் எத்தனை நாள் பஞ்ச மடா? வயலிலே நெல் முத்தி விளைஞ்சு வருது. ஒனக்கு வேணாம்னா பாற்கஞ்சி தாரனே''

முருகேசனின் கனவு மழையோடு கரைந்துபோக ராமு ஏதுமறியாதவனாய் தன் விருப்பத்தையே கேட்டுக்கொண்டு இருந்தான்.

''அநேகநாள் பழக்கத்தினாலே நாளைக்கு என்று மட்டுமே அவளால் சொல்லமுடிந்தது. அந்த அரைகுறை யான வார்த்தை முருகேசன் வயிற்றில் நெருப்பை அள்ளிக்கொட்டியது.''

> ''ப.நோ.கூ. சங்கம் இதுவரை காலமும் எங்களிடம் நெல்லைக் கொள்வனவு செய்தது. எப்படியென்றால் விவசாய அங்கத்தவர் ஒருவரிடமிருந்து ஒரு குறிப்பிட்ட தொகை நெல்மூடைகள் என்ற அடிப் படையில் (மிகச் சொற்ப அளவே) தான். அதற்கும் நீண்டநாள் காத்திருக்க வேண்டும். நெல்லைக் கொடுத்துவிட்டால் அதற்கான பணத்தைப் பெறுவ தற்கு நீண்டநாள் அலைய வேண்டும்.

ஒரு ஏழை விவசாயக் குடும்பத்தின் வாழ்வைச் சித்தரிக்கும் இந்தச் சிறுகதை ஈழத்தில் உருவான ஒரு அற்புத படைப்பு. சி.வைத்திலிங்கத்தின் எண்ணங்கள் இளையோடிய இந்தச் சிறுகதை எல்லோர் மனதிலும் பொறிபோலத் தைப்பது தவிர்க்க முடியாதது.

ஒரு ஏழை விவசாயியின் கனவுகளையும் ஆசைகளையும் எதிர்பார்ப்புக்களையும் கொண்டுசெல்லும் இந்தக் கதையில் ராமு என்ற சிறுவனின் பாத்திரப் படைப்பும் அவனது ஏக்கமும் உணர்ச்சிபூர்வமானது.

இன்று இப்படித்தான் பல விவசாயக் குடும்பங்கள் தங்கள் வாழ்க்கையை ஏக்கத்துடன் கழிக்கின்றனர். அவர்களது ஆசைகளும் கனவுகளும் எதிர்பார்ப்புக்களும் ஏதோ ஒரு கெடுதல்களால் நெருப்பில் பொசுங்குவதுபோல மாறிவிடுகின்றன.

நவநாகரீகம் வளர்ந்துவிட்ட இன்று விவசாயத்தைத் தமது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள குடும்பங்களுக்கு நெருக்கடியே தோன்றியுள்ளது. அவர்கள் ஏனைய வாழ்க்கைத் தேவைகளுக்காக ஒவ்வொருநாளும் போராட வேண்டியவர்களாகவே மாறியுள்ளனர்.

கிளிநொச்சியில் ஒரு விவசாய குடும்பஸ்தர் தனது நாளாந்த வாழ்க்கையைப் பூர்த்தியாக்குவதற்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளையும் எதிர்நோக்கும் சவால்களையும் விவரிக்கும்போது, ஈழத்து எழுத்தாளர் சி.வைத்திலிங்கம் படைத்த ''பாற்கஞ்சி'' படைப்பு ஞாபகத்துக்கு வருவது தவிர்க்கமுடியாமல் போயிருந்தது.

கிளிநொச்சியில் காலபோக நெற்செய்கைக்கான அறுவடை முடிவுற்றதும் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்யப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவித்திருக்கிறார்.

ஏழை விவசாயிகளுக்கு இது பெரும் உதவியாக இருக்கும். இருப்பதற்கு, உறங்குவதற்கு, விருந்தாளி வந்தால் உபசரிப்பதற்கு ஒரு உருப்படியான வீடற்ற விவசாயிகளுக்கு தாம் அறுவடை செய்யும் நெல்லை நியாயமான விலைக்குச் சந்தைப்படுத்த முடியும் என்ற செய்தி அடுத்த ஆண்டில் அவர்களின் முயற்சியை இரட்டிப்பாக்கும் என்பது உண்மைதான். ஆனால், கடந்த காலங்களில் இப்படியான நெல் கொள்வனவு எந்தளவுக்கு நடைபெற்றது என்பதை அந்த ஏழை விவசாயி புரட்டியபோது அந்தக் கனவுகளெல்லாம் அவர்களிடத்திலிருந்து சட்டென்றே கலைந்துபோவதாகத் தென்பட்டது.

''இந்த ஆண்டுக்கான பெரும்போக நெற்செய்கைமூலம் கிடைக்கும் நெல்லை விவசாயிகளிடமிருந்து தீர்மானிக்கப்பட்ட விலையில் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக திறைசேரியிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். இதன்மூலம் விவசாயிகள் கடந்த வருடம் காலபோக நெற்செய்கையின்போது நிர்ணயிக்கப்பட்ட விலைப்படி நெல்லைச் சந்தைப்படுத்த முடியும். இதுதான் அந்த மகிழ்ச்சிகரமான செய்தி.

கடந்தவருட காலபோக நெற்செய்கையின்போது சிவப்புநாடு ஒரு கிலோ 28 ரூபாவும் சம்பா 32 ரூபாவும் விலை நிர்ணயிக்கப்பட்டது. இதன்படி நெல் கொள்வனவு இடம்பெற்றால் விவசாயிகளுக்கு மூடை ஒன்றுக்கு 1,680 ரூபா கிடைக்கும். சம்பாவுக்கு 1,920 ரூபா கிடைக்கும். தனியார் இவற்றைவிட கூடுதல் விலை கொடுத்துக் கொள்வனவு செய்தால் விவசாயிகள் தமது உற்பத்தியை நல்ல வகையில் சந்தைப்படுத்தலாம். ஆனால் ''தவிச்ச முயல் அடிக்கும்'' தனியார் துறையினர் நிர்ணயிக்கப்பட்ட விலையிலிருந்து மிகக் குறைவான விலையிலேயே கொள்வனவு செய்ய முன்வருகின்றனர்.

நாளாந்த வாழ்க்கையுடன் போராடும் விவசாயிகள் தம்மிடம் இருக்கக்கூடிய பெறுமதி வாய்ந்த ஏதோ ஒரு பொருளை அடகு வைத்தோ அல்லது ஒரு நம்பிக்கையானவரிடம் கடன் பெற்றோ விவசாயத்தை மேற்கொள்கின்றன[illegible] டித் தேவையாக [illegible] வதோ அல்லது கடனைச் செலுத்துவதோதான். அதற்காக அறுவடை செய்த நெல்லை உடனடியாக விற்றே ஆகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. மாறாக வீட்டில் நெல்லைப் பராமரிப்பதற்கு களஞ்சிய வசதிகூட அவர்களிடம் இல்லை. இதனாலும் அகப்படும் விலையில் நெல்லை விற்கவேண்டியுள்ளது.

அந்த ஏழை விவசாயி குறிப்பிடுவதும் இதுதான்.

ப.நோ.கூ. சங்கம் இதுவரை காலமும் எங்களிடம் நெல்லைக் கொள்வனவு செய்தது. எப்படியென்றால் விவசாய அங்கத்தவர் ஒருவரிடமிருந்து ஒரு குறிப்பிட்ட தொகை நெல்மூடைகள் என்ற அடிப்படையில் (மிகச் சொற்ப அளவே) தான். அதற்கும் நீண்டநாள் காத்திருக்க வேண்டும். நெல்லைக் கொடுத்துவிட்டால் அதற்கான பணத்தைப் பெறுவதற்கு நீண்டநாள் அலைய வேண்டும். மிகுதி நெல்லை வேறு யாருக்காவது அவர்கள் கேட்கும் விலையில்தான் கொடுக்க வேண்டும். இப்படி இழுபறிப் படுவதைவிட ஐஞ்சு பத்து நட்டம் வந்தாலும் யாருக்காவது முழுவதையும் கொடுத்து காசு கையில் கிடைத்தால் அதுதான் எமக்கு உதவியாக இருக்கும். நியாய விலையில் நெல்லைக் கொள்வனவு செய்ய சங்கங்கள் முன்வந்தால் மட்டும் போதாது. எங்களது தேவைகளையும் கஷ்டங்களையும் உணர்ந்து அதற்கேற்ற வகையில் செயற்பட்டால் அதுதான் எங்களுக்கு உதவியாக இருக்கும். அப்போதுதான் அவர்கள் கேட்டதைப்போல் நாங்கள் ஒத்துழைப்பு வழங்கமுடியும். கடன் தொல்லையாலும் அன்றாட வாழ்க்கைக்காகவும் எப்படியோ நெல்லை விற்றாக வேண்டிய தேவை எமக்கு இருக்கிறது. இதற்கு தகுந்தாற்போல் ஒரு நல்ல தீர்வை எங்களுக்கு [illegible] இப்போதைக்குப் [illegible] என்கிறார் அந்த ஏழை விவசாயி.

உண்மையில் வன்னியில் பெரும்பாலான இடங்களில் மக்கள் மீள்குடியேற்றப்பட்டாலும் அவர்களுக்கான அடிப்படை வசதிகள் இன்றுவரை முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை. பெரும்பாலான இடங்களில் மக்கள் இன்றும் குடிசைகளிலேயே தங்கியுள்ளனர். இவர்களது தேவைகள், எதிர்பார்ப்புக்கள் பூரணப்படுத்தப்படாது அரசின் அபிவிருத்திகளை அரசியல் போக்கில் செல்கிறது.

இந்த நிலையில் விவசாயத்தையே வாழ்வாதாரமாக நம்பியிருக்கக் கூடியவர்கள் தங்கள் உற்பத்தியை நியாயமான விலையில் சந்தைப்படுத்துவதற்கு பக்கபலமான ஒரு வழியையே எதிர்பார்க்கின்றனர். பெயரளவில், பகுதியளவில் அவர்கள் தங்கள் உழைப்பின் ஊதியத்தை எதிர்பார்க்கவில்லை. இதற்கேற்பவே செயல் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

வன்னியிலும் முருகேசனைப் போலவும் காமாட்சியைப் போலவும் ராமுவைப் போலவும் பலர் வாழ்கின்றனர். இவர்களது ஆசைகளும் எண்ணங்களும் கற்பனைகளும் தினமும் சிதைந்து போகின்றன. முருகேசனது கனவுகளை ஒரு மழை அழித்துச் சென்றது. அது முருகேசனின் கனவு மட்டுமல்ல. ராமுவின் பால்கஞ்சி என்ற அவாவையும் அடியோடு அழித்து விட்டிருந்தது. இதுபோல வன்னியில் இப்போது மழை மேகங்கள் சூழ்ந்திருப்பது பல விவசாயக் குடும்பங்களின் கனவுகளுக்கு அதிர்ச்சியைக் கொடுப்பதாகவே இருக்கின்றது. இயற்கையின் நியதிகளை மனிதனால் வெல்லமுடியாத போதும் மனிதனது ஆசைகளையும் தேவைகளையும் உரிமைகளையும் இன்னொரு மனிதனால் புரிந்துகொள்ள முடியும். இந்த அடிப்படையில் ஏழை விவசாயிகளின் எதிர்கால வாழ்வுக்குப் பொருத்தமான அபிவிருத்தி நோக்கிலான திட்டமொன்று கட்டாயமாகின்றது. பெயரளவிலோ சொல்லளவிலோ சில காரியங்களை அறிவிப்பதை விடுத்து மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ற பூரணம் அடையக்கூடிய திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டியதுமே இப்போதைய தேவையாக உள்ளது.

அரச அதிபரின் அறிவிப்பு வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் ப.நோ.கூ. சங்கங்கள் முழு அளவில் விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லைக் கொள்வனவு செய்யுமா என்பது அவர்களிடத்திலே கேள்வியாக மாறியுள்ளதால் உண்மையான கரிசனையுடன் இந்த அறிவிப்பைச் செயற்படுத்த வேண்டியது தார்மீகப் பொறுப்பாக உள்ளது. இதுவே ஏழை விவசாயிகளின் கனவுக்கு நல்லதொரு விடையாக அமையும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ தென்னவன்

# பிடுங்கியவரை இலாபம்

பதின்ம வயது பாலியல் வன்புணர்வுகள், இளவயது கர்ப்பங்கள் போன்றவற்றுடன் அடாவடித்தனங்கள், அக்கிரமச் செயற்பாடுகள், சட்டவிரோத நடவடிக்கைகள் என்றும் இல்லாதவாறு குடாநாட்டைக் கலக்கிக் கொண்டிருக்கின்றன.

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் சம்பவங் கள், குடாநாட்டிலிருந்து நீண்டகாலமாக இல்லாதொழிக்கப்பட்டவை. எனினும் இவை மீண்டும் தலை தூக்கி வருகின்றமை மக்களை அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் உள்ளாக்கி வருகிறது.

தினசரி பத்திரிகைகளில் பிரசுரமாகும் செய்திகள், ஒவ்வொருவரையும் கலங்க வைக்கும் அளவுக்கு காணப்படுகின்றன. இடம்பெறும் ஒவ்வொரு சம்பவங்களும் பணம் இருந்தால் எது செய்தாலும் தப்பி விடலாம் என்ற எண்ணம் இருப்பதே காரணம் என்பதனை தெளிவாகக் காட்டுகிறது.

பதின்ம வயதுப் பாலியல் வன்புணர்வுகள், இளவயது கர்ப்பங்கள் போன்றவற்றுடன் அடாவடித்தனங்கள், அக்கிரமச் செயற்பாடுகள், சட்டவிரோத நடவடிக்கைகள் என்பவை என்றும் இல்லாதவாறு குடாநாட்டைக் கலக்கிக் கொண்டிருக்கின்றன.

நீண்டகாலமாகக் கட்டுப்பாட்டிலிருந்த இவ்வாறான செயற்பாடுகள் மீண்டும் தலைதூக்கி, குடாநாட்டையே அழிவுப் பாதைக்கு இழுத்துச் செல்லும் நிலை தொடர்கிறது.

இடம்பெயர்ந்து பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் சொந்த இடத்துக்கு மீளக் குடியமரப் போதிய வசதியில்லாமல் இன்னொரு இடத்தில் குடியிருக்க போர் ஒருபுறம், குடியிருப்பு இல்லாத காணி என அங்கிருக்கும் பொருள்களுடன் வேலி மரங்களைக் கூட வெட்டிச் செல்லும் குழுக்கள் ஒரு புறம், பாதுகாக்கவேண்டிய பக்கத்து வீட்டுக்காரரின் சொத்தை அபகரிப்பதுடன் அவர்கள் து காணியில் உள்ள மணலை வாகனத் தில் ஏற்றிச் சென்று விற்று பணம் உழைக்கும் கும்பல் மற்றொருபுறம்.

இவ்வாறான குற்றச் செயல்களை இடம்பெறாமல் தடுக்க முயல்வோர் மீது, ஆயுதங்களைக் காட்டி பயமுறுத்தப்படும் சம்பவங்கள் எத்தனை எத்தனை.

குடாநாட்டில் இடம்பெயராத பகுதியே இல்லையெனக் கூறும் அளவுக்கு அனைவரும் தமது சொந்த இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்து ஊர் ஊராக அலைந்து வரும் நிலையில், கொஞ்சம் கொஞ்சமாக வெடிபொருள்கள் அகற்றப்பட்ட பின்னர் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

ஒவ்வொரு பிரதேசத்திலும், கிராம அலுவலர் பிரிவு ரீதியாக மீளக் குடியமர அனுமதிக்கப்படும் வேளைகளில், ஒரு சிலர் வசதியீனம் காரணமாக உடனடியாகத் தமது இருப்பிடங்களுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படுகிறது.

மீளக் குடியமர்த்தப்படும் இடங்கள் பலத்த பாதிப்புக்களுக்கு உள்ளாகியே காணப்படுகின்றன. தனது காணியில் குடியிருப்பில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைச் சேதங்களைப் பார்த்து கண்ணீர் விட்டு அழுகின்றனர். ஆனால், அயல் வீட்டுக்காரனை நேசிக்கும் தன்மையை மறந்து அயல் வீட்டுக்காரனும் பாதிக்கப்பட்டுள்ளான் என்ற சிந்தனையின்றி அந்த வளவின் குடியிருப்பில் எஞ்சியுள்ளதைப் பிடுங்கிக்கொண்டு வந்து தான் வைத்துக்கொள்வது பல இடங்களில் நடைபெறத்தான் செய்கிறது. சட்ட விரோத செயற்பாடுகளும், என்றும் இல்லாத அளவுக்கு பூதாகரமாக உருவெடுத்துள்ளது.

கசிப்பு உற்பத்தி, மணல் அகழ்வு, மரம் கடத்தல், திருட்டு, ஆள்களைக் கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகள் குடாநாட்டில் மலிந்து காணப்படுகின்றன.

சட்டவிரோத செயற்பாடுகள் உருவாக்கத்துக்கு யார் காரணம் எனக் கண்டறிவது மிக மிக அவசியம். நீதித்துறை தனது பணிகளைச் சரிவரச் செய்கின்ற போதிலும் ஒரு செயற்பாட்டை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியாமல் உள்ளது.

சட்டவிரோத செயற்பாட்டுக்காக ஒரு லட்சம் ரூபா அபராதத்தை நீதிமன்றில் செலுத்தும் ஒருவர் வேறொரு நாள் மீண்டும் அதே செயற்பாட்டை மேற்கொண்டதாக நீதிமன்றில் நிறுத்தப்படுகிறார்கள்.

சட்டவிரோத செயற்பாடுகளை ஊக்குவிக்கவென ஒரு சாரார் இயங்குவதாலேயே இவற்றைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. இந்தச் செயற்பாடுகளை செய்பவர்களைக் கண்டிப்பதை விட இவற்றை செய்ய ஊக்குவித்துச் சுளையாகப் பணம் கொடுப்போரை இனம்கண்டு அவர்களுக்கு தண்டனை வழங்கவேண்டும்.

குடாநாட்டைக் கலக்கிக்கொண்டிருக்கும் அடாவடித் தனங்கள், அக்கிரமங்கள், சட்டவிரோத செயற்பாடுகள் போன்றவற்றை தட்டிக்கேட்காமல் ஏனோ தானோ என ஒதுங்கும் சமூகத்தினர் விழிப்படைந்து இவற்றைத் தடுக்க முன்வரவேண்டும்.

வருங்காலச் சந்ததியினரை நல்ல சமுதாயமாக மாற்ற குடாநாட்டு மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு முன்வருவதே இதற்கான தீர்வாக அமையும். ★

■ பாண்டியம்மா

# சுரண்டப்படும் வன்னி வளம்




யாரை யார் கேள்வி கேட்பது. எல்லாம் அவன் செயல் என்று நடப்பதைப் பார்த்துக்கொண்டு இருப்பதைத் தவிர எம்மால் என்ன செய்யமுடியும்.

''இது உங்கள் சொத்து'' எழுதிப் பார்த்த நூறு தரம் கூடச் சரித்துப் பார்த்தாலும் எங்கள் சொத்து எங்கள் சொத்துத் தான். வன்னி மண் இப்போது யார் சொத்து? இந்தக் கேள்வி தான் வன்னி மக்களின் கேள்வியாக உள்ளது.

போரின் விளைவு வன்னி மக்களின் பேச்சுத் சுதந்திரத்தைக் கூட பறித்தெடுத்துவிட்டு ஊமைகளாக்கி விட்டது.

என்னுடைய குடும்பம். அன்றாட சீவியம். இது முடிந்தால் போதும். வேறு எதைப் பற்றியும் எம்மால் கதைக்க முடியாது. யாரைத்தான் நாம் கேள்வி கேட்கமுடியும். ''முயல் பிடிக்கிற நாயை மூஞ்சயில தெரியும்'' என்று வன்னி மக்களை ஆட்டிப் படைப்பவர்களுக்குத் தெரியும்.

''ஸ்ஸ்...'' என்ற சத்தம் போட்டால் போதும் எல்லோரும் எமது கைக்குள் பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போய் விடுவார்கள். நடப்பதை மட்டும் பாருங்கள் எதையும் பேசக் கூடாது. ஆதிக்கம் செய்பவர்கள். ஆணை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு காலத்தில் ஒருவேளை உணவுக்கு வன்னி மக்களிடம் கையேந்தியவர்கள்தான் இந்த ஆட்டிப் படைக்கும் கூட்டம். ஆட்டிப்படைப்போர் எதையெல்லாம் சுரண்ட முடியுமோ அதையெல்லாம் சுரண்டி எடுக்கிறார்கள். ஏனென்றால் எமது ஆதிக்கம் இருக்கிறதே. எம்மை மீறி என்ன செய்யமுடியும் என்ற துணிவுதான்.

வன்னி மக்களின் உறவுகளைப் பலியெடுத்து இரத்த அபிஷேகம் செய்துவிட்டு, இன்று அவர்கள் மண்ணில் இன்னும் எதையெல்லாம் பறித்தெடுக்க முடியும் எனத் திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இருந்த சொத்துக்கள் எவற்றையெல்லாம் இழக்க முடியுமோ, அனைத்தையும் இழந்துவிட்டு மீண்டும் ஆறடி நிலமே சொந்தம் என்று மறுபடியும் வன்னி மண்ணைத் தஞ்சடைந்துள்ள மக்களை, தாம் திட்டமிடும் ஒவ்வொரு செயலுக்கும் அடிபணியவேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமது செல்வாக்கையும், ஆதிக்கத்தையும் பயன்படுத்தி, வன்னியில் வளங்களைக் சூறையாடத் தொடங்கி விட்டார்கள். இயற்கை இனாமாக எமது மக்களுக்குக் கொடுத்தமை கூட, இவர்களுக்குப் பொறுக்கவில்லை. தமக்குள் வன்னிமக்கள் இசைவாக்கம் அடைந்து விட்டார்கள், நாம் செய்வதை மட்டும் தடுக்கவா போகிறார்கள் என்று நினைத்துக் கொண்டார்கள் போலும். ''காடு'' வன்னி மண்ணின் ஓர் பெரும் சொத்து. அதோடு மண்வளம் இயற்கை அள்ளிக் கொடுத்த கொடை. வன்னி மக்கள் மண்ணை வைத்தே பிழைப்பு நடத்துபவர்கள்.

இத்தகைய இரு பெரும் வளங்களை இன்று தென்னிலங்கையர்கள் சூறையாடிக்கொண்டு செல்கிறார்கள். பொதுமக்கள் பார்த்துக் கொண்டிருக்கவே களவாடுகிறார்கள். யாரால் என்ன செய்யமுடியும்.

வன்னியில் அதிகளவான குடும்பங்கள் புதிதாக வீடுகளைக் கட்ட ஆரம்பித்துள்ளனர். இவர்கள் தமது தேவைக்காக மணலையோ, காட்டு மரங்களையோ பெற்றுக்கொள்ளும் போது எங்கிருந்தோ வேட்டைப் படையணி வந்துவிடும். யாருடைய அனுமதி பெற்றீர்கள் என்ற பாணியில் உடனே கைது செய்யப்பட்டு ஒரு தண்டப்பணம் கட்டச் சொல்லி விடுவார்கள்.

ஆனால், பட்டப் பகலில் லொறிலொறியாக ஏற்றும் தென்னிலங்கையர்களை இவர்களுக்குத் தெரிவதில்லை. இல்லை கண்டும் காணாதது போல் இருக்கின்றார்களா? வன்னி மக்கள் தமது சொத்துக்களை நியாயமாகக் கூடப் பெற்றுக் கொள்ளத் தடை இருக்கும்போது, தென்னிலங்கையவர்களுக்கு மட்டும் எப்படி உரிமை உண்டு. இதன் பாதிப்பை எதிர்கொள்ளப்போவது வன்னி மக்கள் மட்டும்தான்.

இயற்கை இரக்கமாகக் கொடுத்ததை இலாபகரமாக [illegible] நின்று [illegible] கொடுத்தது யார்?

ஒவ்வொரு பிரதேசத்துக்கும் ஒவ்வொரு சிறப்பும், தனித்துவமும் உள்ளது போல, வன்னி மண்ணுக்கு கிடைத்த காட்டு வளம் இன்று அந்நியர்கள் கையில் அகப் பட்டுவிட்டதால் நேர்ந்த கதி இது என்று நொந்து கொள்ள வேண்டியதுதான்.

''யாருக்கும் வணங்காத மண் வன்னிமண்'' என்று சும்மாவா சொன்னார்கள். ஆனால் இன்று வணங்க வேண்டிய நிர்ப்பந்தம் வந்து விட்டது. இந்த விடயம் தொடர்பாக ஏன் அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. லஞ்சம் பெற்று மண்ணை விற்கும் கேவலமான பிழைப்பை நடத்திக் கொண்டிருக்கிறார்களா என்று சினம் கொள்கின்றனர் மக்கள்.

இவர்களின் இத்தகைய நடத்தையால் பாதிப்படைவது அப்பாவி மக்கள் மட்டும் அல்ல இயற்கையும்தான், எதிர்காலமும்தான். இயற்கையின் சீற்றம் வன்னி மக்களை மீள அணைத்துக் கொண்டாலும் சொல்வதற்கில்லை. அந்தளவுக்கு மணல் தோண்டப்படுவதுடன் பெறுமதியான காட்டு மரங்களும் வேரோடு வெட்டிச் சாய்க்கப்பட்டும் வருகின்றன.

இந்த அழிவுகளுக்கு வன்னி மக்கள் பலிக்கடாக்களாக மாறப்போகின்றார்கள் என்பதுதான் வேதனை தரும் விடயமாகும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேணப்பட வேண்டிய எமது சொத்துக்கள்

நித்தியவாணி

முதியவர்களின் தொகை அதிகரிக்கும் வேகத்தில் இலங்கை மிக உயர்ந்த இடத்தைப் பெறுகின்றது என்பது தொகை மதிப்பீட்டுப் புள்ளி விவரவியல் ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இலங்கையில் வயோதிபர் அதிகரிப்பால் உழைப்போர் எண்ணிக்கையும் குறைந்து கொண்டு வருவதால் அதிகரிக்கும் சனத்தொகையைப் பாதுகாப்பது மிகப்பெரிய சவாலாக இருக்குமென ஆய்வுகளின் மூலம் எச்சரிக்கப்பட்டுள்ளது.

தெற்காசியாவில் 80 வயதுக்கு மேற்பட்ட வயோதிபர்கள் அதிகமாக வாழும் நாடாக இலங்கை திகழ்கின்றது என்று சமூக சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த வயதில் மொத்தமாக இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்டோர் இருப்பதாகவும், 70 வயதுக்கும், 80 வயதுக்கும் இடைப்பட்டவர்களின் தொகை 6 லட்சத்து 10 ஆயிரம்வரை என்றும் 60 வயதுக்கும் 70 வயதிற்கும் இடைப்பட்டவர்கள், 10 லட்சத்து 94 ஆயிரம் பேர் உள்ளனர் என்றும் சமூக சேவைகள் அமைச்சால் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய 60 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகை நாட்டின் முழுச் சனத்தொகையில் 9.23 வீதமாகும். தெற்காசியாவில் உள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் தொகை இலங்கையில் வேகமாக அதிகரித்து வருகின்றது என்கின்றனர்.

60 வயதுக்கும், 60 வயதுக்கு மேலும் இருப்பவர்கள் முதியோர்கள் என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ள எமது நாட்டில் மொத்த சனத்தொகையில் 20 வீதத்துக்கும் அதிகமானோர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் எனக் கருதப்படுவதால் இந்தப்பிரச்சினையின் தாக்கத்தை உணர முடிகின்றது.

இதேவேளை, வாழ்நாள் முழுவதும் தாம் பெற்றுக்கொண்ட கல்வி, அனுபவம், அறிவு என்பவற்றை சமுதாயத்தின் எதிர்காலப் பயணத்துக்கு வழங்குபவர்கள் தான் முதியவர்கள் என்பதை இந்தச் சமுதாயம் உணர மறுத்து விடுகின்றது. போட்டிகள் நிறைந்த தற்காலப் சமுதாயத்தில் பல் வேறு காரணங்களின் அடிப்படையில் செயலிழந்த, பயனற்றவர்கள் என்ற நிலையில் முதியவர்கள், பிரித்துப் பார்க்கப்படுகிறார்கள்.

தற்போதைய சமுதாயம் அவர்களைப் புறந்தள்ளி வைப்பதையே குறியாகச் செயற்படுகிறது. அவர்களால் சமுதாயத்துக்கு எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை, கிடைக்கவும் வழி இல்லை என்ற தப்பான கண்ணோட்டம்தான் இதற்குக் காரணமா? இலங்கையில் நோயாளிகளான முதியோர், வறிய குடும்பங்களைச் சேர்ந்த மூத்தோர், பிள்ளைக ளால் கைவிடப்பட்டோர், பிள்ளைகள் இல்லாதோர், பிள்ளைகள் இருந்தும் அவர்களோடு வாழ விரும்பாதோர், பிள் ளைகள் வெளிநாடு சென்றதால் அல்லது பிரிந்து சென்றதால் தனிமைப்படுத்தப்பட்ட முதியோர் எனப் பலவகையினர் உள்ளனர். அவர்களில் அதிக எண்ணிக் கையானோர் கவலை, குழப்பம் என உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

இலங்கையில், வடக்கு, கிழக்கில் உள்ள முதியவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மூப்படைவதால் இயல்பாக உருவாகக் கூடிய பிரச்சினைகளுக்கு அப்பாற்பட்டவையாக உள்ளன. இதற்குப் பிரதான காரணம், நீண்டகாலமாக இடம்பெற்ற யுத்தமாகும். போரால் குடும்ப உறுப்பினர்களை இழந்தும் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருந்து மீண்டும் இருப்பிடங்களுக்குத் திரும்பியும் அடிப்படை வசதிகளின்றி அன்றாட வாழ்வை நடத்த முடியாமலும் தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

**சமூகத்துக்கு நான் பயனற்றவன் என்ற உணர்வை முதியவர்களிடமிருந்து நீக்க வேண்டும்.**

இந்த நிலைமை அவர்களை நலிவடைந்த நிலைக்கு கொண்டு செல்கின்றது. இந்த நலிவு, வயது மூப்பால் ஏற்படும் இயல்பான மாற்றம்தானே என்று முதியவர்கள் அலட்சியத்துடன் இருந்து விடுகிறார்கள். மனக் கவலைகள், குழப்பங்கள் தீர தகுந்த சிகிச்சையை எடுத்துக்கொள்வதில்லை. பெரும்பாலானோருக்கு இதற்கான வசதி வாய்ப்புக்களோ, வலுவூட்டல் வசதிகளோ கிடைப்பதில்லை. இதனால் அவர்களின் வாழ்க்கை மோசமான பாதிப்புக்குள்ளாகின்றது. தொடர்ந்து நீடிக்கும் கவலைகள் முதியவர்கள் மத்தியில் மிகப் பெரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. இதனால் மாரடைப்பு போன்ற இதய நோய்கள் ஏற்படுவதற்கும் வாய்ப்புக்கள் அதிகம்.

முதியவர்கள் தத்தமது வாழ்க்கைத் துணையை இழக்கும்போது அல்லது பிரிந்து சென்றுவிடும்போது அளவுக்கதிகமான மனக் குழப்பத்துக்கு உள்ளாகின்றனர். இதற்கும் மேலாக இறப்புப் பற்றிய சிந்தனை முதியவர்கள் மத்தியில் அதிகளவு காணப்படும். இந்தச் சிந்தனை அவர்களது மனதைக் குடைந்து கொண்டேயிருக்கும். வெளிநாட்டு முதியவர்களைப் பொறுத்த வரையில் மரண பயம் சாதாரணமாகக் காணப்படும். ஆனால் இலங்கையில் சுதந்திமான முறையில் துன்பங்களின்றி மரணிக்க வேண்டும் என்ற விருப்பமே முதியவர்களின் எண்ணமாக உள்ளது.

இவர்களின் பிரச்சினைகளை முதன்மைப்படுத்தி அவர்களின் எஞ்சிய கால வாழ்க்கையை மகிழ்வித்து நாட்டுக்குப் பயன் கிடைக்கக் கூடிய வழிவகைகளை உருவாக்குதல் வேண்டும். இதற்கு சமூகத் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பும் மிக அவசியமானது.

சமூகத்துக்கு நான் பயனற்றவன் என்ற உணர்வை முதியவர்களிடமிருந்து நீக்க வேண்டும். இதற்கு அவர்களை மனித நேயப் பணிகளில் ஈடுபடுத்தலாம். மற்றும் எந்தெந்தத் துறையில் அவர்களினால் ஆகக் கூடிய பயனைப் பெறலாம் என்பதை கருத்தில் கொண்டு, தகுந்த பணிகளில் அவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் அபிவிருத்திக்கும் பெரும் பயன் கிட்டும். அவர்களும் மற்றவர்களில் தங்கி வாழாமல் சுயாதீனமாகச் செயற்படுவார்கள். இதற்கேற்ப தகுந்த திட்டங்களையும் உருவாக்கலாம்.

அதனை விடுத்து, 'தங்களால் சமுகத்துக்கும் தமக்கும் எந்தப் பயனும் இல்லை' என்ற எண்ணத்தை இவர்களிடம் உருவாக்கினால் பாதகமான சமுதாய மாற்றங்களே உருவாகும். இந்த விடயங்கள் நாட்டின் அனைத்து முதியோர்களுக்கும் பொதுவானவையாக இருந்தாலும் தமிழ்மக்களின் முதியோர்களது உளரீதியான பிரச்சினைகளுக்கு வே[illegible] உள்ளன. அவர்களின் பிரச்சினைகள் இனங் காணப்பட்டுத் தீர்வு காணப்படவேண்டும்.

# ஆரோக்கியமான அறிவு எதிர்காலத்தில் தேவை



பிறேமினி

ஓடி விளையாடு பாப்பா- நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா...

.......................

காலை எழுந்தவுடன் படிப்பு- பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - அதை
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா

எனச் சிறார்களுக்காகப் பாடிய பாரதியார், ஒரு குழந்தைக்கு கல்வி என்பது எவ்வளவு முக்கியமோ அந்தளவுக்கு விளையாட்டும் முதன்மையானது என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளார்.

ஒரு குழந்தை உற்சாகமாகவும் மகிழ்வாகவும் இருக்கின்றது என்றால் அதற்குக் காரணம் ஓடியாடி விளையாடிக் கொண்டிருக்கும் அதன் இயல்பே என்று அறிவியலாளர்கள் விளக்கம் கூறுகின்றனர்.

சிறுவர், சிறுமியர் தமது பொழுதில் பெரும் பகுதியை விளையாட்டுக்களில் கழிக்கிறார்கள்.

இன்று விளையாட்டுமுறைக் கல்வி மூலமே பாலர் பாடசாலைகளிலும், குழந்தைப் பள்ளிகளிலும் கல்வி வழங்கப்படுகின்றது. பாடசாலைத் திட்டமிடலில் விளையாட்டுத்துறைக்கு முக்கியமான இடம் தரப்பட்டிருக்கின்றது. எல்லாப் பாடசாலைகளிலும் பாடசாலை தொடங்கும் வேளையில் 'தேகப்பயிற்சிகள்' கட்டாயமாக்கப்பட்டிருக்கின்றன. பாடசாலை நேர அட்டவணையில் கூட விளையாட்டுக்கென நேரம் ஒதுக்கப்பட்டிருக்கின்றமையை நாம் காணலாம்.

விளையாட்டின் மூலமாகச் சிறுவர்களின் உடல், உளம் ஆரோக்கியமடைகின்றது. சிறுவர்களின் விளையாட்டுக்களினூடாக ஒற்றுமைத் தன்மை, நட்புறவு, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, தலைமைத்துவப் பண்பு, தன்னம்பிக்கை, முயற்சி, குழுவாகச் செயல்படும் தன்மை, நுட்பங்களைக் கையாளுதல், சகிப்புத் தன்மை, பணிவு, பெரியோர்களை மதித்து நடத்தல் போன்ற பண்புகளைத் தமாகவே உணர்ந்து கொள்ளக்கூடிய தன்மை ஏற்படுகின்றன. இவ்வாறான இயல்புகளைத் தனக்குள்ளே தாங்கி வளரும் குழந்தை நல்ல சிற்பியாகச் செதுக்கப்படுகின்றான். 'இன்றைய சிறார்களே நாளைய தலைவர்கள்' என்ற எண்ணக்கருவுக்கு அடித்தளம் இட்டுச் செல்வது விளையாட்டுக்களே என்றால் மறுப்பதற்கு இல்லை. 'சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும்' ஒரு குழந்தை ஆரோக்கியமாக இருந்தால்தான் அதனால் விளையாடவோ படிக்கவோ முடியும்.

எனவே பிள்ளைகளின் அறிவு வளர்ச்சிக்கும் கல்வி முன்னேற்றத்துக்கும் ஆரோக்கியம் முதன்மைக் காரணியாகின்றது. உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பவனது மூளையானது அதிகம் விருத்தியடைகின்றது. உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால் முதலில் ஒவ்வொருவருமே உடலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். நோய் நொடி, தொற்றுகள் ஏற்ப டாது எமது உடலைப் பாதுகாக்க வேண் டியது அவசியமாகின்றது.

தேக ஆரோக்கியத்துக்கும் உடல் வளர்ச்சிக்கும் போசாக்கான உணவுகளை உட்கொள்வதோடு தேகப் பயிற்சியும் முதன்மையாகின்றது. உடற்பயிற்சியானது உறுப்புகள் ஒவ்வொன்றையும் செவ்வனவே இயங்கச் செய்து மூளை நரம்புகளுக்கு இரத்தோட்டத்தையும் வழிப்படுத்துகின்றது. இதனால் ஞாபக சக்தி, நினைவாற்றல் வளர்கின்றன.

இன்று வடக்கு, கிழக்கில் போருக்கு முகம் கொடுத்து வாழ்ந்த பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் தமது இழப்புக்களையும் துன்பங்களையும் மறப்பதற்கான ஒரு கருவியாகக் கூட விளையாட்டுக்கள் திகழ்கின்றன.

விளையாட்டுக்களின் மூலம் சிறந்த நற்பண்புள்ள, நல்ல பிரஜைகளை உருவாக்கக் கூடிய நிலையிருந்தும் முடியுமானால், இன்றைய காலகட் டத்தில் பெற்றோர்களோ, பிள்ளைகளோ விளையாட் டுக்களில் கவனம் செலுத்தாமல் இருப்பது கவலைக்குரிய விடயமே.

பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகள் தொடங்கினால் பிள்ளைகளின் வரவு மிகக் குறைவாக இருக்கின்றது. பிள்ளைகள் வீட்டில் நிற்பதற்குப் பெற்றோர்களும் உடந்தையாக இருக்கின்றார்கள். பிள்ளைகள் விளையாட்டில் ஆர்வம் செலுத்தினால் படிப்பில் கவனம் சிதறிவிடும் என்று பெற்றோர்கள் கருதுகிறார்கள். அதேபோல் பிள்ளைகளும் ஓடி விளையாடுவதை விட இன்று கணினிகளுக்கு முன்னால் குந்தி இருந்து 'கேம்' விளையாடுவதில் அதிக கவனம் செலுத்துகிறார்கள். உண்மையிலேயே இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

இன்று பெற்றோர் பிள்ளைகளைத் தனியார் கல்வி நிலையங்களில் விட்டு விட்டு பிள்ளைகளின் பாடவேளை முடியும்வரை காத்திருந்து கூட்டிச் செல்வதை நாம் நாளாந்தம் காண்கிறோம்.

இப்படிப் பிள்ளைகளின் படிப்பில் மட்டும் தனிக்கவனம் செலுத்தும் பெற்றோர் இந்தக் கவனத்தில் சிறு துளியை ஏனும் பிள்ளைகளின் விளையாட்டுக்களிலும் செலுத்தினால் ஆரோக் கியமான, வளமான, அறிவான சந்ததியை உருவாக்க முடியும் என்பதே உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசுகவி சொக்கரும் முத்தமிழ் வித்தகர் முத்தும்




■ மட்டுவில் நல்லதம்பி

தமிழ் நாட்டிலே ஆசுகவி பாடுவதில் வல்லவரான சொக்கநாதர் என்பவர், முத்தமிழ் வித்தகரான முத்துச்சாமி என்னும் வள்ளலுடன் நட்புப்பூண்டு வாழ்ந்திருந்தார். இவர்கள் இருவரும் பெரும்பாலும் ஒன்றாகவே காணப்படுவர். முத்தமிழ் வித்தகரான முத்துச்சாமி வள்ளலின் குறிப்பறிந்து ஆசுகவி பாடுவார் சொக்கநாதர். ஆசுகவி என்றால், இரு பொருள்களின் ஒத்த தன்மையை ஒரு சொல்லில் வடித்துச் சிலேடையாகப் பாடுதல்.

இப்படி, இவர்களது கூட்டுறவில் விளைந்த சில கவிதைகளையும் அவற்றின் நயத்தையும் காண்போம்.

ஒருநாள், கரும்புத் தோட்டத்தில் ஒரு மயில் ஆடுவதைக் கண்டனர். கரும்புக்கும் மயிலுக்கும் இணைந்த கவி பாடும்படி வள்ளல் கேட்டார். கவிதை பிறந்தது.

*''மேனியெல்லாம் கண்ணுறலால் வேள் விரும்புந்*
*தன்மையினால்*
*ஆன பசுந்தோகையினால் ஆடலினால் - மீனவன் நேர்*
*மானபரா! நெல்லை நகர் வாழுமுத்துச் சாமிமன்னா!*
*கானமயில் ஒப்பாம் கரும்பு''*

கரும்புக்கும் மேனியெல்லாம் கண் (கணு); மயிலுக்கும் மேனியெல்லாம் கண்; மயிலைச் செவ்வேள் வாகனமாகக் கொண்டான்; கரும்பை மாரவேள் (மன்மதன்) விரும்பி வில்லாகக் கொண் டான். மயில் இன்பத்தினால் தோகை விரித்தாடும்; கரும்பின் தோகை காற்றினால் ஆடும். கானமயில் கரும்புக்கு ஒப்பானது கேட்டு மகிழ்ந்தார் வள்ளல்!

வளமான வாழைத் தோட்டத்தை ஒரு நாள் கண்டனர். மேல்நோக்கி விரிந்த வாழையிலை, தரை நோக்கித் தாழ்ந்த காய்க்குலைகள். வள்ளல் கவிஞரை நோக்கி, காய் என்று தொடங்கி, இலை என முடியும்படி கவி பாடக்கேட்டார்.

*''காய் சினம் இல்லாதான் கருணை*
*முத்துச் சாமி வள்ளல்*
*வாய்மை யுளான்பாடி வருவோர்க்*
*குத் - தாய் நிகர்வான்*
*எல்லையில்லா மாண்பொருளை ஈவான் இவனிடத்தில்*
*இல்லையென்ற சொல்லே இலை''*

வள்ளல் காய் சினம் அற்றவன். கருணை உள்ளம் படைத்தவன். காய் சினம் இல்லாதவன் என, ''சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி, இனம் எனும் ஏமப்புணையைச் சுடும்'' என்னும் வள்ளுவன் குறளை அடியொற்றி வந்தது போல அமைகின்றமை காணலாம். மேலும், பால் நினைந்தூட்டும் தாய்போலத் தான் நினைந்து வழங்கும் வள்ளல் எனவும், இல்லை என்ற சொல்லே அவன் வாயில் வராது எனப் பாடி, தன் நன்றியறிதலைத் தெரிவித்தமையால் நாணமடைந்தும், தான் கேட்டவண்ணம் காயில் தொடங்கி இலையில் கவிதை முடித்தமையால் மகிழ்ச்சியடைந்தும் இரு வேறு நிலையில் தம்மை மறந்து நின்றார் வள்ளல்.

ஒருமுறை, வள்ளலின் மிதியடி காணாமற் போயிற்று. வள்ளலின் விருப்பமறிந்து கவிதை பாடினார் கவிஞர்.

*''அங்கங் களவால் அதுகண் டுதைப்புறலால்*
*எங்கும் மிதியடி யென்றே சொலலால் - வெங்கல்*
*கரடு முட் கஞ்சாததினால் காமர் முத்துச் சாமி*
*திருடனை ஒப்பாகும் செருப்பு''*

பாட்டைச் செவிமடுத்த வள்ளல், செருப்புத்தொலைந்ததையும் மறந்து மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

கள்வனுக்கு அங்கம் களவு; செருப்புக்கு அங்கங்கு அளவு; கள்வனது களவு கண்டு உதைப்பார்கள். செருப்புக்கு அளவு கண்டு தைப்பார்கள். கள்வனை மிதி, அடி என்பார்கள். செருப்பை மிதியடி என்பார்கள். கள்வன் கல்முள் பாராது போவதுபோல, செருப்பும் கல்முள் பாராது என சிலேடை நயம் அமைந்திருந்தது!

முத்துச்சாமி வள்ளல் மனமகிழ்ந்து கொடுக்கும் பரிசில்களை அவ்வப்போது பெற்றுக் கொண்டாரேனும் ஆசுகவி, பொருள் வருவாயைக் கருதியவரல்லர். மாசம் பத்து ரூபா கிடைத்தாலும் மா சம்பத்தாகக் கொள்வார் அவர். வள்ளலின் இன்சொல் கவிஞரையும், கவிஞரின் கவிதை வள்ளலையும் ஒன்று சேர்த்தது; அவ்வளவுதான்.

*''இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாஞ்*
*செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்''* [குறள் 91]

'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்னும் முதுமொழிக்கிணங்கப் புலவர்களை ஆதரித்த மன்னர் வரிசையிலே முத்துச் சாமி வள்ளலும் ஒருவர்.

இந்த மன்னனின் செந்தமிழ்ச் சொல்லழகை வியந்து சொக்கர் பாடிய அம்மானைப் பாடலில் ஒன்று.

*''காராளர் மா மரபில் கன்னன்*
*முத்துச்சாமியெனும்*
*சீராளன் வாய்ச்சொற்கள்*
*தெள்ளமுதம் அம்மானை!*
*சீராளன் வாய்ச்சொற்கள்*
*தெள்ளமுதம் ஆமாயின்*
*ஆராய்ந்து தேவர்கள்உண்*
*டாடுவரோ அம்மானை!*
*அருமைப் புலவர்கள் கொண்டாடு*
*வார் அம்மானை!''*

பாற்கடலில் எழுந்த அமுதத்தை உண்டு தேவர்கள் மகிழ்ந்தது போல கர்ணன் போன்ற வள்ளல் முத்துச்சாமி சொல்லமுதை உண்டு புலவர்கள் கொண்டாடுவதாக அமைகிறது இந்தப் பாடல். இன்னொரு முறை வள்ளல் முத்துச்சாமி மன்னன் வேட்டைக்கு,

*''சில்லென்று பூத்த செழுமலர்ப் பூங்கா வனத்தில்*
*வில்லென்று செங்கையுடன் மேவி வரும்போது..''*

(16 ஆம் பக்கம் பார்க்க)

# புதுமைப் பெண்



சிறுகதை

த.பிரபாஜினி,
■ சாவகச்சேரி.

எப்போது காலை மலரும் என்றிருந்தது. என் நெஞ்சுக்குள். சந்தோசம், படபடப்பு, ஆவல் எல்லாமே எல்லை மீறின. நான் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளேன்.

காலையும் விடிந்தது. என் வாழ்விலும் விடிவு. சுதந்திர மனிதனாய் ஊர் வந்து சேர்ந்தேன். பத்து வருட மாற்றம் ஊரிலே நிறையவே தெரிந்தது. ஆனாலும் சில மாறிவிடவில்லை. மாற்ற முடியவில்லை போலும். வீட்டுக்குச் சென்ற என்னைச் சுற்றி உறவுகள். கண்ணீர், சிரிப்பு என அன்றைய நாள் கழிந்தது.

அடுத்த நாள் ஊரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டேன். எதிர்ப்பட்ட நண்பர்களுடன் பேசிவிட்டு கடற்கரையில் வந்து அமர்ந்திருந்தேன். முன்னைய நாள்களிலும் அது தான் என் பொழுதுபோக்கு. கடலன்னையையே வெகுநேரம் பார்த்திருந்துவிட்டு வீடு செல்வதற்காக ஆயத்தமாகி திரும்பியபோதுதான் அவளைக் கண்டேன். எங்கோ பார்த்த ஞாபகமாக இருந்தது. சற்று நேரம் அவளையே பார்த்திருந்தேன். நான் பார்த்துக் கொண்டு நின்றதால் ஏற்பட்ட குறுகுறுப்பினாலோ என்னவோ அவளும் என்னைத் திரும்பிப் பார்த்தாள். அவள் பார்வையில் எந்த உணர்ச்சியுமில்லை. வெறுமை குடிகொண்டிருந்தது. நான் அந்தக் கண்களைக் கண்டு கொண்டேன்; அவளையும் அறிந்து கொண்டேன்.

அவளை முதன் முதலாகக் கண்ட நாள் என் சிந்தனையில் ஓடியது. அப்போது நான் உயர்தரப்பரீட்சை எழுதி இருந்தேன். என் பொழுது போக்கிற்காய், புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்நோக்கியிருந்த மாணவர்களுக்கு மாலையில் பாடம் சொல்லிக் கொடுத்தேன். அப்போது தான் அவளும் வகுப்பில் சேர்ந்திருந்தாள். ஒல்லியான உடலும், காந்தக் கண்களுமாய் இருந்த அவளை எனக்கு மிகவும் பிடிக்கும். நேரான மூக்கு உருத்தெரியாது மறைந்து நிற்கும் கிறுக்கல் ஓவியத்திற்கு நிறங்கொடுத்து உருவம் வடிப்பதைப் போன்று புன்னகையில் வளைந்திடும் உதடுகள். அவற்றுடன் போட்டி போட்டு சிரித்து நிற்கும் கண்களென எல்லோரையும் வசீகரித்த அவள், தங்கையில்லாத எனக்கு குட்டித் தங்கையாய் அன்று வலம் வந்தாள்.

அவளைக் காணும் போதெல்லாம் அந்தக் கண்களைத் தான் முதலில் பார்ப்பேன். கோபம், பாசம், தவிப்பு எல்லாவற்றையுமே அவள் கண்கள் பிரதிபலிக்கும். அவளின் கண்கள் தான் அவளைக் காட்டி நிற்கும்; அவளை உயிர்ப்பிக்கும். அவளைப் பார்த்துப் பல வருடங்கள் ஆகி விட்டன. என சின்ன தேவதையாக இருந்த அவள் இன்று அழகு தேவதையாகி நின்றாள். அவளின் முகம் எனக்கு மறந்து விட்டதுதான். ஆனால் அந்தக் கண்கள்..... எப்படி மறக்க முடியும்?

எனக்குள் மத்தாப்பு வெடித்தது.சந்தோச மிகுதியுடன் அவளிருந்த இடத்தை நெருங்கினேன். என்னைக் கண்டதும் எழுந்து நின்று என்னைப் பார்த்தாள்.கண்களில் மட்டும் ஏதே வெறுமை. அந்தக் கண்களின் வெறுமையைக் காண என் நெஞ்சுக்குள் என்னவோ அடைப்பது போலிருந்தது. குரலைச் சரி செய்து கொண்டு " நீங்கள் துளசி தானே?"

என வினாவினேன். சிறிது நேரம் என்னைப் பார்த்துவிட்டு ஆம் எனத் தலையாட்டினாள். " நான்" எனத் தொடங்கும் போதே " தெரியும் நீங்கள் அரசன் அண்ணா தானே?" என அவள் வினாவினாள். எனக்கோ சந்தோசம். இவள் என்னை மறந்து விடவில்லை. ஆனாலும் நெஞ்சுக்குள் என்னவோ நெருடியது. அவளை நான் இந்த நிலையில் எதிர்பார்க்கவில்லை. பத்து வயதுத் தங்கையவள் பத்தொன்பதாம் அகவையிலே பளிங்காகி நின்றாள். பருவ எழிலில் முகம் பூரித்திருந்தது தான். ஆனால் ...... அவளின் உயிர்த் துடிப்பான பேச்சு எங்கே? சிரித்து நிற்கும் அவள் கண்கள் எங்கே ? பத்து வயதில் கண்ட அவளை பத்தொன்பது வயதில் தேடினேன். தேடினேன்... தேடினேன்.... எங்கே அவள்? கண்களில் வெறுமை, உதடுகளில் வெறும் சிரிப்பு. உள்ளத்து உணர்வின்றி உதட்டில் இருந்து வரும் பேச்சு. என்ன ஆயிற்று இவளுக்கு ? ஏன் தொலைந்தாள் அவள்? அவள் ஏன் இவளானாள் ? பருவம் தந்த நாணமா? இல்லையே .....! நாணத்தின் ரேகையையே காணவில்லையே இவள் முகத்தில். இவளைப் பார்த்து விட்ட சந்தோசத்தை விட அவளைத் தொலைத்து விட்ட வலி அதிகமாகியது.

சிந்தனையிலிருந்து மெல்ல விடுபட்டு அவளை நோக்கினேன். அவள் கடலைப் பார்த்திருந்தாள். " ஏன் துளசி? ஏன் இப்படி .... என்றேன்." எனக்கு வார்த்தைகள் வரவில்லை. அவள் என்ன, என்பது போல் என்னைப் பார்த்தாள். " இப்போது எங்கே இருக்கிறீர்கள்" என்றேன். " முகாமில்" என்றாள். குழப்பத்துடன் அவளைப் பார்த்தேன். சிறு விம்மலுடன் ஆரம்பித்தாள். " அண்ணா உங்களுக்குத் தெரியுமா அம்மா, அப்பா இல்லாமல் நான் எத்தின நாள் அழுதிருப்பன். சித்தி வீட்டில என்னை யாருமே கண்டு கொண்டதில்லை. ஆனா நீங்கள் இருக்கேக்க எனக்கு எவ்வளவோ ஆறுதலா இருந்தது. ஆனா உங்களையும் பிடிச்சுக்கொண்டு போனாப் பிறகு நான் நிறைய அழுதேன். அப்படியிருக்கேக்க நான் என்னோட படிச்ச விஷ்ணுகனோட பழகினேன். நானும் விஷ்ணுகனும் காதலிக்கத் தொடங்கினோம் அண்ணா! விஷ்ணு கன் என் மேல உயிரையே வைச்சிருந்தார். அவருக்கு ஏழையளுக்கு உதவி செய்யோனுமெண்டு விருப்பம். விஷ்ணுகனும் நானும் ஒரே பள்ளிக் கூடத்திலதான் படிச்சோம். அவருக்கு ''டொக்டரா'' வரவேனுமெண்டு விருப்பம். இந்த வருஷம் பரீட்சை எடுப்பதாகக் கூட இருந்தோம். ஆனா விதி சுனாமி எண்ட பெயரில் எல்லாத்தையுமே மாத்திட்டுது என்ர விஷ்ணுகனையும் பறிச்சிட்டுது'' என சிறு விம்மலுடன் சொல்லிக் கொண்டே போனவள் அழத் தொடங்கினாள்.

சற்று நேரத்தில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு மீண்டும் பேசத் தொடங்கினாள். " அண்ணா எனக்கு மட்டும் ஏன் இப்படி? சின்ன வயசில அம்மா, அப்பாவை சண்டை பறிச்சிட்டுது. பிறகு உண்மையான அன்பு காட்டிய உங்களையும் பிரிஞ்சன். இப்ப என்ர விஷ்ணுகனையும் பிரிச்சிட்டுது. எனக்கெண்டு ஒருத்தருமே இல்லாம..... இருக்க விடாம, ஏன் கடவுள் என்னைப் படைச்சார்? கூறிக்கொண்டே சென்றவள் மீண்டும் அழத் தொடங்கினாள். நான் என்னைத் திடப்படுத்திக் கொண்டே " ஏனம்மா துளசி,நான் இல்லையா உனக்கு, உன் அண்ணன் நான் திரும்பி வந்திட்டேனே? உனக்காக நான் இருப்பேனம்மா"

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசை போட ஒரு விடயம் 15

# கடவுள் இருக்கும் இடம்?

ரம்யன்

"கடவுள் எங்கே இருக்கிறார்?" என்று கேட்டான் தெய்வ நம்பிக்கை இல்லாத ஒருவன்.

"நீ முதலில் அவர் இருக்கிறார் என்பதை நம்புகிறாயா?" என்று திருப்பிக் கேட்டார் ஞானி.

நாஸ்திகன் சற்று யோசித்தான். பிறகு கூறினான் "முதலில் என் கேள்வியில் தவறு இருக்கிறது என்று நினைக்கிறீர்கள் போலிருக்கிறது!".

"ஆம். கடவுள் இருக்கிறார் என்று நம்புகிறவர்களால்தான், அவர் எங்கே இருக்கிறார் என்ற கேள்வியை எழுப்ப முடியும்" என்றார் ஞானி. "சரி, நீங்கள் நம்புகிறீர்கள் தானே, அப்படி யானால் அவர் இருப்பிடத்தைக் காட்டுங்கள்" என்று மடக்கினான் நாஸ்திகன்.

ஞானி கூறினார், "அப்பனே, மனிதன் புரிகின்ற எல்லா நல்ல காரியங்களிலும் இறைவன் இருக்கிறார் என்பதே என் நம்பிக்கை. அதனால் எங்கே எவர் நல்ல காரியம் புரிகின்றாரோ அங்கே, அவருடனேயே கடவுள் இருக்கிறார். நல்ல காரியம் என்பது நல்ல செயலை மட்டும் குறிக்காது- எண்ணம், அந்த எண்ணத்தை வெளிப்படுத்தும் செயல், அந்தச் செயலின் பயன்- இப்படியே கூறலாம்" என்று விளக்க முயன்றார் ஞானி.

நாஸ்திகன் சிரித்தான். பிறகு, "நல்லவற்றில் இறைவன் இருக்கிறார் என்றால் நல்லது அல்லாதவற்றில், அவற்றை எண்ணுபவர், செய்ப வர் மற்றும் அதன் விளைவுகள் யாவற்றிலும் யார் இருப்பார்கள்?" என்று கேட்டான். அதற்கு ஞானி கூறினார், "நல்லது அல்லாத வற்றை நான் எண்ணுவதுமில்லை, செய்வது மில்லை. அதனால் அதன் பயன் பற்றியும் எனக்குத் தெரியாது. ஒருவேளை உனக்குத் தெரிந்தால் சொல். நான் தெரிந்து கொள்கிறேன்" என்றார்.

"இல்லை, இல்லை, எல்லாம் இறைவன் செயல் என்கிறார்களே அதனால் கேட்டேன், நல்லதோ, கெட்டதோ இரண்டும் இறைவன் செயல் என்றுதானே கொள்ள வேண்டும்" என்று மறுபடியும் கேட்டான் நாஸ்திகன்.

"நீ மறுபடியும் முதலில் நாம் ஆரம்பித்த இடத்துக்கே வருகிறாய். முதலில் இறைவன் இருக்கிறார் என்பதை ஒப்புக்கொண்டால் தான், செயல்களைப் பற்றி விவாதிக்க முடியும்." என்றார் ஞானி. மேலும் சொன்னார்.

"நல்லதை நினைக்கும், செய்யும் மனிதனுடன் இறைவன் இருந்து, அவனை இயக்குகிறார் என்றால் கெட்டதை நினைக்கும் எண்ணம் அவனுக்கு வர முடியாது. அவன் இறைவனால் வழிப்படுத்தப்படுவான்- அவனுடைய செயலின் பயனும் நல்லதாகவே இருக்கும்...." என்றார்.

நாஸ்திகன் சற்று யோசித்தான். இதற்கு மேலும் உரையாடலைத் தொடர விரும்பாமல் பிறகு வருவதாகக் கூறிக்கொண்டு போய்விட்டான்.

விஞ்ஞான அறிவு இன்று மும்முரமாக வளர்ந்து விட்டதால் மனிதர்கள் சமய நம்பிக்கையை இழந்து வருகிறார்கள். இதற்கு சமயத் தலைவர்களிலும் பலர் தம் உபதேசங்களின்படி நடக்காமல் "பிறருக்கு மட்டும்தான் உபதேசம்" என்ற போக்கில் நடந்து கொள்கிறார்கள். நாகரிகம் போகிறபோக்கில் கோயில் குளம், ஆலயம் என்பதெல்லாம் ஏதோ கடமைகள் போலாகிவிட்டன.

இந்திய முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருவிடம் யாரோ தெய்வ நம்பிக்கை பற்றி கேட்டார்கள். அவைகளில் எல்லாம் நம்பிக்கை யில்லாத நேரு கூறினார்; "நல்லது செய்தால் நல்லதே அதன் விளைவாக இருக்கும்" என்ற தத்துவத்தில் தமக்கு நம்பிக்கை உண்டு என்று. மகாத்மா காந்தி தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்திருந்த போது ஔவையார் பற்றி கேள்விப்பட்டு அதிசயமுற்றுள்ளார்.

தமிழ் நாட்டில் சிவன் கோயில் ஒன்றுக்கு சென்றிருந்த ஔவைப்பிராட்டி மூலமூர்த்தி இருந்த பக்கமாகத் தமது கால்களை நீட்டிக் கொண்டு அமர்ந்திருந்தாராம். அவ்வேளை அங்கு வந்த கோயில் பிரமுகர் சுவாமி இருக்கும் பக்கமாக கால்களை நீட்டிக்கொண்டு இருக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டாராம்.

"சரி அப்படியே செய்யலாம் ஆனால் சுவாமி எந்தப் பக்கத்தில் இல்லை என்பதைக் காட்டு அந்தப் பக்கமாக காலை நீட்டிக் கொள்கிறேன்" என்றாராம் பாட்டி.

இந்த சம்பவத்தைக் காந்தி கேட்டு மிகுந்த ஆச்சரியமுற்றார் என்று கூறுவார்கள்.

**வரண்டுபோன செவ்வாய்க் கிரகம்**

செவ்வாய்க் கிரகம் 600 வருடங்களுக்கு மேலாக தண்ணீர் இன்றி வரண்டு போய் இருந் துள்ளது என்று கூறுகிறார்கள் விஞ்ஞானிகள். செவ்வாய்க் கிரகத்திலிருந்து கிடைக்கப்பெற் றுள்ள மண் மாதிரிகளைச் சோதித்துப் பார்த்ததன் பின்னர் அவர்கள் இந்த முடிவுக்கு வந்துள்ளார்கள்.

செவ்வாய்க் கிரகத்திலிருந்து கிடைத்த குறிப்பிட்ட மாதிரிப் பொருள்களைச் சந்திரனிலிருந்து கிடைத்துள்ள பொருள்களுடன் கடந்த மூன்று ஆண்டுகளாக ஒப்பிட்டு ஆராய்ந்ததில், இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அந்தச் சிவப்புக் கிரகத்தில் உயிர் வாழ்வதென்பதே சாத்தியமற்ற விடயம் என்கிறார்கள் அவர்கள்.

இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த குழுவுக்கு தலைமை வகித்தவரான டாக்டர் டொம் பைக் என்பவர் தமது ஆய்வு பற்றித் தெரிவிக்கையில் செவ்வாயில் நூற்றுக் கணக்கான ஆண்டுகால வரட்சி நிலவியிருக்க வேண்டும். இன்று நாம் காணும் செவ்வாய் அதன் ஆரம்ப கால வரலாற்றுடன் ஒப்பிடுகையில் பெரும் மாற்றத்தைக் கொண்டுள்ளது. ஆரம்ப காலத்தில் ஈரலிப்பும், வெப்பமும் இருந்துள்ளது. அதனால் அங்கு உயிர்கள் வாழக் கூடிய சூழ்நிலை இருந்திருக்கலாம். இப்பொழுதும் செவ்வாயின் ஆழமான உள் பகுதியில் பனிப்படிவங்களும், வெப்பமும் காணப்படுவதால் அங்கே உயிர்கள் இருக்கலாம் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

**பெயரை மாற்றினால் அதிர்ஷ்டம்**

'நியுமோரோலோஜி' (Numorology) என்றழைக்கப்படும் கணித அல்லது எண் சோதிடத்தில் இன்று பலரும் ஈடுபட்டு வருவதைப் பார்க்கின்றோம். இந்தவித கலையில் அதிக பரிச் சயமில்லாதவர்கள் அவசரப்பட்டுத் தம் பெயர் களை மாற்றி அமைத்துக்கொண்டு அதிர்ஷ்டம் வரவில்லையே என்று அங்கலாய்க்கிறார்கள்.

பிறந்த எண்ணுக்கு இசைவாக பெயரின் எண்களை நற்பலன் தரும் வகையில் திருத்தி அமைத்துக் கொண்டால் மட்டும் போதாது. அப் பெயர் பலரும் அறியும் வகையில் பகிரங்கமாக அறியப்பட வேண்டும். பலராலும் உச்சரிக்கப் பட வேண்டும் அப்பொழுதே அதன் சரியான பலனை சம்பந்தப்பட்டவர் அனுபவிக்க முடியும் என்பது நியதி.

தமிழர்கள் மத்தியில் இப்பொழுது பல அதிர்ஷ்ட விஞ்ஞானம் என்ற வகையிலான புத்தகங்கள் பாவனையில் உள்ளன. தமிழில் இக் கலை பிரபல்யமாவதற்கு பண்டிற் சேது ராமன் என்பவர் காரணமாக இருந்துள்ளார். பெயர் எண்களுக்கு இவர் தந்துள்ள பலன்கள் ஆச்சரிய மாகவுள்ளன.

37 எண்வரும் பெயருடையவர்கள் பற்றி அவர் குறிப்பிடுகையில் ஆரம்பத்தில் வெற்றிக்கு மேல் வெற்றியைத்தரும் இவ்வெண்ணுக் குரியவர் வெற்றியின் உச்சத்தை எட்டியபின் திருப்தியடைய வேண்டும். இல்லையெனில் வீண் விவகாரங்களில், ஈடுபடச் செய்து வீழ்த் திவிடும் என்கிறார்.

மு.கருணாநிதி (M.Karunanidhi) என்ற பெயரையும், அவரைக் குறிக்கும் எண்ணையும் பார்க்கையில் இந்தக் கணிப்பு பெரும்பாலும் சரியாய் இருப்பதைக் காண்கின்றோம். ஒரு முறை வீழ்ந்தவர் மறுமுறை எழுந்தார். உச்சியை எட்டிய பின் மீண்டும் வீழ்ந்தார். இனியும் ஒரு தடவை எழுந்திருப்பாரா? தெரியவில்லை. ✱

---

# சர்ப்பதோஷமும் அதன் தாக்கமும்

பிரம்மஸ்ரீ - சண்முக தியானேஸ்வரசர்மா
ஜோதிட - நுணாவில் மத்தி.

எமது இந்துக்கள் பண்டையகாலம் முதல் வழிபாடுகளில், நாக வழிபாட்டுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். ஆனால் அந்த வழிபாட்டின் மகத்துவம் நாகதோஷம் உடையவர்களால் மட்டுமே முழுமையாக உணர முடிகிறது.

முற்கால சந்ததியினர் சிலர், பாம்பினத்தைக் கண்டவுடன் அடித்து எரிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். அது என்ன இனப்பாம்பு என்று ஆராய்வதற்கு அவகாசம் கொடுப்பதில்லை. பொதுவாக பாம்பினங்களில் நாகம் உயிரைவிடும்போது நிலத்தில் கொத்தி சாபமிட்டே மரணிக்கிறது. அந்த சாபம், அவர்களது சந்ததியை சீர்குலைக்கும் என்பதை, அக்கணம் உணரவும் அவர்களுக்கு அவகாசம் இருக்காது. இச் சாபம் ஏழேழு தலைமுறைகளுக்கும் தொடரும் தன்மையை உடையது என்பதனையும் சிலர் அறிந்திருப்பதில்லை.

இந்த தோஷமானது திருமண வாழ்க்கை, சந்ததி விருத்திச் சிறப்பு என்பவற்றில் தாக்கத்தைச் செலுத்துகிறது. இரண்டுமே ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த விடயங்கள்தான். அந்த விடயங்களை ஜாதகரீதியாக ஆராய்வோம்.

செம்பாம்பு என்று கூறப்படும் கேதுபகவான் லக்கினம், பூர்வபுண்ணிய ஸ்தானம், பிதிர்ஸ்தானங்களில் இருக்கும் போது சர்ப்ப தோஷம் தருகிறது. இது புத்திரதோஷத்தைத் தரும். திருமணப் பொருத்தத்தில் புத்திரப் பொருத்தம் பார்க்கும் பொழுது இந்த விடயத்திலும் அவதானம் செலுத்துவது அவசியம்.

சில ஜோதிடர்கள் ஆண், பெண் இரு பாலாருக்கும் பால் மரமாகிலும், புத்திர காரகன் குருபகவான் கேந்திரங்களில் இருப்பினும், பாவக் கிரகங்கள் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் இல்லாதிருப்பினும், புத்திரப் பொருத்தம் உண்டு என தீர்ப்புக் கொடுத்து விடுகிறார்கள். சர்ப்பதோஷத்தைப் பற்றி அக்கறை செலுத்துவதேயில்லை. சர்ப்ப தோஷம் இருக்கும் நிலையையும் அனுசரித்தே புத்திரப்பொருத்தத்தைத் தீர்மானிக்க வேண்டும். ஒரு பாலாருக்கு சர்ப்ப தோஷம் உண்டெனினும் மற்றைய பாலாருக்கு சர்ப்பதோஷம் இல்லாதிருப்பது தாக்கமில்லை. இரு பாலாருக்கும் சர்ப்ப தோஷம் இருக்குமாயின் அப்பொருத்தத்தைத் தவிர்ப்பது நல்லது. அதேவேளை கேது அல்லது ராகு பூர்வ புண்ணிய ஸ்தானத்திலிருக்கும் போது, மற்றத்தரப்புக்கு பூர்வ புண்ணியஸ்தானத்தில் சூரியன், செவ்வாய் போன்ற கிரகங்கள் இருந்தால் புத்திர தோஷம் கொடுக்கும். குரு பார்வை இருந்தால் தாக்கம் குறையும்.

சில ஜோதிடர்கள் லக்கினத்திலிருந்து 07ஆம் வீட்டிற்குள் ராகுபகவான் இருந்தால், சர்ப்பதோஷம் உண்டென கருதுகிறார்கள். ஆனால் ராகுபகவான் 8½ பாகைக்குள் பாவக்கிரகங்களுடன் இணைந்து இருந்தால் தான் சர்ப்பதோஷம் கொடுப்பதாக சில ஜோதிட அறிஞர்கள் கூறுகிறார்கள்.

எது எப்படி இருப்பினும், லக்கினத்தில் கேதுவும் களஸ்திரஸ்தானத்தில் ராகுவும் இருக்கும்பொழுது ஏற்படும் சர்ப்பதோஷம், குடும்ப வாழ்க்கையில் சிலருக்கு குழப்பங்களைத் தரவே செய்கிறது. குரு பார்வை ஏழாம் பாவத்திற்கு இருந்தால் தாக்கம் குறைகிறது.

**காலசர்ப்பதோஷம்**

ராகு, கேதுவிற்குள் அனைத்துக் கிரகங்களும், லக்கினமும் அமைவதையே கால் சர்ப்பதோஷம் என்கிறோம். ஜோதிடத்தில் 30 வயதின் முன்பாக முதற்கட்ட வாழ்க்கையாகவும் அதன் மேற்பட்ட காலத்தை பிற்கட்டவாழ்க்கையாகவும் கருதுகிறோம். மேற்படி தோஷத்தை உடையவர்களுக்கு முதற்கட்ட வாழ்க்கை சோதனையாகவே அமைகிறது. இதுபோன்ற தோஷத்தை உடையவர், கோடீஸ்வரனுக்கு புத்திரனாகப் பிறந்திருப்பினும், இளமைக் காலத்தில் துன்பங்கள் துரத்தவே செய்யும். இத்தகைய தோஷம் உடையவர்கள் பிற்கட்டப் பகுதியில் [illegible] திருமண பந்தத்தில் [illegible] அதிகமானோருக்கு திருமணம் தாமதமாகவே அமைகிறது. மிக இளவயதுத் திருமணம் குழப்பத்தையே தரும். இந்தக் கால சர்ப்ப தோஷம் கொடுக்கும் நிலையில் ராகு, கேதுக்கள் 06ஆம், 12 ஆம் வீடுகளில் அமைவது பல துன்பங்களைத் தரும். தண்டனைகளை அனுபவிக்கும் சூழ்நிலைகளையும் தந்துவிடும்.

முதலாம், 07ஆம் வீடுகளில் இருக்குமானால் திருமணம், காலம் தாழ்த்திக் கொண்டே போகும். குடும்ப வாழ்க்கையிலும் பல துன்பங்களை சந்திக்க வேண்டிய சூழ்நிலையைத் தரும். 02ஆம், 08ஆம் வீடுகளில் அமைவது துணைவரை (கணவர் அல்லது மனைவி) இழத்தல் அல்லது பிரிவு தரும். அதேவேளை மேற்படி தோஷம் இருப்பவர்கள் ராகு கேதுக்களின் தெசா புத்தி காலங்களில் துன்பங்கள் யாவற்றையும் சந்திக்கவும் நேரிடும். அதேவேளை, சஞ்சாரங்களில் ராகு கேதுக்கள் 1½ ஆண்டுகள் பாதகமான இடங்களில் இருக்கும் போதும் தாக்கம் இருக்கும். 18 ஆண்டுகளுக்கு ஒரு முறை நன்மை; தீமைகள் நடைபெறும் நிலையையும் தரும்.

கால சர்ப்ப தோஷம் ஏற்பட்ட ஒருவருக்கு சூரியனுடன் ராகு சேருகின்ற பொழுது கிரகண தோஷத்தைத் தருகிறது. இதுவும் பல பாதிப்புக்களைத் தருகிறது. தாய் உறவில் இடைவெளி, தாயாருக்கு உடல் ஆரோக்கியக் குறைபாடுகளையும் தருகிறது. தந்தையின் உறவிலும் , அல்லது தந்தையின் உடல் நிலையிலும் தாக்கத்தைத் தரும்.

அதேவேளையில் கால சர்ப்பதோஷம் ஏற்பட்ட ஒருவருக்கு சந்திரனுடன் கேது சேரும் பொழுதும் கிரகண தோஷம் தருகிறது. இதுவும் பல பாதிப்புக்களைத் தருகிறது. தாய் உறவில் இடைவெளி, தாயாருக்கு உடல் ஆரோக்கிய குறைபாடுகளையும் தருகிறது. மனதுக்கு காரகன் சந்திரன் கேதுவுடன் இணைகின்ற பொழுது மனதளவில் பல தாக்கங்களை இந்தத் தோஷம் தருகிறது. இது லக்கினத்தில் ஏற்படுமானால், மெலிந்த உடல் ஆரோக்கியக் குறைபாடுகளை அடிக்கடி சந்திப்பவராகவும் இருப்பார்.

காலசர்ப்பதோஷம் ஏற்பட்ட ஒருவருக்கு ஏனைய கிரகங்கள் உச்சம் பெற்று ராகு, கேதுக்களுடன் கூடியிருக்கும் பொழுது, அரசியலில் ஈடுபடும் நிலையையும், அதில் உயர்வை அடையும் நிலையையும் தரும். அதேவேளை சுக்கிரன் களஸ்திரஸ்தானத்தில் ராகுவுடன் சேரும்பொழுது கலப்பு திருமணத்தையும் கொடுக்கிறது.

07ஆம் அதிபன், அல்லது சுக்கிரன் ராகு, கேதுக்களுடன் கூடி பாவக் கிரகங்களின் தொடர்பைப் பெற்றால் பல பெண்களுடன் ஜாதகர் உறவை வைத்துக் கொள்ளும் நிலையையும் கொடுக்கிறது. இதன் மூலமும் குடும்ப வாழ்க்கையில் குழப்பங்கள் ஏற்பட இடம் உண்டல்லவா?

அதேவேளையில் சுக்கிரன் அஸ்தமனம் பெற்று ராகுவுடன் கூடி 11 ஆம் வீடு, அல்லது 11ஆம் அதிபனுடன் தொடர்பு படுவது, அல்லது 8 ஆவது அதிபதி முதலாம்,07 ஆம் வீடுகளில் ராகுவுடன் தொடர்பு படுவது, அல்லது முதலாம், 07ஆம் அதிபதிகளில் ஒருவர் நவாம்சத்தில் நீசம் பெற்றும், அல்லது அக்கிரகங்கள் நவாம்சத்தில் ராகு, கேதுக்களுடன் சேர்ந்திருப்பதும், ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்களைத் தரக்காரணமாகிறது. இவையெல்லாம் நாம் முந்தைய பந்தியில் குறிப்பிட்டது போல் சர்ப்ப சாபத்தின் வினைதான். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத்தில் மிகவும் அழகான குழந்தை



மாமன்னர் அக்பர் ஒரு நாள் அரசவையில் தன் புதல்வருடன் இன்புற்றிருந்த வேளையில் தன் மந்திரிகளை நோக்கி இந்த உலகத்தில் மிகவும் அழகான குழந்தை என் குழந்தை தான். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டார். அவர்களும் ஆம் மன்னா உங்கள் குழந்தை தான் உலகத்தில் மிகவும் அழகான குழந்தை என்றனர். ஆனால் பீர்பால் மட்டும் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்தார். அக்பர் பீர்பாலை நோக்கி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்க அவர் ''மன்னிக்கவும் இந்த உலகத்தில் உங்கள் குழந்தையை விடவும் அழகான குழந்தைகள் உள்ளன ''என்றார். மன்னர் கோபத்துடன் என் குழந்தையைவிட அழகான குழந்தையை எனக்கு நீங்கள் காட்ட வேண்டும். இல்லாவிடில் அரசவைக்கு வர வேண்டாம் என்று கூறினார்.

ஒரு வாரத்துக்குப் பிறகு வந்த பீர்பால் மன்னனிடம் இந்த உலகத்தில் மிகவும் அழுகான குழந்தையைக் கண்டுபிடித்து விட்டேன் என்று கூறினார். மன்னனும் அவருடன் அந்தக் குழந்தையைக் காணவேண்டும் என்று புறப்பட்டார். பீர்ப்பால் ஒரு கிராமத்துக்கு அழைத்துச் சென்று ஒரு குழந்தையைக் காட்டினார். அந்தக் குழந்தை மிகவும் கறுப்பாகவும் பெரிய கண்களையும் சுருண்ட நீண்ட முடியையும் கொண்டு மிகவும் அருவருப்பாகக் காட்சியளித்தது. அது சேற்றுக்குள் விழுந்து புரண்டு மன்னனுக்கு சேற்றை அள்ளி வீசியது.

மன்னரோ பீர்ப்பாலைப் பார்த்து இதுவா உலகத்தில் அழகான குழந்தை? பார்க்கவே அசிங்கமாக உள்ளது எனக் கத்தினார். இதைக்கேட்ட அருகில் இருந்த குழந்தையின் தாய் மன்னனைக் கண்டவாறாக ஏசி, திட்டி தன்குழந்தையைத் தூக்கி முத்தமிட்டு இந்த உலகத்தில் மிகவும் அழகான குழந்தை என் குழந்தைதான் என்று கட்டித் தழுவினார். இதைப் பார்த்த மன்னனுக்கு வியப்பாக இருந்தது. உடனே பீர்ப்பால் மன்னனை நோக்கி இப்போது புரிந்ததா?

இந்த உலகத்தில் உள்ள பெற்றோர்கள் அனைவருக்கும் மிகவும் அழகான குழந்தை அவர்களுடைய குழந்தைகளே. அவர்கள் ஒரு நாளும் தம்முடைய குழந்தைகளை விட்டுக் கொடுக்கமாட்டார்கள் என்று கூறினார். விடயம் புரிந்த மன்னரும் தன் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டார்.

**மிதிலா சிவநாதன்,**
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

## பூனைக்குட்டி



எங்கள் வீட்டுப் பூனைக் குட்டி
தங்கமான பூனைக் குட்டி
அங்கும் இங்கும் ஓடும்
ஆடிப் பாடி மகிழும்
தங்கை தூக்கிக் கொஞ்சுவாள்
தம்பியும் எடுத்துக் கொஞ்சுவான்
வெள்ளி போல வெள்ளைப் பூனை
கொள்ளையான அழகுப் பூனை

உ.நிதுஷா
யாழ். புனித ஜோன்பொஸ்கோ வித்தியாலயம்.

# பொது அறிவு

*01. இதயத்தை மூடியுள்ள உறையின் பெயர்?*
பெரிகார்டியம்

*02. மனிதனால் முதன் முதலில் கண்டு பிடிக்கப்பட்ட உலோகம்?*
தாமிரம்

*03. உப்பினால் ஆன நகரம் எங்குள்ளது?*
போலந்து

*04. கறுப்புக் கோயில் எங்கு கட்டப்பட்டது?*
கோனார்க்

*05. செயற்கை கண்களை அதிகம் தயாரிக்கும் நாடு எது?*
ரஷ்யா

*06. ஒஸ்கார் விருதை ஒரு பொம்மை பெற்றிருக்கிறது அப் பொம்மையின் பெயர் என்ன?*
மிக்கிமவுஸ்

*07. பி.சி.ஜி. தடுப்பூசி எந்த நோய்க்கு எதிரானது?*
காசநோய்

*08. பத்திரிகையில் வெளிவந்த முதல் தொடர்கதையின் பெயர் என்ன?*
டேவிட் காப்பர்ஃபீட்

*09. மனிதனுக்கு அடுத்த படியாக அறிவுத்திறன் மிக்க விலங்கு எது?*
சிம்பன்ஸி

*10. நவீன பொருளாதாரத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?*
அடம்சிமித்

ம.கேதாரணி
நயினாதீவு ஸ்ரீ கணேஷா கனிஷ்ட ம.வி.

## விடை தெரியுமா? 146

### உங்களுக்கும் பரிசில்கள்

1.மாலைதீவின் புதிய ஜனாதிபதி யார்?
2. சிரியா நாட்டின் தலைநகர் எது?
3. உலகின் மிகப் பெரிய அரண்மனை எது?
4. நின்றபடி உறங்கும் மிருகம் எது?
5. ஏழுகுன்று என அழைக்கப்படும் நகரம் எது?

### விடைகள் 144

1. யப்பானியர்கள்
2. 1905 ஆம் ஆண்டு
3. இந்தியா
4. அந்தாட்டிக்கா
5. உதயதாரகை

### வெற்றி பெற்றோர் விவரம் (144)

★ சி.வனோஜா, தரம்-3சி, சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
★ க.கபிலன், தரம் -9, உடுவில் மான்ஸ் ம.வி.
★ சு.கம்ஷாயினி, தரம்-9 எம், ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர்.
★ கு. மாதங்கி, தரம் -4, இணுவில் இந்துக் கல்லூரி
★ பா.நவனீதன், தரம்-7, ஹாட்லிக் கல்லூரி
★ ரா.உஷாந்தினி, தரம்- 9எம், ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர்.

**விடை தெரியுமா?**
தெரிந்தால் 18.02.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.





சு.டிலக்சன்
தரம்-4கே, புத்தூர் இந்து ஆரம்பப்பாடசாலை



செ.கேஷிகன்
சிமாட்கிட்ஸ் முன்பள்ளி, திருநெல்வேலி



உ.நிதுஷா
புனித ஜோன். பொஸ்கோ வித்தியாலயம்



கே.விதுர்சனா
தரம்-4 , சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலை



[illegible]
தரம்-7, சங்கானை சி.ம.வி.



பா.தமிழிசை
தரம்-4, புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை

## ஆசானே...

அறிவுக் கண்ணை திறந்து
வைத்த ஆசானே
அன்பைச் சொல்லிய
ஆசானே
அமிர்தமொழி கூறிய ஆசானே
எமக்காய் உம் நேரத்தைக்
கழித்த ஆசானே
சுமையாய் எம் கல்வியைத்
நாம் தாங்காது
சுகமாய் கற்றுத் தந்த
ஆசானே
எமக்கு அன்பாய் புத்திமதி
கூறிய ஆசானே
எமக்கு ஊக்கத்தைத் தந்த
ஆசானே
எம்மை நல்வழிப்படுத்திப் பல
பட்டங்கள் பெற வைத்தீரே
நீர் வாழ் கவளமுடன்

கு.உத்தமி,
யா/கோண்டாவில் இ.ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநாதைக் காவியங்கள்



உங்கள் தெருக்களில்
எங்கள் திண்ணைகளில்
இன்றும் அலைந்து கொண்டுதானுள்ளது
வானம் கீறி வீழ்ந்த
புதுத்துளிகள்.

வானவில்லின் வண்ணமெடுத்து
வாழ்த்திப் போக யாருமில்லை.

கருவிலிட்டுக் காவல் காத்தவள்
தொலை தூரம் போய்
தொலைந்தே போனதால்
பாதை மாறிய சுவடுகள்
சுடுமண்ணிலும் சுழன்றடிக்கும் காற்றிலும்
சுக்கு நூறாக்கும் அநாதை
வார்த்தைகளிலும்
இதயங்களை குத்திக் கிழித்து
குருதி வழிய வைக்கும்
முட்களின் பாதைகளிலும் மட்டுமே
பதிந்து கொள்கின்றன.

கரம் பிடித்து கைகோர்க்க
கைவிரல்கள் இங்கே காத்திருக்கின்றன

ஆனால்
பிஞ்சுக்கரங்களை பிசைந்து கிள்ள
ஏராளம் இதயங்கள்
இன்றும் ஈரமில்லாமல்..

வெறும் வார்தைகளாலும்
வர்ணப் பூச்சுக்களாலும் மட்டுமே
மேடைகள் நிரம்பி வழிகின்றன

கதவுகளை தாழ்ப்பாள் இட்டு
கனவுகளை வெளியே துரத்தி
பிஞ்சு நிலாக்கள், கண்ணீர்த் துளிகளில்
கரைந்து போக கதவிடுக்குகளின்
வெளியே காக்கவிட்டு
உள்ளே நடந்தேறுகின்றது
சிறுவர் தினங்கள்.

இப்பிள்ளை யாருடயது?
எவனுடையது? எவளுடையது?
வெறும் வினாக்கள் மட்டுமே
வீசிச் செல்ல
விடைகள் கேள்விக் குறிகளாகின்றன.

காலங்களின் வாய்திறந்து- உன்னை
காறி உமிழும் முன்-உன்
பொத்திய காதுகளையும்
மூடிய கண்களையும்
திறந்து கொள் மனிதா

உனக்கு முன்
பல ஒளியிழந்த கண்கள்
உன் கைகளில் உள்ள தீக்குச்சிக்காக......

விளக்கேற்றிவிடு-இந்த
விடுதலை மறந்த விழிகளை
புதியதாய்ப் பிறந்து கொள்
எல்லோருக்குமான ஓர்
புனித கருவறையிலே-இந்த
அநாதைக் காவியங்களுக்காய்...
உன் பேனாக்களில் ஊறியிருக்கும்
திரவத்திற்காய்
நீளட்டும் உன்னை நோக்கி
இக்கலைந்த காவியப் புத்தகங்கள் ...
நீட்டிக் கொள்-உன்
நீளமான விரல்களை

தாரணி.ஞா
கோப்பாய்.

# முகமிழத்தல்



என் வாழ்வின் வர்ணங்கள்
களவாடப்பட்டன.
என் திசைகள் மூடப்பட்டன.
புன்னகைகள் மறுதலிக்கப்பட்டன.
அன்பும் பண்பும் விமர்சிக்கப்பட்டன.

என் காதல் விலை பேசப்பட்டது.
இறுதியாக
என் கவிதை தற்கொலை செய்தது.
எல்லாம் நடந்த பின்
இளமை அழியும் நாளொன்றில்
என்னை என் முற்றத்தில்
இருந்தும் பிடுங்கினார்கள்.
அன்னிய தேசத்தில் எறியப்பட்டேன்.
முகம்தெரியாத வீதிகளில்
அழைத்துச் சென்றார்கள்.
நான்கு சுவருக்குள்
மின்சாரச் சூட்டில் வைக்கப்பட்டேன்.
யாரோ ஒருவனுக்கு
விசா பிரச்சினை முடிவுக்கு வந்தது.
காலை எழுந்து கண்ணாடி பார்த்தேன்.
என் முகம் காணாமல் போயிருந்தது.

வேலணையூர்-தாஸ்

# துன்பம்!..



இதன் வலியை அறியாத
என் இதயம் இன்று
துடித்துக் கொண்டிருக்கிறது.
உன்னை பார்த்ததனால்
துன்பம் எனக்கு சொந்தம்
என்று நான் நினைக்காத
வேளை!...

# ஞாபகங்களோடு!..

உன்னைப் பிரிந்து
நானும் என் இதயமும்
வாழ்வதை விட உன்
நினைவுகளோடு மட்டும்
விடை பெறுகின்றேன்!.....

# மறுஜென்மம்!



மீண்டும் எனக்கு ஒரு
ஜனனம் நிகழ வேண்டும்,
உனக்காக மட்டும்
என் இதயம் துடிப்பதற்காய்

# சமர்ப்பணம்!

உன் ஞாபகங்களை
என்னால் என்
கல்லறையில் மட்டுமே
உனக்காக சமர்ப்பிக்க
முடியும்!....

# சுவாசம்

உன்னைப் பிரியாத
வேளை
என் சுவாசம் நீ என்று
நினைத்தேன்,
உன்னைப் பிரியும் பொழுதில்
என் சுவாசம் நின்று போகும்
என நான் நினைக்காத
வரையில் ....

# இதயம்



இதயம் தனது துடிப்பை
நிறுத்தாத வரைக்கும்
உனக்குத் தெரிய வாய்ப்பில்லை,
என் இதயம் துடித்துக்.
கொண்டது,
உனக்காக என்று....,

சேபியா
முதலிக்கோவிலடி.

# ஏக்கம்



என்றாவது ஒரு நாள்
நீ என்னை புரிந்து கொள்வாய்.
என்று நினைத்தேன்
நீயும் என்னை அழைத்தாய்
[illegible]
உன் வார்த்தைகளை நான்
கேட்காத வரையில் !....



# முதல் சந்திப்பு

என் இதயம் கனவுகளில் இருந்து
உயிர் பெற்று சந்திப்புகளில்
அரங்கேற்றிக் கொண்டது

நானும்
நீயும்
மௌனத்தை நமக்குள்
கலந்தாலோசிக்கச் செய்தோம்
ஏனென்றால்
நமக்குள் புன்னகை
யுத்தம்
நடைபெற்றுக்கொண்டிருந்தது
என்
கண்கள் உன்
புருவங்களில் காதல் கவிதைகளை
பூக்களாய் தூவிக் கொண்டதை
உணர்ந்தேன்

வானத்தின்
மேகங்கள் எம்
சந்திகளில் குடைபிடித்துக்
கொண்டிருந்தது

ஆனாலும்
நனைந்தோம்.........

ஜே.எஸ்.ராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக் காற்றில் 64 ஆண்டுகள்

சந்திரசேகர ஆஷாத்

“திம்புக் கோரிக்கைகள் நாம் ஒரு தேசிய இனம் என்பதற்கான குறைந்த பட்சக் கோரிக்கைகளாகும். அது அங்கீகரிக்க முடியாதென்றால் நாம் ஒரு தேசிய இனம் என்பதை ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை என்பதையே வெளிப்படுத்தப்படும் செய்தியாகும்.

நாம் இப்போது சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கிறோம்; சுபீட்சம் நோக்கிய துரித அபிவிருத்திப் பாதையில் நாம் வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறோம். இப்போது நாம் இலங்கையின் எப் பகுதிக்கும் போகலாம், வரலாம்''

இந்த வார்த்தைகளுக்கும் உண்மைகளுக்குமிடையே எவ்வித தொடர்பும் இல்லாத போதிலும் இவை அடிக்கடி ஜனாதிபதியாலும் அரச அமைச்சர்களாலும் கூறப்பட்டு வருபவை. அவர்களுக்கு எவ்வித குறைவுமற்ற உரத்த தொனியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இவற்றை ஆமோதிக்கத் தவறுவதில்லை.

இன்று ஆட்சியாளர்களுக்கும் அவர்களின் குடை நிழலில் நின்று கொக்கரிப்பவர்களுக்கும் சில விடயங்களில் சுதந்திரம் உண்டு என்பது மட்டும் உண்மைதான். அவர்களைப் பொறுத்தவரை சட்டம், ஒழுங்கு, நியாயம், நீதி, பாதுகாப்பு எல்லாமே அவர்கள் முன் வளைந்து கொடுக்கும் நிலைமையே நிலவுகிறது. கொலை, கொள்ளை, கப்பம் பெறல், பாலியல் கொடுமைகள், அதிகார துஷ்பிரயோகம், லஞ்சம், ஊழல், மோசடி என்பனவெல்லாம் சமூகத்தின் இயல்பான விதிகளாகிவிட்டன. தட்டிக் கேட்பவர்கள் கொல்லப்படலாம். காணாமற் போகலாம், சிறை செய்யப்படலாம், தேசத்துரோகக் குற்றம் சாட்டப்படலாம்.

### மங்கிப் போகும் தமிழர் புகழ்

இது இன்று இலங்கை மக்கள் அனுபவிக்கும் சுதந்திரம். தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் மேல் திணிக்கப்படுபவை. மேற்குறிப்பிடப்பட்டவற்றுடன் சில மேலதிகங்களும் கொண்டவை.

1815 இல் கண்டி ராஜ்ஜியத்தின் வீழ்ச்சியுடன் இலங்கை பிரிட்டனால் முழுமையாகக் கைப்பற்றப்பட்டது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என ஐரோப்பியர் இந்த நாட்டை ஆக்கிரமிக்க முயன்ற போதெல்லாம் சங்கிலியன், மாயாதுன்னை, வீதியபண்டார, கைலை வன்னியன், விமலதர்ம சூரியன், பண்டாரவன்னியன், கீர்த்தி சிறி விக்கிரம ராஜசிங்கன் ஆகியோர் அந்நிய ஆக்கிரமிப்புக்கெதிராக வீரம் செறிந்த போராட்டங்களை நடத்தினர். ஆனால் இலங்கையின் சுதந்திரம் பற்றிப் பேசப்படும் போது அவர்களின் பெயர்கள் உச்சரிக்கப்படுவதில்லை. ஏனெனில் அவர்கள் ஒன்றில் தமிழர்களாக இருந்தார்கள் அல்லது தமிழர்களின் படையுதவி பெற்றோ தமிழர்களுக்குப் படையுதவி வழங்கியோ அந்நிய எதிர்ப்புப் போரை நடத்தினார்கள்.

ஞாயிறு
காரம்

ஆனால், எல்லாளன் என்ற தமிழ் மன்னனுக்கு எதிராகப் போர் செய்து வெற்றி பெற்ற துட்டகைமுனு மகா வீரனாகப் போற்றப்படுகிறான். அதன் அடிப்படையிலேயே எல்லாளன் தோற்கடிக்கப்பட்ட அனுராதபுர மாவட்டத்திலேயே இந்த முறை பிரதான சுதந்திர தின வைபவமும் தேசத்தின் மணிமகுடம் கண்காட்சியும் இடம்பெற்றன. இந்தக் கண்காட்சி தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தைத் தோற்கடித்த பெருமையில் சிங்கள மக்களை மிதக்க வைத்து இனமேலாதிக்க உணர்வைத் திட்டமிட்டு வளர்க்கும் நோக்கம் கொண்டதாகும்.

அதாவது இலங்கையின் இனவாத ஆட்சியாளர்கள் இலங்கை அந்நியர்களிடமிருந்து விடுதலை பெற்ற உணர்வை வளர்ப்பதற்குப் பதிலாகத் தமிழ் மக்களுக்கு எதிராகக் குரோத உணர்வை சிங்கள மக்கள் மத்தியில் ஊட்டவே இந்தத் தினத்தைப் பயன்படுத்துகின்றனர்.

இலங்கை ஆங்கிலேயரால் கைப்பற்றப்படும் போது கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் என மூன்று இராசதானிகளைக் கொண்டிருந்தது. இவை அவர்களால் முழுமையாகக் கைப்பற்றப்பட்ட பின்பு 1883 இல் கோல்புரூக் ஆணைக்குழு மூலம் ஒரே தேசமாக்கப்பட்டது. இன்று மஹிந்த ராஜபக்ஷவால் முன்வைக்கப்படும் ஒரே தேசம், ஒரே மக்கள் என்ற கோஷம் சிங்கள மக்களுக்கு உரியதல்ல. அது ஆங்கில ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து இரவல் வாங்கப்பட்டதாகும்.

### ஒரே தேசமாகக் கிடைத்த சுதந்திரம்

நாடுகள் ஒன்றிணைக்கப்படுவதும் ஒன்றிணைக்கப்படும் நாடுகள் பிரிந்து செல்வதும் வரலாறு சந்தித்திராத புதிய விடயங்களல்ல. ஆனால் இவை ஆட்சியாளர்களின் நோக்கங்களுக்காகவே மேற்கொள்ளப்படுகின்றன. சில சமயங்களில் போராட்டங்கள் மூலம் மக்களின் நலன்களுக்காக மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் இலங்கையில் எமது தேசங்கள் ஆங்கிலேயரின் நிர்வாகத் தேவைகளுக்கு ஏற்பவே ஒன்றிணைக்கப்பட்டன. எனவே, ஆங்கிலேயர் இந்த நாட்டைவிட்டு வெளியேறிய போது நியாயபூர்வமாக இந்த நாடுகள் பிரிந்து சுயாதிபத்தியம் உள்ள தேசங்களாக உருவெடுத்திருக்க வேண்டும்.

ஆனால், இலங்கை சுதந்திரம் பெற்றபோது இருந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் தலைமைகள் ஏகாதிபத்திய சார்பு நிலமானிய சிந்தனைப் போக்கையே கொண்டிருந்தன. எனவே அனைவரும் ஒரே இலங்கை என்ற கோட்பாட்டை ஏற்றுக் கொண்டனர். ஒரே இலங்கை என்ற கோட்பாடு ஒரு ஜனநாயக அரசியலமைப்பில் பெரும்பான்மை சமூகம் தமது பலத்தின் மூலம் ஏனைய சிறுபான்மை சமூகங்கள் மீதான ஒடுக்குமுறையை மேற்கொள்ள வாய்ப்புக்கள் உண்டு என்பதை அன்றைய தமிழ், முஸ்லிம் தலைமைகள் கணக்கில் எடுக்கத் தவறிவிட்டன.

அதன் காரணமாக இலங்கை ஒரே தேசமாகப் பிரிட்டனிடமிருந்து 1948 இல் விடுதலை பெற்றது. இலங்கை சுதந்திரம் பெற்ற அதே ஆண்டிலேயே தமிழ் மக்கள் மீதான முதல் அடி விழுந்தது. அதாவது ஒரே ஒரு சட்டத்தின் மூலம் ஆறு லட்சம் இந்திய வம்சாவழி மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. இதன் காரணமாக மலையகத்தில் அதுவரை நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்படும் 5 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இல்லாமல் போகும் நிலை உருவாகியது. அதாவது 6 லட்சம் மலையக மக்கள் நாடற்றவர்களாக ஆக்கப்பட்டதுடன் நாடாளுமன்றத்தில் தமிழ் உறுப்பினர்கள் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டது.

### குடியுரிமையிலிருந்து நில அபகரிப்பு வரை

குடியுரிமை பறிப்பில் தொடங்கிய இன ஒடுக்குமுறை அடுத்த ஆண்டிலேயே நில அபகரிப்பு என்ற வடிவத்தில் தோற்றம் பெற்றது. விவசாய அபிவிருத்தி என்ற பெயரில் கல்லோயா என்ற சிங்களக் குடியேற்றம் மூலம் திருமலை மாவட்டத்தின் ஒரு பகுதி ஆக்கிரமிக்கப்பட்டது. அதனை அண்டிய பகுதிகளில் மெல்ல மெல்ல இடம்பெற்ற பிற சிங்களக் குடியேற்றங்கள் மூலம் சேருவில என்றொரு புதிய சிங்களத் தொகுதி உருவாக்கப்பட்டது. அதன் மூலம் மட்டக்களப்புக்கும் திருகோணமலைக்குமிடையேயான நிலத்தொடர்பு துண்டிக்கப்படும் நிலையும் உருவாகியது. இவ்வாறே அம்பாறையில் சீனித் தொழிற்சாலையில் பணியாற்றவும் கரும்புப் பயிர் செய்கையில் ஈடுபடவும் கொண்டு வந்து குடியேற்றப்பட்ட சிங்கள மக்கள் இன்று பல்கிப் பெருகினர். அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தைத் துண்டாடி ஒரு புதிய மாவட்டத்தையும் உருவாக்கி விட்டனர். இவ்வாறே தமிழ் மக்களில் இதய பூமியான மணலாற்றில் சிங்களவர்கள் மெல்ல மெல்லக் குடியேற்றப்பட்டதுடன் 1984 இல் மாவலி அபிவிருத்திச் சட்டத்தின் மூலம் பல தமிழ்க் கிராமங்களிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

போர் முடிந்த பின்பும் இராணுவக் குடியிருப்புகள், முன்பு சிங்கள மக்கள் குடியிருந்த இடங்கள், அபிவிருத்தி நடவடிக்கைகள் என வெவ்வேறு வடிவங்களில் தமிழ் மக்களின் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன.

### இனவிரோதச் செயற்பாடு

இவ்வாறு குடியுரிமை, நிலவுரிமை என்பவற்றின் மீது சுதந்திரத்தின் பின் மேற்கொள்ளப்பட்ட இனவாதத் தாக்குதல்கள் போன்றே எமது பொருளாதாரத்தை அழிப்பு திட்டமிடப்பட்டன. இதன் மீது பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சுதந்திரத்தில் முன்பும் சரி பின்பும் சரி விவசாயத்தில் நாம் ஒரு கிராமியத் தன்னிறைவுப் பொருளாதார பலத்தைப் பெற்றிருந்தோம். அதுமட்டுமன்றி மன்னார், வன்னி, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்கள் தென்னிலங்கைக்கு நெல்லை ஏற்றுமதி செய்யுமளவுக்கு வளம் பெற்றிருந்தன. 1960 இன் பின்பு மிளகாய், வெங்காயம், வாழை, முந்திரி, வெற்றிலை என்பனவற்றை உற்பத்தி செய்ததன் மூலம் எமது விவசாயிகள் ஒரு சிறப்பான பொருளாதார நிலைமையை எட்டியிருந்தனர். ஆனால் 1977 இல் இனவிரோத அடிப்படையில் இந்தப் பொருள்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. அதனால் ஏற்பட்ட விலை வீழ்ச்சி காரணமாக எமது உப உணவுப் பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டது. பின்பு போர் காரணம் காட்டப்பட்டுக் கொண்டு வரப்பட்ட உரப் பசளைத்தடை, எரிபொருள் தடை என்பன காரணமாக நெல் உற்பத்தியும் பாதிக்கப்பட்டது. இவ்வாறே காலம் காலமாக அழிக்கப்பட்டு வந்த எமது பொருளாதார பலம் போரின் போது முற்றாகவே துடைக்கப்பட்டது. வளம் பெற்று வாழ்ந்த எமது விவசாயிகள் வறுமையிலும் துன்பத்திலும் வாடுகின்றனர்.

இவ்வாறே கடல் பாதுகாப்பு வலயம், எரிபொருள் தடை, மீன்பிடி உபகரணங்களுக்கான தடை என்பன மூலம் வடபகுதியில் கொடி கட்டிப் பறந்த மீன்பிடித் தொழில் பாழடிக்கப்பட்டது.

1956 இல் தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டு சட்ட பூர்வமாகவே எமது மொழியுரிமை பறிக்கப்பட்டது. இதன் காரணமாகப் பல்லாயிரம் தமிழ் ஊழியர்கள் வேலையிழந்து தெருவில் நின்றனர். எமக்கேயுரிய விகிதாசாரத்தின் படியான வேலைவாய்ப்புக்கள் மறுக்கப்பட்டன. இவ்வாறே இனரீதியான தரப்படுத்தல் மூலம் எமது கல்வி உரிமையும் பறிக்கப்பட்டது.

இதன் பின்பு 1972 ஆம் ஆண்டு, 1978 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டங்கள் மூலம் முற்றாகவே தமிழ், முஸ்லிம் மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகள் ஆக்கப்பட்டனர்.

அடிப்படையில் ஒரு தேசிய இனத்துக்குரிய குடியுரிமை, மொழியுரிமை, நிலவுரிமை, பொருளாதார உரிமை தன் சொந்தக் கலாசாரங்களைப் பேணி வளர்க்கும் உரிமை என்பன சுதந்திரத்தின் பின்பு பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பல்வேறு வடிவங்களிலும் திட்டமிட்டுப் பறிக்கப்பட்டு வந்தமையே வரலாறு.

அதாவது தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற தகைமையிலிருந்து கீழிறக்கப்பட்டு ஓர் இனக் குழுமமாக அவர்களை மாற்றும் முயற்சியே தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் எம்மை நிரந்தர அடிமைகளாக்கும் முயற்சியே முன்னெடுக்கப்படுகிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

### பயங்கரவாத நாமம் சூட்டப்பட்ட போராட்டம்

இதன் காரணமாகவே நாம் எமது தேசியத்தையும் தேசிய இன தனித்துவங்களையும் பாதுகாக்கப் போராடும்படி நிர்ப்பந்திக்கப்பட்டோம். அஹிம்சை வழியிலான போராட்டங்கள் ஆயுத முனையில் ஒடுக்கப்பட்டதால் எமது இனமும் தவிர்க்க முடியாமல் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டது.

ஆனால், துரதிர்ஷ்டவசமாகத் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் பயங்கரவாத நாமம் சூட்டப்பட்டது. எமது மக்களின் உரிமைகளோ, உணர்வுகளோ கணக்கெடுக்கப்படாமலே எமது மக்கள் லட்சக்கணக்கில் கொல்லப்படுவது பொருட்படுத்தப்படாமலே சர்வதேச நாடுகளின் உதவியுடன் எமது ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டது.

இன்று நாம் உறவுகளை இழந்து உடலுறுப்புக்களை இழந்து, சொத்துக்களை இழந்து, எங்கள் தொழில் வளங்களை இழந்து, சகல உரிமைகளும் பறிக்கப்பட்டவர்களாகவும் எஞ்சிக் கிடக்கும் சில உரிமைகளும் தொடர்ந்து பறிக்கப்பட்டுக் கொண்டும் நிர்க்கதியான நிலையில் நிற்கின்றோம்.

இது இலங்கையில் தமிழ் மக்கள் பெற்ற சுதந்திரத்தின் 64 ஆண்டு கால வரலாறு. இந்தக் கொடிய காற்றுத்தான் நாம் சுவாசிக்கும் சுதந்திரக் காற்று எனக் கூறப்படுகிறது.

எனினும் பேச்சு என்ற மாயவலை எம்மேல் விரிக்கப்பட்டுள்ளது. இன்று பேச்சு என்பது எமது சம்மதத்துடன் எமது உரிமைகளைப் பறிக்கும் ஒரு ஆயுதமாகவே இன்றைய அரசால் எதிர்கொள்ளப்பட்டு வருகிறது. அதேவேளையில் ஒருபுறம் பேச்சுக்களை நடத்துவது என்ற பேரில் இழுத்தடிப்பும் செய்து கொண்டும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு, சர்வகட்சிக் குழு என வெவ்வேறு திசை திருப்பல்களையும் முன்வைத்துக் கொண்டும் மறுபுறத்தில் எமது உரிமைகளைத் தொடர்ந்து பறிப்பதும் எமது தேசியத்தின் அடிப்படைகளை அழிப்பதும் நடந்து கொண்டிருக்கின்றன.

### மஹிந்தவின் தீர்மானம்

சுதந்திர தினத்தை அடுத்து வடபகுதிக்கு வருகை தந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திம்புப் பேச்சுக்கள் முதல் இன்றுவரை தமிழர் தரப்பினர் நிறைவேற்ற முடியாத கோரிக்கைகளையே முன் வைக்கின்றனர் எனத் தெரிவித்துள்ளார். அதன் அர்த்தம் தமிழ் மக்களின் அன்றைய கோரிக்கைகள் என்றாலென்ன, இன்றைய கோரிக்கைகள் என்றாலென்ன எவற்றையும் தான் நிறைவேற்றப் போவதில்லை என்பதுதான்.

திம்புக் கோரிக்கைகள் நாம் ஒரு தேசிய இனம் என்பதற்கான குறைந்த பட்சக் கோரிக்கைகளாகும். அது அங்கீகரிக்க முடியாதென்பது நாம் ஒரு தேசிய இனம் என்பதை ஏற்றுக் கொள்ள அரசு தயாரில்லை என்பதையே வெளிப்படுத்துகிறது.

இன்று சிங்கள மேலாதிக்க சக்திகள் நாம் ஒரு தேசிய இனம் என்பதை நிராகரித்து எம்மை ஒரு இனக்குழுவாக்கி நிரந்தர அடிமைகளாக்கி எமது இனத்தனித்துவங்களை அழிக்கும் இன ஒழிப்பை இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றன என்பதுதான் அவர்களின் சுதந்திர தினச் செய்தி. இதுதான் எமது 64 ஆண்டு கால வரலாறு. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேற்றத்துக்கு தடைபோடும் செயற்பாடுகள்



சந்தியா.

பெண் ஒரு போகப் பொருள் அல்ல. பல போகங்களாக உலகை இயக்கிகொண்டிருக்கும் ஜீவன். இவ்வுலகில் வாழ்ந்து நம்மை வாழ்வித்துக் கொண்டிருப்பவள். அத்தகையவள் ஆண்களுக்கு ஈடாக அனைத்துத் துறைகளிலும் சம அந்தஸ்து உள்ளவர்கள் என எழுத்துருவில் சட்ட வரைபுகள் இருந்தாலும் நடைமுறையில் அதனைச் செயற்படுத்துவது அவரவர் கைகளிலேயே தங்கியுள்ளது.

அதிகாரம் என்பது யாரும் வந்து அள்ளித் தருவது அல்ல; தாங்களாக தங்களின் ஆளுமைக்கு ஏற்ப எடுத்துக் கொள்வதுதான். தமிழர்கள் பெண்களை விட ஆண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். பெண்களின் முன்னேற்றத்துக்கும் சமூகத் தலைமை தாங்கலுக்கும் சில பிற்போக்கு சிந்தனையுள்ள ஆண்கள் தடையாக அமைந் ததாலும் அதிகம் பெண்களின் தாழ்வு மனப்பான்மையும் ஏனைய பெண்களின் செயற்பாடுகளுமே தடையாகவுள்ளன. தாழ்வு மனப்பான்மையைத் தகர்த்தெறிய பெண்கள், பெண்கள் சார்ந்த அமைப்புக்கள் முயற்சிக்கின்றன. ஆனால் பெண்கள் மீதான தடைகளை நீக்கப் பெரும் விழிப்பூட்டல் தேவை. சக பெண்களுக்கெதிரான வன் முறைகளையும் வசை பாடல்களையும் பெண்களே தவிர்க்கவேண்டும். சமூக முன்னோடியாகப் பெண் முன்வரும்போது பெண்கள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். முறையற்ற மனச் சலனங்களை ஏற்படுத்தும் சம்பவங்களைத் தூக்கி வீச வேண்டும்.

வரலாற்று ரீதியில் வளர்ந்து முற்றிக் கனிந்துப் போயிருக்கும் பெண் விடுதலைக்கூறுகளையும் வரலாற்று ரீதியான உண்மைகளையும் தகர்ப்புகளையும் கொண்டே உடைத்தெறியப்பட வேண்டிய தேவை இன்று பெண் விடுதலை பேசும் அனைவரினதும் பொறுப்பாகக் காணப்படுகின்றது.

இதேவேளை ஒருவர் சட்டென்று முளைத்த காளாண் போன்று பெண் விடுதலைப் பற்றி பேசவோ, எழுதவோ, நடைமுறைப்படுத்தவோ இயலாது. அதில் யதார்த்தமும் காணப்படாது. பெண்ணை வரலாற்றில் தவறாய் புரட்டிப் போட்ட அத்தனை விடயங்களிலிருந்து மீட்டெடுக்க வேண்டிய தேவை பெண் விடுதலை கொண்டிருக்கிறது.

கருத்தியல்கள், சம்பிரதாயங்கள், பழக்கவழக்கங்கள், கலாசாரங்கள், பண்பாடுகள், அரசியல், மொழி, பொருளாதாரம், சமூகம் என்பவற்றின் அடிப்படையில் பெண் ஒடுக்குமுறை மெதுவாக கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அதனை மிகவிரைவில் திருப்பிப்போட முடியாது. படிப்படியாக எடுக்கப்படும் எத்தனங்களாலே அவற்றைப் புரட்டிப்போடும் பணியைச் செய்யும். வேறுவேறான சமூக நடைமுறை சார்ந்த யதார்த்த நிலைமைகளைச் சரியான முறையில் அணுகிப் பார்ப்பதன் மூலமே அவற்றை வெற்றி கொள்ளமுடியும்.

# வாழ்க்கையை வெற்றிகொள்ளப் போராடுங்கள்

நீங்கள் திறமைசாலியாக இருப்பதைவிட, போராடும் இயல்புள்ளவராக இருப்பதைவிட நிம்மதியானவராக இருக்க விரும்பினால் போராடுங்கள். போராடுவதில்தான் உங்கள் மகிழ்ச்சி இருக்கிறது என்றால் போராடுங்கள். வாழ்க்கை முழுவதும் போராடுங்கள். போராட்டம் தான் வாழ்க்கை என்று முடிவெடுங்கள்.

கிழக்கு நோக்கி காலையில் சூரிய நமஸ்காரம் செய்தால் நமது நிழல் பின்னோக்கி விழும். இருப்பதே தெரியாது. நண்பகல் நேரத்தில் நிழல் தெரியும். அடக்க ஒடுக்கமாகக் காலடியில் இருக்கும். ஆனால் மாலையில் நம்மை விடப் பன்மடங்கு பெரிதாகப் பிரம்மாண்டமாய் வளர்ந்து நிற்கும். வெற்றிகரமான மனைவி கணவனது நிழல்போல் விளங்குகிறாள்.

ஆரம்பத்தில் இளம் வயதில், திருமணமான புதிதில், இருப்பது தெரியாமல் கணவன் பின்பக்கம் நிற்கிறாள். நடுவயதில் கிட்டத்தட்ட அவனுக்குச் சமமாக ஆனால் அவனது காலடியில் ஒடுங்கி நிற்கிறாள். வயது முதிர முதிர அவள் கணவனைவிட பன் மடங்கு வளர்ந்து விடுகிறாள். ஆனால் அப்போதும் அவளது காலடி சம்பந்தத்தை அவள் விட்டு விடவில்லை. மாலை நிழல் போலவே. ஸ்ரீ ராமனை நிழல் போல் தொடர்ந்த சீதையும் இப்படித்தான்.

வாழ்வின் நீண்ட பயணத்தில் முதிர்ச்சி அடைவதில் பெண் உடலாலும் உள்ளத்தாலும் ஆணை விட வேகமாக முதிர்ந்து விடுகிறாள். ஒரு காலகட் டத்தில் மனைவி என்ற நிலையைத் துறந்து கணவனு டைய தாயாகவே மாறிவிடுகிறாள். தாம்பத்தியத்தின் ஒரு கணத்தில் அவன் மகனாக அவள் தாயாக ஆச்சரியமான ஆனந்தம் அங்கே அலை வீசுகிறது. பின்னர் அது நிலை பெறுகிறது.

மிக நல்ல இல்லறத்தின் நிறைவில் மனைவிக்குக் கணவன் மகனாகி விடுகிறான். மனைவி கணவனது தாயாகி விடுகிறாள். இவ்வாறு கணவனைப் புரிந்து கொள்ளும் ஒரு யுத்தத்தை நிகழ்த்தாமல் ஒரு மகனாக மாற்றும் அதிசய அன்பைப் பழைய தலை முறைப் பெண்கள் பெற்றிருந்தனர். இப்போதும் அத்தகைய பெண்கள் உள்ளனர்.எனவே வாழ்க்கையை வெற்றிகொள்ளப் போராடுங்கள்.

# அம்மாவின் வகையொன்றே

சுபா, மானிப்பாய்

ஆயிரம் சொல்லுண்டு அகிலத்தில்
ஆனாலும் ஒன்றுண்டு நெஞ்சத்தில்
அன்புக்குண்டு பலவகை
அம்மாவின் வகையொன்றேதான்
அணைப்புகள் கொடுத்திடும் சுகங்கள்
அன்னையின் அணைப்புக்கு
உண்டோ ஈடு
அன்றவள் இருக்கையில் இல்லை
அறிவு ஏழை என்வசம்
ஆண்டவன் அழைத்திட்ட பின்னாலே
அழுகுது இதயம் வெறுமையாகவே
அனுபவம் தன்னிலே ஒரு சொல் கேளீர்
அருமையாய் பேணி
அம்மாவைக் காத்திடும்
ஆவியாய் அவள் மறைந்த பின்னாலே
அழுது புரளுவதும் ஆயிரம் பேசுதலும்
அமைதியைத் தராது
அடித்தே சொல்லுவேன்.



திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் ''திலகம்'', உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

# பெண்கள் சுயமாக வாழ...



த.நித்தியா.

இன்றைய இளம் பெண்கள் சரியாகச் செயற்பட வேண்டும். படிக்க வேண்டும். உங்கள் காலில் நீங்கள் நிற்பதற்கு, சொந்தமாகத் தொழில் பார்க்க வேண்டும். போலிச் சம்பிரதாயங்களையும், ஆடம்பரத்திலான அதிக ஈடுபாட்டையும் தவிர்த்து, எது தேவை என்பதை உணர்ந்து வாழ வேண்டும்.

முக்கியமாக உங்கள் குழந்தைகளை ஆண் குழந்தை, பெண் குழந்தை என்று பேதம் காட்டாது சமனாக வளருங்கள். ''நீ பெண் குழந்தை; நீதான் விட்டுக் கொடுக்க வேண்டும்'' என்று உங்கள் ஆண் குழந்தைக்கும், பெண் குழந்தைக்குமான தகராறின் போது, நீங்கள் சொல்வீர்களானால், அங்கு நீங்கள் பெரிய தவறு செய்கிறீர்கள். இப்படி நீங்கள் சொல்லும்போது பாதிக்கப்படுவது உங்கள் பெண் குழந்தையின் மனம் மட்டுமல்ல; உங்கள் ஆண் குழந்தையின் மனமும்தான்.

ஆண் குழந்தையின் மூளையில் அது அப்போதே, 'பெண்கள் எதையும் விட்டுக் கொடுக்க வேண்டியவர்கள்தான்' என்று பதிந்து விடுகிறது.

அதுவே நாளடைவில் அக்கா, தங்கை, மனைவி, மகள் எல்லோரும் தனக்கு விட்டுக் கொடுத்து வாழ வேண்டியவர்கள் என அவனை எண்ண வைக்கிறது.

இப்படித்தான் ஒவ்வொரு விடயத்திலும், பெண் பிள்ளைகளுக்கு நீ பெண்ணல்ல எனப் போதிக்கப்படும் விடயங்கள், கூடவே வளரும். ஆண் பிள்ளையின் மூளையில் பெண்கள் இப்படித்தான் இருக்க வேண்டுமெனப் பதியப்பட்டு விடுகிறது.

ஆகவே பெண்களே! உங்கள் பிள்ளைகளை ஆண், பெண் பேதம் காட்டாது, விட்டுக் கொடுத்தலிருந்து சமையல், வீட்டுவேலை, கல்வி, தொழிற்கல்வி, தொழில் மற்றும் ஏனைய வேலைகளிலும் செயற்பாடுகளிலும் சமத்துவத்தைப் பேணி வளருங்கள்.

எந்தக் கட்டத்திலும் உங்கள் பெண் பிள்ளையை நீ பெண் என்று கூறி சமையற்கட்டுக்கும், ஆண் பிள்ளையை வெளி வேலைக்கும் அனுப்பாதீர்கள்.

இன்றைய பிள்ளைகளாவது நாளை, இந்த வேலை ஆணுக்கு, இந்த வேலை பெண்ணுக்கு என்று நினைக்காமல் இருக்க ஆண் பிள்ளைகளையும் சமையற் கட்டுக்கு அனுப்புங்கள். பெண் பிள்ளைகளை வெளி வேலைக்கு அனுப்புங்கள். பெண்களுக்கு நடனமும் பாடலும் தான் என முத்திரை குத்தி வைக்காமல் விளையாட்டு, தற்காப்புப் பயிற்சிகள், கராத்தே போன்றவற்றையும் அவர்களது ஆர்வங்களுக்கு ஏற்ற வகையில் பழக அனுமதி கொடுங்கள்.

உங்கள் வளர்ப்பில், பெண் அடங்க வேண்டியவள், ஆண் அடக்குபவன் என்ற நிலை முற்றாக மாற வேண்டும். இதை ஏன் பெண்களுக்கு மட்டும் கூற வேண்டும் என நீங்கள் எண்ணலாம். பெண்கள் குனிந்து நின்று கொண்டு ஆண்களைப் பிழை கூற முடியாது. நாங்கள் தான் நிமிர வேண்டும்.

நாளைய பெண்கள் சுயமாக வாழ நாங்கள் தான் பாதையமைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறன்கொண்ட மாணவர்களை உருவாக்கியவர் திருமதி பத்மினி செல்வேந்திரகுமார்



## சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம்

29

ஈழத்தின் மரபு வழியான ஆடற் கலையானது பல தசாப்த காலமாக எம் முன்னோரால் சிறப்புற வளர்க்கப்பட்டு வருகின்றது. ஈழத்தமிழர்களில் பெரும்பான்மையானவர்கள் பரத நாட்டியத்தையே கற்றும் கற்பித்தும் வருகின்றனர்.

எனினும் பரத நாட்டியம், கதகளி போன்ற இருவகையான ஆடல் முறைகளையும் கற்றறிந்த ஒருவராகவும் ஆற்றுகையாளராகவும் பல நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கி வருகின்ற, முப்பத்தைந்து ஆண்டு கால அனுபவம் கொண்ட நடன ஆசிரியராகவும் விளங்குபவர் உரும்பிராய் கலைக்கோயிலின் அதிபர் திருமதி பத்மினி செல்வேந்திரகுமார்.

அமரர் நடராசா மற்றும் பூபதி தம்பதியரின் மகளாக 17.10.1952இல் உரும்பிராயில் இவர் பிறந்தார். உரும்பிராய் சைவத்தமிழ் மகா வித்தியாலயம், உரும்பிராய் இந்துக்கல்லூரி போன்ற பாடசாலைகளில் கல்வி கற்ற இவர் குரலிசையாளரான சங்கீதபூஷணம் பொன். தெய்வேந்திரத்தின் மருமகளாவார். குழந்தைப் பருவத்திலேயே ஆடற்கலையில் அளவு கடந்த ஆர்வமுள்ளவராக இருந்த இவர் தனது எட்டாவது வயதிலிருந்து கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையாவிடம் பரதக் கலையைக் கற்றுக் கொள்ளத் தொடங்கினார்.

பல ஆண்டுகளாக ஏரம்பு சுப்பையாவிடம் பரதக் கலையைக் கற்றறிந்த இவர் 1967இல் நடனவியலாளர் அ.வேலானந்தனிடம் கதகளி என்னும் ஆடல் முறையைக் கற்றுக் கொள்ளத் தொடங்கி 1980இல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தனது அரங்கேற்றத்தைச் சிறப்புற நிகழ்த்தியதுடன் அவரது நடனக் குழுவில் முக்கிய நர்த்தகியாக விளங்கினார். அத்துடன் இந்தக் குழுவின் வெளிநாடுகளுக்கான கலைப் பயணங்களையும் சிறப்பித்து வந்தார்.

ஈழத்தின் அனைத்துப் பாகங்களிலும் பல நூற்றுக்கணக்கான நடன ஆற்றுகைகளை வழங்கிய இவர் 1972இல் தென்னிந்தியாவுக்குச் சென்று நடனமேதை கோபினாத்திடம் கதகளியின் நுட்பங்களை மேலும் கற்றுக்கொண்டார். அத்துடன் 1974இல் தமிழகம் சென்று அடையார். கே.லட்சுமணனிடம் பரதக்கலையைப் பயின்று கொண்டார்.

இவ்வாறு தென்னிந்தியாவில் பயின்ற காலங்களில் தென்னிந்தியக் கலைஞர்களுடன் இணைந்து பல ஆற்றுகைகளை வழங்கிய அனுபவத்தையும் பெற்றுக் கொண்ட இவர் தனது கலைப்பணியைத் தாயகத்தில் விரிவுபடுத்தும் நோக்குடன் 1971இல் இவரால் நிறுவப்பட்ட கலைக் கோவில் என்னும் நிறுவனத்தினூடாக மாணவர்களுக்கான நடனக் கல்வியைச் சிறப்புடன் வழங்கி வந்தார். ஆற்றுகையாளராகவும் ஆசிரியராகவும் சிறப்புற்றிருந்த இவர் பல பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியராகவும் கடமையாற்றி வந்தார்.

1977இல் ஆசிரிய நியமனம் பெற்று வவுனியா தமிழ் மகா வித்தியாலயம், கொக்குவில் இந்துக்கல்லூரி போன்ற பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றியதுடன் 1998இல் இருந்து யாழ்.கல்வி வலய நடன பாடத்துக்கான ஆசிரிய ஆலோசகராகவும் இன்றுவரை பணியாற்றி வருகின்றார். அத்துடன் யாழ்.பல்கலைக்கழக நடனத்துறையில் வருகை விரிவுரையாளராகவும் பரீட்சகராகவும் அழைக்கப்பட்டு வரும் இவர் வட இலங்கைச் சங்கீத சபையின் நாட்டியத் துறையின் ஆசிரியர் தரத்துக்கான பரீட்சகராகவும் க.பொ.த சாதாரணதர, உயர்தர பரீட்சைகளுக்கான பிரதான பரீட்சகராகவும் பணியாற்றி வருவதுடன் நடன ஆசிரியர்களுக்கான வதிவிடக் கருத்தரங்குகளையும் நடத்தி வருகின்றார்.

பல நூற்றுக்கணக்கான நடனக் கலாவித்தகர்களை உருவாக்கியிருக்கும் இவரது மாணவர்கள் பலர் சிறந்த ஆற்றுகையாளர்களாகவும் விரிவுரையாளர்களாகவும் ஆசிரியர்களாகவும் விளங்கி வருகின்றனர். 2008இல் இவரால் உருவாக்கப்பட்ட நடன சாகரம் என்னும் காண்பிய இறுவட்டானது சுயமாக நடனக் கலையாற்றலை வளர்த்துக்கொள்ள முற்படுகின்ற திறன் கொண்ட மாணவர்களுக்குப் பெரிதும் பயன்தரக்கூடிய ஒன்றாக உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஏராளமான நாட்டிய நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றிய இவர் கீர்த்தனை, பதம், புஷ்பாஞ்சலி போன்ற நடன உருப்படிகளுக்கு நாட்டிய அமைப்பைப் புதிதாக மேற்கொண்டு வரும் புத்தாக்கத் திறன் கொண்ட ஒருவராகவும் விளங்கி வருவதுடன் புலம் பெயர் நாடுகளிலும் தனது கலைப்பணியை ஆற்றி வருபவர். நீண்ட கால அனுபவ முதிர்ச்சி கொண்ட ஆற்றுகையாளராகவும் ஆசிரியராகவும் விளங்கும் இவர் பட்டங்களையோ, விருதுகளையோ, புகழ் மாலைகளையோ, பொன்னாடைகளையோ விரும்பாத இயல்புடைய நம் நாட்டின் ஒரு சில கலைஞர்களுள் ஒருவராகவும் புதிதாக எதையாவது கற்கவேண்டும், அதனை மாணவர்களுக்கு ஊட்ட வேண்டும் என்னும் நற்சிந்தனை கொண்ட ஒருவராகவும் விளங்கி வருகின்றார்.

நுண் கலைகளுள் நடனக் கலையானது பல்சுவை அரங்காக விளங்கி வருகின்றது. பல ஆண்டுகள் பயிற்சி பெற்ற பின்னரே ஒருவரால் நடன ஆற்றுகையை வழங்க முடியும். எமது ஆற்றுகைக் கலைகளைப் பயிலும் மாணவர்கள் துறைசார் வல்லுநர்கள், ஆர்வலர்கள் முன்னிலையில் அரங்கேற்றம் காண்பதும் அவர்களது கருத்துக்களின் படி தம்மை வளப்படுத்திக் கொள்வதும் எமது நீண்டகாலக் கலைப் பண்பாடாக இருந்து வருகின்றது. அரங்கேற்றம் என்பது பல ஆண்டுகள் பெற்ற கடினமான பயிற்சியின் முடிவில் நிகழ்த்தப்படுகின்ற மாபெரும் கலை நிகழ்வாகவே எம் முன்னோரால் நிகழ்த்தப்பட்டு வந்துள்ளதை நாம் நேரிலேயே கண்டுள்ளோம்.

ஆனால், தற்காலத்தில் நடைபெறும் அரங்கேற்றங்கள், கலைநிகழ்வுகளாக அல்லாமல் கொண்டாட்டங்களாகவே நடத்தப்படுகின்றன. உறவினர்களும் ஊரவரும் நண்பர்களும் ஒருவரை ஒருவர் கண்டு மகிழ்ந்து, உண்டு மகிழ்ந்து, ஊர்ப் புதினங்களையும் ஒருவருடன் ஒருவர் பகிர்ந்து கொள்ளும் களியாட்ட நிகழ்வாகவே யாழ்ப்பாணத்தில் தற்கால அரங்கேற்றங்கள் நடந்து முடிகின்றன. மேடையில் என்ன நடைபெறுகின்றது என்பதை கவனிக்க முடியாத வகையில் ஒருகையில் வடையும் மறுகையில் தேனீருமாகச் சபையோர் காணப்படுவதால் மண்டபமானது அமைதியற்றதாகவும் கலைத்துவம் இழந்ததாகவும் மாற்றம் பெறுகின்றது. அதைவிட பிரதம விருந்தினராக, சிறப்பு விருந்தினராக, கௌரவ விருந்தினராக அழைக்கப்படுவோர் கலைத்துறையில் சிறிதளவு கூட அறிவற்றவர்களாக இருப்பதால் அவர்கள் பேசும் முறையும் அவர்களால் எடுத்துரைக்கப்படும் கருத்துக்களும் முற்றுமுழுதாக அரங்கேற்றம் என்பதன் கருத்தியிலையே சிதறடித்து விடுகின்றது. எனவே எதிர்காலத்தில் எமது புனிதமான கலைகளின் அரங்கேற்றங்களைத் தூய்மை கெடாமல் நிகழ்த்துவதற்கு அனைவரும் முன்வர வேண்டும் எனத் தனது கருத்துக்களை இவர் கூறுகின்றார். ✱

**வசாவிளான் தவமைந்தன்**

# அவரை இலைச்சாறு தலை வலிக்குச் சிறந்தது

### கோழி அவரை

**வேறுபெயர்** - கோழிக்கொடி, குக்குட அவரை, சேவலவரை

**தாவரவியற் பெயர்** - Canavalia ensiformis (கனவாலியா என்சிபோமிஸ்)

**குடும்பம்** - Papilionaceac (பப்பிலியோனேசியே)

**சிங்களப் பெயர்** - பல் அவர

**சமஸ்கிருதப் பெயர்** - விரிகட் சிம்பி

**ஆங்கிலப் பெயர்** - Throad bean

இது நீண்டு சுற்றிப்படரும் கொடி. பல்லாண்டுத் தாவரம். தண்டு வைரமானது. முக்கூட்டிலைகள். இலைகள் முட்டை வடிவானவை. பூக்கள் வெண்மை நிறம். காய்கள் அவரைக் காய் போன்றது.

**மூலக்கடுப்புக்கு**

இதன் இலைச்சாற்றைத் தயிருடன் கலந்து 10 - 15 மி.லீ அளவில் கொடுத்துவர வயிற்றுக் கடுப்பு, மூலக் கடுப்பு என்பன மாறும்.

**கிரந்தி, கரப்பன் புண்களுக்கு**

இலைச் சாற்றுடன் நல்லெண்ணெய் சமவளவு கலந்து காய்ச்சிய எண்ணெயைப் பூசிவர கிரந்தி, கரப்பன், சொறி, சிரங்கு என்பன நீங்கும்.




### அவரை

**வேறு பெயர்** - சிம்பை, நகுலி

**தாவரவியற் பெயர்** - Dolichos Lablab (டொலிகோஸ் லப்லப்)

**குடும்பம்** - Papilionaceae (பப்பிலியோனேசியே)

**சிங்களப் பெயர்** - அவர

**சமஸ்கிருத பெயர்** - நிஷ்பவ

**ஆங்கிலப் பெயர்** - Country Bean

கொடி சுற்றியேறும். கூட்டிலைகள். முச்சிற்றிலைகள் முட்டையுருவானவை.

பூக்கள் வெள்ளை, சிவப்பு, ஊதா நிறம். காய் அவரைக்காய் போன்றது.

அவரையில் பனியவரை, சிற்றவரை, சீனியவரை, செவ்வவரை, நகரவரை, வெள்ளவரை, பேரவரை, கொத்தவரை என்று பல பேதங்களுண்டு.

அவரைப் பிஞ்சு பத்தியத்திற்கு மிகவும் உகந்தது. குழந்தை பெற்ற தாய்மார்கள், கடும் நோய்களிலிருந்து தேறிவருபவர்கள் இதனைக் கறியாகச் சமைத்துண்ண நன்மை பயக்கும்.

**நாட்பட்ட புண்ணுக்கு**

அவரையிலைச் சாற்றுடன் சிறிது சுண்ணாம்பு, சிற்றாமணக்கெண்ணெய் என்பவற்றைக் கலந்து பூசிவர மாறும்.

**நாட்பட்ட கழிச்சலுக்கு**

அவரையிலைச் சாறுடன் கற்கண்டு சேர்த்துக் குழம்பு பதம் காய்ச்சி எடுத்து பாக்களவு உண்டுவர சீதக்கழிச்சல், நாட்பட்ட கழிச்சல், வயிற்றுப்போக்கு என்பன மாறும்.

**தலைவலிக்கு**

ஒரு வெள்ளைத் துணியை அவரையிலைச் சாற்றில் நனைத்து நெற்றி மேல் போட்டுவர தலைவலி, தலைக்கனம் என்பன நீங்கும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D. (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 201




அனுப்புபவர் பெயர்:......................................

விலாசம்:......................................

......................................

கையொப்பம்:......................................

### இடமிருந்து வலம்

1.முழு இருட்டு நாள்
5.வண்டி
7.சாமர்த்தியசாலி
9.சாப்பிடு
10.நாடியில் வளர்வது
11.கட்டிப்பிடி
12.அருளாளன்
14.வேகம்
15.கூரையின் உச்சி
16.எட்டுமுறை பத்து
18.பன்மையைக் குறிக்கும் விகுதி/போதை தரும் பானம்
19.அணி
20.மூன்று
21.தீர்ப்பளிப்பவர்
23.முறையீடு
24.துண்டிக்கப்பட்ட பகுதி

### மேலிருந்து கீழ்

1.அயர்ச்சியால் வருவது
2.மச்சாள்
3.அரைக்கும் இயந்திரத்தின் ஒரு பகுதி
4.பேய்
5.நிணம்
6.வீட்டின் முன்புறம் அமைந்திருப்பது
8.கம்பு
11.தலைவன்
13.வனம்
14.விழி
15.முன்புறத் தோற்றம்
16.ஏழு தட்டவைகள் பத்து
17.வேகம்
19.பாய்
21.தண்ணீர்
22.பலம்

✱ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

✱ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 199 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) கதிர்காமம் (6) வட (7) தறி (8) ஆண்
(9) சம்பல் (11) கரடி (12) ஓலம் (13) கடகம்
(15) பசு (17) அண்ணல் (18) சம்பா (19) கணம்
(20) பல் (21) தின் (22) குடும்பம்

**மேலிருந்து கீழ்**

(1) கவசம் (2) திடம் (3) காதல் (4) மறி
(5) ஆண்டி (8) ஆரம்பம் (10) பட்டணம்
(11) கல் (12) ஓம் (13) கண்ணன் (14) கல்
(16) சுபாவம் (17) அகதி (18) சலம் (20)படு

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 201**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 22.02.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாகத்தபாலட்டையில்ஒட்டிஅனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.199 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 26.02.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 199 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
ப.எல்க்கா றூடித்,
இல.645/1, B , கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
சி.செனனியா,
அளம்பில், முல்லைத்தீவு.

**3 ஆம் பரிசு**
செல்வி. சி.சுகந்தினி,
உபதபாலகம், நாகர்கோவில்.

**4 ஆம் பரிசு**
யோகராசா ஜெகதீஸ்வரி,
சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

**5 ஆம் பரிசு**
இ.டெனிசியா,
யா/சென்.மேரிஸ் வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

மேரி லிவினியா யோகராஜா,
இல.32, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

சு.அருள்செல்வி,
4 ஆம் கட்டை, பூநகரி, கிளிநொச்சி.

சி.லாவண்யா,
முதலாம் வட்டாரம், அல்லைப்பிட்டி.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர்களுக்கு [illegible] காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்கு [illegible] அனுப்பிவைக்கப்படும்.*

# ஆசுகவி.....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழியிலே ஓர் அழகு மங்கையைக் கண்டான். ஊரும் பேரும் கேட்டான். ஒன்றும் பேசாமல் தலை கவிழ்ந்து நின்றாள் அம்மங்கை. அது கண்ட மன்னன்,

ஊமையோ வாயிலையோ ஓர் வசனம் நீ உரைத்தால்

''தீமையோ வாய்திறந்து செப்பினால் ஆகாதோ?''

என்று கேட்க... அப்போதும் வாய் திறக்காமல் நின்றாள். அப்போது,

''வெள்ளரிக் காயா? விரும்பும் அவரைக் காயா?

உள்ள மிளகாயா? ஒரு பேச்சுரைக்காயா?''

எனச் சிலேடைக்கவி பாடியதும், நங்கை புன்னகை புரிந்தாள் எனக் காதற் பிரபந்தம் பாடினார் புலவர்.

மேலும், நெல்லையம்பதி காந்திமதி அம்மன் பிள்ளைத் தமிழ் பாடிய அழகிய சொக்கருக்குத் தாம் அணிந்திருந்த வைரக் கடுக்கனைக் கழற்றி அணிந்து மகிழ்ந்தார் மன்னர் முத்துச்சாமி வள்ளல்.

*''வாராதிருந்தால் இனி நானும், வடிவேல் விழிக்கு மையெழுதேன்*
*மதிவாள் நுதற்குத் திலகமிடேன், மணியால் இழைத்த பணி பூணேன்*
*பேரா தரத்தினொடு பழக்கம் பேசேன், சிறிதும் முகம்பாரேன்*
*பிறங்கு சுவைப்பால் இனிதூட்டேன், பிரியமுடன் ஒக்கலையில் வைத்துத்*
*தேரார் வீதி வளங்காட்டேன், செய்ய கனிவாய் முத்தமிடேன்*
*திகழு மணித் தொட்டிலில் ஏற்றித், திருக்கண் வளரச் சீராட்டேன்*
*தாரார் இமவான் தடமார்பில், தவழும் குழந்தாய் வருகவே!*
*சாலிப் பதிவாழ் காந்திமதித், தாயே வருக! வருகவே!''*

சொக்கரின் இந்தப் பிள்ளைத் தமிழ் வள்ளலின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது.

*''செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம்*
*செல்வத்துள் எல்லாம் தலை''*
*[குறள் 411]*

என்று அக் கடுக்கனைப் புகழ்ந்து, வள்ளலை வாயார வாழ்த்தினார் சொக்கர். அவரது ஆசு கவிதைக்கு வாய்ப்பாய் அமைகிறது மேற்படி குறள். ✱

# புதுமை....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றேன். அழுது கொண்டிருந்தவள் சட்டென நிமிர்ந்தாள். இவ்வளவு நேரமும் வெறுமையாய் இருந்த கண்களில் பயத்தின் சாயல். அவ்வளவு துன்பத்துக்குள்ளும் என் மனசுக்குள் சின்னதாய் ஒரு மத்தாப்பு. அவளின் கண்கள் முன்னைய கண்களாகவே உணர்ச்சியைக் காட்டத் தொடங்கி விட்டனவே.

திடீரென, "அப்படிச்சொல்லாதேங் கண்ணா. எனக்கெண்டு ஒருத்தரும் வேண்டாம். எனக்காக இருக்கிறவங்கள ஏதோ ஒரு வகையில் பறிக்கிறதெண்டு யமன் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறான். நான் நேசிக்கும் ஒவ்வொருவரையும் இழந்து கொண்டே இருக்கிறேன். உங்களையும் இதில் இழக்க நான் விரும்பேல்லை. நான் தனியாக வாழவே விரும்புகிறேன். இனிமேல் வேறெவரையும் காதலிக்கவோ கல்யாணம் செய்யவோஎண்ணமில்லை'' என்றாள்.

என் நெஞ்சை எதுவோ அழுத்தியது. '' துளசி நீ சின்னப்பிள்ளை. இந்த வயசில எல்லாருக்கும் காதல் வாறது தான். ஆனா எல்லாக் காதலுமே வெற்றியானதில்லை. இதையொரு கனவா நினைச்சு விஷ்ணுகனை நீ மறக்கோணும். நீ திருமணம் செய்து வாழவேணும். நான் அதை நடத்தி வைப்பேன்'' என்றேன். அவள் சிரித்தாள். ஏன் சிரிக்கிறாள் என்று புரியவில்லை மௌமாக நின்றேன். '' அண்ணா எந்த ஒரு பெண்ணுமே உண்மையான அன்பை கணவன் மேல் வைத்திருந்து அவள் விதவையாக நேர்ந்தாலும் பிறகு மறுமணம் செய்ய மாட்டாள். செய்யவும் கூடாது. அப்படி செய்யிறவையை நான் ஆறறிவுள்ளவர்களாக நினைக்கிறதுமில்லை. பெண்களுக்கு மட்டும் தான் இப்படி எண்டு சொல்ல முடியாது. ஆண்களுக்கும் இது பொருந்தும். பெண் விடுதலையிலேமறுமணமும்ஒன்றெண்டு சொல்லிறதில எனக்கு உடன்பாடில்லை. மனசுக்குப் பிடிக்காதவனையோ, பிடிக்காதவளையோ கட்டாயத்தில் திருமணம் செய்து அவர்களை இழந்தால் மறுமணம் என்பது சாத்தியம். அது நியாயமும் கூட. ஆனால் உண்மையான அன்போட வாழ்க்கையை வாழ்ந்தவர்களால இதை ஏற்க முடியாது. எங்கட காதல் வயசுக் கோளாறாலே வந்தது இல்லநானும்விஷ்ணுவும்உண்மையா நேசிச்சோம். இன்னமும் நேசிப்போம். எனக்கு இனி திருமணம் நடப்பதாக இருந்தாலும் கூட அதுவும் ஒரு வகையில மறுமணம் தான். தயவு செய்து எங்கடை உண்மையான அன்பை களங்கப்படுத்த வேண்டாம்'' என்று படபடப்புடன் கூறி முடித்தாள்.

துளசி கூறியதைக் கேட்ட எனக்கு இவளது வெறுமையான வாழ்வை எண்ணி மனம் கலங்கினாலும் ஏதோ ஒருவகையில் திருப்தியாகவும் இருந்தது. என்னைக் காதலித்துக் கல்யாணம் செய்வதாய் உறுதிதந்த அந்த அழகி என்னை என் அன்பை என் காதலைப் புரிந்து கொள்ளாமலே தூக்கி எறிந்த வேதனையை அப்பொழுது எண்ணமிட்டேன். மனங் கலங்கினேன். உள்ளத்தால் உடலால் ஒன்றிவிட்டோம் என்றுரைத்தாலும் அவள் தன் செயலால் காதலை அவமதித்து விட்டாள். எனது இனத்துக்காக மக்களுக்காக நான் சிறை சென்ற போதே அவளது பொய்மையான காதல் வெளிப்பட்டது. பணம், பொருள், பதவி, நோக்கித் திரும்பிய அவளது ஆசை என்னை, ஏமாற்றிவிட்டது. அவள் காதலி அல்ல என்பதை விளங்க வைத்த சிறைவாசத்தை என்னால் மறக்க இயலாது. சிறையிலிருந்து வெளிவந்து என்னைச் சிந்திக்க வைத்த இந்த நாள் துளசியின் காதலனை எண்ணிப் பெருமைப்பட்டேன். துளசியைப் போல் என்னைக் காதலித்தவள் இல்லையே என்ற ஆதங்கம் எனக்குள்ளாக இவளைத் தங்கையாய் எனக்கு அறிமுகப்படுத்திய இறைவனுக்கு நன்றி கூறினேன். அவளையும் அவள் கண்களையும் ஒரு முறை பார்த்து நின்றேன். அவள் கண்களில் இப்போது வெறுமை தெரியவில்லை. உறுதி தெரிந்தது. என் நெஞ்சமும் வெறுமையற்றுப் பூரித்திருந்தது. கண்களால் மட்டுமல்ல கருத்தாலும் அவள் என்னைக் கவர்ந்து கொண்டாள். அவள் தனது தீர்மானத்தில் உறுதியை நிலைக்கச் செய்யும் வழிகளையே தேடினாலும் அவளுக்கென்றொரு வாழ்க்கை அமைய வேண்டுமே என்ற ஆவலே என்னுள் நிறைந்தது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்பனா

# தீராத சோகமும் ஆறாத வடுக்களும்



கிழக்கு மாகாண மக்கள் இயற்கையின் சீற்றத்துக்கு மீண்டும் ஆளாகியுள்ளனர். கடந்த சில தினங்களாகத் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையால் அவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

கிழக்கு மாகாண மக்கள் தொடர்ச்சியாக இதுவரை தம்மை வாட்டிவதைத்த துன்பங்களில் இருந்து ஓரளவுக்கு மீண்டெழுந்து வரும் நிலையில் அண்மைய இயற்கையின் சீற்றம் அவர்களின் வாழ்வில் மீளமுடியாத அளவுக்கு வடுக்களை ஏற்படுத்திவிட்டது. சுனாமி அனர்த்தத்தால் ஏற்பட்ட துன்ப, துயரங்களில் இருந்து ஓரளவு மீண்டு இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். இந்த நிலையில் அவர்கள் தொடர்ந்து பெய்யும் பெரு மழையால் தம் உடமைகளை இழக்க நேர்ந்துள்ளது. அந்தவகையில் கிழக்கு மாகாண மக்கள் இனி எப்போது தமது வாழ்வில் விடிவு காலம் பிறக்கும் என்ற ஆதங்கத்துடன் வாழ்வைக் கழிக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் பெரு மழையால் பல இடங்களில் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்க நேர்ந்துள்ளது. மழை காலம் முடிந்துவிட்டதாக நினைத்து தமது விவசாய முயற்சிகளை ஊக்கத்துடன் மேற்கொண்ட மக்களுக்கு தற்போதைய பெரு மழை பேரிடியாக அமைந்துவிட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் மீள்குடியமர்த்தப்படாமல் நலன்புரி நிலையங்களில் வாழும் சம்பூர் மக்களின் அவலயத்தைச் சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல. அண்மைய மழையால் பெரிதும் பாதிக்கப்பட்ட இவர்களை மீண்டும் துரத்துகிறாள் இயற்கை அன்னை.

இலங்கையின் இனப் பிரச்சினை விடயத்தில் சம்பூர் பிரதேசம் பல வரலாற்று அடையாளங்களைக் கொண்டுள்ளது. முப்பது வருடப் போரை முடிவுக்குக் கொண்டு வந்ததாக பறைசாற்றும் அரசு, சம்பூர் மக்களின் பல பிரதேசங்களை உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் கிளிவெட்டி, மணற்சேனை, பட்டித்திடல், கட்டைபறிச்சான் ஆகிய இடங்களில் உள்ள அகதி முகாம்களில் இன்றும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சொந்த இடத்தில் குடியமர்ந்தும் மழைகாலத்தில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ள நிலையில் , அகதி முகாம்களில் வாழ நேர்ந்துள்ள மக்கள் பெருமழை காரணமாக எத்தகைய பாதிப்புக்களை எதிர்கொள்வர் என்பதை வார்த்தைகளால் விவரித்துவிட இயலாது.

திருகோணமலை மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் கடல் கொந்தளிப்பும், கடலரிப்பும் ஏற்பட்டுள்ளமையால் பல மீனவக் குடும்பங்கள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. மீனவர்களுக்கு தனது வளத்தை அள்ளிக் கொடுத்த கடல்தாய் கூட தனது கோரத் தாண்டவத்தால் மக்களை வாட்டி வதைப்பதில் திருப்தி காண்கிறாள் போலும்.

தொடர்ந்து பெய்கின்ற மழையால் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கூட அறுவடை மேற்கொள்ள இயலாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அறுவடையை மேற்கொள்வதற்கு தயாரான நெற் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் அறுவடையை மேற்கொள்ள முடியாமல் விவசாயிகள் திண்டாடுகின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பிரதேசத்தில் அதிகளவு நெல் வயல்கள் கடுமையான சேதத்துக்கு உள்ளாகியுள்ளன.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தொடர்ந்து பெய்துவரும் அடை மழையால், மக்களின் அன்றாட நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு மாவட்டங்களிலும் இயங்கும் பாடசாலைகளில் மாணவர்களின் வருகை வெகுவாகக் குறைவடைந்துள்ளதாகவும் பாடசாலைகளின் அதிபர்கள் தெரிவிக்கின்றனர். இந்த மாவட்டங்களில் உள்ள பல இடங்களில் குடியிருப்புக்களுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளது. இதனால் அங்கு வாழும் மக்கள் வேறிடங்களுக்கு இடம்பெயர்ந்து செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அபிவிருத்தி என்ற பெயரில் பல மக்கள் நலத் திட்டங்களை முன்னெடுக்கின்றோம் என்று கூறிவரும் அரசு, இயற்கையின் பாதிப்பில் மீண்டும் மீண்டும் பாதிக்கப்படும் கிழக்கு மாகாண மக்கள் விடயத்தில் அக்கறை கொள்வதில்லை. வெள்ளத்தால் பாதிக்கப்படும் மக்களுக்குத் தற்காலிக இருப்பிடங்களையும், உலர் உணவுப் பொருள்களையும் மட்டும் வழங்கினால் போதும் என்று நினைக்கும் அரசு, அனர்த்தப் பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் முன்னேற்பாட்டுத் திட்டங்கள் எதனையும் மேற்கொள்ள முயற்சிப்பதில்லை.

பொது மக்கள் தொடர்ந்து இயற்கை அனர்த்தங்களில் பாதிப்படையாது வாழ்வதற்கான சூழலை இனியாவது ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே அப்பகுதி மக்களது எதிர்பார்ப்பாகும். கிழக்கு மாகாண மக்களுக்கு இனியாவது விடிவுகாலம் கிட்டுமா? ★

# பதவியைப் பறித்த ஆபாச மோகம்

யமுனா

நாட்டில் இன்று இளம் தலைமுறையினர் மத்தியில் கலாசார சீர்கேடுகள் பெருமளவில் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இது குறித்து ஊடகங்களில் அவ்வப்போது தகவல்களும் வெளிவந்து கொண்டு தான் இருக்கின்றன. நாட்டைக் கட்டிக்காக்க வேண்டிய எமது எதிர்காலத் தலைமுறை இன்றைய இளம் சமுதாயம் தான். எனவே அவர்களது எதிர்கால வாழ்வு எவ்வாறு சுபீட்சமடையும்? அவர்களை நல் வழிப்படுத்துவது இன்றைய காலத்தின் தேவையாகும்.

அதிகமான இளையோர் மத்தியில் பரவிவிட்டுள்ள ஆபாச மோகம் இன்று பெரும் சமூகச் சீர் கேடாக மாறி வருகின்றது.

இப்போது பெரும்பாலான இளையோர் மத்தியில் கைத்தொலைபேசிப் பாவனை சாதாரணமான ஒன்றாக வந்துவிட்டது. அதுவும் அவை நவீன தொழில் நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டவையாகும். ஆபாசப் படக் காட்சிகளை இதன் மூலமாகத் தான் அதிகமாக இளைஞர்கள் பார்க்க வசதி அமைகின்றது. இதனால் ஆபாசப் படக் காட்சிகளைப் பதிவு செய்து வைத்திருப்போரை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தும் சம்பவங்கள் அதிகமாக இடம்பெற்று வருகின்றன.

இத்தகைய ஆபாசக் காட்சிப் பதிவுகளை வைத்திருத்தல் சட்டப்படி குற்றமாகும்.

இது ஒருபுறமிருக்க சட்டசபை நிகழ்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையில் சட்டசபை உறுப்பினர் மூவர் ஆபாசப் படப் பதிவுகளைக் கைத்தொலைபேசி மூலம் பார்த்த அதிர்ச்சிகரமான சம்பவம் ஒன்று அண்மையில் இந்தியாவில் இடம்பெற்றுள்ளது.

இந்தியாவின் தென் மாகாணங்களில் முதன் முதலாக கர்நாடகத்தில் அரசமைத்த பாரதீய ஜனதாக் கட்சியின் அமைச்சர்கள் பலர் ஆரம்பம் தொடக்கம் பல சர்ச்சைகளில் சிக்கி வருகின்றனர். முன்னாள் முதல்வர் எடியூரப்பா உட்பட்ட பலர் நில மோசடி உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் பேரில் தாமாகப் பதவி விலகியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து தற்போது கைத்தொலைபேசியில் ஆபாசப் படம் பார்த்த சர்ச்சை காரணமாக பா.ஜ.க. அமைச்சர்கள் மூவர் தமது பதவிகளை ராஜினாமாச் செய்துள்ளனர்.

கர்நாடக சட்டசபையில் கடந்த 7 ஆம் திகதி கூட்டம் நடந்து கொண்டிருந்தது. இதன்போது காரசாரமான விவாதம் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. சபை நிகழ்வுகளை தனியார் தொலைக்காட்சி ஒன்று பதிவு செய்து கொண்டிருந்தது. அந்த வேளையில் கூட்டுறவுத்துறை அமைச்சர் லட்சுமணன் சவதி, தமது கைத்தொலைபேசியை வயிற்றின் கீழ் மறைத்து வைத்துக் கொண்டு அதையே பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அவர் அருகிலிருந்த மகளிர் நலத்துறை அமைச்சர் சி.சி. பாட்டீலும் லட்சுமணன் சவதியின் கைத்தொலைபேசிப் திரையை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்தத் தனியார் தொலைக்காட்சி கமரா இயக்குநர் அந்தக் காட்சியை அப்படியே பதிவு செய்து கொண்டார். அதில் குறிப்பிட்ட அமைச்சர்கள் இருவரும் கைத்தொலைபேசித் திரையில் ஆபாசக் காட்சிகளைப் பார்த்துப் ரசித்துக் கொண்டிருந்தமை தெளிவாகக் ஒளிப் பதிவாகி இருந்தது.

சட்டசபைக் கூட்டம் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போது தொடர்ந்து 15 நிமிட நேரம் அவ்விருவரும் ஆபாசப் படக் காணொளியைத் திரும்ப திரும்பப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இந்தக் காட்சிகளை தமது கைத் தொலைபேசிக்கு அனுப்பி வைத்தவர் துறைமுகம், அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை அமைச்சர் கிருஷ்ணபாளேமர் தான்.

இவ்வாறு அமைச்சர்களின் இந்தக் காணொளியை தனியார் தொலைக்காட்சி கமரா பதிவு செய்ததை அடுத்து அவர்களது நாகரீகமற்ற செயற்பாடு வெளிச்சத்துக்கு வந்தது. இதனால் பெரும் சர்ச்சை நிலவியது. இந்தச் சம்பவத்தால் அதிர்ச்சியடைந்த பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் நிதின்கட்கரி, கர்நாடக முதல்வர் சுதானந்த





லட்சுமண் சவதி | கிருஷ்ண பாலேமர் | சி.சி.பாட்டீல்

கொடாவிடம் குறிப்பிட்ட சம்பவம் குறித்து பேசினார். அமைச்சர்கள் மூவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இதனையடுத்து முதல்வர் சதானந்த கொடா முன்னாள் முதல்வர் எடியூரப்பா, பா.ஜ.க மாநிலத் தலைவர் கே.எஸ். ஈஸ்வரய்யா உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் பங்கேற்ற அவசர ஆலோசனைக் கூட்டம் மறுநாள் திடீரென நடைபெற்றது. இதன்போது சர்ச்சைக்குரிய அமைச்சர்கள் மூவரையும் ராஜினாமாச் செய்யுமாறு வலியுறுத்தப்பட்டது. கட்சித் தலைமை அறிவுறுத்தியதன்படி அவர்கள் மூவரும் தமது ராஜினாமாக் கடிதங்களை முதல்வர் சதானந்த கொடாவிடம் அளித்தனர். அதனை ஏற்றுக் கொண்ட முதல்வர் அவற்றை ஆளுநருக்கு அனுப்பி வைத்தார். அந்த பதவி விலகல் கடிதங்களை ஆளுநரும் ஏற்றுக்கொண்டதுடன் சர்ச்சைக்குரிய அந்த விடயம் முடிவுக்கு வந்தது. இந்த நிலையில் அமைச்சர்கள் மூவரும் செய்தியாளர்களிடம் சம்பவம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில்;

''கட்சிக்கும் ஆட்சிக்கும் தர்மசங்கடத்தை ஏற்படுத்தக் கூடாது என்பதால் நாம் மூவரும் பதவியை ராஜினாமாச் செய்துள்ளோம்'' என்று தெரிவித் தனர். அமைச்சர் சவதி இது பற்றிக் குறிப்பிடுகையில், ''இந்தச் சம்பவம் குறித்த விசாரணைக்கு உத்தரவிடுமாறு பேரவைத் தலைவர் கே.ஜி. போப்பையாவைக் கேட்டுக்கொள்வோம். நாம் எந்தத் தவறும் செய்யவில்லை'' என்று கூறியதுடன் தமது செய்கையை நியாயப் படுத்திக் கருத்து வெளியிட்டார்.

குறிப்பிட்ட ஆபாசப்பட விவகாரம் குறித்து விசாரிக்கவென சட்டப்பேரவை உறுப்பினர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப் பட்டது. விசாரணை அறிக்கை வரும்வரை அந்த அமைச்சர்கள் மூவரையும் பேரவைக்குள் வர தடை விதித்து பேரவைத் தலைவர் உத்தரவு பிறப்பித்தார்.

இந்த சம்பவத்தின் எதிரொலியாக தமிழக சட்ட சபைக்குள் கைத்தொலைபேசி பாவிக்கத் தடை விதிக்க தமிழக முதல்வர் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நாட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்டு சட்ட சபைக்குச் செல்லும் அமைச்சர்கள் தமக்கு நல்லவற்றை ஏற்படுத்தித் தருவர்; சிறந்த முறையில் நிர்வாகத்தைச் செய்வர்; தமது கஷ்டங்களை துடைப்பர் என்று ஏங்கிக் கொண்டிருக்கும் மக்களின் எதிர்பார்ப்பு இத்தகைய குறிப்பிட்ட அமைச்சர்களின் அருவருப்பான செயற்பாடுகளால் ஆத்திரமாக, வெறுப்பாக தலை தூக்கியுள்ளது. இத்தகைய பண்பற்றவர்களைத் தமது பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்து சட்ட சபைக்கு அனுப்பி வைப்பதில் தமக்கு எவ்வித நன்மையும் கிட்டப்போவதில்லை எனக் கொதிப்படைந்துள்ளனர் கர்நாடக மாநிலப் பொதுமக்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதியர் பிரச்சினையில் ஏன் இந்த மௌனம்?

ஜீவனி

இதனால் பாதிப்படைவது யார்? தாதிய உத்தியோகத்தர்களா? பொது மக்களா? வைத்தியசாலையில் இரவு பகல் தன்னலமற்ற சேவையை வழங்கும் இவர்களின் தேவைகள் என்ன? என்பது அடுத்த கேள்வி யாக உள்ளது.

செவிடன் காதில் ஊதிய சங்கின் கதையாகத்தான் மருத்துவ சேவையை வழங்கும் தாதிய உத்தியோகத்தர்கள் தமது தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு, சுகாதார அமைச்சிடம் தவம் இருக்க வேண்டியுள்ளது.

பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான மருத்துவத்தைப் பெற்றுக் கொள்ள அவர்களின் நலன்களில் தம்மை அர்ப்பணித்துச் சேவை வழங்குபவர்கள் இந்தத் தாதிய உத்தியோகத்தர்கள்.

ஓர் வைத்தியசாலையில் வைத்தியரின் பங்களிப்பு, ஒரு நோயாளிக்கு எந்தளவுக்குத் தேவைப்படுகிறதோ அந்தளவுக்கு இந்த தாதிய உத்தியோகத்தரின் பங்களிப்பும் அவர்களுக்குத் தேவையாக இருக்கும்.

நோயாளிகளை மட்டுமல்லாது வைத்தியசாலையின் முக்கிய பொறுப்புக்களையும் சுமக்க வேண்டிய கட்டாயமும் இவர்களிடம்தான் உள்ளது. வைத்தியசாலையின் முதுகெலும்புகளாகச் செயற்படுபவர்கள் இவர்கள் என்றே கூறலாம்.

இவ்வாறு முக்கிய பொறுப்புக்களை கடமையுணர்வுடன் பொறுப்பேற்றுத் தனது குடும்பம், தனது நலன் மறந்து வெறும் பொதுச் சேவை உணர்வுடன் செயற்படுபவர்கள் இவர்கள்.

இவர்களின் புனிதத்தையும், கடமை உணர்வின் வெளிப்பாட்டையும் உணர்த்துவதற்காகத்தான் வெள்ளை ஆடையுடன் சேவை வழங்குகின்றார்கள்.

ஆனால், இத்தகையவர்கள் புனிதம் மிக்க அன்னையைப் போன்றவர்கள். எந்தளவுக்கு வைத்தியசாலைகளிலோ அல்லது சுகாதார அமைச்சினாலோ மதிக்கப்படுகின்றார்கள்.

கடந்த வாரம் தமது தேவைகளைக் கோரிக்கைகளாக முன்வைத்து, ஒரு மணிநேரப் பணிப்புறக்கணிப்பை நாடளாவிய ரீதியில் தாதிய உத்தியோகத்தர்கள் நடத்தியமை நாம் அறிந்த விடயமே.

வைத்தியசாலையின் முதுகெலும்புகளாகச் செயற்படும் இவர்களின் தேவைகள் சரியாக நிறைவேற்றப்படாமல் இருக்கும் போது மீண்டும் மீண்டும் இத்தகைய போராட்டங்களை இவர்கள் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஏன் இது தொடர்பாகச் சுகாதார அமைச்சு மௌனமாக இருக்கின்றதோ தெரியாது. காதிருந்தும் செவிடர்களாகத் தாதிய உத்தியோகத்தர்கள் அலறியதையும் கேட்காதது போல தமக்கு அப்பாற்பட்ட விடயம் போல் மௌமானவே இருக்கிறது.

இதனால் பாதிப்படைவது யார்? தாதிய உத்தியோகத்தர்களா? பொதுமக்களா? வைத்தியசாலையில் இரவு பகல் தன்னலமற்ற சேவையை வழங்கும் இவர்களின் தேவைகள் என்ன? என்பது அடுத்த கேள்வியாக உள்ளது.

புனிதம் காக்கும், உயிர்காக்கும் மருத்துவத்துறையில் அவர்கள் பயன்படுத்தும் சீருடைக்குக் கூட அதற்கான பணத்தைக் கொடுக்க மறுக்கிறது. தாதிய உத்தியோகத்தர்களில் சீருடைக்கான கொடுப்பனவு குறைக்கப் பட்டதையடுத்தே கிளர்ந்தது ஓர் போராட்டம்.

கடந்த 3 ஆண்டுகளாக ஓர் சுற்று நிருப அறிக்கையைச் சமர்ப்பித்து, அவர்களின் மாதாந்த சம்பளத்தில் வேட்டு வைக்க நினைக்கிறது சுகாதார அமைச்சு.

அதனைவிட மேலதிக நேரக் கொடுப்பனவுகளைக் கூடச் சரியாகக் கொடுக்க மறுக்கிறது. அவர்களின் ஊதியத்தைச் சரியாக கொடுப்பதற்கு ஏன் இந்தத் தயக்கம்.

வடமாகாணம் உட்பட ஏனைய மாவட்டங்களிலும், அநேக வைத்தியசாலைகளில் தாதிய உத்தியோகத்தர்கள் வைத்தியசாலைகளின் வளங்களுக்கு ஏற்றால்போல் கிடைக்கப் பெறவில்லை. ஒரு வைத்தியசாலையில் நான்கு, ஐந்து தாதியர்கள் கூட தன்னலமற்ற சேவையைப் பொதுமக்களுக்காக வழங்குகின்றார்கள். ஆனால், இத்தகைய இடங்களில் உள்ள தாதிய உத்தியோகத்தர்களுக்கான பதவி வெற்றிடங்களைக் கூட நிரப்ப அமைச்சு முன்வரவில்லை.

சுகாதார அமைச்சுக்காக வழங்கப்படும் நிதி ஒதுக்கீடுகள் யாவும் அங்குதான் முடக்கப்படுகின்றன. ஒரு திட்டமிடல் ஆயினும் செயற்படுத்தப்படுகின்றதா? நாடு இந்த நிலையில் போய்க் கொண்டிருந்தால் பொது மக்களின் நலன்களைப் பாதுகாப்பது யார்?

ஒரு மணிநேரப் பணிப்புறக்கணிப்பாகத் தொடரும் போராட்டம் தொடர்ந்து இடம் பெற்றால், பின் விளைவுகள் என்ன என்பது தொடர்பாகச் சற்றுச் சிந்தித்துத்தான் ஆக வேண்டும்.

சுகாதாரத்தின் மேம்பாட்டுக்காக வெளிநாட்டு நிறுவனங்கள் இனாமாக சுகாதாரத்துக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளையும் உபகரணங்களையும் வழங்கி வருகின்றது. அத்துடன் மனிதாபிமானம்மிக்க புலம் பெயர் வாழ் உறவுகள் கூட, சில நிதி ஒதுக்கீடுகளை மறைமுகமாகவும் நேரடியாகவும் வழங்கி வருகின்றன.

இவையாவும் எதற்காகச் செய்கின்றார்கள். பொதுமக்களின் நலன்களை மட்டும் கருத்தில் கொண்டுதான் வேற்று நாடுகளில் வதிபவர்கள் பொதுமக்கள் மீது இந்தளவுக்கு அக்கறை கொண்டுள்ளபோது, எமது நாட்டின் சுகாதார அமைச்சு மட்டும் ஏன் எதைப்பற்றியும் சிந்திக்காமல் உள்ளது.

பொதுமக்கள் வைத்தியசாலைகளில் முற்றுமுழுதாக இல்லாவிட்டாலும் தாதிய உத்தியோகத்தர்களின் சேவை செய்யக் காத்துக் கொண்டிருப்பவர்கள். ஆனால் பொது மக்களின் நலன்களைக் காக்கும் தாதிய உத்தியோகத்தர்களின் தேவைகள் அரசால் நிறைவேற்றப்படுகிறதா?

ஓர் கிராமம் நலமாக இருந்தால், அது சார்ந்த பிரதேசம் நலமாக இருக்கும். பிரதேசம் நலமாக இருந்தால் மாவட்டம் நலமாக இருக்கும். மாவட்டம் நலமாக இருந்தால் மாகாணம் நலமாக இருக்கும். மாகாணம் நலமாக இருந்தால் நாடு நலமாக இருக்கும்.

இவ்வாறு ஒவ்வொரு நலத்துடனும் மிகவும் நெருங்கிய தொடர்புடையவர்கள் இந்த தாதிய உத்தியோகத்தர்கள். இனியாவது அவர்கள் சேவையைப் புரிந்துகொண்டு அதற்கான ஊதியத்தையும் ஏனைய தேவைகளையும் சுகாதார அமைச்சு அரசினூடாகப் பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும். ★

# 'ஷொக்' வேட்டை

விஷ்ணு

''நாங்கள் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிக்க தனியாக சட்டத்தரணியை வைத்து வாதாட வேண்டும். அதற்குச் செலவழிக்கும் பணத்தையும் காலத்தையும் விட குற்றப் பணத்தைக் கட்டிவிட்டு வருவது சுலபமாக இருக்கிறது.''

சட்டவிரோத மின்சாரம் பெறுபவர்களைக் கைது செய்யும் படலம் அண்மைய நாள்களில் மிகத் தீவிரமாகியுள்ளது.

ஒருமுறை ருசி கண்டுவிட்டால் போதும் கஷ்டமென்ன? துன்பமென்ன? காரியமாகினால் போதும் என்பதுபோல கடந்த நவம்பர் மாதம் யாழ்.நகரில் தேடுதல் நடத்திய போது மின்மானியின் தொழிநுட்பத்தில் புத்திசாலித்தனமான மோசடி நடைபெறுவது கண்டறியப்பட்டது.

இதன்பின் மின்மானியைப் பிரதானமாக இலக்கு வைத்து மின்சார சபையினரின் வேட்டை அமைந்திருக்கிறது. கொழும்பிலிருந்து வந்திருந்த மின்சார சபை அதிகாரிகள் பொலிஸாருடன் இணைந்து இந்த வேட்டையை முன்னெடுத்து வருகின்றனர். இதன்மூலமாக ஜனவரி மாதத்தின் இறுதிமூன்றுநாள்களில்மட்டும்93லட்சம்ரூபாவை இலாபமாக மின்சார சபை பெற்றுள்ளது.

எனினும் இவர்களின் வேட்டையில் அகப்படுவது குற்றவாளிகள் மட்டுமல்ல. சில அப்பாவிகளும் தான் என்று சொல்லப்படுகின்றது. சிலர் தமது வீடுகளிலுள்ள மின்மானியை தொழில்நுட்ப ரீதியான சித்து விளையாட்டு மூலம் வேகத்தைக் கட்டுப்படுத்துகின்றனர். மின்மானியில் குறியீடு இல்லை. அடையாளப் படுத்திக் கட்டிய 'சீல்' இல்லை. இன்னும் சிலர் மின் வயர்களில் பிறிதொரு இணைப்பை ஏற்படுத்தி திருட்டுத்தனமாக மின்சாரம் பெற்றுள்ளனர். இத்தகையோரே கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் பயன்படுத்தியிருக்கும் மின் சார அளவையும் ஒவ்வொரு வீட்டிலுள்ள இலத்திரனியல் பொருள்களையும் கணித்து எவ்வளவு தொகைப் பணம் நஷ்ட ஈடாகப் பெறப்பட வேண்டும்? என்று வரையறை செய் கின்றனர் மின்சார சபையினர். அத்தோடு குறித்த மின்மானியையும் பறிமுதல் செய்து விடு கின்றனர். புல்லோடு சேர்ந்து நெல்லும் பிடுங் கப் படுவது போல் சில அப்பாவிகளும் இந்த வேட்டையில் சிக்கி விடுவதுதான் பரிதாபம்.

''நாங்கள் மின்மானியைப் பற்றி அக்கறை கொள்வதில்லை. மின்சார சபையினர் வருகின்றனர். பரிசீலிக்கின்றனர். பின்னர் மின் கட்டணப் பட்டியலை அனுப்புகின்றனர். அதனால் நாங்கள் மின்மானி பற்றி அக்கறை கொள்வதில்லை. இப்போது திடீரென வந்து நாங்கள் 'கள்ளக் கரண்ட்' எடுத்ததாக வழக்குப் போடுகின்றனர். இது எந்த விதத்தில் நியாயம்? பலரது வீடுகளில் பொருத்தப்பட்டிருக்கும் மின்மானிக்கு 25 வயதுக்கும் மேல் இருக்கும். அதனால் அவற்றில் குறியீடுகள் அழிந்துபோய், 'சீல்' பண்ணப்பட்ட கம்பி உடைந்து போய் உள்ளது. இதைக் காரணம் காட்டி நாங்கள் மின்மானியை ஏமாற்றி, சட்டவிரோத மின்சாரம் பெற்றதாக சொல் கிறார்கள் மின்சார சபையினர்.

அத்தோடு வழக்கும் போட்டு விடுகிறார்கள். நாங்கள் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிக்க தனியாக சட்டத்தரணியை வைத்து வாதாடவேண்டும். அதற்குச் செலவழிக்கும் பணத் தையும் காலத்தையும் விட குற்றப் பணத்தைக் கட்டிவிட்டு வருவது சுலபமாக இருப்பதால் எம்மைப் போன்ற பல அப்பாவிகள் குற்ற வாளிகள் என ஒப்புக்கொண்டு தண்டப் பணம் செலுத்தி விட்டு வருகின்றோம்'' என்று ஆதங்கப்படுகின்றனர் மின்சார சபையில் வேட்டையில் சிக்கிய அப்பாவிகள்.

இனிவரும் காலங்களிலும் இவ்வாறாக தேவையற்ற வகையில் குற்றவாளிகளாக மாற்றப்படாமல் இருக்க பொதுமக்களுக்கு ஒரே யொரு வழி தான் உள்ளது. தமது வீடுகளிலுள்ள பழுதடைந்த அல்லது பழைய மின்மானிகளை உடனடியாக மின்சார சபையிடம் ஒப்படைத்து நல்ல நிலையிலுள்ள புதிய மின்மானிகளை பொருத்துவதே அந்த வழி. அதே போன்று மக்களின் வீடுகளிலுள்ள சீரற்ற மின்மானிகளுக்குப் பதிலாகப் புதிய மின்மானிகளைப் பொருத்தி அவர்களின் இடர்களைப் போக்குவது மின்சார சபையின் கடமை. ★

# தலையுதிர்....

[சூரியகாந்தி முதலாம் பக்கத் தொடர்ச்சி]

இதுவரைக்கும் நஷீட்டின் செல்லப்பிள்ளைகளாக இருந்த மாலைதீவு மக்கள் அவருக்கு எதிராகவே கிளர்ந்தெழுந்தார்கள். கலவரத்தை அடக்க பொலிஸ் பாய்ந்தது. பின்னர் எகிப்து, டுனிசியா, லிபியா போன்றவற்றில் நிகழ்ந்ததுபோல, அதே பாணியில் மக்களோடு பொலிஸும் இணைந்து கொண்டு நஷீட்டுக்கு எதிராகத் திரும்பியது.

''என்னுடைய மக்கள் யாருடைய அல்லது எந்த நாடுகளுடைய தூண்டுதலின் பேரில் எனக்கு எதிராக வீதிகளில் இறங்கியிருக்கிறார் கள் என்று எனக்குத் தெரியும். எனக்காக மக்கள் காயப்படுவதை நான் இனியும் பொறுக்கமுடியாது. மக்களுக்காக என்னுடைய பதவியை விட்டு வெளியேறுகிறேன்'' என்று அறிவித்து விட்டு பெப்ரவரி 7 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகையைவிட்டு வெளியேறினார் நஷீட். இந்த அறிவிப்பை அவர் சொல்லும் போது துப்பாக்கி முனையின் பிடியில் தான் இருந்ததாக வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு அவர் சொல்லி யிருக்கிறார். இப்போதும் துணை ஜனாதிபதியாக இருந்த வாஹிட் மாலை தீவின் புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ளார். அமெரிக்கா, இந்தியா போன்ற வல்லரசு நாடுகளின் பின்புலத்தில் நிகழ்த்தப்பட்ட இந்தச் சதியில் வாஹிட்டுக்கும் தொடர்பு இருப்பதாகக் குற்றம் சாட்டி நஷீட் ஆதரவாளர்கள் போராடத் தொடங்கியிருக்கிறார்கள்.

யாழ்.மாவட்டத்தில் ''எங்களுக்கு வேலை வேண்டும்'' என்று ஆர்ப்பாட்டம் செய்கின்ற 'வி.ஐ.பி' களைப் [வேலை இல்லாப் பட்டதாரிகளின் செல்லப்பெயர்= வி.ஐ.பி] போல தனக்கு மீண்டும் ஆட்சிப் பொறுப்பை தரச்சொல்லி வீதிகளில் இறங்கிப் போராடிக் கொண்டிருக்கிறார் அவர்.

நேற்று வரைக்கும் மாலைதீவின் மகாராணிபோன்று முடிசூடி இருந்த நஷீட்டின் மனைவியும் இரண்டு பிள்ளைகளும், முள்ளிவாய்க்காலில் இருந்து படகுகளில் தப்பித்துவந்த அகதிகள்போல இலங்கைக்கு ஓடிவந்திருக்கிறார்கள். அவர்கள் கண்களில் உயிர்ப் பயம் ஓட்டியிருந்ததாகப் பார்த்தவர்கள் சொல்கிறார்கள். கடந்த சில தினங்களாக 'நஷீட் பதவி விலக வேண்டும்' என்று நடந்த ஆர்ப்பாட்டங்களின் சுருதி ஒரே நாளில் தலைகீழாக மாறியிருக்கின்றது. ''நஷீட்டை பதவியில் அமர்த்துங்கள்'' என்பதே இப்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் உச்சரிக்கும் மந்திரம்.

இதனால் இந்து சமுத்திரத்தின் சொர்க்கம் என்று வர்ணிக்கப்பட்ட மாலைதீவு இந்து சமுத்திரத்தின் சுடுகாடாக மாறி, பற்றி எரிந்து கொண்டிருக்கிறது.

★★★

அண்மையில் விஜய் ரீ வியில் ''மஹிந்த அரசு விரைவில் கவிழும்'' என்று ஆரூடம் சொல்லப்பட்டது. இதனால் மஹிந்த கோபமடைந்ததாக சொல்லப்பட்டபோதும் அந்த ஆரூடத்தை மஹிந்தவின் அரசியல் எதிரிகள் கூட நம்பவில்லை. அந்தளவுக்கு 'மஹிந்த அன்ட் கோ'வின் ஆட்சி மிக கெட்டியானதாக இருப்பதாக நம்பப்பட்டது. ஆனால் மாலைதீவில் மேற்குலகின் விருப்பிற்கு மாறாக நடந்துகொண்ட ஒருவருக்கு நேர்ந்த கதி எதுவும் எப்போதும் நடக்கலாம் என்பதை வெளிப்படுத்தியிருக்கிறது. அத்தோடு மக்கள் போராட்டங்களால் உருட்டப்பட்ட அதிகாரத் தலைகளான எகிப்தின் முபாரக், லிபியாவின் கடாபி, மாலைதீவின் நஷீட் போன்றோர் மஹிந்தவின் நெருங்கிய நண்பர்கள். அதைவிட தன்னுடைய ஜனாதிபதி மாளிகைக்கு சூரிய மின்சாரத்தை வழங்கியே மாற்று மின்மூலத் திட்டத்தை மாலைதீவில் நஷீட் அறிமுகம் செய்தார். கடந்த வாரம்தான் மஹிந்தவும் மாற்று மின்மூலத்திட்டத்தை அறிமுகம் செய்வதற்காக ஜனாதிபதி மாளிகையை சூரிய மின்ஒளியில் இயங்கச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு மேற்குலகுக்கு அடங்காத குழப்படிக்கார பிள்ளையாகவும் அவர் இருக்கிறார். பொன்சேகாவுக்கு ஆதரவாகவும், காணாமற்போனோரை கண்டுபிடிக்கும்படியும் தொடர்ச்சியான போராட்டங்கள் இலங்கையிலும் முளைவிடத் தொடங்கியிருக்கின்றன. யார் கண்டது. அடுத்த தலை இங்கேதான் உருளப்போகிறதோ? ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# சீரழியும் இளம் சமூகம்

■ கங்கா

குடாநாட்டைப் பொறுத்தவரையின் இன்றைய காலகட்டத்தில் எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்குச் சீரழிந்து செல்கின்றது என்பது எவராலுமே மறுக்க முடியாத ஒன்றாகவே உள்ளது.

பிள்ளைகள் பெறுவது பெரிதல்ல. அவர்களைப் பேணி வளர்ப்பதே பெரிய விடயம் என்று எமது மூத்தோர் அடிக்கடி கூறுவர்.

இந்த வகையில் இந்தக் காலப் பிள்ளைகளைக் கண்ணும் கருத்துமாகப் பார்க்க வேண்டிய தேவையும் அவலமும் எமது பெற்றோருக்கு வேதனை தரும் விடயங்களாகி விட்டன.

காலையில் பாடசாலை சென்றுவிட்டு வரும் பிள்ளை மாலையில் தனியார் கல்வி நிலையங்களுக்கு ஒழுங்கு தவறாமல் சென்று படித்துவிட்டு வருகின்றது என்று பெற்றோர் தமது பிள்ளைகளின் விடயத்தில் திருப்தியடைகின்றனர்.

இந்த நம்பிக்கை என்பது நூறு வீதம் சரியானதாக இருக்குமா என்பது சந்தேகம்தான். பிள்ளைகள் மீது இப்படி நம்பிக்கை வைத்திருக்க வேண்டியது அவசியம்தான். ஆனால், அவர்களது நடவடிக்கை தொடர்பில் முற்று முழுதாகக் கவனம் செலுத்தாது விடுவதுதான் மாபெரும் தவறாக உள்ளது.

இன்றைய காலத்து சினிமாக் கலாசாரம் இளையோரைத் தவறான பாதைக்கு இட்டுச் செல்கிறது. பாடசாலைக் கல்வியை முடித்து வரும் மாணவர்கள் தொலைக்காட்சிக்கு முன்பாக இருந்து விடுவார்கள். சீரியல் தொடர்கள் பார்ப்பதே நாளாந்தத் தொடர் கதையாகிவிட்டது. இதற்கு ஒரு சில பெற்றோரும் உடந்தையாக இருக்கிறார்கள் என்பது மறுப்பதற்கில்லை.

இவ்வாறான தொடர்களை பெற்றோரும் சேர்ந்து இருந்து பார்ப்பதால் அவர்களைக் கட்டுப்படுத்த முடிவதில்லை. இதில் வரும் ஆபாசக் காட்சிகள் கூடப் பார்க்கப்படுகின்றன. இதற்குக் கூட எந்தவிதமான விதிவிலக்குகளும் இல்லை.

இந்தத் தொலைக்காட்சி- சினிமா கலாசாரம் இளைய சமுதாயத்தை எப்படியாவது குட்டிச் சுவராக்க வேண்டும் என்ற திசை நோக்கியதாகவே செல்கிறது.

இதுமட்டுமன்றித் தமது செல்லப்பிள்ளைக்கு ஒரு செல்போனையும் கையோடு கொடுத்து விடுகின்றனர். பின்னர் சொல்லவா வேண்டும். பெற்றோரின் செல்லப் பிள்ளை கொஞ்சம் கொஞ்சமாக நாகரிக மயத்தினுள் வீழ்ந்து செயற்படத் தொடங்கும்.

ஒட்டுமொத்தமாக பரீட்சையில் பிள்ளை கோட்டைவிடும் போதுதான் முழித்துக் கொள்வார்கள் பெற்றோர். அதன் பின்னர்தான் தொடரும் சர்ச்சைகள். தமது பிள்ளைகள் இவ்வாறு பரீட்சையில் கோட்டைவிடுவதற்குத் தாமும் ஒரு வகையில் காரணம் என்பதை அவர்கள் எண்ண மறந்துவிடுகின்றனர். இவ்வாறான செல்போன்கள் அவர்களது படிப்பை மட்டும் பாழக்கவில்லை. வாழ்வையும் சீர்குலைக்கும் என்பதைப் பெற்றோர் உணர மறுக்கின்றனர். வேண்டத் தகாத செயல்களைத் தூண்டும் கருவியாகவும் இது பயன்படுத்தப்படும்.

பரீட்சையில் கோட்டைவிடும் பிள்ளை வாழ்வையும் தொலைக்கத் தொடங்கும். செல்போன் இனந்தெரியாதோரையெல்லாம் உறவுகளாக்கும். இந்த வலைக்குள் வீழ்ந்த எத்தனையோ பெண்கள் மீண்டு எழ முடியாமல் தம்மை மாய்த்துக் கொண்ட சம்பவங்களும் இடம்பெற்றுத்தான் இருக்கின்றன. இவ்வாறான விடயங்களில் கவனம் எடுக்க வேண்டியது பெற்றோரின் முக்கிய கடன்களில் ஒன்றாகும்.

இது இன்றுடன் முடிந்துவிடக் கூடிய விடயமல்ல. இவ்வாறான விடயங்களில் ஒவ்வொருவரும் அக்கறை எடுத்துச் செயற்படும் போதுதான் எமது இளஞ் சந்ததியின் வாழ்வு வளமாகும். ✱

# கொண்டு செல்கிறான் குளிப்பாட்டுகிறான்

■ நிஷாவதி

குடாநாட்டில் குறிப்பாக யாழ்.மாநகர சபைப் பிரிவில் அதிகாலை வேளையில் அதாவது மக்கள் நடமாட்டம் அற்ற நேரங்களில் துப்புரவுப் பணிகளில் ஈடுபடவேண்டும் என்று சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு அறிவிக்கப் பட்டுள்ளமை யாவரும் அறிந்ததே

இந்த வகையில் உயர் மட்டத்தினரால் விடுக்கப்பட்ட சுகாதாரத்தைப் பேணும் வகையிலான செயற்பாடுகள் உரியவர்களால் உரிய முறையில் செயற்படுத்தப்படுகின்றனவா? என்பது கேள்விக் குறியான ஒரு விடயமாகவே உள்ளது.

அவ்வாறாக யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் சனநடமாட்டம் அதிகரித்துள்ள நேரங்களில் திறந்த டிரக்டர்கள் மூலம் கழிவுப்பொருள்கள் அகற்றப்படுவதாகப் பொதுமக்கள் பலராலும் விசனம் கூறப்படுகின்றது.

அதுவும் பாடசாலைகளுக்கு மாணவர்கள் பெரும் எண்ணிக்கையில் செல்லும் காலை வேளையிலேயே இவ்வாறான செயற்பாடுகள் தொடர்வதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதன்போது இவ்வாறாகத் திறந்த வாகனங்களில் குப்பைகளை - கழிவுகளைக் கொண்டு செல்லும் போது அவை காற்றுக்குப் பறந்து குறித்த டிரக்டரின் பின்னால் பயணிக்கும் மாணவர்களைக் குளிப்பாட்டுகின்றன.

இதன்போது பெரும் துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவும் நிலைமையும் தோன்றுகிறது. பாடசாலை மாணவர்கள் சுவாச நோய்களால் பாதிப்படையும் நிலைமையும் ஏற்படுகின்றது.

காலையில் உடல், உள ரீதியாக மிகவும் தூய்மையாகச் செல்லும் பாடசாலை மாணவர்கள் இதனால் பெரும் அவலங்களை எதிர்கொள்கின்றனர். அதுமட்டுமன்றி அன்றைய நாளை விசனத்துடனேயே கழிக்கின்றனர்.

இதேவேளை- மூடிய வாகனங்கள் மூலம் கழிவுகள் அகற்றப்படவேண்டும் என்று கூறப்பட்டிருக்கும் நடைமுறையானது முற்றாக மீறப்பட்டுள்ளமையும் இங்கு தெட்டத் தெளிவாகின்றது.

எது எவ்வாறாக இருப்பினும் உரிய அதிகாரிகள் திணைக்களத் தலைவர்கள் இந்த விடயத்தில் கவனம் எடுத்துச் செயற்பட வேண்டும் என்பதே பாதிக்கப்படுவோரின் கோரிக்கை. ★

# வன்னிக்கான இந்தியாவின் சேவை

■ கணேஷாயினி



யாழ்.குடாநாட்டு மக்களுக்கென வழங்கப்பட்ட இந்திய பஸ்கள் மக்கள் சேவைக்கென யாழ்.மாநகர சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. குறுந்தூரப் பயணங்களின் சேவையாகவும் இவை நடத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் குறிப்பிட்டளவு தூரங்களுக்குப் பயணிக்கும் மக்கள் பெரும் நன்மையடைந்து வருகின்றனர்.

இந்த வகையில் வன்னி மக்களுக்கு இவ்வாறான பஸ்கள் வழங்கப்படுமிடத்து அவர்கள் உச்சக்கட்டப் பயனை இதன் மூலம் அடைவர்.

வன்னியில் உள்ளூர் சேவைகளுக்கு இந்த பஸ்கள் வழங்கப்படுமானால் மக்கள் கால்நடையாக அலைந்து திரிய வேண்டிய நிலைமை முற்றிலும் மாறி மக்கள் நிம்மதியடைவர்.

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எதிர்கொள்ளும் போக்குவரத்து நெருக்கடிகளை கருத்தில் கொண்டு அங்கு இந்திய பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிய வந்துள்ளது.

கிளிநொச்சியில் இடம்பெற்ற கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள் போக்குவரத்தால் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து சுட்டிக் காட்டப்பட்டது.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சியிலிருந்து [illegible] வரையான போக்குவரத்து கண்டாவளைக் கோட்டத்தில் பிரமந்தனாறு, கல்லாறு, குமாரசாமிபுரம், மயில்வாகனபுரம் ஆகிய பகுதிகளுக்கான போக்குவரத்து அத்துடன் கிளிநொச்சியில் இருந்து வன்னேரிக்குளம், பூநகரியில் வினாசியோடை, ஜெயபுரம் ஆகிய பகுதிகளுக்கான போக்குவரத்துகள் குறித்து சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தப் பகுதிகளை ஒரே பந்தியில் கூறிமுடித்தாலும் இவற்றுக்கான பயணம் நெடுந்தூரமானதாகவே காணப்படுகின்றது.

இந்த நிலையில் மிகவும் மந்த கதியில் இடம்பெறும் தூர இடங்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் மூலமே இவர்கள் அதுவும் குறிப்பிட்ட ஒரு சில பகுதியினர் மட்டுமே நன்மை அடைகின்றனர்.

இந்த நிலையில் முதற்கட்டமாக ஐந்து பஸ்களைப் பணியில் ஈடுபடுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. இது யானைப் பசிக்குச் சோளப் பொரியைக் கொடுத்த கதையாக உள்ளபோதும் இந்தச் சேவையாவது இடம்பெற்றால் ஒரு சில பகுதிகளைச் சேர்ந்த மக்களாவது முதற்கட்டமாக நன்மையடைவர்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்வுள்ள இந்தச் சேவையானது அத்துடன் கைவிடப்பட்டு விட்டால் மென்மேலும் விஸ்தரிப்புச் செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் நடத்தப்பட வேண்டும் என்பதே மக்களின் அவாவாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு இருக்கலாம் உயிர் இருக்குமா...?

9

## உணர்வுகளை இறக்கிவைத்த நேரம்

- அருட்தந்தை சூ.ம.ஜெயசீலன்

நான் சென்றிருந்த ஊரில் தினமும் மாலையில் அங்கிருந்த ஆலயத்தில் திருப்பலி நிறை வேற்றினேன். திருப்பலியில் மறையுரை நிகழ்த்திய பிறகு அம் மறையுரையில் இருந்து ஒரு கேள்வி கேட்கப் பட்டது. அதற்கான சரியான விடையை அல்லது சரியான உணர்வுகளை வெளிப்படுத்து வோருக்கு திருவிழா நாளில் பரிசு வழங்கப் படும் என்ற அறிவிப்பும் கொடுக்கப்பட்டிருந் தது. அதன்படி, ஜூலை 19ஆம் திகதி, இன்றைய கால சமூக வாழ்க்கைச் சூழலில் கறை படிவது எமது வாழ்க்கைக்கு உகந்ததா? என்று வினா தொடுத்தோம்.

பலரும் பதில் எழுதியிருந்தார்கள். வயது வித்தியாசமோ, அனுபவ வேறுபாடுகளோ இல்லாது பலரும் எழுதியிருந்தார்கள். பல வித பதில்களில் தாங்கள் ஈழத்தில் பகுத்தறிவு பாதையினையும் பரந்துபட்ட ஞானத்தினை யும் வெளிப்படுத்தியிருந்தார்கள். அவர் களுள் பதினொன்றாம் வகுப்பு படிக்கும் மாணவியும் ஒருவர்.

போர்க் காலத்தை எடுத்துக் கொண்டால் பிறருக்காக எமது உயிரையும் அர்ப்பணிக்க நேர்ந்தது. அதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தை முன் வைக்கிறேன். ஒரு பதுங்கு குழியில் ஒரு சிறிய குழந்தை. அந்த சிறிய குழந்தையின் தாய் தந்தை குண்டு வீச்சில் இறந்து அந்த பதுங்கு குழியில் கிடந்தனர். அத்தருணம் அச்சிறிய குழந்தையும் இறக்க நேரிடும்போது அந்த தாய் அந்த சிறிய குழந் தையை அணைத்து வைத்திருந்ததனால் அந்த தாயின் முதுகு பக்கம் குண்டின் சிறிய துண்டு துளைத்தது. தந்தையின் மேலும் குண்டு பதிந்திருந்தது. சிறிய குழந்தை அனாதையாக அந்த பதுங்கு குழியில் கத்தி அழுதது.

குண்டு வீச்சினால் எல்லோரும் இடம் பெயர்ந்து கொண்டிருந்தனர். எல்லோரும் தங்கள் உயிரைக் காப்பாற்றுவதற்காக கவனிக்காமல் சென்றனர். அவ்வழியே ஒரு பத்து வயது சிறு பையனும் தனது தந்தை யுடன் சென்றான். இக்குழந்தையின் அழு குரலை கேட்டு, தாய் தந்தை விட்டுச் சென்று விட்ட அச்சிறிய குழந்தையை தூக்கி கொண்டு சென்றான். அச்சிறிய குழந்தையின் உடல் முழுவதும் தாய் தந்தை குருதி காணப் பட்டது. அவன் தனது மார்போடு அணைத்து வருவதை அவனது தாய் தந்தை அவதானித்து அந்த பையனிடம் பேசினார்கள்.

உனது ஆடை முழுவதும் கறைபடிந் திருக்கு. ஏன் இக்குழந்தையை தூக்கி வந்தாய் என்று கேட்டார்கள். அதற்கு அந்தப் பையன் தாய் தந்தைக்கு சொன்னான். நீங்கள் இறந்து நான் தவித்திருந்தால் என்னை யாரும் ஆதரிக்கமாட்டார். யாராவது எங்களைப் போல சிறுவர்கள் காப்பாற்றுவார்கள்.

இதைக்கேட்ட தாய் தந்தை வியப்பில் ஆழ்ந்தனர். பின் தந்தை கூறினார். நீ நல்ல காரியம் செய்திருக்கிறாய். உனது ஆடையில் கறை படிந்ததை அவதானிக்காமல் அந்த உயிரை காப்பாற்றினாய். உன்னை பெற்ற எனக்கு பெருமைதான்.- என்று. இது உண்மை சம்பவம். ஆகவே நாங்களும் இக் குழந்தையுள்ளம் படைத்தவராக எமது ஆடையில் கறைபடிந்தாலும் இதனால் பிறருக்கு நன்மை செய்து வாழ வேண்டும். என்று எழுதியிருந்தார்.

எழுத வேண்டிய தனிநபர் அனுபவங்கள் ஆழ்கடல் பொக்கிசமாக அபரிமிதமாக இருக்கின்றனர். வலி அனைத்தும் ஒன்று சேர்ந்து தன்னை எழுதுமாறு கேட்டுக்கொண்டே இருக்கின்றனர். பேசவே அச்சப்படும் ஈழ மண்ணில் இவை அனைத்தும் சாத்தியமின்றி இருக்கின்றன. இம் மாணவியின் இப்பதி வின் உண்மையை வெளியுலகிற்கு உணர்த்த விரும்பிய நான் இலங்கையில் வெளிவரும் ஒரு மாதாந்த இதழுக்கு அனுப்பி வைக்கச் சொன்னேன். இக்கட்டுரையும் அனுப்பப் பட்டது. ஆனால் கருத்து சுதந்திரம் கருத்தடை செய்யப்பட்ட நாட்டில் இருப்பதால் அவர் கள் அதனை வெளியிடவில்லை.

பேசுவதைக்கூட அவசர கதியில் பேசி விட்டு இடம் பெயரும் சூழலில் இருக்கும் எம்மவர்களின் எதிரொலியாக பெரியவர் தொடர்ந்து பேசினார். வலைஞர் மடத்தில் உள்ள மருத்துவமனையில் நான் கண்ட காட்சிகள் இப்போது நினைத்தாலும் என்று ஆரம்பித்தவர் மீண்டும் தடுமாறினார் குவியல் குவியலாக பணங்கள்பேசவும் முடியாமல் முனகவும் முடியாமல் கனபேர் தெரிந்த உறவுக்காரர்கள் யாருமின்றியும் ஆறுதலாக பேச ஒருவருமின்றியும் பலர் மருத்துவர்கள் வரும்வரை உயிரைக் கையில் பிடித்துக்கொண்டிருக்க முயன்று தோற்றுப் போய் கொண்டிருந்தார்கள். யாருமே நிற்க முடியாது பாதர். மனத்திடம் இருந்தது. ஆனாலும் நிற்க முடியாது.

கால்கள் அல்லது கைகளில் ஏதாவது ஒன்றை இழந்தவர்கள் துடித்து அழுததையும், காயங்களோடு கதறியதையுமே தாங்க முடியாத நிலையில் இருந்த நான் ஒரு முதியவரைக் கண்டேன். தலை இருந்தது உடல் இருந்தது. இரண்டு கால்களும் முழங்காலுக்கு கீழ் இல்லை. இரண்டு கைகளும் இல்லை. நாட்டைக் காப்பாற்ற போராடிப் பழக்கப்பட்ட இனம் இப்போது தன்னைக்காக்கவே போராட வேண்டிய சூழலில். யார் பாதர் அவரை தூக்கிச்செல்ல முடியும்? யார்தான் கவனிக்க முடியும் என்று ஆதங்கத்தில் ஆறுதலாய் கேட்டவர் ஆண்ட வர் அவரை எடுத்துக்கொண்டாலாவது நல்லது என்றவரின் கண்ணில் கண்ணீர் குறையவில்லை.

கடந்த கால நிகழ்வுக்குள் மூழ்கிப்போன பெரியவரின் உணர்வுக்குள் கலந்துவிட்ட எனக்கு ஒரு வழக்கு நினைவுக்கு வந்தது. அது 1781 ஆம் ஆண்டு நடந்தது. கருப்பின மக்கள் மீது வெள்ளைத் தோலினர் கொண் டிருந்த மனநிலையை உரத்துக்கூறும் வழக்கு அது. மேற்கு ஆபிரிக்காவிலிருந்து நீக்ரோக் களை அடிமையாக மக்காவுக்கு கப்பல் வழி யாக கொண்டு சென்றனர். அந்த கப்பலில் 400 நீக்கிரோக்கள் இருந்தார்கள்.

போகின்ற வழியில் உப்புக் காற்றும் சுடும் வெப்பமும் இயலாதவர்களின் குமுறலும் ஒன்றிணைய புதுவகையான நோய் கப்பலில் தொற்றிக்கொண்டது. தங்களை காப்பாற்றிக் கொள்ள முனைந்த கப்பல் தலைவன் அடிமை களுக்கு ஏன் உயிராசை என்று கூறி ஒதுங் கினர். அவர்களை ஒதுக்கினர். நாட்கள் ஆனது. நோய் தீவிரமடைந்தது. நீக்ரோக்களில் ஒவ் வொருவராக சுருண்டு படுத்துக்கொள்ள ஆரம் பித்தார்கள். என்ன செய்வது என்று யோசித்த கப்பல் தலைவன் விபரீதமான முடிவொன்றை எடுத்தான். அதன்படி நோயுற்றிருந்த 132 நீக்குரோக்களை கடலில் தூக்கிவீசினான்.

கப்பல் கரையை அடைந்ததும் கப்பல் தலைவன் நேரே நீதிமன்றம் சென்றான். கடலில் எறியப்பட்ட நீக்குரோக்களின் சந்தை விலைக்கு ஈடாக காப்பீட்டு நிறுவனம் பணம் தரவேண்டும் என்று வழக்கு தொடுத்தான். அதற்கு அவர் சொன்ன காரணம், கப்பலில் பயணிக்கும்போது அதன் உள்ளிருக்கும் ஏதாவது பொருள் அழுக ஆரம்பித்தால் அதனை கடலில் கொட்டிவிடுவதன் வழியாக மற்ற பொருள்களை பாதுகாக்க முடியும். அதே போலதான் நோயுற்ற நீக்ரோக்களை கடலில் கொட்டிவிட்டு மற்ற நீக்குரோக்களை நான் காப்பாற்றினேன். எனவே எனக்கு காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு தரவேண்டும் என்று வாதிட்டான்.

நீதிபதி வெள்ளை இனவெறியின் மொத்த உருவமாய் அமர்ந்திருந்தார். அவர் கப்பல் தலைவனைப் பார்த்து உயிருக்கும் உடைமைக் கும் வேறுபாடு தெரியாதவனே, தெய்வச்சாயலுக் கும் அவர் உருவாக்கிய பொருளுக்கும் வித்தியாசம் தெரியாதவனே, பகுத்தறிவு உடையவர்க்கும் பயன்படும் பொருளுக்கும் மாறுபாடு அறியாதவனே என்றெல்லாம் கடிந்து கொள்ளவில்லை.

மாறாக, ஆடு, மாடுகள், குதிரைகள் கொண்டு செல்லப்படும்போது, நோய் வந்துவிட்டால். நோயுற்றவர்களை அப்புறப் படுத்தி மற்றவர்களை காத்திடுவது போன்ற முறைப்படிதான் தலைவன் நடந்து கொண்டான். ஆகவே, அவனுக்கு நிறுவனம் நட்ட ஈடு தரவேண்டும் என்று தீர்ப்பு அளித்தார். வெள்ளைச் சட்டையை உதறி அணிந்து கொண்டார்.

அப்படித்தான் ஈழத்தமிழர்களை காப் பாற்றுகின்றேன் என்று சொல்லிக்கொண்டு எல்லோரையும் சிங்கள காடையர்கள் அழித்தொழிக்கிறார்கள். பணக்குவியலாக மக்களை [illegible] நினைக்க நினைக்க அவருக்கு ஆத்திரம் பொங்கியது. தலை கவிழந்து தரையையே பார்த்தபடி இருந்தார்.

சகிக்க முடியாது பாதர். எங்களுடன் சேர்ந்து ஒரு குடும்பம் நடந்து வந்தது. அந்த குடும்பத்தில் நான்கு பிள்ளைகள் இருந்தார் கள். நாற்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் இருந்தார். அவர் அந்த பிள்ளைகளின் தந்தை என்று நினைக்கிறேன். அவரது மனைவி, மாமா மற்றும் தாத்தா ஆகியோரும் அதில் இருந்தார்கள். எங்கும் ஷெல் விழுந்துகொண்டே இருந்தது. தப்பித்தபடியே எங்களைப் போலவே ஓடிக்கொண்டிருந்தார்கள். இடறி விழுந்த குழந்தையையும் அள்ளிக்கொண்டு மறைவிடம் தேடினார்கள். ஷெல் விழ்ந்தது. அவர்கள் நின்ற இடத்தில் ஒரே ஒரு ஷெல் விழுந்தது. அந்த நபர் இறந்தார். அவரது மனைவி, மாமா, தாத்தா எல்லோருமே இறந்தனர் நான்கு பிள்ளைகளும் அனாதை யாகி நின்றார்கள் என்று சொல்லி வார்த் தையை முடிக்க முடியாமல் கேவிக்கேவி அழுதார்.

உடல் காயப்பட்டவர்களை ரக்குகளில் தூக்கி போட்டு போனாங்கள். அவர்கள் எழுப் பிய உயிர்க்குரல் இருக்கின்றதே அப்பப்பா நினைச்சு பார்க்க முடியாதது எங்கும் சதைத் துகள்களாய் இறைச்சிக்கடை மாதிரித்தான் இருந்தது பாதர்.

பதினான்கு பதினைந்து வயது பிள்ளை ஒருத்தி தான் சாகப்போற நேரத்திலயும் தன் பெற்றோர் மற்றும் சகோதரர்களை நினைத்து துடித்து கதறியது இன்னும் என்னை என்னமோ செய்கிறது என்ற தன் ஏக்கத்தைக் கூறி மிரட்சியோடு இருந்தார்.

ஒரு பெரியவர் தன்னுடன் மூன்று இள வயது பிள்ளைகளுடன் எங்களுடன் இருப் பதை நாங்கள் நின்று மூச்சு வாங்கியபோது பார்த்தோம். தம் பிள்ளைகளின் குடல் நனைக்க பாண்கூட இல்லாமல் துடிதுடித்தது தன் பிறப்பை நினைத்து கதறினார். அவசர அவசரமாக மற்றவர்களிடம் ஓடி கையேந்தி நின்றார். தான தர்மத்திற்கு பெயர்போன எங்களுக்கு இருந்ததை மட்டுமே பகிர முடிந்தது. அடுத்தவேளை உணவு இருக்கலாம். நமது உயிர் இருக்குமா என்ற உத்தரவாதம் இல்லாத நிலையில் இருந்த எல்லோரும் பகிர்ந்ததால்தான் எம் பிள்ளைகளும் உணவுச் சுவை மறக்காது வழிநடந்தார்கள்.

வலைஞர்மடத்தில் இருந்து இடம் பெயர்ந்தபோது மேற்றானியார் எங்களுக்குத் தேவையான உதவிகள் சிலவற்றை செய்தார். அங்கும் இருக்கமுடியாது என்றபோது அங்கிருந்து அனைத்து குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு மாத்தளன் சென்றோம். மாத்தளனிலும் ஷெல்லடி அதிகரித்தவுடன் அனைவரையும் அழைத்துக்கொண்டு அருட் தந்தையர் முள்ளிவாய்க்கால் பக்கமாக நகர்ந்தார்கள்.

தாங்கள் பார்த்துக்கொள்வதாக உறுதி யளித்துவிட்டு என்னை அனுப்பிவிட்டார்கள். செல்ல மனமின்றி நானும் மூன்று அருட் சகோதரிகளும் சிறிய கப்பலில் ஏறி இரவோடு இரவாக விமானங்களின் வெளிச்சத்தில் புல்மோட்டை என்னுமிடத்தில் வந்து இறங்கினோம். அங்கே கல்வி இலாகா அலுவலகமாக மகாவித்தியாலயக் கட்டடம் இருந்தது. அங்கே எங்களை அடைத்து வைத் தார்கள். ஏறக்குறைய ஆயிரம் குடும்பங் களுக்கு மேல் அங்கிருந்தார்கள். மூன்று நாள் சிறை வாசத்திற்கு பிறகு அருட் சகோதரி களை விட்டு விட்டார்கள். எங்களை காமினி முகாமில் சிறை வைத்தார்கள். இருபது நாள்கள் அங்கிருந்த நான் அருட் தந்தையர்களின் தலையீட்டால் விடுவிக்கப்பட்டேன்.

குழந்தையர், அருட்தந்தையர்களின் கரம்பற்றி பாதுகாப்புதேடி முள்ளிவாய்க்கால் பகுதிக்குள் சென்றார்கள். இப்பகுதியில்தான் 50,000 இற்கு மேற்பட்ட மக்களை சிங்கள காடையன் கொன்று குவித்தான். அக்கொலைக் களம் நோக்கி எம் பிள்ளைகள் அனைவரும் இடம் பெயர்ந்தார்கள். அங்கே சொல்லெண்ணா துன்பத்துக்கு ஆளானார்கள். பெரிய அவலங் களை சந்தித்தார்கள்.

சுற்றி குண்டுகள் விழுந்த நேரங்களில் பிள்ளைகள் தங்களைக் கட்டிப்படித்துக் கொண்டு தங்களுள் யாரும் களப்பலி ஆகிவிடக் கூடாதென்று அச்சத்துடன் வானையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு வினாடியும் யுகம்போல கடந்தது. ஆயுதங் கள் குறைவாக இருந்தாலும், ஆட்பலம் குன்றினாலும் சர்வதேசம் கைவிட்டாலும், அண்டை நாடுகள் ஆயுத அரண் அமைத்தாலும் கடைசிவரை போராடிய எம்மவர்கள் எம் போராளிகள் ஒரு கணம் யோசித்தார்கள். சிங்கள காடைகள் மக்களை மொத்தமாக அழித்துவிடுவார்களோ என்று துடிதுடித்து பின்வாங்கினார்கள். அப்போது மக்களை இராணுவம் சுற்றி வழைத்தது. அந்த வளை யத்திற்குள் எம்பள்ளைகளும் அகப்பட் டார்கள்.

எங்கள் குழந்தைகள் அனைவரையும் வவுனியாவிற்கு அழைத்து வந்தார்கள். அங்கிருந்த முகாம் ஒன்றில் அடைத்து வைத்தார்கள். அது வலையம் நான்கு எனப்பட்டது. ஓராண்டு அங்கிருந்து பிறகு பலரின் முன் முயற்சிக்கு பறகு விடுவிக்கப் பட்டார்கள். படபடப்பு மிகுந்த போர்க்கால நினைவுகளுடன் நடு இரவில் எழுந்து கதறிய அனுபவங்கள் அவர்களுக்கு உண்டு. எவர் மீதும் நம்பிக்கை இல்லாத வறட்சி உணர்வு உண்டு. கை நடுக்கங்கள் உண்டு. மேசை விழுவதையும் உணவு தட்டு தடுமாறுவதை யும் கேட்டு அலறும் நிலை இருக்கிறது. உணவு இன்றி செத்தவர்களின் ஏக்கப் பெருமூச்சுக் களை நினைத்து முகம் வெளிறி இருக்கிறார் கள். இரத்தமே காட்சிகளான வெளியில் நடந்து வந்தவர்களுக்கு சிகப்பு நிறமே வேதனைக்குரியதாக இருக்கின்றது.

தொடர்ந்து பேசியவர் தம் ஆதங்கத்திற்கு நடுவில் சில ஆண்டுகள் முன்னோக்கி சென் றார். ஒருமுறை தந்தை செல்வா அவர்கள், தமிழனைக் காப்பாற்ற ஆண்டவனால்தான் முடியும் என்றார். காலப்போக்கில் மக்களிடம் இறை நம்பிக்கையும் குறைஞ்சுபோச்சு பாதர். கடவுள் இல்லை நமக்குதான் எல்லாம் தெரியும் என்று சிலர் வாழ்ந்திருந்தார்கள். ஆனால், எம் பிள்ளைகள் யாரையும் அழிய விடாமல் இறைவன் காப்பாற்றினார். அன்று எகிப்தில் இருந்தது, வாக்களிக்கப்பட்ட கானான் தேசத்திற்கு இடம்பெயர்ந்த இஸ்ரேலிய மக்களுடன் இருந்து வழிநடத் தியது போல எங்களுடனும் இறைவன் உடனிருந்தார் என்ற தமது விசுவாசத்தை வெளிப்படுத்தினார்.

எங்களுடன் இருக்கும் குழந்தைகளுக்கு சொல்வது போலவே இனிவரும் பிள்ளை களுக்கும் நாங்கள் சிலவற்றை சொல்ல ஆரம்பித்திருக்கின்றோம் பாதர். இவர்களது, தாய் தகப்பன் செய்த தியாகங்கள் சுதந்திர மண்ணுக்காக அவர்கள் சிந்திய இரத்த துளிகள். உயிர் மாத்திரமே ஆயுதமாக இருந்த வேளையில் அதையே ஆயுதம் தாங்கி ஆனந் தமாக சமர் புரிந்த சகோதரங்கள் அனைவரை யும் பற்றி சொல்லிக்கொண்டிருக்கின்றோம்.

வரலாற்றை மறக்காத இனம் எப்பாடு பட்டாலும் விடுதலையை ஒருநாள் நிச்சம் வென்றெடுக்கும் என்ற நம்பிக்கையை வரலாறு காட்டும் புனிதத்துவத்தை எடுத்தியம் கின்றோம். மேற்கில் மறையும் சூரியன் கிழக்கில் எழுந்தே ஆகவேண்டும். பறவை கள் தரைக்கு வந்தே ஆகவேண்டும். மக்கள் சக்தி எப்போதும் வெற்றியின் சக்தி. இதுதானே பாதர் நியதி என்றார். நான் கையெடுத்து கும்பிட்டேன்.

(சந்திப்போம்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசின் வயிற்றில் புளி கரைத்துள்ள ஸ்ரீபன் ராப்

அதிரன்

தனது இராஜதந்திரிகளை அவசர அவசரமாக இலங்கைக்கு அனுப்புகிறது அமெரிக்கா. அடுத்த வாரம் மீண்டும் இலங்கை வருகிறார் ரொபேட் ஓ பிளேக். தற்போது இலங்கையில் தங்கியுள்ளார் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பூகோளக் குற்றவியல் நீதிவிசாரணைக்கான விசேட தூதுவர் ஸ்ரீபன் ராப். அவர் இங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்துப் பேசியுள்ளார். அத்துடன் யாழ்ப்பாணம்,கிளிநொச்சி,முல்லைத்தீவுப் பகுதிகளுக்குச் சென்று சுதந்திரமாக மக்களைச் சந்தித்துப் பேசியுள்ளார் அவர். இங்கு தான் அரசுக்கு அவரது பயணம் பெரும் தலையிடியை ஏற்படுத்தி விட்டது.

வழமையாக இலங்கை வரும் இராஜதந்திரிகளுக்கான நிகழ்ச்சி நிரல்களையும் சந்திப்புக்களையும் அரசே ஒழுங்கு செய்கிறது. ஆனால் இம்முறை அமெரிக்காவிடம் அந்தப் பருப்பு அவியவில்லை.இதனால் ஸ்ரீபன் ராப்பின் பயணத்தைச் சுதந்திரமாக விட்டுவிடவேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டுவிட்டது.அதுவே பெரும் தலையிடியாகவும் மாறிவிட்டது.

முல்லைத்தீவுக்கும்,கிளிநொச்சிக்கும் சென்ற ஸ்ரீபன் ராப் அங்கு மீளக்குடியமர்ந்த மக்களை நேரில் சந்தித்துப் பேசினார். மீள்குடியமர்வு தொடர்பில் அரசு சர்வதேசத்துக்குக் கூறிவரும் பரப்புரைகளின் உண்மைத் தன்மையை மீளக்குடியமர்ந்த மக்கள் அவரிடம் அவிட்டுவிட்டனர்.அத்துடன் அவர் என்ன நோக்கத்துக்காக இலங்கை வந்தாரோ அந்த விடயத்தையும் அவருக்கு முன்னாலேயே போட்டுடைத்துவிட்டனர். தமது மனங்களில் நீண்ட காலமாக அடக்கி வைத்திருந்த சுமையை அவரிடம் கொட்டி விட்டனர்.

“இறுதிப் போரின்போது அரச படைகளால் கைதுசெய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்ட உறவுகள்பற்றி எதுவுமே தெரியாது. எங்கள் கண் முன்னால் அவர்கள் பஸ்களில் ஏற்றிச்செல்லப்பட்டனர். எமது பிள்ளைகளை நாங்களே எங்கள் கைகளால் படையினரிடம் ஒப்படைத்தோம்.அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா? கொல்லப்பட்டுவிட்டார்களா? என்று கூட எமக்குத் தெரியாது” என்று கூறி ஸ்ரீபன் ராப்புக்கு முன்னால் கதறி அழுதனர் மக்கள்.

அத்துடன் சர்வதேச நீதி விசாரணை ஒன்று அவசியம் எனவும் அந்த மக்கள் வலியுறுத்தினார்கள். அந்த மக்களின் கண்ணீர், ஏக்கம் என்பன ஸ்ரீபன் ராப்புக்கு நன்கு புரிந்திருக்கும் என்றே நம்புகிறோம். இதனால் இந்த விடயம் இலங்கை அரசுக்கு எதிரான ஜெனிவாப் பிரேரணையில் அதிக தாக்கத்தைச் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது இலங்கை அரசுக்கு புரிந்துவிட்டது. இதனால் ஸ்ரீபன் ராப்பின் வன்னிப் பயணம் குறித்து இலங்கை அரசு கடும் ஆத்திரத்தில் உள்ளதாகவும் ஆயினும் அது தொடர்பில் இப்போது கருத்துக்களை வெளியிட்டால் அது ஜெனிவாவில் தனக்கு பாதகமாக அமைந்துவிடும் என்பதால் அடக்கி வாசிக்கிறது என்றும் ராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன. ஜெனீவாவில் இம்மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் 19ஆவது கூட்டத்தொடர் அரசுக்குப் பெரிதும் கலக்கத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தும் ஒன்றாக அமைந்து விட்டது.

இந்தக் கூட்டத்தொடரில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை இலங்கை அரசு சமர்ப்பிக்க வேண்டும் என்பது மேற்குலக நாடுகளின் அழுத்தமாக இருந்து வருகிறது. ஆனால், இலங்கை அரசோ இந்த அறிக்கையை ஜெனீவாவில் சமர்ப்பிக்க முடியாது, இது ஒன்றும் ஐ.நாவுக்கான அறிக்கை அல்ல. அது உள்நாட்டு விவகாரம் என்று தான் கூறி வந்தது.

இந்த நிலைப்பாடு கடந்தவார நடுப்பகுதி வரைக்கும்தான் அரசிடம் இருந்தது.

கடந்த வியாழக்கிழமை அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டுக்கு வழக்கமாக முடிவுகளை அறிவிக்கும் ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல வரவில்லை.

இதனால், அமைச்சர் அனுர பியதர்சன யாப்பாவே அமைச்சரவை முடிவுகளை அறிவித்தார். அப்போது அவர், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஜெனீவாவில் கையளிப்பது பற்றி அரசு இன்னும் அதிகாரபூர்வமான முடிவை எடுக்கவில்லை என்று குறிப்பிட்டார்.



யாழ். அரச அதிபரிடம் உண்மைத் தன்மைகளைக் கேட்டறிந்தார் ஸ்ரீபன் ராப்.

> “ மீள்குடியமர்வு தொடர்பில் அரசு சர்வதேசத்துக்குக் கூறிவரும் பரப்புரைகளின் உண்மைத் தன்மையை மீளக்குடியமர்ந்த மக்கள் அவரிடம் அவிட்டுவிட்டனர். அத்துடன் அவர் என்ன நோக்கத்துக்காக இலங்கை வந்தாரோ அந்த விடயத்தையும் அவருக்கு முன்னாலேயே போட்டுடைத்துவிட்டனர்.

அதற்கு முதல் நாளில் கூட, மனித உரிமைகள் விவகாரங்களைக் கையாளும் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவும், வெளி விவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகமவும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஜெனீவாவில் கையளிக்கப்படாது என்று உறுதிபடக் கூறியிருந்தனர்.அதற்கு முன்னர் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸும் இதையே கூறியிருந்தார்.

இவற்றுக்கு முரணான வகையில் அறிக்கையை கையளிப்பதா? இல்லையா? என்று இன்னமும் முடிவு செய்யவில்லை என்று அனுர பிரியதர்சன யாப்பா குறிப்பிட்டது, அரசு தனது நிலைப்பாட்டில் இருந்து தள்ளாடத் தொடங்கியுள்ளது என்பதை வெளிப்படுத்தியது.

அதுவரை ஜெனீவாவில் எதையும் எதிர்கொள்ளத் தயார் என்று பேட்டி கொடுத்த அமைச்சர்கள் மஹிந்த சமரசிங்க, ஜீ.எல். பீரிஸ்,வெளியுறவுச் செயலர் கருணாதிலக அமுனுகம போன்றவர்களெல்லாம் திடீரெனச் சுருண்டு போனதற்கும், ஜெனீவாவில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பிப்பது பற்றி முடிவு எடுக்கவில்லை என்று அறிவித்ததற்கும் காரணம் அமெரிக்கா தான்.

கடந்த 27ஆம் திகதி கொழும்பிலுள்ள அமெரிக்கப் பிரதித் தூதுவர், வெளி விவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸிடம் கடிதம் ஒன்றைக் கொடுத்திருந்தார்.அது அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரன் கொடுத்தனுப்பிய கடிதம்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த முதலாவது விடயம், வரும் ஜெனீவா கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்துக்கு ஆதரவளிப்பது என்ற முடிவை அமெரிக்கா எடுத்துள்ளது என்பதாகும்.இந்த கடிதத்தைப் பார்த்த அரசுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

அமெரிக்கா போர்க்குற்ற விவகாரங்களை அவ்வப்போது கையில் எடுத்து இலங்கை அரசை மிரட்டி வந்தாலும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெளிப்படையாக ஜெனீவாவில் தீர்மானத்தைக் கொண்டு வரவோ, ஆதரிக்கவோ போவதாகத் தெரிவிக்கவில்லை. முதல்முறையாக இந்த எச்சரிக்கையை அமெரிக்கா விடுத்துள்ளது.

அதுமட்டுமன்றி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ள ஹிலாரி கிளின்ரன் அதனை இலங்கை அரசுக்கு முறைப்படி அறிவிக்கத் தான் இந்தக் கடிதத்தை அனுப்பினார்.

மேலும், நல்லிணக்கம், பொறுப்புக் கூறல், வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்துவது உள்ளிட்ட விவகாரங்களில் இலங்கை அரசின் எதிர்காலத் திட்டங்கள் என்னவென்று அமெரிக்காவுக்கு விளக்கிக் கூற மார்ச் மாதம் வாஷிங்ரன் வருமாறும் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்தமாத இறுதியில் ஜெனீவா கூட்டத் தொடர் ஆரம்பிக்கப் போகிறது, ஆனால் இப்போது வாஷிங்ரனுக்கு வருமாறு அவர் அழைக்கவில்லை.மார்ச் மாதம் தான் அதாவது கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கும் போது தான் ஜெனீவாவுக்கு வருமாறு பீரிஸ் அழைக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அரசு அதற்கு முன்னரே பீரிஸை அனுப்பி அமெரிக்காவைச் சமாதானப் படுத்த முயல்கிறது.

ஆனால் அது அவ்வளவு இலகுவில் சாத்தியப்படுமா என்பது சந்தேகம் தான். ஏற்கனவே, போர்க்குற்ற விசாரணைக்கு அழுத்தம் கொடுப்பதற்காக அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் ரொபேட் ஓ பிளேக் இலங்கை வரத் திட்டமிட்டிருந்த போது, வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் நாட்டில் இல்லையென்று கூறி இராஜதந்திர வழியில் அவரது வருகையைத் தடுக்க இலங்கை முயன்றது.

பின்னர் அவர் தனது பயணத் திட்டத்தை மாற்றிக் கொண்டு வந்த போது கூட, அவரைச் சந்திக்காமல் தட்டிக் கழித்திருந்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.அமெரிக்காவுக்கு இலங்கை எப்படிப் போக்குக் காட்டியதோ, அதேநிலை இப்போது வெளிவிவகார அமைச்சர் பீரிஸுக்கும் ஏற்படலாம்.அது ஒன்றும் ஆச்சரியப்படக் கூடிய விடயமல்ல.

முன்கூட்டியே வெளிவிவகார அமைச்சர் பீரிஸை வாஷிங்ரனுக்கு அழைத்து இலங்கை அரசுக்கு ஏற்பட்டுள்ள உயர் அழுத்தத்தைக் குறைக்க அமெரிக்கா விரும்பாது. இதே பதற்றம்- அழுத்தம் ஜெனீவா கூட்டத்தின் இறுதிப் பகுதி வரை தொடர வேண்டும் என்பதே அமெரிக்காவின் எண்ணம்.

இதனை, வரும் மார்ச் மாதம் வாஷிங்ரனுக்கு வருமாறு ஹிலாரி விடுத்த அழைப்பில் இருந்தே புரிந்து கொள்ள முடிகிறது.

இறுதியாக நடந்த ஜெனீவா கூட்டத்தின் போதும் இலங்கைக்கு நெருக்கடி இருந்தது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை அந்தக் கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறு அழுத்தம் கொடுப்பதற்காக அப்போது அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் ரொபேட் ஓ பிளேக் கொழும்பு வரவேண்டியிருந்தது. ஆனால் இப்போதும் அமெரிக்கா இதுபற்றி விவாதிக்க வாஷிங்ரனுக்கு வருமாறு பீரிஸை அழைத்துள்ளது. இந்த ஒரு அழைப்பே இலங்கையைத் தடுமாற வைத்து விட்டது.

கடந்தமுறை பிளேக் வந்து கடுமையாக வற்புறுத்திய போதும் ஒத்துவராத அரசு இப்போது அமெரிக்கா கேட்காமலேயே அறிக்கையை ஜெனீவாவில் கையளிக்க முடிவுசெய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஜெனீவாவில் நாங்கள் சாதிப்போம், எந்தக் கேள்வி கேட்டாலும் பதிலளிக்கத் தயார் என்று அறிவித்த அமைச்சர்களும், அதிகாரிகளும் இப்போது அடியோடு குழம்பிப் போயுள்ளனர்.கடந்த புதன்கிழமை அலரி மாளிகையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் இது எதிரொலித்துள்ளது. அமெரிக்காவின் முடிவு குறித்து அங்கு விவாதிக்கப்பட்டுள்ளது.

அப்போதே, அமெரிக்காவுக்கு விளக்கமளிக்க ஒரு உயர் மட்டக்குழுவை அனுப்பவுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‘ஷ கூறியுள்ளார்.தன்னை அதிகாரத்தில் இருந்து அகற்ற அமெரிக்கா முனைவதாக அவர் குற்றம்சாட்டியதாகவும் தகவல்கள் வெளியாகின.

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வரப்போவதாக அமெரிக்கா அறிவிக்கவில்லை, ஆதரிக்கப் போவதாகத் தான் கூறியுள்ளது.

அப்படியானால் அந்தத் தீர்மானத்தை யார் கொண்டு வரப் போவது? என்ற கேள்வி எழுகிறது.கடைசியாக நடந்த கூட்டத்தொடரில் கனடா ஒரு தீர்மானத்தைக் கொண்டு வர முனைந்தது.கடைசிநேரத்தில் அது கைவிடப்பட்டது. இம்முறையும் கனடாவை உசுப்பி விட்டிருக்கலாம் அமெரிக்கா. இந்தநிலையில் ஜெனீவாவில் கொண்டு வரப்படும் தீர்மானத்துக்கு இந்தியாவும் ஆதரவளிக்கலாம் என்றும் தகவல்கள் வெளியாகின. இத்தகைய சூழலில் மேற்குலக நாடுகள் இந்தியாவின் ஆதரவைப் பெறும் முனைப்பில் இறங்கியுள்ளன.அதன் ஒரு கட்டமாகவே நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவரும் அந்த நாட்டின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் புதுடில்லி சென்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இன்னொரு பக்கத்தில் இந்தியாவின் ஆதரவைத் தேடும் முயற்சியில் இலங்கையும் ஈடுபட்டுள்ளது.இந்திய இலங்கை- பாதுகாப்புக் கலந்துரையாடலுக்காகப் புதுடில்லி சென்றிருந்த பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கடந்தவாரம் இதுபற்றியும் மேலோட்டமாகப் பேசியுள்ளார்.

ஜெனிவாவில் ஆதரவு தேடுவதற்காக பீரிஸ் கடந்த வாரம் கமரூனுக்கு ஓடினார். இப்படியாகப் பீரிஸ் இப்போது உலகம் சுற்றும் வாலிபனாகிவிட்டார்.தலையைப் பிய்த்துக்கொண்டு ஓடித்திரிகிறார்.

இந்த நெருக்கடியில் இருந்து அரசு மீள்வதற்கு மீண்டும் பேச்சுகளைத் தொடங்குதல், அதிகாரப் பகிர்வுக்கு இணங்குதல் ஆகியவற்றுடன் போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறும் பொறிமுறையை உருவாக்கும் விடயத்திலும் அரசு இறங்கிப் போய்த் தான் ஆக வேண்டியுள்ளது.இதனைச் சாதிக்கும் வரை அமெரிக்கா போன்ற நாடுகளின் அழுத்தங்கள் குறைவதற்கு வாய்ப்புகள் இல்லை. வரப்போகும் ஜெனீவா கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டு வரப்படுமோ இல்லையோ, இலங்கைக்கு அவ்வப்போது அமெரிக்கா கலக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது மட்டும் உண்மை. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

தருபவர் - வித்தியா

## 12.02.2012 முதல் 18.02.2012 வரை

### மேடம்



வேலைகளை திட்டமிட்டுச் செய்வீர்கள். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். ஆதாயமில்லாத, அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்கள் சிலர் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவை எதிர்கொள்ளலாம். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். பெரிய மனிதர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தந்தையால் நன்மை அடையலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். அவர்கள் மூலம் சிலர் முக்கிய வேலைகளை முடித்துக் கொள்ளலாம். வரும் பணம் எல்லாம் குடும்பத்தினருக்காகவும், மனைவி மற்றும் அவரது வழியிலான உறவுகளை திருப்திப்படுத்தவும், பயணங்களுக்காகவும் செலவு செய்யலாம். குழப்பம், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். பணவரவு உண்டு.

### இடபம்



முக்கிய வேலை ஒன்றில் தடை ஏற்படலாம். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சகோதரிகள், உறவுப் பெண்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது போன்றவற்றால் சந்தோஷம் உண்டு. கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். அதேநேரத்தில், சில சுபச் செலவகளும் தொடர்ந்து கொண்டிருக்கும். மாமன், மைத்துனர்களை நம்பி இறங்கிய காரியங்கள் நல்ல விதமாக முடியலாம். அவர்களில் சிலரை நீண்ட நாள்களுக்குப் பின்னர் சந்திக்கலாம். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். சூரியன் சாதகமற்ற நிலையில் உள்ளதால், தந்தை உடல் நலன் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். அடுத்தவர் விவகாரங்களில் தலையிட்டு, மன உளைச்சலுக்கு ஆள்படலாம். மற்றவர்களுக்காக உங்கள் பணத்தை செலவிடலாம். குழப்பம், தடுமாற்றம், மறதி நேரும்.

### மிதுனம்



குடும்ப உறுப்பினர்கள் சிலருடன் பொறாமை பிரச்சினைகள், கருத்து மோதல்கள் உண்டாகலாம். அடுக்கடுக்காகக் குவியும் வேலைகளையும், அசராமல் செய்து முடிப்பீர்கள். எதிர்பாராத உதவிகள், பணவரவுகள் கிட்டும். நீண்டதூர பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். வழக்கமாகச் செய்யும் சில வேலைகளை செய்ய முடியாமல், தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். பிள்ளைகள் நலன்கருதி சில முக்கிய காரியங்களைச் செய்வீர்கள். சிறிய வேலைகள் கூட, பெரிய அளவில் அலைச்சலை ஏற்படுத்தி தொந்தரவு கொடுக்கலாம். மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். தேக பராமரிப்பு விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். அலைச்சல் உண்டு.

### கடகம்



ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். தர்ம, புண்ணிய காரியங்களைச் செய்வீர்கள். சந்தோஷம் தரும் அல்லது சங்கடம் தரும் செய்திகளைக் கேட்கலாம். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த சில காரியங்கள் மட்டுமின்றி, எதிர்பாராத சில காரியங்களும் நடக்கலாம். புதியவர்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும். எதிர்பார்த்த வேகத்துக்கு பல வேலைகள் நடக்காமல், இடையூறுகளைச் சந்திக்கலாம். பணத் தட்டுப்பாடு ஏற்படலாம். தந்தையுடன் கருத்து வேறுபாடுகள் உண்டாகலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் அனுகூலம், ஆதாயம் பெறலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். விருந்தினர்கள் வருகையால் வழக்கமான பணிகளில் மாற்றங்களைச் செய்யலாம். பணவரவு உண்டு. நல்ல செய்தி கேட்கலாம்.

### சிங்கம்



உங்களுக்குப் பிடித்தமான சில பொருள்களை மற்றவர்கள் கொடுக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். வீண் பிடிவாதங்களால் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். சில விடயங்களில் நினைப்பது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். மலைபோல் வந்த பிரச்சினைகள் எல்லாம் பனிபோல விலகி விடும். பெரிய மனிதர்கள், ஆன்மிகப் பெரியவர்களின் சந்திப்பு நிகழும். நீண்ட நாள்களாகச் சேமித்த பணம் கணிசமாக கைக்கு கிடைக்கலாம். தந்தை கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். நீண்ட நாள்களாக இழுத்தடித்த சில காரியங்கள் நடக்கலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். சிறிய விடயங்களுக்கு கூட அடிக்கடி பெரிய அளவில் கோபம் கொண்டு விட்டு, பின்னர் கவலை அடைவீர்கள். சகோதரர்கள் வழியில் தொல்லைகள் உருவாகலாம். ஊக்கம், உற்சாகம் கூடும். பணம் வரும். செலவு, வேலைப்பளு அதிகரிக்கும்.

### கன்னி



சில வேலைகளுக்காக நீண்டநேரம் காத்திருக்கலாம். உங்களின் மன எழுச்சியை, உற்சாகத்தை அதிகரிக்கும் வகையிலான சில செய்திகளை நண்பர்கள், உறவினர்கள் சொல்லலாம். நீண்ட நாள்களாகச் சந்திக்காத உறவினர்கள் சிலரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும். சுகமான இனிய அனுபவங்களை எதிர்கொள்ளலாம். பூர்வீக சொத்து விவகாரங்களிலும் கவனம் அவசியம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் நன்மை அடையலாம். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். அதேநேரத்தில், தேக ஆரோக்கிய விடயங்களில் கவனம் அவசியம். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், ஆடம்பர ஈடுபாடுகள் போன்ற வகையில் பணம் கரையலாம். சகோதரர்கள் வழியில் எதிர்பாராத சில உதவிகள் கிடைக்கலாம். செலவு, அலைச்சல் உண்டு. மறதியால் [illegible] பயணம் செல்லலாம். பரபரப்பாகச் செயற்படுவீர்கள்.

### துலாம்



கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். எண்ணிய காரியங்கள் எண்ணம்போல நிறைவேறும். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த வேலைகள், முடிவுக்கு வரும். பணவரவுகளைப் பெறலாம். உறவுப் பெண்கள், சகோதரிகள், தாயார் வழியில் தொல்லைகள் உருவாகலாம். வாகனங்கள் திடீரெனப் பழுதாகி கணிசமான பணத்தைக் கரைக்கலாம். தந்தையின் செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். மாமன், மைத்துனர்களுடன் சிறு மனஸ்தாபம் உருவாகலாம். பெரிய மனிதர்கள் சிலர் உங்களின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்கலாம். ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம்.

### விருச்சிகம்



மந்தம், மறதி, கவனக்குறைவு, தண்டச் செலவு, திட்டமிட்ட வேலைகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதம் போன்ற பிரச்சினைகளைச் சந்திக்கலாம். வெறுப்பு, விரக்தி உண்டாகும். நீண்ட நாள்களாகச் சந்திக்காத சிலரைச் சந்திக்கலாம். ஒரு விடயம் குறித்து பெரிய அளவில் மனக்கோட்டை கட்டி, அது நடக்காமல் போகலாம். இழுபறியாக இருந்த சில காரியங்கள் முடிவுக்கு வரும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வியக்க வைக்கும் சில சம்பவங்கள் நடக்கலாம். நீண்ட தூர பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். எதிர்ப்புகள், போட்டிகள் அதிகரிக்கும். நீங்கள் எதிர்பாராத சில தரப்பிலிருந்து உங்களுக்கு எதிர்ப்புகள் தோன்றலாம். அடிக்கடி மன உளைச்சல்களுக்கு ஆள்படுவதால், நிம்மதி குறையலாம். தேக ஆரோக்கியக் குறைவுகளுக்கு ஆள்படலாம். திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

### தனுசு



பிரியமான நண்பர்கள், உறவினர்கள் சந்திப்பு நிகழும். மலையாகக் குவிந்த வேலைகளையும் அசராமல் செய்து முடிப்பீர்கள். திட்டமிட்ட வேலைகளில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். வேண்டாத தண்டச்செலவுகளையும் சந்திக்கலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவை எதிர்கொள்ளலாம். மனைவி, குழந்தைகளின் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். தாயார் வழியில் சில நன்மைகளை அடையலாம். பயணங்கள் மூலமும் நினைத்த காரியங்கள் நிறைவேறும். குதர்க்கமான பேச்சுக்களால் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். பணிபுரிவோர் மேலதிகாரிகளிடம் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். மாமன், மைத்துனர்கள், நண்பர்களாலும் தொல்லைகளே. வெளிவட்டாரத் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையாது. மற்றவர்களுக்காகப் பிறரிடம் உதவி கேட்பீர்கள். காரிய வெற்றி உண்டு.

### மகரம்



அடுக்கடுக்காக வேலைகள் குவிந்தாலும், அனைத்தையும் அசராமல் செய்து முடிப்பீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். திட்டமிட்ட காரியங்கள் முடியும். மனதுக்கு உற்சாகம் தரும் அனுபவங்களை எதிர்கொள்ளலாம். பொழுதுபோக்கு விடயங்களில் நாட்டம் செல்லும். அடிக்கடி எரிச்சல் உணர்வுகள் ஆள்கொள்ளும். அதனால், குடும்பத்தினரிடம் பொறுமையாக நடந்து கொள்ள வேண்டும். தொழில் ரீதியான பணவரவுகள் அதிகரிக்கும். பிள்ளைகளின் செயல்பாடு உங்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் அமையும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வகையில் நன்மை அடையலாம். உங்கள் மூலம் அவர்கள் காரியம் சாதிக்கலாம். எதிலும் பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். அடுக்கடுக்காகக் குவியும் வேலைகளால் அவதிப்படலாம். எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடக்கலாம்.

### கும்பம்



சில வேலைகளைச் செய்ய மறந்து அவதிகளுக்கு ஆளாகலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். நோய் உபாதைகளால் உற்சாகம், தெம்பு குறையலாம். அதிக சிரமத்தைக் கொடுக்கலாம் என்று நினைத்த சில காரியங்கள் சுலபமாக முடியலாம். உறவினர்கள் சிலர் உங்கள் மூலம் ஆதாயம் பெறலாம். குடும்பத்தில் சந்தோஷமான, மகிழ்ச்சியான சம்பவங்கள் நடக்கும். நீண்ட நாள்களாகச் சந்திக்காத சொந்தங்கள் சிலரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும். சகோதரிகள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக சில காரியங்களைச் செய்து விட்டு அவதிப்படுவீர்கள். தந்தை வழியில் அன்புத் தொல்லைகள் உருவாகலாம். அனுகூலமான செய்தி கேட்கலாம். காரியத் தடை நேரும்.

### மீனம்



ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்கள் வழியில் செலவுகள் ஏற்படலாம். வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடிவடையாமல், அவற்றை நீங்களே செய்ய நேரிடலாம். சில வேலைகளைச் செய்ய மறந்து அவதிப்படலாம். வீண் செலவுகள் குறைந்து சேமிப்பு அதிகரிக்கும். பிள்ளைகளின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பெண்கள், உடன் பிறந்தவர்கள் மூலம் ஆதாயம் பெறலாம். இழுபறி இல்லாமல் எந்த வேலையும் உடனுக்குடன் முடிவுக்கு வரும். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் அகன்று [illegible] அதிகரிக்கும். ஊக்கம், உற்சாகமாகச் செயல்படுவீர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முத்தரப்புத் தொடரின் முதல்வர் யார்?

■ டிலீப்

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் மூன்று அணிகளும் தலா ஒரு முறை விளையாடியுள்ளது. ஆஸ்திரேலிய அணி விளையாடிய இரண்டு ஆட்டங்களிலும் வெற்றி பெற்றதுடன், இந்திய அணியுடனான ஆட்டத்தில் போனஸ் புள்ளியுடன் வெற்றி பெற்று 9 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. இந்திய அணியைப் பொறுத்தவரையில் ஆஸ்திரேலியாவுடனான ஆட்டத்தில் தோல்வியடைந்திருந்தாலும், இலங்கையுடனான ஆட்டத்தில் வெற்றி பெற்று 4 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தில் உள்ளது.

இலங்கை அணி விளையாடிய இரண்டு ஆட்டங்களிலுமே தோல்வியைச் சந்தித்தது. புதிய அணித்தலைமை, புதிய பயிற்றுனர் என்று இலங்கை அணி மாற்றங்களுடன் ஆஸ்திரேலிய மண்ணில் களமிறங்கியது. இந்த மாற்றங்கள் மூலம் இலங்கை அணி வெற்றி பெறும் என்று நம்பப்பட்ட போதும் முதல் சுற்று நிறைவில் எந்தவொரு ஆட்டத்திலும் இலங்கை அணியால் வெற்றி பெறுவதற்கு முடியவில்லை.

ஒவ்வொரு அணியும் இன்னும் இரண்டு தடவைகள் மற்றைய அணிகளுடன் மோதவுள்ளன. இலங்கை அணிக்கு இன்னும் 4 வாய்ப்புக்கள் இருக்கின்றன. அவற்றை இலங்கை அணி சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்தியாவுடனான ஆட்டத்திலும் சரி, ஆஸ்திரேலியாவுடனான ஆட்டத்திலும் சரி இலங்கை அணியின் துடுப்பாட்டம் தனியொரு வீரரை மட்டுமே சார்ந்திருந்தது. மிகச் சிறந்த இணைப்பாட்டங்கள் எவற்றையுமே இலங்கை அணி அமைக்கவில்லை. டில்ஷான் ஆரம்பத்தில் சிறப்பான அடித்தளமமைத்துக் கொடுப்பது ஆரோக்கியமானது. இருந்தும் தரங்க மறுமுனையில் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றுகின்றார். மத்திய வரிசையில் சந்திமால் அல்லது மத்தியூஸ் என்ற நிலையில் இலங்கை அணியிருக்கின்றது. மஹேல அணித் தலைவர் என்ற வகையில்கூட சிறப்பாகத் துடுப்பெடுத்தாடவில்லை.

இந்தியாவுடனான ஆட்டத்தில் இலங்கை அணி மிகக்குறைவான இலக்கை நிர்ணயித்திருந்தாலும் இந்திய அணி ஒரு கட்டத்தில் தடுமாறியது. அந்த நிலையில் வைத்து இலங்கை அணியால் இந்தியாவின் இரண்டு சகலதுறை ஆட்டக்காரர்களை கட்டுப்படுத்த முடியாமல் போனமை துரதிஷ்டமே. அவர்கள் தடுத்து முதலில் தம்மை நிலைநிறுத்திக் கொள்வதற்கு முயற்சித்த வேளையில் இலங்கை அணி வேகப் பந்து வீச்சாளர்களை மாத்திரமே பயன்படுத்தியது.




அனுபவமான சுழற்பந்து வீச்சாளர் இல்லாவிடினும் அந்த ஆட்டத்தில் சுழல் பந்து வீச்சு பங்கை நிறைவு செய்த டில்ஷான் மூலமாக ஒன்று, இரண்டு பந்து பரிமாற்றங்களை வீசச் செய்து அவர்களது ஆட்டத்தின் போக்கை மாற்றியமைத்து வென்றிருக்க முடியும்.

இந்தியாவுடனான ஆட்டத்தில் தோல்வியடைந்த பின்னர் இலங்கை அணித்தலைவர் மஹேல தெரிவிக்கும் போது, இந்த ஆட்டத்தில் சுழற்பந்து வீச்சாளர் ஒருவரைத் தேர்வு செய்யாததால் தான் தோல்வியடைந்ததாக அர்த்தமில்லை. நாங்கள் துடுப்பாட்டத்தில் சில தவறுகளைச் செய்திருக்கின்றோம். அதே போன்று ஆஸியுடனான தோல்வியின் பின்னரும், அணியின் துடுப்பாட்டத்தில் தான் பிழை உள்ளதாக குறிப்பிட்டிருக்கின்றார். இரண்டு ஆட்டங்களிலுமே துடுப்பாட்டத்தில் தவறு இருப்பதாக மாத்திரம் தெரிவிப்பதால் எதுவித பலனுமில்லை. அதனை திருத்திக் கொள்வதற்கு அணி முயற்சிக்க வேண்டும்.

இலங்கை அணியின் பந்து வீச்சு மற்றும் களத்தடுப்பு என்பன சிறப்பாக அமைந்திருக்கின்றது. ஆஸ்திரேலிய அணியை குறைவான ஓட்ட எண்ணிக்கைக்குள் கட்டுப்படுத்தியமை மற்றும் ஆஸியின் முக்கியமான இலக்குகள் இலங்கையின் அபார பிடியெடுப்பின் மூலமே வீழ்த்தப்பட்டது. இவையனைத்தும் இலங்கை அணி மேற்படி இரண்டு துறைகளிலும் சிறந்து விளங்குவதையே காட்டுகின்றது. இருப்பினும் துடுப்பாட்டத்தில் அதிகம் போராட வேண்டியிருப்பதால் தோல்வியை தவிர்க்க முடியவில்லை.

இந்திய அணியைப் பொறுத்தவரையில் சுழற்சி முறையில் முன்னணி வீரர்கள் தேர்வு இடம்பெறுவதால் அணிக்குள் குழப்பம் நீடிக்கின்றது. இருப்பினும் அதனையும் சமாளித்து இலங்கை அணியுடன் வெற்றி பெற்றிருக்கின்றார்கள். 7 துடுப்பாட்ட வீரர்களைக் கொண்ட அணியாக இந்தியா விளங்கினாலும் எதிரணிகளின் பந்து வீச்சில் அவர்கள் விரைவில் அடிபட்டு போய் விடுகின்றனர். மத்திய வரிசையில் ஹோக்லியை மட்டும் நம்பி விளையாடுகின்ற அளவில் இந்திய அணியின் நிலைப்பாடு இருக்கின்றது.

பந்து வீச்சு பரவாயில்லை என்ற நிலைப்பாட்டில் உள்ளது. இந்திய அணி அந்நிய மண்ணில் தோற்கின்ற நிலைப்பாடு மெல்ல மாற்றம் கண்டு பலமானதொரு அணியாக மாறியுள்ளது.

ஆஸ்திரேலிய அணி தனது இளம் வீரர்களின் படையைக் கொண்டு சொந்த மண்ணில் சாதிக்கின்றனர். ஆஸியின் துடுப்பாட்டமும் சொல்லிக் கொள்ளும் படியாக சிறப்பாக இல்லாவிடினும் பந்து வீச்சைக் கொண்டு நிர்ணயிக்கும் ஓட்ட எண்ணிக்கைக்குள் கட்டுப்படுத்தும் பலத்தைக் கொண்டிருக்கின்றனர்.

முதல் சுற்று நிறைவில் ஆஸி. அணி பலமானதாகவும் இலங்கை அணி பலவீனமானதாகவும் இருந்தாலும் இரண்டாவது சுற்றில் மூன்று அணிகளுமே முதற் சுற்று முடிவை பாடமாக எடுத்து தம்மை மாற்றியமைத்து விளையாடும் என்பதால் இரண்டாம் சுற்று முடிவு நிச்சயமாக மாற்றமடையும். ✱

# திறமைகள் வளர்த்தெடுக்கப்படுமா?

■ இனியன்

பாடசாலைகளில் இடம்பெறும் இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவ, மாணவிகளுக்கான துறைசார் பயிற்சிகள், வசதி வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுப்பது எப்போது?

அந்த வசதிகள் இல்லாத காரணங்களால் சில விளையாட்டுக்கள் வழக்கொழிந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

தற்போது பாடசாலைகளில் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

பாடசாலை விளையாட்டு மைதானங்கள் எங்கும் மாணவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக உயரம் பாய்தல் போட்டியில் பங்கு கொள்ளும் மாணவர்களுக்கான பயிற்சி வழங்குதல் முறை தொடர்பாகப் பல்வேறு விமர்சனங்கள் ஏற்பட்டு வருகின்றன.

அவசரமாகப் போட்டிகளை நடத்தி முடிப்பதற்காக உரிய முறையில் விளையாட்டுத்துறை வசதிகளை ஏற்படுத்தாமல் பயிற்சிகள் வழங்குவதாகவும் பலதரப்பட்டோராலும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

உயரம் பாய்தல் போட்டிக்கான பயிற்சிகள் வழங்குதலில் உள்ள முரண்பாடுகள் காரணமாக வீரர்கள் கை, கால்கள் முறிந்த நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிக்கான பயிற்சிகள் ஆரம்பித்தது முதல் இன்றுவரை 41 பேர் இவ்வாறான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ள னர்.

இதனால் மாணவர்களுடைய விளையாட்டுத்துறை மாத்திரம் இன்றி கல்வித்துறைச் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

காலத்தின் நீரோட்டத்துக்கு ஏற்ப பாடசாலைகளிலும் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.




திறமையான மாணவர்களை இனம்கண்டு அவர்களை மேன்மேலும் வளர்த்தெடுக்கக் கூடிய வகையான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

noolaham.org | aavanaham.org

# மாலைதீவில் ஏற்பட்டுள்ள ஆட்சிமாற்றம்

ராம்

**முன்னாள் அதிபர் நசீத்தை ராணுவத்தினர் தரையில் போட்டு இழுத்துச் சென்றனர். அவரைக் கைது செய்வதற்கான கட்டளை திரும்பப் பெறப்பட்டு விட்ட தாகவும், அவர் இப்போது தமது ஆதரவாளர்களுடன் இருப்ப தாகவும் கடைசிச் செய்திகள் தெரிவித்தன.**

மக்கள் கிளர்ந்தெழுந்தால் ஆட்சியாளர்கள் என்னதான் பலம் பொருந்தியவர்களாகவும் அதிகாரத்தைக் கையிலெடுத்தவர்களாகவும் இருந்தாலும் அடிபணிந்துதான் ஆகவேண்டும். இதற்கு உதாரணமாக இருக்கிறது அண்டை நாடான மாலை தீவில் இடம்பெற்றுள்ள மக்கள் புரட்சி.

மக்கள் எழுச்சிக்கு முன்னால் தாக்குப் பிடிக்க முடியாமல் அந்த நாட்டின் அதிபர் டாக்டர் மொகம்மது நஷீக், கடந்த ஏழாம் திகதி தம் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

அதிபரின் பதவி விலகலைத் தொடர்ந்து உப அதிபர் மொகம்மது வாகீத் ஹூசேன் அதிபராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார். மாலைதீவு அரசமைப் பின்படி அதிபர் பதவிக்கு ஏதும் நிகழும் போது, உப அதிபர் அந்தப் பதவியை ஏற்று நடத்துவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. மேற்கொண்டு ஏற்பாடுகள் செய்யப்படும் வரை அவர் அதிபராக இருப்பார்.

மாலைதீவின் அதிபராக இருந்த நஷீத் இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு மிகவும் வேண்டியவர். அந்த நாட்டில் சமீப காலத்தில் ஏற்பட்டிருந்த ஓர் அரசியல் நெருக்கடியின் போது, இலங்கை ஜனாதிபதி அதில் தலையிட்டு சுமுக நிலைமை ஏற்பட உதவியிருந்தார். அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த மாலைதீவு அதிபர் சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளில், இலங்கைக்குச் சார்பாக செயற்படவும் விருப்பம் தெரிவித்திருந்தார். இப்பொழுது அவர் பதவியில் இல்லாமை, ஜெனிவாவில் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு ஏற்படக்கூடிய இக்கட்டான நிலைமைகளில், கைகொடுக்கக் கூடிய நாடுகளின் தலைவர் பதவியில் அவர் இல்லாமல் போனமை இலங்கைக்கு ஏமாற்றமாகவே இருக்கும்.

2008 ஆம் ஆண்டு மாலைதீவில் நடைபெற்ற முதலாவது பொதுத்தேர்தலில், அதுவரை காலமும் பதவியிலிருந்துள்ள கயூமை வீழ்த்தி நஷீத் பதவிக்கு வந்தார். இப்பொழுது நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள ஆர்ப்பாட்டங்களையடுத்து அவர் பதவியை விடுத்தார்.

ஜனவரி 16 ஆம் திகதி அந்த நாட்டின் குற்றவியல் நீதிமன்றத்தின் பிரதம நீதியரசரைக் கைது செய்யும்படி அதிபர் உத்தரவிட்டதையடுத்து, நாட்டில் அமைதியின்மை ஏற்பட்டது. ஊழல் குற்றச்சாட்டின் மீது பிரதம நீதியரசர் அப்துல்லா முகம்மது ராணுவத்தால் கைது செய்யப்பட்டதையடுத்து நாட்டில் மக்கள் கொந்தளிப்பு ஏற்பட்டது. முன்னாள் அதிபர் முகம்மது கயூமால் நிறுவப்பட்டுள்ள முற்போக்குக் கட்சி, இந்த ஆர்ப்பாட்டங்களை முன்னின்று நடத்தியதாகக் கூறப்பட்டது. முன்னாள் நீதியரசரைச் சிறையிலிருந்து விடுவிக்குமாறு கோரியே இந்த மக்கள் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் பொலிஸ் படைகளின் ஒரு பகுதியினரும் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களுடன் சேர்ந்து கொண்ட பொலிஸ் படைகளில் சிலர், மாலைதீவு பாதுகாப்புப் படைகளின் தலைமையகத்துக்கருகில் படையினருடன் மோதலிலும் ஈடுபட்டார்கள் என்று தகவல்கள் கூறின. பின்னர் அவர்கள் ஆர்ப்பாட்டக்காரர்களின் ஆதரவுடன் அரச ஒலிபரப்பு நிலையத்தையும் கைப்பற்றினர்.

### தரையில் போட்டு இழுத்துச் சென்றனர்

முன்னாள் அதிபர் நஷீத் மீதும் அவரது ஆதரவாளர்கள் மீதும் பழிவாங்கப் போவதில்லையென்று இப்பொழுது பதவியில் அமர்ந்துள்ள அதிபர் வகீத்ஹூசைன் கூறியிருக்கிறார். ஆனால் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் அதற்கு மாறாகவே உள்ளன.

தாம் துப்பாக்கி முனையில் ராணுவத்தினராலும், பொலிஸாராலும் மிரட்டப்பட்டதன் விளைவாகவே பதவியிலிருந்து விலக வேண்டியேற்பட்டதாக நஷீத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மாலைதீவில் இடம்பெற்றுள்ள நிகழ்வுகள் குறித்துச் சர்வதேசம் உடனடியாகக் கவனம் எடுக்க வேண்டும். காத்திருந்தால் எல்லாம் கால தாமதமாகி விடும் என்று தொலைக்காட்சி நிகழ்வொன்றில் அறிவித்தார் முன்னாள் அதிபர்.

வீடொன்றில் மறைந்திருந்த முன்னாள் அதிபரை, ராணுவத்தினர் பிடித்து இழுத்துச் செல்வது தொலைக்காட்சி ஒன்றில் காட்டப்பட்டது. மஞ்சள் நிற மேற்சட்டையுடன் இருந்த அவரைச் சட்டையில் பிடித்து இழுத்துச் சென்றார்கள். கீழே விழுந்த அவரை சட்டை கிழிந்த நிலையில் தரையில் போட்டு இழுத்துச் செல்வது காணொளியில் தெரிந்தது.

முன்னாள் அதிபர் நஷீத்தின் மனைவியும் பிள்ளைகளும் இப்போது இலங்கையில் அடைக்கலம் தேடி வந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

மாலைதீவிலிருந்து வரும் செய்திகள் முன்னுக்குப் பின் முரணாகவே உள்ளன. முன்னாள் அதிபரைக் கைது செய்யும்படி விடுக்கப்பட்டிருந்த கட்டளை இப்போது வாபஸ் பெறப்பட்டுள்ளதாகக் கடைசியில் கிடைத்த ஒரு செய்தி கூறியது.

முன்னாள் மாலைதீவு அதிபர் கயூம் இப்போது மலேஷியாவில் சிகிச்சை பெற்று வருகிறார். இப்போதைய அதிபர் பதவி விலகியுள்ளார் என்ற செய்தியைக் கேட்டுத் தாம் ஆறுதல் அடைந்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

### மாலைதீவு பற்றிய சிறு குறிப்பு

மாலைதீவு குடியரசு இந்துமா கடலில் இலங்கைக்குச் சுமார் 500 மைல் தொலைவில் தென்மேற்கில் அமைந்துள்ள சிறு தீவுகளின் கூட்டமாகும். அதிபர் ஒருவரின் தலைமையில் அமைச்சரவையைக் கொண்ட ஒற்றை ஆட்சி முறையாகும்.

1965 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது. பல தடவைகள் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான

**உலகப் பார்வை ஒரு கண்ணோட்டம்**

புரட்சி முயற்சிகள் இடம்பெற்றபோதிலும், 1988 ஆம் ஆண்டு நடந்த சதி முயற்சி சர்வதேச சமூகத்தை விழிப்புறச் செய்தது. சுமார் 80பேர் கொண்ட கூலிப் படையினர் (புளொட் உறுப்பினர்கள் என்று கூறப்பட்டது) மாலைதீவில் இரவு நேரத்தில் சென்றிறங்கினார்கள். அதே அளவு ஆள்கள் ஏற்கனவே பயணிகள் என்ற முறையில் அங்கு சென்றிருந்தனர். கூலிப் படையினர் மிக விரைந்து செயல்பட்டு ஹீலுலே விமான நிலையத்தை அடைந்த போதிலும், கயூமைப் பிடிப்பதற்கு அவர்களால் முடியவில்லை. அவர் வீட்டுக்கு வீடு மாறிக் கொண்டே இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகளின் உதவியைக் கேட்டிருந்தார். இந்திய பிரதமர் ராஜிவ் காந்தி 1600 பேர் கொண்ட படையொன்றை விமானம் மூலம் அனுப்பினார். 12 மணிநேரத்தின் பின் இந்திய விமானப்படைகளும் வந்து சேர்ந்தனர்.

கூலிப்படையினர் இலங்கைப் பக்கமாகக் கப்பலில் தப்பிச் செல்ல முயன்று தோற்றனர். மோதலில் பலர் இறந்தனர். பிடிபட்டவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். இதற்குப் பின் புலமாக மாலைதீவு அரசுடன் வெறுப்புடன் இருந்த சில மாலைதீவு வர்த்தகர்களே இருந்துள்ளனர் என்று தெரியவந்தது.

### தாக்கினால் போர் அபாயம்! ஈரானின் உயர் தலைவர் எச்சரிக்கிறார்

ஈரான் மீதான சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கும் அதே வேளை அந்த நாடும் எந்தவிதமான சர்வதேச அழுத்தத்தையும் முகம் கொடுத்து முறியடிக்கத் தயாராகவே இருக்கின்றது.

ஈரானில் அணுகுண்டு தயாரிக்கும் முயற்சி தீவிரமடைந்திருப்பதாகப் பொதுவில் கருதப்படுகின்றது. ஐ.நாவும் ஏனைய மேலை நாடுகளும் யுரேனியத்தைச் சுத்திகரித்து, அதனைச் செறிவூட்டிக் கொள்வதற்கு ஈரான் எடுத்துவரும் முயற்சிகள் குறித்து பெரும் கவலை கொண்டுள்ளன.

ஈரானின் இந்த முயற்சி, அணுகுண்டுத் தயாரிப்பில் வெற்றிக்குக் கொண்டு போய் விடுமானால் அந்த நாடு தனது எதிரிகளாகக் கருதிவரும் அமெரிக்கா போன்ற நாடுகளின் சர்வதேச தளங்களுக்கும் நட்பு நாடுகளுக்கும் பெரும் அபாயமாக அது மாறிவிடலாம். குறிப்பாக இஸ்ரேல் நாடு ஈரானின் முக்கிய எதிரி நாடாகக் கருதப்படுவதால் அதுவே பெரும் அளவில் பாதிக்கப்படும் என்ற பயம் எழுந்துள்ளது.

எந்த வகையிலும் ஈரான் அணுகுண்டு ஒன்றை தயாரித்துக் கொள்வதை கூடிய வரையில் முறியடித்து விட வேண்டும் என்பதற்காக அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் ஈரான் மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. இந்தத் தடைகளுக்கு மாறாக மேற்கு நாடுகள் மீது கடும் எதிர்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று ஈரானின் அதி உயர் சமயத் தலைவரான அயதொல்லா அலி கமெப்னி எச்சரிக்கை விடுத்திருந்தார்.

தமது அணு சோதனை நடவடிக்கைகளை, சர்வதேச அழுத்தங்கள் ஒன்றும் செய்துவிடப் போவதில்லை என்று அறிவித்த அவர், எதிர் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். அதுமட்டுமல்ல ஈரான் மீது ராணுவ நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டால் குடாப் பகுதியிலுள்ள அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய தளங்களின் மீது 'வலி' மிகுந்த பிரதி பலிப்புகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ஈரானின் அணு உலைகள் மீது சில மாதங்களுக்குள் இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதற்கான சாத்தியம் இருப்பதாக அறிவித்திருந்த நிலையில் அயதொல்லா அலிகமெப்னியின் எச்சரிக்கை வெளிவந்திருந்தது. அத்துடன் ஈரானிய புரட்சிகரப் பாதுகாப்புப் படையின் பிரதித் தலைவரான ஹூசேன் சலாமி விடுத்துள்ள ஓர் அறிவிப்பில் தமது நாட்டின் மீது தாக்குதல் நடத்துவதற்கு அண்டை நாடு எதுவும் தளம் அமைத்துக் கொடுத்தால் அந்த நாட்டுக்கும் இலக்கு வைக்கப்படும் என்று எச்சரித்துள்ளார்.

ஈரானுக்கு எதிரான பொருளாதாரத் தடை கூர்மையடைந்தும், விரிவடைந்தும் வருவதாகத் தகவல்கள் கூறுகின்றன. ஈரானில் இதன் விளைவுகள் உணரப்பட்ட போதிலும் அந்த நாட்டின் எண்ணெய் வள அமைச்சர் கூறுகையில் கச்சா எண்ணெய் ஏற்றுமதி முற்றாகத் தடைபட்டுப் போனாலும் தங்கள் அணு ஆராய்ச்சித் திட்டத்திலிருந்து பின் வாங்கப் போதில்லையென்று கூறியுள்ளனர்.

### சிரிய அதிபரின் அமைதிக்கான சமிக்ஞை

சிரியாவில் அரச படைகள் நடத்தியுள்ள ஏவுகணை மற்றும் ஷெல் தாக்குதல்களில் 75 பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வந்துள்ள நிலையிலும், சிரியாவைக் கண்டிக்கும் மேற்கு நாடுகளின் தீர்மானம் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ரஷ்ய–சீன வீட்டோ அதிகாரத்தால் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையிலும், சிரிய அதிபர் அஸாத் தமது படைகளின் வன் செயல்களை நிறுத்தவும், அரபு லீக் பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள் நடத்தவும் தயாராய் இருப்பதாக அறிவித்துள்ள செய்தி வெளியாகியுள்ளது.

சிரியாவின் எதிர்கால அமைதிக்கு இந்த அறிவித்தல் பெரிதும் உதவியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சிரியா மீதான ஐ.நா. பாதுகாப்புச்சபைத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டமை குறித்து, மேற்கு நாடுகள் பலவும் ரஷ்யாவையும் சீனாவையும் கண்டித்துள்ளன. நூற்றுக் கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதை, இந்த இரு நாடுகளும் கண்டும் காணாமலும் அஸாத்தின் அரசுக்கு ஆதரவளிப்பதாவும் கண்டித்துள்ளன.

இந்த நிலைமையில் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கே லாவ் ரோவ் தலைமையில் ரஷ்ய தூதுக்குழுவொன்று சிரியாவுக்குப் பயணம் செய்து அதிபர் அஸாத்துடன் பேச்சு நடத்தியது. இந்தப் பேச்சுக்களின் போது எதிர்க்கட்சிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கவும் அரபு லீக் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பாகவும் அவர் சம்மதம் தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

எதிர்க்கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்காக, பிரதிநிதி குழுவொன்றை மாஸ்கோவுக்கு அனுப்பவும், நாட்டில் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வரவும் அவர் ஒப்புக் கொண்டிருப்பதாக ரஷ்ய அமைச்சர் அறிவித்துள்ளார்.

சிரியாவின் எதிர்காலத்துக்கான அரசமைப்புச் சட்டம் ஒன்றை உருவாக்குவது தொடர்பாக டமாஸ் கஸ் மிக விரைவில் மக்கள் கருத்துக் கணிப்பொன்றை நடத்த விருப்பதாகவும் ரஷ்ய அமைச்சர் லாவ் ரோவ் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Facia

Get Radiant inside out!

A QUALITY AUSTRALIAN PRODUCT

## உங்கள் சருமத்திற்கு இளமைப் பளபளப்பு!

skin

hair

nails

Facia என்பது மரீன் கொலாஜன், பயோட்டின் மற்றும் இயற்கைப் பதார்த்தங்களின் அற்புதமான கலவையைக் கொண்ட தனித்துவமான சேர்வையாகும். அது உங்கள் சருமத்திற்குப் புத்துயிரூட்டி, இழுதன்மையை மேம்படுத்தி, இளமையில் சருமம் முதுமையடைவதைத் தடுக்கும். மெல்லிய கோடுகள் மற்றும் சுருக்கங்களைப் போக்குவதால் உங்கள் சருமம் எப்போதும் இளமைப் பளபளப்புடன் திகழும்.

கொலாஜன் விருத்தியை குயஉயை ஊக்குவிப்பதால், உங்கள் கேசம் மற்றும் நகங்களை நலமாக வைத்திருக்கவும் அது உதவும். நிலைத்திருக்கும் பயனைப் பெற, பல வாரங்களுக்கு தினமும் 2 கெப்சூல்கள் எடுக்கவும்.

TGA தராதரங்களுக்கேற்ப அவுஸ்திரேலியாவில் தயாரிக்கப்படும் ஒரிஜினல் Facia இப்பொழுது நாடெங்கும் சகல பிரபல பாமஸிகளிலும் சலூன்களிலும் கிடைக்கும்.

கவனிக்கவும்: தயாரிப்பாளரின் அவுஸ்திரேலிய முகவரி பக்கெட்டில் உள்ளதா என்று பார்த்து வாங்கவும்.

மேலதிக விபரங்களுக்கு:
**07777 63313 / 0773 831661**

Facia For Healthy Glowing Skin

TRIPLE ACTION Skin Hair Nails



**Alaris Lanka (Pvt) Limited.**
A Division of Zifam Pinnacle Pty Ltd., Sydney, Australia.
இல. 9/3, ஹொரணை வீதி, கெஸ்பாவ, பிலியந்தலை.

*Distributor in Jaffna*
**Vanikaa Medicals (Pvt) Ltd,**
**No. 203, Hospital Rd, Jaffna.**



UNIVERSITY OF WESTMINSTER
SHAPING THE FUTURE

SCHOOL OF ELECTRONICS & COMPUTER SCIENCE
www.westminster.ac.uk



## INTERVIEWS FOR SEPTEMBER 2012 INTAKE

- Home to 2,000 students the School of Electronics and Computer Science is located in the heart of Central London
- Cutting-edge, industry relevant courses leading to careers in computer engineering and IT
- Accredited courses by professional bodies including Institution of Engineering and Technology (IET) and BCS – The Chartered Institute for IT
- State-of-the-art computing facilities including dedicated computer labs, network development and testing rooms, advanced multi-media labs, Unix, Novell, NT and Sunray servers, Cisco networking labs and access to the Super-Janet network
- Cisco Network Academy, SAS and Oracle certification training

Interviews by Professor Dik Morling - Head of Department of Electronic, Network & Computer Engineering

**Date : Satuday 25th February 2012**
**At : GNANAM HOTEL, Jaffna**
**Time : 9.30am- 2pm**

**For information, Please contact Sri Lanka representative's office**

WEST 1 International
UK Education Specialists

29/17A Visaka Road, Col 04
T : 011 2594463, 077 6852323
E : west1intl@eureka.lk
W : www.west1uk.net



# 'அல்லது' இனி இல்லை 'மற்றும்'

## என்பதன் சக்தியை விரைவில் கண்டறிவீர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தியுங்கள்... சொல்லுங்கள்... வெல்லுங்கள்... போட்டியின் வெற்றியாளர்கள்

இப்போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள். குழந்தையின் மூளை விருத்தி பற்றிய பல விடயங்களை நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நாம் நம்புகின்றோம்.



வெற்றியீட்டிய அதிர்ஷ்டசாலிகள் பின்வரும் பரிசுகளை வென்றுள்ளனர்:

## ஒரு வெற்றியாளருக்கு V-tech கொம்பியூட்டர்

01 பி. துஷாயினி
21, பிள்ளையார் கோவில் வீதி, திருநெல்வேலி.

## 10 வெற்றியாளர்களுக்கு தலா 3 மாதங்களுக்கான அங்கர் பீடியாபுரோ

01 ஆர். விமலேசன்
இல.129, தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை.

02 உதயரேகா அனுராஜ்
இல.129, குருசுமதவடி, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.

03 ய. யதுநாத்
சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.

04 இ. சிவகாமி
சிவன் வீதி,, ஆவரங்கால்.

05 சாமினி செல்வராசா
4/1, இராமக்கிருஷ்ணா வீதி, கோண்டாவில் கிழக்கு.

06 கரிசோ செல்வரத்தினம்
கட்டுப்பலானை, கோப்பாய் மத்தி, கோப்பாய்.

07 த. சுரேஷ்
1217, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

08 வே. இராமர்
187, உதய நகர் மேற்கு, கிளிநொச்சி.

09 கே.எஸ். சிவஞானராஜா
யாழ். ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம், ஆனைக்கோட்டை.

10 செல்வி ஜெ. ஆரபி
தரம் 09, யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ்ப்பாணம்.

Conditions Apply

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய போஷணை மற்றும் ஊக்குவிப்போடு அறிவார்ந்த ஆரம்பம்

LANKATILES

மாபெரும் மலிவு விற்பனை

புளோர் மற்றும் வோல் டைல்கள், ஸ்விஸ்டெக் டைல் மோட்டார், கிறவுட் என்பன.

பெப்ரவரி 13 – 19 மு.ப.9 – பி.ப.5

50% வரையிலான தள்ளுபடி

யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானம்
(சுப்பிரமணியம் பூங்காவுக்கு முன்னால்)

## சுகமான தூக்கத்திற்கு...

தூங்குவதற்கு இரண்டு மணி நேரத்துக்கு முன்பே சாப்பிட வேண்டும். எளிதில் ஜீரணம் ஆகும் உணவுகளை மட்டுமே இரவில் எடுத்துக் கொள்ளவேண்டும். தூக்கம் பிரச்சினை உள்ளவர்கள் கோப்பி குடிப்பதை தவிர்க்க வேண்டும்.

தினமும் முறையான நேரத்துக்கு தூங்கச் செல்லுதல், தூங்கும் இடத்தில் அதிக வெளிச்சம் இன்றி இருத்தல், மதிய நேரத்தில் குட்டித் தூக்கம் தவிர்த்தல், மனக்கவலைகளை ஓரம் கட்டுதல் வேண்டும். படுக்கையில் அலுவலகப் பணிகள் செய்வதைத் தவிர்க்கவும். இரவில் ஒரு கப் பால் அருந்தவும். இரவில் மது அருந்தும் பழக்கத்தை கைவிடவும். மூளையைத் தூண்டும் மருந்துகளைத் தவிர்க்கவும்.

புகை பிடிப்பதும் நல்லதல்ல. பரபரப்பான வாழ்க்கை முறையை மாற்றி நிதானப்படுத்திக் கொள்ளவும். மன அமைதிக்கான பயிற்சிகள், போதுமான உடற்பயிற்சியும், சத்தான உணவுகளும் இனிய தூக்கத்துக்கு வழிவகுக்கும்.பதப்படுத்தப்பட்ட மற்றும் ரெடிமேட் உணவுகள் சாப்பிடும் பழக்கத்தைத் தவிர்க்கவும். அடிக்கடி குளிர்பானம் குடிக்கும் பழக்கத்தை கைவிடவும்.

பழங்களை அப்படியே சாப்பிடலாம். மசாலா உணவுகள், எண்ணெய் பதார்த்தங்களை தவிர்க்கவும். இரவு நேரத்தில் அரிசி மற்றும் ரவை, அப்பம் போன்ற ஆவியில் வேக வைத்த எளிதில் ஜீரணம் ஆகும் உணவுகள் மட்டும் எடுத்துக் கொள்ளவும்.



அப்பிள், கொய்யா, பப்பாளி பழங்களும் தூக்கத்துக்கு நல்லது. இவற்றை பழக்கலவை செய்து சாப்பிடுவதன் மூலம் ஆரோக்கியமான தூக்கம் பெறலாம். தினமும் உணவில் ஏதாவது ஒரு கீரை கட்டாயம் இருக்க வேண்டும். முளைகட்டிய பயறு வகை ஒன்றும் சேர்த்துக் கொள்ளவும். நீர்க்காய்களை கண்டிப்பாகத் தவிர்க்கவும்.

தூக்கம் வராமல் தவிக்கும் வயதானவர்கள் உணவில் தேங்காய் சேர்ப்பதை தவிர்க்கவும். கோதுமை, கேழ்வரகு போன்ற தானிய உணவுகளை காலை நேரத்தில் உட்கொள்ளலாம். இத்துடன் ஏதாவது ஒரு காய் பொரியல் சேர்த்துக் கொள்ளும் போது நார்ச்சத்துடன் மற்ற வைட்டமின் சத்துக்களும் உடலுக்குக் கிடைக்கும். ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தின் மூலம் தூக்கம் இன்மை பிரச்னையை விரட்டலாம் என்கின்றனர் ஆய்வாளர்கள்.




With the opening of our Jaffna branch, the students of the north can now obtain a professional qualification in Human Resource Management. Take advantage of the ever increasing scope and demand for HR professionals here and abroad. Successful completion of our professional qualification within 2 1/2 years will further enable you to obtain a MBA or Honors Degree from recognized foreign universities or from the Sri Lankan Open University, thereby fast tracking your path to progress.

IPM is the Nation's leading professional body for fostering and creating HR professionals since 1959, and is affiliated with international HRM organizations. Our experienced and well qualified lecture panel, together with exceptional student resources will guarantee success for students wanting to step in to the professional world of HR.

**Programme in Career Guidance and Development (PCGD)**
Mould your caring personality into a lucrative career

**Foundation Course in Human Resource Management (FCHRM)**
A Solid foundation for professional growth

**Certificate Course in Human Resource Management (CCHRM)**
We make you right for the picking

**For more details contact Dharshiha on 0777 285883 or dharshi.ipm@gmail.com**
**Institute of Personnel Management Sri Lanka (Inc)**
Jaffna Study Centre, No.19, People's Bank 2nd Flo[illegible] Jaffna
Jaffna office will be open daily from 2 pm to 5 pm for admission

IPM Sri Lanka
The Nation's Leader in HRM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வினோதமாக இரை தேடும் பறவை

பறவைகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம் என்பதற்கு ஏற்ப அவற்றின் இரை தேடும் திறமையும் பல விதங்களில் காணப்படுகின்றது.

இதே போன்று தென்னாபிரிக்காவின் நமீபியா கடற்பிரதேசத்தில் காணப்படக்கூடிய இந்த வினோத வகை பறவைகள் மீன்களையே வேட்டையாடி இரையாக்குகின்றன.

அவ்வாறு இரைதேடும்போது பிடிபட்ட மீன்களை தமது கீழ்சொண்டுப் பகுதியை படகு போன்ற அமைப்பில் மாற்றி அதனுள் போடுகின்றன. இவ்வாறு செய்வதன் மூலம் ஒரே சந்தர்ப்பத்தில் அதிகளவான மீன்களை பெற்றுக்கொள்ள இந்தப் பறவைகளால் முடிகின்றன.

போலிகள் எச்சரிக்கையாக இருக்கவும்

பிழையானது | சரியானது

ஆகாசவாணி செய்திகள்
வாசிப்பவர்: வரதராஜன்
வன்னி மாவட்டத்தில்!

1. பொன்னான மேனியும்
2. பொலிவான கூந்தலையும் தந்து
3. சகல தேகரோக நிவாரணியாகத் திகழும்

சித்தாரா பொன்னாங்காணித் தைலத்தில் போலிகள் நடமாடுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. போலிகளின் நடமாட்டத்தைத் தடுக்க தற்போது தைலப் போத்தலின் மேல் மூடி கண்ணைக்கவரும் வர்ணமூடியாக அச்சிடப்பட்டு சித்தாரா டிஸ்பென்சரி வைத்திய முத்திரை பொறிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. போலிகளைக் களைவதற்கு வேலியாக அமைவது வர்ணத்தில் வைத்திய முத்திரை பொறிக்கப்பட்ட மூடிகளே.
பிளேன் மூடித் தைலம் இனி உங்களுக்கு வேண்டாம். ஆகவே சித்தாரா பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியு டன் சித்தாரா டிஸ்பென்சரி வைத்திய முத்திரைக் குறியீடு உள் ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.

குறிப்பு: போலிகளின் நடமாட்டம் வன்னிப் பகுதியில் அதிகமாக உள்ளதால் வன்னி மக்கள் இதைக் கருத்திற்கொண்டு கூடிய கவனம் எடுக்கவும்.

யாழ். மாவட்ட ஏக விநியோகத்தர்,
சிவா நறுமணப்பூங்கா,
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 0212222567
(குறிப்பு: சத்திரச் சந்திக்கு அருகில்)

Manufatured by:
SITHARA PRODUCT,
Puttalam Road, Chilaw.
(Reg.No.:6382)AR/PR/no:228

(போலிகளை விற்பனை செய்பவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இத்தால் அறிவிக்கின்றோம்.)

தற்போது விற்பனையில்....
சிறுவர்களுக்கான மாதாந்த சஞ்சிகை




அருகிலுள்ள புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்

லொறி, டிபர், ட்ரக் வாகனங்களுக்கு

லீசிங் சுமை குறைக்கப்பட்டுள்ளது



பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத லொறி, டிபர், ட்ரக் கனரக வாகனங்களை மிக இலகுவான முறையில் குறைந்த வட்டியில் லீசிங் அடிப்படையில் பெற்றுக் கொள்ள சென்ட்ரல் பினான்ஸ் நிறுவனத்திற்கு வாருங்கள்.



சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
பிட்ச் ரேட்டிங்ஸ் A+ (lka)

உடன் தொடர்புகளுக்கு 0112315215

கொழும்பு (011) 2300555 கண்டி (081) 2227000 அல்லது அருகிலுள்ள ... அலுவலகத்திற்கு வாருங்கள் வெப்.தளம். www.cf.lk & www.cfautomart.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குங்குமப் பூவின் மருத்துவ குணங்கள்

குங்குமப்பூக்களின் உள்ளே இருக்கும் நார்களையே குங்குமப்பூ என்று அழைக்கப்படுகிறது. இது பசுமை கலந்த சிவப்பு நிறத்தில் காணப்படும். நறுமணமுடையதாகவும் சிறிது கசப்பாகவும் இருக்கும். குங்குமப் பூவைத் தண்ணீரில் கரைத்தால் ஆழ்ந்த மஞ்சள் நிறம் உண்டாகும்.

எந்தப் பூவிலும் இல்லாத புதுமை குங்குமப் பூவில் உண்டு. உடல் நிறத்தை சிவப்பாக மாற்றக் கூடிய அற்புதக் குணம் இதில் நிறைந்து காணப்படுகிறது.

இத்தாவரம் வடமேற்கு நாடுகளிலும், இந்தியாவில் காஷ்மீரத் திலும் பயிர் செய்யப்படுகின்றது. இது வாசனையுடனும், மினு மினுப்பாகவும் இருக்கும். உணவுப் பொருள்களுக்கு நிறம் உண்டாக்கவும் வாசனை உண்டாக்கவும் சேர்க்கின்றனர்.



## குங்குமப்பூ தரும் அழகு

குங்குமப்பூவை பொடியாக்கி வைத்துக் கொண்டு அதில் தின மும் ஒரு சிறிதளவு அளவு எடுத்துக் கொள்ளவும். அதில் சில சொட்டுக்கள் பால் விட்டு கலந்து குழைத்துக் கொள்ளவும். இந் தக் கலவையை முகத்தில் பூசி வர முகத்தில் படர்ந்துள்ள கருமை நிறம் குறைவதை கண் கூடாகக் காணலாம்.

குங்குமப் பூவை உரசி ஒரு மேசைக்கரண்டி தண்ணீர் விட்டு சிறிது நேரம் ஊற விடவும். குங்கும பூவின் நிறம் முழுக்க நீரில் ஊறியதும் சிறிது வெண்ணை கலந்து நன்றாக குழைக்கவும். இந்த கலவையை தினமும் பூசி வர உதடுகள் செவ்வாழை நிறம் பெறும். உதடுகளின் வறட்சி இருந்த இடம் தெரியாமல் ஓடி விடும். முகத்தில் உள்ள கரும்புள்ளிகளும் மறைந்து விடும்.

நக சுத்தி வந்து அழுகிப் போன நகங்கள், உடைந்து போன நகங்கள் போன்றவற்றை குங்குமப்பூ வெண்ணை கலவையானது சீர்படுத்தி இழந்த அழகை மீட்டுத்தரும். முகத்திற்கு வசீகரத்தை தருவது கவர்ச்சி மிகு கண்கள்தான் அந்த கண்களுக்கு பளிச் அழகைத் தருவது அடர்த்தியான இமைகள் பட்டாம் பூச்சி போல படபடக்கும் இமைகள் அமைய குங்குமப்பூ உதவுகிறது.

## இதயத்தை பலப்படுத்தும் குங்குமப்பூ

இதயம் மற்றும் மூளைக்கு சக்திதர குங்குமப்பூ அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. ஆண்மைக் குறைவைப் போக்க மற்ற மருந்துகளில் கலந்து பயன்படுத்துவார்கள்.

இதன் நாரினை ஆண்களின் சிறுநீர்க்குழாயில் வைத்தால் சிறுநீர் தாராளமாகப் பிரியும். இதனால் விந்துக் குறைவு நிவர்த் தியடையும். தடைப்பட்ட சிறுநீர் மற்றும் மாதவிலக்கைப் பிரியச் செய்யும். இதயம், மூளை மற்றும் கல்லீரலுக்குச் சக்தி தரும். மலச்சிக்கலை உண்டாக்கும் கட்டி, வீக்கங்களைக் கரைக்கும்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தை மட்டும் உண்ணும் அன்னப் பறவை



உலகில் அன்னப்பறவை பற்றி அறியாதவர்களே இல்லை எனலாம். அந்தளவுக்கு பழங்கால புராணக் கதைகள் தொடக்கம் சிறுவர்களின் நீதிக்கதைகள் என எல்லாவற்றிலும் அன்னப் பறவை பற்றி அறிந்திருப்பீர்கள். பொதுவாக சொல்லுவர்கள் நாம் சிறந்த மனிதர்களாக வரவேண்டுமெனில் அன்னப் பறவை போல வாழ பழகவேண்டும் என.

அதற்கு காரணம் அன்னமானது பாலையும் தண்ணீரையும் கலந்து வைக்கின்ற போது அது இரண்டையும் வெவ்வேறாக பரிந்து பாலை மட்டும் பருகுமாம். அதைப்போல நாம் சமுதாயத்தில் தீயவற்றை ஒதுக்கிவிட்டு நல்லவற்றையே செய்யவேண்டும் என சொல்வதுண்டு. சரி அது சிறுவர்கள் முதல் பெரியோர்வரை தெரிந்த விடயம். ஆனால் உயிரினங்களிலே அன்னத்துக்கு என தனிச்சிறப்பும் உண்டு ஆம் நவரத்தினங்களில் ஒன்றான முத்தை உண்ணும் ஒரே உயிரினம் அன்னம் மட்டும்தானாம்.

# கடலுக்கு அடியில் தபால் நிலையம்

உலகில், கடலின்கீழ் அமைக்கப்பட்ட முதலாவது தபால் நிலையம் பஹாமாஸ் நாட்டிலேயே அமைந்துள்ளது. விஞ்ஞான வசதிவாய்ப்பின் ஒரு அங்கமாக இந்த தபால் நிலையம் 1939 ஆம் ஆண்டு, ஒகஸ்ட் 16 ஆம் நாள் திறக்கப்பட்டது.

இந்த கடல்கீழ் தபால் நிலையமானது, ஐக்கிய அமெரிக்காவினைச் சேர்ந்த புகைப்படக் கலைஞர் ஜோன் எர்னெஸ்ட் வில்லியம்ஸ்சன் (1881-1966) அவர்களால் உருவாக்கப்பட்டதாகும்.

கடல் கீழ் புகைப்படத் துறையின் முன்னோடியாகவும் வில்லியம்ஸ்சன், நினைவு கூரப்படுகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அதேவேளை, பசுபிக் சமுத்திர தீவாகிய வனுவாட்டு தேசத்தில் 2003 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட, கடல்கீழ் தபால் நிலையத்தில் தபால் உறைகளும், முத்திரைகளும் வழங்கப்படுகின்றமை இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

A+ Fitch Rating

'மற்றும்' என்பதன் சக்தி

அதிகரித்த பயன்பாடு மற்றும் அதிகரித்த பாதுகாப்பு

பயன்பாடு மற்றும் பாதுகாப்பு இரண்டும் ஒன்றாக இருக்கும் பொழுதுள்ள சக்தியை அனுபவிக்க சென்ட்ரல் பினான்ஸுடன் இணைந்து கொள்ளுங்கள்.

சென்ட்ரல் பினான்ஸின் சேமிப்பு முறைமைகள் மற்றும் நிரந்தர வைப்புகளில் முதலீடு செய்வதன் மூலம் அதியுயர் பயன்பாடு மற்றும் பாதுகாப்பு உங்களுக்கு கிடைக்கும்.

அதிகரித்த பயன்பாடு ஏனெனில் நாம் அளிப்பது போட்டி அடிப்படையிலான வட்டி வீதம் மற்றும் அதிகரித்த பாதுகாப்பு ஏனெனில் நாம் மட்டுமே வங்கி அல்லாத நிதி நிறுவன அமைப்பை கொண்டுள்ளதோடு A+ FITCH மதிப்பீட்டையும் பெற்றுள்ளோம்.

திலினி 011 2315053 மற்றும் ருக்மல் 081 2230112 ஆகியோரை அழைத்து சேமிப்புத் திட்டம் மற்றும் நிலையான வைப்பு என்பனவற்றில் எது உங்களுக்கு மிகப்பொருத்தமானது என்பதை கண்டறியுங்கள்.




நாடளாவிய ரீதியில் 500க்கு மேற்பட்ட ATM இயந்திரங்கள்
(கொமர்ஷல் வங்கி மற்றும் சென்ட்ரல் பினான்ஸ்)

1957ம் ஆண்டு டிசம்பர் 5ந் திகதி வரையறுக்கப்பட்ட கம்பனியாக ஸ்தாபிக்கப்பட்டது.
2011ன் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை
மத்திய வங்கியின் நாணயச்சபையினால் உரிமம் அளிக்கப்பட்டது.

சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
பிரதான அலுவலகம்: இல. 84, ராஜ வீதி, கண்டி.
நகர் அலுவலகம்: இல. 270, வொக்சோல் வீதி, கொழும்பு 2.
அருகிலுள்ள எமது கிளைக்கு விஜயம் செய்யுங்கள்
வெப்.தளம்:www.cf.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியக்கவைக்கும் விநோதங்கள்...






## ஒன்றுடன் ஒன்று பேசும் தாவரங்கள்

செடி, கொடிகள் போன்ற தாவரங்கள் ஒன்றுடன், ஒன்று பேசிக்கொள்கின்றன என்று பிரிட்டன் நாட்டில் உள்ள எக்ஸ்டெர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

முட்டைகோஸ் கொடியானது ஆபத்து வரலாம் என்று உணர்ந்தால் தனது இலைப்பகுதியில் சிறிய வெடிப்பை ஏற்படுத்துகிறது. இதன் மூலம் ஒருவித வாயுவை வெளி யேற்றி, ஒலியை ஏற்படுத்தி பக்கத்தில் உள்ள செடியை எச்சரிக்கை செய்கிறது. இதனை நுட்பமான கமராவின் மூலம் ஆய்வு செய்து முதன் முறையாக விஞ்ஞானிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

## பூனையின் நுணுக்கம்



ஒரு பூனை எப்படி தனது தாடையும் கன்னமீசையும் நனையாமல் தண்ணீரையோ பாலையோ அல்லது ஏனையத் திரவங்களையோ அருந்துகின்றது. நாய் நக்கி அருந்தி தனது முகப் பகுதிகளை நனைத்துக் கொள்ளும். ஆனால் பூனையோ நக்கி அருந்தினாலும் லாவகமாக அருந்துகின்றது. தனது மீசை தாடை எதையும் நனைத்துக் கொள்வதில்லை. இது எப்படி ? ஆராய்ந்தார்கள் நான்கு விஞ்ஞானிகள். இப்போது ஒரு முடிவுக்கு வந்துள்ளார்கள். இது பௌதிகத்தோடு சம்பந்தப்பட்ட விடயம். பூனை செயற்பாட்டு ரீதியாக புவியீர்ப்பு சக்திகளுக்கு எதிராக தனது ஜடத்துவத்தை அல்லது சோம்பேறித்தனத்தை சமநிலைப்படுத்தியே தனது தாகத்தை தீர்த்துக் கொள்கின்றது.

நாய் நீர் அருந்தும் போது தனது நாக்கை ஒரு கரண்டிபோல் சுழற்றிச் சுழற்றிப் பாவித்து இயலுமானவரை நீரை இழுத்தெடுத்து குடிக்கின்றது.

ஆனால் பூனை அப்படியல்ல. தான் எதைக் குடிக்க வேண்டுமோ அந்தத் திரவத்தின் கீழ் பகுதியாக தனது நாவைச் செலுத்தி குடிக்க வேண்டிய பதார்த்தத்தை நாவின் மேற்பரப்பில் சேகரித்து துரிதமாக நாவை வாய்க்குள் இழுத்துக் கொள்கின்றது. இதனால் நாவின் மேற்பகுதியில் அது அருந்த வேண்டிய பதார்த்தம் ஒரு ஓடைபோல் சேர்ந்துகொள்கின்றது. நாவின் மேற்பரப்பில் பதார்த்தம் தேங்கியதும் புவியீர்ப்புத் தன்மையின் தாக்கத்தால் நாக்கு கீழே சரிவதற்கு முன் பூனை தனது நாக்கை உள்ளே இழுத்துக்கொள்கின்றது. இதுதான் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ள உண்மை. எந்த ஒரு விடயத்தையும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளாமல் விஞ்ஞான கண்கொண்டு வித்தியாசமாக நோக்கினால் அதன் இரகசியங்களை புரிந்து கொள்ள முடியும் என்று இந்த ஆய்வில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அன்பான தாய் தந்தையரே, உங்கள் பிள்ளைகளுக்காக ஆயுட் காப்புறுதி ஒன்றை இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்.

எங்கட சிறுவயதிலே நாங்கள் எதிர்ப்பார்க்காத விதமாக எங்கட அம்மாவும் அப்பாவும் இறந்து போனாங்க. நானும் அண்ணாவும் தனிமையாகிட்டோம்.

எங்கட அப்பா எங்கட எதிர்காலத்தை நினைச்சு செலிங்கோ லை.ஃப் ஆயுட் காப்புறுதி ஒன்றை எடுத்திருந்ததால, எங்களுக்கு பெரிய ஒரு காப்புறுதித் தொகை கிடைச்சது. எந்தவித பிரச்சனைகளுமில்லாம பாடசாலை சென்று கல்வியைத் தொடர முடிந்தது. அதனால எங்கட எதிர்காலத்தைப் பற்றி எங்களுக்கு எந்தவித பயமும் இல்ல. இது எங்களுடைய உண்மைக் கதை.

- கௌசல்யா மற்றும் கோசல (நொச்சியாகம)

இலங்கையின் நம்பிக்கை மிகுந்த மற்றும் ஸ்திரமான ஆயுட் காப்புறுதி நிறுவனம் மூலம் உங்கள் அன்புக்குரியவர்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

வாழ்க்கை, பாசம், பாதுகாப்பு.

PHOENIX.COM

## செலிங்கோ லை.ஃப்

செலிங்கோ லை.ஃப் டவர், 106, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 5.
கம்பனி பதிவு இல. PQ24 தொ.இல.: (011) 2 461 461 ஈமெயில்: service@ceylife.lk இணையம்: www.ceylincolife.com




# TOSHIBA

Leading Innovation

## தரத்தில், தொழிநுட்பத்தில் உயர்ந்த டொஷிபா தொலைக்காட்சிகள்

### 32" LED தொலைக்காட்சி



32PS10
- HD ரெடி (1080p/1080i/720p)
- LED ஒளி பின்புலம்
- 10-Bit வீடியோ
- தானியங்கி பூஸ்டர்
- 3D நிறக்கட்டுப்படுத்தி
- HDMI x 2

அபான்ஸ் மாற்றீட்டு சலுகை ரூ.77,990

12 வருட உத்தரவாதம் ரூ.82,990

### 40" LED தொலைக்காட்சி



40PS20
- முழு HD (1080p/1080i/720p)
- LED ஒளி பின்புலம்
- USB
- தானியங்கி பூஸ்டர்
- 3D நிறக்கட்டுப்படுத்தி
- HDMI x 2

அபான்ஸ் மாற்றீட்டு சலுகை ரூ.159,990

ரூ.169,990

### 24" LCD தொலைக்காட்சி



24PB2
- HD ரெடி (1080p/1080i/720p)
- 10-Bit வீடியோ
- தானியங்கி பூஸ்டர்
- 3D நிறக்கட்டுப்படுத்தி
- HDMI x 2

ரூ.33,990



32PB10
- HD ரெடி (1080p/1080i/720p)
- 10-Bit வீடியோ
- தானியங்கி பூஸ்டர்
- 3D நிறக்கட்டுப்படுத்தி
- HDMI x 2
- USB (27 வகை)

ரூ.49,990



40AV700
- முழு HD (1080p/1080i/720p)
- USB
- தானியங்கி பூஸ்டர்
- 3D நிறக்கட்டுப்படுத்தி
- HDMI x 2

ரூ.85,990

வட்டி இல்லை ஓஜாலி அதிகம்

நாடெங்கிலுமுள்ள Abans / JVC / Haier
A-Z Electronics (Pvt) Ltd.
காட்சியறைகளில் கிடைக்கும்

பின்வரும் கடனட்டையாளர்களுக்கு வட்டியின்றிய மீள் கொடுப்பனவு முறைகள்
HSBC Standard Chartered BOC Nations Trust Bank Sampath Bank Commercial Bank HNB Seylan

24 மணித்தியாள அவசர சேவைகளுக்கு அழையுங்கள்: 071 557557

நாடெங்கிலும் 100 அபான்ஸ் விற்பனைக்கு பிந்திய சேவை நிலையங்கள் *நிபந்தனைகளுக்குற்பட்டது

Abans


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசித்திரமான நாய்


© Caters News

நாய் ஒன்று அதனுடைய எஜமானியால் பிறப்பிக்கப்படும் 100 இற்கும் மேற்பட்ட கட்டளைகளை உணர்ந்து செயற் படக்கூடிய திறமையை கொண்டு அனைவரினதும் கவனத்தை ஈர்த்து வருகின்றது. 7 வயதுடைய இந்த நாய் தான் இவ்வாறு விசித்திரமான நடவடிக்கையில் ஈடுபட் டுள்ளது.

குறைந்த மாதங்களில் பயிற்சிகளைப் பெற்ற இந்த நாய் விசேடமாக வங்கிகளிலுள்ள பண இயந்திரம் மூலம் தானாகவே பணத்தைப் பெற்றுக் கொள்ளும் அளவுக்குத் திறனை வளர்த்துள்ளதுடன், கடைகளில் பொருள்களைத் தெரிவு செய்தலிலிருந்து அனைத்து வேலைகளையும் எஜமானிக்காக செய்து வருகின்றது. இத்தனைக்கும் எஜமானியால் எழுந்து நடக்க முடியாது என்பது குறிப்பிடத் தக்கது.

# குருதியின்றிப் பிறந்தகுழந்தை



உடலில் ரத்தம் துளிகூட இன்றி பிறந்த குழந்தை அதிசயமாக உயிர் பிழைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த விசித்திரமான சம்பவம் பிரிட்டன் நாட்டில் மைட்ஸ் டோன் நகரில் நடந்தது.

இந்த அதிசய குழந்தையின் பெயர் ஆலிவர் மோர்கன். இவன் தாய் காத்தியின் வயிற்றில் 37 1/2 வாரக் குழந்தையாக இருக்கும்போது ஒருநாள் அதிகாலையில் அவர் எழுந்திருக்கும்போது படுக்கை முழுவதும் ரத்தம் படிந்திருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

உடனடியாக அவரை ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அவரது கருப்பையில் இருந்து செல்லும் குழாய் வெடித்து குழந்தையின் உடலில் உள்ள ரத்தம் முழுவதும் வெளியேறியிருப்பதை வைத்தியர்கள் கண்டுபிடித்தனர்.

எனவே அவசர சத்திரசிகிச்சை செய்து குழந்தையை வெளியே எடுத்தனர். ஆனால் ரத்தம் இன்றி இருந்ததால் குழந்தை மூச்சின்றி இருந்தது. உடனே ஒட்சிசனைச் செலுத்தி உயிர்துடிப்பை சீராக்கி, சிறுகச் சிறுக ரத்தத்தைச் செலுத்தினார்கள்.

அதிகாலை 5.12 மணிக்கு பிறந்த குழந்தைக்கு 5.37 மணிக்கு தான் இருதயம் துடிக்க ஆரம்பித்தது. இவ்வாறாக 25 நிமிட நேரம் இடைவிடாமல் வைத்தியர்கள் அயராத முயற்சி செய்து குழந்தையை உயிர் பிழைக்க வைத்தனர். இருதயத் துடிப்பு ஏற்பட்டதை அறிந்த பின்னரே வைத்தியர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

மருத்துவமனையில் 11 நாள் சிகிச்சை பெற்ற பின் வீடு திரும்பினர். தற்போது ஆலிவருக்கு 1 1/4 வயதாகிறது. இவனுக்கு 7 வயதில் ஒரு சகோதரன் இருக்கிறான்.


APPETON NUTRITION
Wellness 60+
மேலதிக போஷாக்கு
பெற்றோருக்கு நீங்கள் வழங்கும் மிகப்பெரிய பரிசு ஆரோக்கியமாகும்.




இது எமது அறிவுரை மாத்திரமே, வைத்திய ஆலோசனைகளுக்கு உங்கள் வைத்தியரை நாடவும்.
இப்போது நாடு முழுவதுமுள்ள பிரதான பாமசிகளிலும் நவீன சந்தைகளிலும் பெற்றுக்கொள்ள முடியும்.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 2676213

| விபரம் | அதிகூடிய சில்லறை விலை |
| --- | --- |
| அபெட்டன் வெல்னஸ் 60+ 450 கி | ரூ. 2,100.00 |
| அபெட்டன் வெல்னஸ் 60+ 900 கி | ரூ. 3,900.00 |

HALAL
பிரான்ஸ் நாட்டுத் தயாரிப்பு

சந்தைப்படுத்துவோர்
Lewis Brown Pharmaceuticals (Pvt) Ltd
A MEMBER OF THE DELMEGE GROUP
101, வினயாலங்கார மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.
தொலைபேசி : (+94 11) 7729248, 2676213
தொலைநகல் : (+94 11) 2698139, 2686149
மின்னஞ்சல் : pharma@delmege.com
இணைத்தளம் : www.delmege.com, www.delmege.lk

தயாரிப்பாளர்கள்:
கொட்ரா பாமா (M) Sdn Bhd,
1, ஜலான் TTC 12,
செங் இன்டஸ்ரியல் எஸ்டேட், 75250 மெலேகா, மலேசியா.
தொலைபேசி : +606 336 2222 தொலைநகல் : +606 336 6122

YAMAHA
இப்போது எண்ண முடியாத விலையில்
சுகமாக செலுத்தக் கூடிய வசதிகளுடன்



ரூ. 147,321/= + VAT
YBR 125
100% தரமான ஜப்பான் தொழில்நுட்பத்தில் மட்டும் பூர்த்தியாக்கப்பட்ட யமஹா சைக்கிள் வண்டி புதிய வடிவமைப்பில் விசேட உதிரிப்பாகங்களுடன் இப்போது நினைத்துப்பார்க்க முடியாத விலையில்
வண்டியை ஓட்டியே பார்த்திட அழையுங்கள் - சுசில் 077 3047253
பழைய வண்டியை எமக்கு கொடுத்து புதிய வண்டியை எடுத்துச் செல்லுங்கள் அழையுங்கள் - கிருஷான் 077 3047255
AMW
தொலைபேசி: 0114718603
077 3047255/ 077 3404560
077 3047254/ 077 3660563
yamaha@amwltd.com
30 THIRTY YEARS OF EXCELLENCE
★ அக்கரைப்பற்று - 071 2228887 ★ அம்பலாங்கொடை - 091 4382374 ★ அநுராதபுரம் - 025 2221823 ★ பதுளை - 071 3268484 ★ பலாங்கொடை - 045 2289089
★ மட்டக்களப்பு - 077 3268484 ★ பொரலஸ்கமுவ - 071 8567264 ★ தம்புள்ள - 066 2283133 ★ தெஹியத்தக்கண்டிய - 027 2250406 ★ திகன - 071 5969653
★ கொடை - 027 7900250 ★ ஹோமாகம - 011 5673001, 077 8739432 ★ ஹொரனை - 077 3031210
★ களனி - 071 4036639 ★ கிளிநொச்சி - 077 2737622 ★ குருநாகல் - 037 2223220
★ 041 7210625, 077 3054150 ★ கல்கிஸ்ஸை - 0777 722518 ★ நீர்கொழும்பு - 077 6989787 ★ புத்தளம் - 077 2906075
★ தம்புத்தேகம - 071 5900900 ★ திஸ்ஸமஹாராம - 077 3061054 ★ வவுனியா - 077 2737622 ★ யாழ்ப்பாணம் - 077 6623824


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org